சமூக அரசியல்
ஆரம்ப நூல் வரிசை

மார்க்சிய-லெனினியம் என்றால் என்ன?

வி. கார்ட்நோவ்
வி. புச்கியெவ்

சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை

வி. காரட்நோவ்
வி. புசுயெவ்

மார்க்சிய-லெனினியம் எதனால் என்ன?

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: நா. தர்மராஜன், எம். ஏ.

நூல் வரிசையின் பதிப்பாசிரியர் குழு: எஃப். எம். வோல்கவ் (தலைமைப் பதிப்பாசிரியர்), ஈ. எஃப். குப்ஸ்கி (துணைப் பதிப்பாசிரியர்), எஃப். எம். புர்லாட்ஸ்கி, வி. டி. ஸோதவ், வி. வி. கிரபிவின், யூ. என். பொபோவ், வி. வி. ஸோபலெவ், எஃப். என். யூர்லொவ்

ABC социально-политических знаний

Бузуев В., Городнов В.

ЧТО ТАКОЕ МАРКСИЗМ-ЛЕНИНИЗМ?

на тамильском языке

ABC of Social and Political Knowledge

V. Buzuev, V. Gorodnov

WHAT IS MARXISM-LENINISM?

in Tamil

Б $\frac{0104000000-227}{014(01)-88}$ 350-88

ISBN 5-01-000868-8

© Progress Publishers, 1987

© தமிழ் மொழிபெயர்ப்பு, முன்னேற்றப் பதிப்பகம், 1988

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

பொருளடக்கம்

வாசகருக்கு 7

முன்னுரை 11

அத்தியாயம் ஒன்று

மார்க்சியத்தின் தோற்றம் மற்றும் அதன் வளர்ச்சிக் கட்டங்கள் 13

கற்பனாவாத சோஷலிசம் 14

மார்க்சியத்தின் மூலவர்கள் 19

லெனினியம் — மார்க்சியத்தின் வளர்ச்சியில் ஒரு புதிய கட்டம் 44

அத்தியாயம் இரண்டு

மார்க்சிய-லெனினியத் தத்துவஞானக் கோட்பாடுகள் 58

1. இயக்கவியல் பொருள்முதல்வாதம் . 61

பருப்பொருள் — அதன் குணாம்சங்களும் வாழ்நிலையின் வடிவங்களும் 61

பொருள்முதல்வாத இயக்கவியல் 71

இயக்கவியல் பொருள்முதல்வாதத்தின் அறிதல் தத்துவம் 85

2. வரலாற்றுப் பொருள்முதல்வாதம் . . 90
பொருளாயதச் செல்வத்தின் உற்பத்தி முறை — சமூக வளர்ச்சியில் பிரதான காரணி 90
வர்க்கங்கள், வர்க்கப் போராட்டம் மற்றும் அரசு 100
சமூக உணர்வு மற்றும் சித்தாந்தம் 107
வரலாற்றில் பெருந்திரளான மக்களின் பாத்திரமும் தனிநபருடைய பாத்திரமும் 111
மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தின் முக்கியத்துவம் 113

அத்தியாயம் மூன்று

மார்க்சிய-லெனினியத்தின் பொருளாதார அடிப்படைகள் 115
அரசியல் பொருளாதாரம் 115
கார்ல் மார்க்சின் பொருளாதாரப் போதனை 118
ஏகாதிபத்தியம் — முதலாளித்துவத்தின் உச்ச மற்றும் இறுதிக் கட்டம் 135
சோஷலிசத்தின் அரசியல் பொருளாதாரம் . . 153

அத்தியாயம் நான்கு

விஞ்ஞான கம்யூனிசத்தின் தத்துவம் . . . 170
விஞ்ஞான கம்யூனிசத்தின் தோற்றமும் சாரப் பொருளும் 170
தொழிலாளி வர்க்கத்தின் உலக வரலாற்று முக்கியத்துவமுடைய பணி 176
சோஷலிசப் புரட்சித் தத்துவம் 186
வெவ்வேறு நாடுகள் சோஷலிசத்துக்கு மாறுதலைப் பற்றிய பொது விதிகளும் அந்த மாற்றத்தின் பல்வேறு வடிவங்களும் 195

அத்தியாயம் ஐந்து
மார்க்சிய-லெனினியம் — உலகத்தைப் புரட்சி கரமாகப் புத்தாக்கம் செய்கின்ற வலிமைமிக்க சக்தி 206
மாபெரும் அக்டோபர் புரட்சியும் மெய்யான சோஷலிசமும் 208
உலக சோஷலிச அமைப்பு — உலகத்தைப் புரட்சி கரமாக மாற்றியமைக்கின்ற தீர்மானகரமான சக்தி 232
சர்வதேச கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளி வர்க்க இயக்கம் 248
தேசிய விடுதலை இயக்கம் 269
மார்க்சிய-லெனினியமும் யுத்தம் மற்றும் சமா தானப் பிரச்சினைகளும் 292
சொற்றொடர் விளக்கம் 316

மனிதகுலம் 21ஆம் நூற்றாண்டுக்குள் நுழைகின்ற காலம் வெகு தூரத்தில் இல்லை. உலகத்தின் மக்களினங்களுக்கு முன்னால் சமூக-பொருளாதார மற்றும் தேசிய முன்னேற்றத் தின் புதிய எல்லைகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன.

இருபதாம் நூற்றாண்டு மாபெரும் புரட்சிகர மாற்றங் களை ஏற்படுத்திய காலகட்டம் என்று வரலாற்றில் இடம் பெறும். ருஷ்யாவில் நடைபெற்ற மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி உலகத்தில் சோஷலிசத்தைக் கொண்டு வந்தது. சோவியத் யூனியன் இப்பொழுது வளர்ச்சியடைந்த சோஷலிச சமூகத்தை நிர்மாணித்துக் கொண்டிருக்கிறது. அந்த சமூகத்தில் உழைக்கும் மனிதன் வரலாற்றில் முதல் தடவையாகத் தன்னுடைய நாட்டின் உண்மையான எச மானனாக, தன்னுடைய வாழ்க்கையைத் தானே நிர் மாணிப்பவனாக இருக்கிறான். இன்று சோவியத் யூனி யனுடன் சேர்ந்து பல நாடுகளும் மக்களினங்களும் புதிய, நியாயமான சமூகத்தை நிர்மாணித்துக் கொண்டிருக் கின்றன.

ஏகாதிபத்தியத்தின் கேவலமான காலனியாதிக்க அமைப்பு தகர்ந்து விட்டது; ஆசிய, ஆப்பிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளின் மக்களினங்கள் சுதந்திரமான சமூக-

பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சிப் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர்; சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கம் ஏகபோக மூலதனத்தின் ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் கணிசமான வெற்றிகளை அடைந்திருக்கிறது.

வரலாற்று ரீதியான இம்மாற்றங்கள் அனைத்தும் நம் காலத்தின் மகத்தான சமூக-அரசியல் தத்துவமாகிய மார்க்சிய-லெனினியத்தின் செல்தகைமையை நிரூபித்திருக்கின்றன. அத்தத்துவத்தின் குன்றாத வலிமை, அது தொடர்ச்சியாகத் தன்னை வளர்த்துச் செழுமைப்படுத்திக் கொள்வதில் அடங்கியிருக்கிறது. ஒவ்வொரு புதிய தலைமுறையும் சமகால வாழ்க்கையின் முக்கியமான எல்லாப் பிரச்சினைகளுக்கும் இத்தத்துவத்தில் பதில்களைக் காண்கிறது.

ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சொந்த மகிழ்ச்சி, எதிர்காலம், நீதி மற்றும் சமாதான வாழ்க்கையை உருவாக்குகிறான்; ஒவ்வொரு மக்களினமும் அப்படியே உருவாக்குகிறது. இன்று சமாதான மற்றும் சுதந்திரமான சூழ்நிலைகளில் வாழ்க்கையை நடத்துவதற்கு மனிதனுடைய உரிமையை உறுதிப்படுத்துவதைக் காட்டிலும் அதிக முக்கியமான பிரச்சினை வேறு இல்லை.

முன்னேற்றப் பதிப்பகம் வெளியிடுகின்ற சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசையில் மேற்கூறிய மற்றும் இதர சமூக-பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகள் விளக்கப்படுகின்றன.

உலகத்தின் வரலாற்று, சமூக வளர்ச்சியைப் புரிந்து கொள்வதற்கு உதவுகின்ற முறையில் வெவ்வேறு தலைப்புகளில் இருபதுக்கும் அதிகமான புத்தகங்கள் வெளியிடப்படவிருக்கின்றன. இவை மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தெளிவாகவும் எளி

மையாகவும் விளக்கி எழுதப்பட்டிருக்கின்றன. இப்புத்தகங்களைப் புரிந்து கொள்வதற்கு விசேஷமான சமூக, அரசியல் பின்னணி எதுவும் வாசகருக்கு அவசியமல்ல; ஏனென்றால் உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கு, மக்களினங்கள் மற்றும் ஒவ்வொரு தனிநபருடைய வாழ்க்கை ஆகியவை வளர்ச்சியடைகின்ற புறநிலையான விதிகளையும் முக்கியமான பிரச்சினைகளையும் வாசகர் தாமாகவே புரிந்து கொள்ளக் கூடிய முறையில் இவை எழுதப்பட்டிருக்கின்றன.

இந்த நூல் வரிசையைச் சேர்ந்த **சமூக விஞ்ஞானம் — சுருக்க நூல்** என்ற புத்தகத்தில் கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ் மற்றும் வி. இ. லெனின் எழுதிய முக்கியமான நூல்களிலிருந்து சில பகுதிகள் தொகுத்து அளிக்கப் பட்டுள்ளன. **மார்க்சிய-லெனினியம் என்றால் என்ன? சோஷலிசம் என்றால் என்ன? முதலாளித்துவம் என்றால் என்ன? அரசு என்றால் என்ன? கட்சி என்றால் என்ன? உலக சோஷலிச அமைப்பு என்றால் என்ன?** மற்றும் இதர புத்தகங்கள் இந்த வரிசையில் வெளியிடப்படும். **உலக சோஷலிச அமைப்பு என்றால் என்ன?** என்னும் புத்தகம் உலக சோஷலிசக் குடும்பத்தின் தோற்றத்தை வரலாற்று மற்றும் தத்துவ ரீதியில் ஆராய்கிறது. சோஷலிச சர்வதேசியவாதம், சகோதரத்துவம், ஒத்துழைப்பு, ஒரு நாடு மற்றொரு நாட்டின் சுதந்திரம் மற்றும் அரசுரிமையை மதித்தல், உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல் ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் மக்களினங்களுக்கும் நாடுகளுக்கும் மத்தியில் புதிய ரகத்தைச் சேர்ந்த உறவுகள் வளர்ச்சியடைந்திருப்பதை இப்புத்தகம் எடுத்துக் காட்டுகிறது.

இந்த வரிசையைச் சேர்ந்த ஒவ்வொரு புத்தகத்திலும் அரசியல் மற்றும் சமூக-பொருளாதாரச் சொற்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. புத்தகத்தின் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்வதற்கு இச்சொற்றொடர் விளக்கம்

உதவியாக இருக்கும். வாசகர் நம் காலத்தின் இன்னும் அதிகச் சிக்கலான பிரச்சினைகளை ஆராய்வதற்கும் இது உதவும்.

இந்த நூல் வரிசை சமூகப் பிரச்சினைகளில், தன்னுடைய மக்கள் மற்றும் பொதுவாக மனிதகுலத்தின் எதிர்காலத்தில் அக்கறையுள்ள வாசகர்கள் அனைவருக்கும் பயன்படக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசையைச் சேர்ந்த இப்புத்தகங்களை முன்னணியிலுள்ள சோவியத் அறிஞர்கள் எழுதியிருக்கிறார்கள். இவை 1985இலிருந்து ஆங்கில, ஸ்பானிஷ், பிரெஞ்சு, போர்ச்சுகீசிய, இத்தாலிய, கிரேக்க, வங்காளி, ஹிந்தி, தமிழ், ஸ்வாஹிலி, அம்ஹாரிக், மலகாஸி மற்றும் இதர மொழிகளில் வெளியிடப்படுகின்றன.

வி. அம்பனாசியேவ்
சோவியத் யூனியன்
விஞ்ஞானப் பேரவையின்
உறுப்பினர்

மக்கள் பல நூற்றாண்டுகளாக விடுதலை, நீதி, மகிழ்ச்சி யான வாழ்க்கை ஆகியவற்றுக்கு ஏங்கி வந்திருக்கிறார்கள். சாதாரண மக்களுடைய துன்பங்களையும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் அவமதிப்பையும் கண்ட மிகச் சிறந்த, மிக மேன்மையான மனிதர்களால் இக் கொடுமைகள் எல்லாவற்றையும் உருவாக்கிய நிலைமை களைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. கொடுங்கோலர் களையும் செல்வந்தர்களையும் எதிர்த்துப் போராடுங்கள் என்று அவர்கள் சுரண்டப்பட்ட பெருந்திரளான மக்களை அறைகூவினார்கள்.

பல தத்துவங்களும் சமூக இலட்சியங்களும் உருவாக்கப் பட்டன; விடுதலை, நீதி, பொது நலம் ஆகிய இலட்சியங் களை அடைவதற்குப் பல வழிமுறைகள் கூறப்பட்டன. எனினும் அவற்றில் ஒன்றுகூட சுதந்திரமான உழைப்பு, சமாதானம், விடுதலை, சமத்துவம், சமூக நீதி ஆகியவை நிலவுகின்ற சமூகத்தை அடைவதற்குரிய சரியான ஒரே பாதையை உழைக்கும் மக்களுக்குக் காட்டவில்லை.

கார்ல் மார்க்ஸ் (1818—1883) மற்றும் பிரெடெரிக் எங்கெல்ஸ் (1820—1895) தமக்கு முந்திய சமூகங்களின் அனுபவங்களையும் கருத்துகளையும் கணக்கிலெடுத்துக்

கொண்டு பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஒரு புதிய புரட்சிகரமான, விஞ்ஞானத் தத்துவத்தை உருவாக்கினார்கள். அவர்களுடைய மாபெரும் பணியை விளதீமிர் இலியீச் லெனின் (1870—1924) தொடர்ந்தார்.

மார்க்ஸ், லெனின் ஆகிய இருவருடைய பெயர்களையும் இணைத்துக் கொண்டு மார்க்சிய-லெனினியம் என்னும் புதிய தத்துவம் தோன்றியது. அத்தத்துவத்தைப் பற்றி இந்நூலில் எடுத்துரைக்கப்படுகிறது.

அத்தியாயம் ஒன்று

மார்க்சியத்தின் தோற்றம் மற்றும் அதன் வளர்ச்சிக் கட்டங்கள்

மார்க்சிய-லெனினியம் என்பது தத்துவஞான, பொருளாதார, சமூக-அரசியல் கருத்துகளின் ஒருங்கிணைந்த விஞ்ஞான அமைப்பாகும். அது சோஷலிச, கம்யூனிசக் கோட்பாடுகளின் அடிப்படையில் உலகத்துக்குப் புத்துயிரூட்டும்படி பணிக்கப்பட்டுள்ள சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் உலகக் கண்ணோட்டம் ஆகும். மார்க்சிய-லெனினியம் என்பது உலகத்தை அறிதல், அதைப் புரட்சிகரமாக மாற்றியமைத்தல் ஆகியவை பற்றிய, சமூகம், இயற்கை, மனித சிந்தனையின் வளர்ச்சியின் விதிகளைப் பற்றிய விஞ்ஞானம் ஆகும்.

இந்த மாபெரும் விஞ்ஞானத்தைக் கற்றுத் தேர்ச்சியடைவதற்கு நேரம், உழைப்பைச் செலவிடுவதற்கு ஒருவர் தயங்கக் கூடாது. உண்மையைக் கண்டுபிடிப்பதற்குத் தீவிரமாகப் பாடுபடுபவர்கள் அதில் அதிகமாகத் திருப்தி அடைவார்கள்; ஈடேற்றத்தின் ஆனந்தத்தை அனுபவிப்பார்கள். கார்ல் மார்க்ஸ் அறிதல் செயல்முறையை உயர்ந்த மலையின் மீது ஏறுகின்ற நிகழ்வுப் போக்குடன் ஒப்பிட்டுப் பின்வரும் அறிவுரையைக் கூறினார்: ''விஞ்ஞானத்தில் ராஜபாட்டை என்பது கிடையாது. அதன் செங்குத்தான பாதைகளில்

களைப்போடு ஏறிச் செல்வதற்குத் தயங்காதவர்களுக்கு மட்டுமே அதன் பிரகாசமான சிகரங்களை எட்டுகின்ற சந்தர்ப்பம் கிடைக்கும்.'' *

கற்பனாவாத சோஷலிசம்

கம்யூனிசத்தைப் பற்றிய கனவுகள். சமத்துவ உரிமைகளையுடைய, சுதந்திரமான மக்களைக் கொண்ட சமூகத்தைப் பற்றி, இன்பமான வாழ்க்கையைப் பற்றிய கனவுகளும் கதைகளும் ஒரு நூற்றாண்டிலிருந்து மற்றொரு நூற்றாண்டுக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டன. அக்கதைகள் எல்லா மக்களும் சமமாக வேலை செய்கின்ற, எல்லோருக்கும் உணவு, உடை, இருப்பிடம் முழுமையாகக் கிடைக்கின்ற சமூகத்தைப் பற்றி எடுத்துக் கூறின.

நீண்ட நெடுங்காலத்துக்கு முன்பாகவே தாமஸ் மோர் *(1478—1535)*, தாமஸா கம்பனேல்லா *(1568—1639)* தனியுடைமை இல்லாத, மனிதனை மனிதன் சுரண்டுதல் இல்லாத, எல்லா மக்களும் தம் பங்கு உழைப்பைச் செய்கின்ற நியாயமான சமூகத்தைப் பற்றிய கவர்ச்சிகரமான சித்திரத்தை அளித்தார்கள். மோரும் கம்பனேல்லாவும் சோம்பேறிகளையும் செல்வந்தர்களையும் கடுமையாகச் சாடினார்கள். மோர் கடுஞ்சினத்தோடு எழுதினார்: ''ஒரு உடல் பருத்த முட்டாள், ஒரு கழுதையைக் காட்டிலும் அதிகமான மூளையைப் பெற்றிராத நபர் பல அறிவாளிகளையும் நல்ல மனிதர்களையும் தனக்குக் கீழ்ப்படிபவர்களாகவும் அடிமைகளாகவும் வைத்திருக்க முடிவது ஒரேயொரு காரணத்தினால் மட்டுமே, அதாவது அவர் தங்கக் குவி

---

* K. Marx, *Capital*, vol. 1, Moscow, Progress Publishers, 1974, p. 30.

யலை வைத்திருப்பதுதான்.''* தனியுடைமையும் சமூக ஏற்றத்தாழ்வுமே எல்லாத் தீமைகளுக்கும் ஆணிவேர் என்று அவர் கருதினார்.

தாமஸ் மோர் **உட்டோப்பியா**** என்ற தலைப்புடைய நூலை எழுதினார். (கிரேக்க மொழியில் ''உட்டோப்பியா'' என்னும் சொல் ''இல்லாத இடம்'' என்பதைக் குறிக்கிறது.) இன்று அச்சொல் கற்பனையுலகத்தை அல்லது குறையில்லாத உலகத்தைக் குறிக்கிறது. அதனால்தான் சோஷலிசக் கருத்துகளைப் பரப்பிய, ஆனால் அதை அடைவது எப்படி என்பதை அறியாதிருப்பவர்கள் கற்பனாவாத சோஷலிஸ்டுகள் என்று சொல்லப்பட்டார்கள். தாமஸ் மோர் தன்னுடைய நூலில் தான் கற்பனை செய்த இலட்சிய அரசை (''உட்டோப்பியாவை'') வர்ணிக்கிறார். அங்கே தனியுடைமை இல்லை. அங்கே எல்லா சொத்துக்களும் எல்லோருடைய உடைமையாக இருந்தன. அங்கே எல்லோரும் உழைக்க வேண்டும். அவர்களுடைய உழைப்பின் பலன்கள் அனைத்தும் சமூகத்திடம் ஒப்படைக்கப்பட்டன; அவை பொதுப் பண்ட சாலையிலிருந்து இலவசமாக, மக்களின் தேவைகளுக்குத் தகுந்தபடி பகிர்ந்தளிக்கப்பட்டன. எல்லாப் பொருட்களும் எல்லோருடைய உடைமையாக இருந்தன; அதுவே அந்தக் கற்பனை அரசின் குறிக்கோளாகும்.

தாமஸா கம்பனேல்லா என்ற மற்றொரு கற்பனாவாத சோஷலிஸ்ட் எதிர்கால சமூகத்தை, சுதந்திரமான, மகிழ்ச்சி மிக்க மக்களின் சங்கத்தைப் பற்றிய தன்னுடைய கற்பனைகளைச் **சூரிய நகரம்** என்னும் நூலில் எடுத்துக் கூறினார்.

---

* Thomas More, *Sir Thomas More's Utopia*, Oxford, Clarendon Press, 1963, pp. 80—81.

** பொது நன்மை உள்ள சிறந்த அரசு மற்றும் உட்டோப்பியா என்னும் புதிய தீவைப் பற்றிய பயனுள்ள ஆனந்தமளிக்கின்ற நூல் என்பது அப்புத்தகத்தின் முழுத் தலைப்பாகும். — ப-ர்.

அவர்களுக்கு உழைப்பு கடுந்தண்டனையாக, துன்பமாக இருக்கவில்லை; மகிழ்ச்சி, பெருமிதம், புகழ் ஆகியவற்றின் பிறப்பிடமாக இருந்தது. அந்த நகரத்தின் பெயரே இசையின் இனிமையுடன் கவிதையைப் போல ஒலிக்கிறது. அந்த நகரத்தில் வாழ்கின்றவர்கள் எல்லோரும் ஒளியும் இன்பமும் தருகின்ற சூரியனின் ஆற்றலில் திளைக்கிறார்கள். இந்த நூலில் சூரியனின் ஒளிக்கதிர்கள் கம்யூனிச இலட்சியங்களைக் குறிக்கின்றன.

தாமஸ் மோர், தாமஸா கம்பனேல்லாவின் கருத்துகள் பிரான்சில் குலோட் அன்ரீ சான்-சிமோன் *(1760—1825)*, ஷார்ல் ஃபூரியே *(1772—1837)*, பிரிட்டனில் ராபர்ட் ஓவன் *(1771—1858)* ஆகிய அடுத்த தலைமுறையைச் சேர்ந்த கற்பனாவாத சோஷலிஸ்டுகளின் சமூக-அரசியல் கருத்துகளின் உருவாக்கத்தின் மீது தாக்கம் செலுத்தின. அவர்கள் தனியுடைமையை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பைக் கடுமையாக விமர்சனம் செய்தார்கள், எதிர்காலக் கம்யூனிச சமூகத்தைப் பற்றிச் சில அரிய கருத்துகளை வெளியிட்டார்கள். எனினும் மக்கள் தங்களுடைய கருத்துகளை அறிந்து கொண்ட உடனே ஒரு இலட்சிய வடிவான சமூக அமைப்பை நிறுவிட முடியும் என்று அவர்கள் வெகுளித்தனமாக எண்ணினார்கள். அறிவியக்கக் கருத்துகளைப் பரப்புவதன் மூலம் சமூகத்தை மாற்ற முடியும், அதற்குப் போராட்டம் அவசியமில்லை என்று அவர்கள் கருதினார்கள்.

சான்-சிமோனும் ஷார்ல் ஃபூரியேயும் முதலாளித்துவ சமூகத்தைக் கூர்மையாக விமர்சனம் செய்து அதன் தீமைகளை வர்ணித்தார்கள். முதலாளித்துவ சமூகம் அதற்கு முன்பிருந்த வரலாற்று உருவாக்கங்களைப் போல மறையக் கூடியதே, அதற்குப் பதிலாக ஒத்திசைவான சமூக அமைப்பு எதிர்காலத்தில் ஏற்படும் என்று ஷார்ல் ஃபூரியே முடிவு

செய்தார்.

எனினும் கற்பனாவாத சோஷலிஸ்டுகளின் கனவுகள் நிறைவேறவில்லை. சான்-சிமோன் அன்றைய சமூக அமைப்பை அடிவிருத்தி செய்வதற்குத் தன்னுடைய கருத்துகளை ஐரோப்பாவின் அரசர்களுக்கு எழுதினார்; அவர்கள் தன்னுடைய கருத்துகள் நிறைவேறுவதற்கு உதவி புரிவார்கள் என்று அவர் நம்பினார். ஷார்ல் ஃபூரியே புதிய சமூக அமைப்பை ஏற்படுத்துவதற்குப் பண உதவி செய்யுங்கள் என்று செல்வர்களைக் கேட்டுக் கொள்கின்ற விளம்பரங்களைப் பத்திரிகைகளில் வெளியிட்டார். கோடீசுவரர்கள் நன்கொடை அளிப்பதற்கு வருவார்கள் என்று எதிர்பார்த்து அவர் நாள்தோறும் நண்பகலில் வீட்டுக்குத் திரும்புவார். ஆனால் செல்வர்கள் வரவில்லை. சுரண்டுபவர்கள் தம் முடைய அதிகாரம், செல்வம், சலுகைகளை ஒருபோதும் தாமாகவே கைவிட மாட்டார்கள் என்பதைக் கற்பனாவாத சோஷலிஸ்டுகள் புரிந்து கொள்ளவில்லை.

ராபர்ட் ஓவன் எதிர்காலத்தில் நியாயமான சமூகத்தைப் பற்றிய கருத்துகளை வெளியிடுவதுடன் நிற்கவில்லை; அவர் அதற்கென்று செய்முறையான நடவடிக்கைகளையும் செய்தார். அவர் கூட்டு உடைமையாளராக இருந்த தொழிற் சாலையில் துணிச்சலான பரிசோதனையைச் செய்தார். அவர் வேலை நேரத்தைக் குறைத்தார், தொழிலாளர்களின் ஊதியங்களை உயர்த்தினார், அவர்களுடைய குழந்தைகளுக்கு மழலையர் பள்ளிகளை நிறுவினார். ராபர்ட் ஓவன் 1824ஆம் ஆண்டில் அமெரிக்காவுக்குச் சென்று தொழிலாளர் கூட்டு வாழ்க்கைக் குடியேற்றத்தை அமைத்தார்; ஆனால் அக்குடியேற்றம் சிறிது காலத்துக்குப் பிறகு அழிந்து விட்டது. கற்பனாவாத சோஷலிஸ்டுகளுடைய மனிதாபிமானக் கருத்துகள் முதலாளித்துவ அமைப்பில் வாழ்க்கையின் குரூரமான எதார்த்தங்களுக்கு ஈடு கொடுக்க இயலவில்லை.

கற்பனாவாத சோஷலிஸ்டுகளுடைய ஊகங்களும் கருத்துகளும் எதார்த்த நிலைமைக்கு மிகவும் புறம்பாக இருந்தது ஏன்? அவர்கள் கூலியுழைப்பின் தன்மையைப் புரிந்து கொள்ளவில்லை, சமூக வளர்ச்சியின் விதிகளை அறியவில்லை, வர்க்கப் போராட்டத்தை நடத்த வேண்டிய அவசியத்தை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை, பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்பதே அதற்குக் காரணம். கற்பனாவாத சோஷலிஸ்டுகள் தொழிலாளர்களை ஆதரவற்றவர்களாக, அனுதாபத்துக்கு உரியவர்களாகப் பார்த்தார்களே தவிர, முதலாளித்துவ அமைப்பைத் தூக்கியெறிந்து கம்யூனிச சமூகத்தை நிர்மாணிக்கின்ற மாபெரும் புரட்சிகரமான சக்தியாகப் பார்க்கவில்லை.

பாட்டாளி வர்க்கம் போதிய அளவில் அமைப்பு ரீதியாக இன்னும் திரட்டப்படவில்லை என்பது உண்மையே. தொழிலாளி வர்க்கம் ஏழ்மையில் உழன்று கொண்டிருந்தது, ஆனால் அந்த வர்க்கம் தன்னுடைய மகத்தான சமூகப் பாத்திரத்தைப் புரிந்து கொள்வதற்கு உதவுகின்ற நிலைமைகள் இன்னும் ஏற்படவில்லை. அன்ரீ சான்-சிமோன், ஷார்ல் ஃபூரியே மற்றும் இராபர்ட் ஓவனுடைய கருத்துகள் விஞ்ஞான ரீதியாக இல்லாமல் சாராம்சத்தில் கற்பனாவாதமாக இருந்ததற்குத் துல்லியமான காரணம் இதுதான். கற்பனாவாத சோஷலிஸ்டுகள் கனவு காண்பவர்களே; அவர்களுடைய கருத்துகள் பெருந்திரளான மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு சோஷலிசக் கோட்பாடுகளின் அடிப்படையில் உலகத்தை மாற்றக் கூடிய மகத்தான பொருளாயத சக்தியாக வளரவில்லை.

எனினும் அவர்களுடைய கருத்துகள் முதிர்ச்சியடையாதிருந்தாலும் கற்பனாவாத சோஷலிஸ்டுகள் வரலாற்றுக்குச் செய்த சேவைகள் மிகவும் சிறப்பானவை.

முதலாளித்துவத்தின் தீமைகளை அம்பலப்படுத்திச் சாடியதன் மூலம் அதற்குப் பதிலாக சோஷலிச அமைப்பை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை அவர்கள் வலியுறுத்தினார்கள். ''சான்-சிமோன், ஃபூரியே, ஓவனுடைய விசித்திரமான கருத்துகளும் கற்பனாவாதமும் எப்படி இருந்தாலும் அவர்கள் எல்லாக் காலங்களையும் சேர்ந்த மிகச் சிறந்த சிந்தனையாளர்களில் முக்கியமானவர்களாக இருக்கிறார்கள்'' என்று எங்கெல்ஸ் கூறினார்.* அவர்கள் எதிர்கால சமூகத்தின் பல கூறுகளை முன்னறிந்து கூறினார்கள்.

கற்பனாவாத சோஷலிஸ்டுகள் எதிர்காலக் கம்யூனிச சமூகத்தைப் பற்றிக் கூறிய கருத்துகளும் ஊகங்களும் பிற்காலத்தில் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரால் விஞ்ஞான ரீதியில் நிறுவப்பட்டன.

மார்க்சியத்தின் மூலவர்கள்

மார்க்சியம் தோன்றுவதற்குரிய வரலாற்று முன்நிபந்தனைகள். மார்க்சியம் வரலாற்று முன்னேற்றத்தின் விளைவாக, பிரதானமாக முதலாளித்துவத்தின் வளர்ச்சி, அதன் பகையியல் முரண்பாடுகள் தீவிரமடைதல், பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் முதிர்ச்சி வளர்ச்சியடைதல், முதலாளி வர்க்கத்தை எதிர்த்து அதன் தொழில்துறை மற்றும் அரசியல் நடவடிக்கைகளின் மூலமாகத் தோன்றியது.

நெதர்லாந்தில் (16ஆம் நூற்றாண்டு), பிரிட்டனில் (17ஆம் நூற்றாண்டு), பிரான்சில் (18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி) ஏற்பட்ட முதல் முதலாளி வர்க்கப் புரட்சிகளின் விளைவாக

---

* K. Marx, F. Engels, *Selected Works*, in three volumes, vol. 2, Moscow, Progress Publishers, 1976, p. 169.

முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவத்தை முறியடித்து, பண்ணையடிமை முறையை ஒழித்தது, அரசர்களை அகற்றியது. மக்கள் திரளினர் ஒடுக்குமுறையை எதிர்த்து மேன்மேலும் கிளர்ந்தெழுந்தார்கள்; தங்களுடைய சக்தியை ஆளும் வர்க்கங்கள் புரிந்து கொள்ளச் செய்தார்கள்.

பாட்டாளி வர்க்கம் தன்னுடைய பொருளாதாரக் கோரிக்கைகளுக்கும் (கூலி உயர்வு, வேலை நேரத்தைக் குறைத்தல்), அரசியல் கோரிக்கைகளுக்கும் (அரசியல் விடுதலை) ஆதரவாக உக்கிரமான போராட்டத்தை நடத்தியது. உதாரணமாக, பிரான்சில் லியோன் நகரத்தில் (1831 மற்றும் 1834இல்) கிளர்ந்தெழுந்த தொழிலாளர்களும் கைவினைஞர்களும் கூலி உயர்வு மட்டுமின்றி பிரான்ஸ் குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட வேண்டும் என்றும் கோரினார்கள். பிரிட்டனில் 1830க்கள், 1840க்களில் நடைபெற்ற சாசன இயக்கம் பொருளாதார நோக்கங்களுக்காகவும் அரசியல் நோக்கங்களுக்காகவும் போராடுவதாகப் பகிரங்கமாக அறிவித்தது. சாசன இயக்கம் பாட்டாளி வர்க்கத் திரளினருடைய முதல் விரிவான, மெய்யாகவே அரசியல் ரீதியில் அமைக்கப்பட்ட புரட்சிகர இயக்கமாக விளங்கியது.

ஜெர்மனியில் சிலேசியாவில் கைத்தறி நெசவாளர்களுடைய எழுச்சியை (1844) தொழிலாளி வர்க்கத்தின் முக்கியமான நடவடிக்கை எனலாம். அது முதலாளி வர்க்கத்தை எதிர்த்து ஜெர்மானியப் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் ஆரம்பத்தை அறிவித்தது. அது ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர நடவடிக்கைகளின் மீது மாபெரும் தாக்கத்தைச் செலுத்தியது.

முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கத்தின் சமரசத்துக்கு இடமில்லாத போராட்டம் மார்க்சியம் தோன்றுவதற்கு முக்கியமான சமூக-பொருளாதார முன்

நிபந்தனையாக இருந்தது. 19ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் தொழிலாளி வர்க்க இயக்கம் குறிப்பிடத்தக்க அளவுக்கு விரிவடைந்தது. அது போராட்டத்தின் கீழ் நிலையான பொருளாதார வடிவத்திலிருந்து அதன் உச்ச கட்டமான அரசியல் போராட்டத்துக்கு முன்னேறியது. தனிப்பட்ட தொழிற்சாலை முதலாளிகளிடம் பொருளா தாரக் கோரிக்கைகளை வைப்பது மட்டும் போதுமானதல்ல என்பதை இப்பொழுது எண்ணிக்கையில் அதிகரித்த தொழி லாளி வர்க்கம் புரிந்து கொண்டது. முதலாளிகள் முதலாளி வர்க்க அரசு இயந்திரத்தின் முழுச் சக்தியினாலும் ஆதரிக்கப்படுகின்றனர், தங்களுடைய அரசியல் கோரிக்கை களுக்காகப் போராடாவிட்டால் முதலாளிகளை எதிர்க் கின்ற தம்முடைய போராட்டத்தில் ஒருபோதும் வெற்றி அடைய முடியாது என்பதைத் தொழிலாளர்கள் தம்முடைய அனுபவத்தின் மூலமாக அறிந்து கொண்டார்கள். அந்த நாட்களில் தொழிலாளர்களை எதிரிட்ட பிரச்சினைகளுக்கு சோஷலிசப் போதனைகளில் பதில்களைத் தேடியது தொழி லாளி வர்க்கம். எனினும் மார்க்சுக்கு முந்திய கற்பனாவாத சோஷலிசத்தினால் அவர்களுக்கு சரியான பதில்களைத் தர இயலவில்லை.

சமூகத்தையும் அதன் வளர்ச்சியையும் பற்றிய உண் மையான ஒரே விஞ்ஞானம் மார்க்சிய-லெனினியம் ஆகும்.

கார்ல் மார்க்ஸ் — மார்க்சியத்தின் மூலவர். கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் அறிவிற் சிறந்த மேதைகளாகவும் மாபெரும் புரட்சிவீரர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் சமூக விஞ்ஞானங்கள், இயற்கை விஞ்ஞானங்கள் ஆகிய வற்றில் ஆழமான அறிவைப் பெற்றிருந்தார்கள்; விஞ் ஞானத்தில் புதிய கண்டுபிடிப்புகளையும் பொது வாழ்க்கைச் சம்பவங்களையும் உடனுக்குடன் அறிந்து கொண்டார்கள்;

அவற்றைப் படைப்பாற்றலுடன் விளக்கித் தம்முடைய முடிவுகளைத் தொகுத்துக் கூறினார்கள். அவர்கள் ஐரோப்பா, ஆசியா, அமெரிக்கா மற்றும் உலகத்தின் இதர பகுதிகளில் தொழிலாளி வர்க்க இயக்கத்தைப் பற்றி அதிக மான கவனம் செலுத்தினார்கள். அவர்களுடைய பன் மொழிப் புலமை இதற்குச் சாதகமாக இருந்தது. கார்ல் மார்க்ஸ் (ஜெர்மன் மொழியைத் தவிர) ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ் மொழிகளில் பேசினார், இலத்தீன், கிரேக்க மொழிகளும் அவருக்குத் தெரியும். பிரெடெரிக் எங்கெல்ஸ் சுமார் இருபது மொழிகளை அறிந்திருந்தார். அவர்கள் மனிதனுடைய அறிவினால் படைக்கப்பட்ட மிகச் சிறந்த வற்றை விமர்சன ரீதியாக மதிப்பிட்டு விஞ்ஞானத்தில் ஒரு புரட்சியை நிறைவேற்றினார்கள்; உலகத்தை மாற்றி யமைப்பதைப் பற்றிய முரணில்லாத விஞ்ஞானத் தத்துவத்தை உருவாக்கினார்கள்; மனிதகுலத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சியின் விதிகளைக் கண்டுபிடித்தார்கள்.

கார்ல் மார்க்ஸ் பிரஷ்யாவில் ரைன் மாநிலத்தில் உள்ள டிரியர் என்னும் நகரில் 1818 மே 5இல் பிறந்தார். அவருடைய தந்தையாராகிய ஹென்ரிஹ் மார்க்ஸ் ஒரு வழக்குரைஞர்; அவர் அதிகமாகப் படித்தவர், தொழில் திறமை உடையவர். அவர் தன்னுடைய குழந்தைகளை அறிவியக்கவாதிகள் வொல்தேர், ரூஸோ, லேஸ்ஸிங் மற்றும் கற்பனாவாத சோஷலிஸ்டுகளுடைய முற்போக்கான கருத்து களை அடிப்படையாகக் கொண்டு வளர்க்க முனைந்தார்.

கார்ல் மார்க்ஸ் 1830இல் டிரியரிலுள்ள உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார்; ஆனால் அவருடைய ஆன்மிக உலகம் அநேகமாகப் பள்ளிக்கூடப் பாடதிட்டத்துக்குச் சம்பந்தமில் லாமல் சுயேச்சையான முறையில் வளர்ச்சி அடைந்தது. அவர் வரலாறு, தத்துவஞானம், இலக்கியம் ஆகிய துறை களைச் சேர்ந்த நூல்களைப் படிப்பதில் அதிகமான நேரத்

தைச் செலவிட்டார். மக்களுடைய மகிழ்ச்சிக்காக, நீதிக் காகப் போராடுவதில் தன்னுடைய வாழ்க்கையை அர்ப் பணிக்க வேண்டும் என்று அவர் இளம் பருவத்திலேயே எண்ணினார். இளைஞர் மார்க்ஸ் **வேலையைத் தேர்ந் தெடுப்பதைப் பற்றி ஒரு இளைஞனுடைய சிந்தனைகள்** என்னும் பள்ளியிறுதிக் கட்டுரையில் தன்னுடைய எண்ணங்களையும் மனநிலையையும் எடுத்துரைத்தார். அவர் மனிதகுலத்துக்குப் பாடுபட வேண்டும் என்னும் கருத்தை அதில் விரித்துக் கூறியிருந்தார்; அது பிற்காலத்தில் அவருடைய மொத்த வாழ்க்கைக்கும் குறிக்கோளாயிற்று. தன்னுடைய வாழ்க் கைப் பாதையில் மலர்கள் தூவப்பட்டிருக்காது, முட்கள் நிறைந்திருக்கும் என்பதை அவர் மிகவும் தெளிவாக உணர்ந் திருந்தார். ஆனால் அது அவருக்குக் கவலையளிக்கவில்லை. தன்னுடைய முடிவு தன் மீது மாபெரும் பொறுப்பைச் சுமத்தியிருக்கிறது என்பதை அவர் தெளிவாக உணர்ந் திருந்தார். ''மனிதகுலத்தின் நன்மைக்காக நாம் சிறப்பாகப் பாடுபடுவதற்குரிய வேலையை நாம் தேர்ந்தெடுத்துவிட்டால் அதன் எந்தச் சுமையும் நம்மை அழுத்த முடியாது...'' என்று அவர் எழுதினார்.*

கார்ல் மார்க்ஸ் முதலில் பான் பல்கலைக்கழகத்திலும் அதன் பிறகு பெர்லின் பல்கலைக்கழகத்திலும் படித்துக் கொண்டிருந்த பொழுது வரலாறு, இலக்கியம், தத்துவ ஞானம், சட்டம் ஆகியவற்றை ஆழமாகக் கற்றார். கார்ல் மார்க்ஸ் 1841இல் டாக்டர் பட்ட ஆராய்ச்சி யுரையை நிகழ்த்திய பொழுது தன்னுடைய விரிந்த அறிவுப் பரப்பையும் மாபெரும் அறிவுத் திறனையும் நிலைநாட் டினார். மார்க்ஸ் தன்னுடைய இளமையில் நெருங்கிப்

---

* K. Marx, F. Engels, *Collected Works*, vol. 1, Moscow, Progress Publishers, 1975, p. 8.

பழகிய மோஸஸ் ஹேஸின் கருத்தை இங்கே மேற்கோளாகக் காட்டுவது பொருத்தமானதே. ''...ஒருவேளை தற்பொழுது வாழ்கின்ற தத்துவஞானிகளில் ஒரே ஒரு மெய்யான தத் துவஞானியைத் தெரிந்து கொள்வதற்கு நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.... நான் போற்றுகின்ற மனிதர் டாக்டர் மார்க்ஸ் என்ற பெயருடையவர்; அவர் மிகவும் இளை ஞராகவே இன்னும் இருக்கிறார் (அதிகமாகப் போனால் இருபத்து நான்கு வயதே இருக்கும்); மத்திய கால தத் துவஞானத்துக்கும் அரசியலுக்கும் அவர் இறுதியான அடியைக் கொடுப்பார்; அவர் மிகக் கூர்மையான நகைச் சுவையை மிகவும் ஆழமான தத்துவஞானச் செறிவுடன் இணைக்கிறார்; ரூஸோ, வொல்தேர், ஹோல்பாஹ், லேஸ்ஸிங், ஹேய்னெ, ஹெகல் ஆகியோர் ஒரே நபராக இணைந்திருப்பதை — இணைந்திருப்பது என்று நான் கூறி னேன், கலந்திருப்பதாகச் சொல்லவில்லை — கற்பனை செய்யுங்கள். அவர்தான் டாக்டர் மார்க்ஸ்'' என்று ஹேஸ் தன்னுடைய நண்பருக்கு எழுதிய கடிதத்தில் வர்ணித்தார். *

கார்ல் மார்க்ஸ் 1842இல் *Rheinische Zeitung* (''ரைன் பத்திரிகை'') என்னும் பத்திரிகையின் கட்டுரையாளராக வும் பின்னர் ஆசிரியராகவும் பொறுப்பேற்றார். அவர் பிரஷ்ய அரசின் ஒடுக்குமுறை ஆட்சியை, நிலப்பிரபுத்துவக் கோமான்கள், வீங்கிப் போன பிரஷ்ய அதிகார வர்க்கத்தின் ஆதிக்கத்தை, வர்க்க சலுகைகளை, பத்திரிகைத் தணிக்கை முறையை அப்பத்திரிகையில் தீவிரமாக அம்பலப்படுத்தினார்; ஒடுக்கப்பட்ட பெருந்திரளான உழைக்கும் மக்களை ஆதரித்து எழுதினார். பிரஷ்ய அரசாங்க அதிகாரிகள் ஆத்திரமடைந்தனர். 1843ஆம் ஆண்டுத் தொடக்கத்தில்

---

* K. Marx, F. Engels, *Gesamtausgabe*, Erste Abteilung, Band 1, Zweiter Halbbang, S. 261.

அப்பத்திரிகை தடை செய்யப்பட்டது. கார்ல் மார்க்ஸ் ஜெர்மனியை விட்டுப் போவதென்று முடிவு செய்தார்.

அவர் திருமணம் செய்து கொண்ட பொழுது அவருடைய வாழ்க்கையில் புதிய கட்டம் தொடங்கியது. அவருடைய மனைவி ஜென்னி வான் வெஸ்ட்ஃபாலன் அவரை வாழ்க்கை முழுவதிலும் பேணிக் காத்தாள். ஜென்னி தன் கண வருடைய துன்பங்களைப் பகிர்ந்து கொண்டது மட்டுமின்றி அவருடைய பணியிலும் போராட்டத்திலும் மெய்யாகவே பங்கெடுத்தாள், அதைப் பாசத்துடனும் அர்ப்பணிப்பு உணர்ச்சியுடனும் செய்தாள் என்று பிரெடெரிக் எங்கெல்ஸ் கூறினார்.

கார்ல் மார்க்ஸ் 1843ஆம் ஆண்டின் இலையுதிர் காலத் தின் போது பாரிசுக்குச் சென்றார். அங்கே *Deutsch-Französische Jahrbücher* (''ஜெர்மன்-பிரெஞ்சு ஆண்டு மலர்'') என்ற சஞ்சிகையை நிறுவினார்; அதில் சட்டம் பற்றிய ஹெகலியத் தத்துவஞானத்துக்கு விமர்சனம். முகவுரை என்ற பிரபலமான கட்டுரையை வெளியிட்டார். பாட்டாளி வர்க்கமே தீவிரமான புரட்சிகர நடவடிக்கைக்குத் தகுதி யுடைய உண்மையான சக்தி, தத்துவத்தையும் நடைமுறை யையும், தத்துவஞானத்தையும் வாழ்க்கையையும் ஒன்று சேர்க்கின்ற சங்கிலி பாட்டாளி வர்க்கமே என்று அவர் அக்கட்டுரையில் விளக்கினார்; வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், சுரண்டல் இல்லாத சமூகத்தைப் பற்றிய கருத்துகளை ஈடேற்றுமாறு பாட்டாளி வர்க்கத்தை அறை கூவினார்.

இப்புதிய சமூகம் எப்படி இருக்கும்? மார்க்ஸ் இக்கேள் விக்குப் பதிலளிக்கின்ற பொழுது கம்யூனிசம் என்பது மெய்யான, முழுநிறைவான மனிதாபிமான சமூகம்; தன் உறுப்பினர்கள் அனைவருக்கும் முழுவிரிவான வளர்ச்சிக்கு வாய்ப்புத் தருகின்ற சமூகம் என்று 1844ஆம் வருடத்தின்

பொருளாதார-தத்துவஞானக் கையேடுகள் என்னும் நூலில் எழுதினார். அவர் முன்னேற்றப் பாதையில் நெடிய காலடி வைத்துத் தன்னுடைய குறிக்கோள் கம்யூனிச இலட்சியங் களுக்குப் போராடுவதாகும் என்றார். இந்த இலட்சியங் களை ஈடேற்றக் கூடிய பொருளாயத சக்தி தொழிலாளி வர்க்கமே என்று அவர் முடிவு செய்தார்.

இருபத்தாறு வயதான கார்ல் மார்க்ஸ் உலகத்தை, மனித சமூகத்தின் வாழ்க்கையைப் பற்றிப் புதிய, மெய்யான விஞ்ஞானக் கண்ணோட்டத்தை இவ்விதம் அடைந்தார். தத்துவஞானம் மற்றும் இதர சமூகச் சிந்தனைத் துறை களில் ஐரோப்பிய கலாசாரத்தின் மொத்த பாரம்பரியத்தை யும் அவர் ஆராய்ந்து மதிப்பிட்டதன் விளைவாக, அவரு டைய ஏராளமான படைப்புப் பணியின் விளைவாக அவர் இங்கே வந்து சேர முடிந்தது.

மார்க்சியம் மனிதகுலத்தின் கலாசார, அறிவுச் சாதனை களின் பொழிப்பாகவும் விமர்சனமாகவும் இருந்ததுடன் வரலாற்று ரீதியில் தற்காலிகமான, அழியும்படி விதிக்கப் பட்டுள்ள முதலாளித்துவ சமூகத்தின் வளர்ச்சியில் சில பொருளாதார, சமூக-அரசியல் போக்குகளின் வெளியீடாக வும் தோன்றியது.

கார்ல் மார்க்ஸ் 1844இல் கம்யூனிசத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டார். விஞ்ஞான உலகக் கண்ணோட்டம் என்ற முறையில் மார்க்சியம் அந்த ஆண்டில் பிறந்தது எனலாம். எனினும் மார்க்சியத் தத்துவத்தை அதன் எல்லா அம்சங்களிலும் வளர்ப்பதற்கு ஏராளமான விஞ்ஞான, செய்முறை, புரட்சிகர வேலையைச் செய்ய வேண்டியிருந் தது. இந்த மாபெரும் பணி பிரெடெரிக் எங்கெல்சுடன் கூட்டாக நிறைவேற்றப்பட்டது. இருவரும் 1844இல் பாரிசில் முதல் தடவையாகச் சந்தித்துக் கொண்டார்கள். அப் பொழுது அவர்களுக்கிடையே ஏற்பட்ட நெருக்கமான நட்பு

அவர்கள் கூட்டாகப் புரட்சிகர வேலைகளைச் செய்வதற்கு உதவியது. மார்க்ஸ் 1847ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் கம்யூனிஸ்ட் சங்கத்தில் சேர்ந்தார், அதற்குச் சிறிது காலத்துக்குப் பிறகு எங்கெல்சுடன் சேர்ந்து பிரபலமான **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையை,** தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரக் கட்சியின் முதல் செயல்திட்டத்தை எழுதினார். 1849இல் அவர் தன் இருப்பிடத்தை லண்டனுக்கு மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அங்கே அவர் தன் குடும்பத்துடன் வசித்து 1883இல் மரணமடைந்தார்.

இங்கிலாந்தில் மார்க்சின் வாழ்க்கை துன்பம் மிகுந்திருந்தது. எங்கெல்ஸ் அவ்வப்பொழுது பண உதவி செய்திருக்காவிட்டால் மார்க்ஸ் வறுமைத் தீயில் மடிந்திருப்பார். மார்க்ஸ் சில சமயங்களில் தன்னுடைய சூட்டை அடகு வைத்திருந்தபடியால் வெளியே போக முடியாதிருந்ததும் உண்டு. மார்க்ஸ் 1852 செப்டெம்பர் 8இல் எங்கெல்சுக்குப் பின்வருமாறு எழுதினார்: ''என் மனைவிக்கு உடல் நலமில்லை, ஜென்னிக்கு (அவருடைய மகள்) நோய்.... நான் டாக்டரைக் கூட்டி வரவில்லை, ஏனென்றால் மருந்து வாங்குவதற்கு என்னிடம் பணமில்லை. கடந்த எட்டு—பத்து நாட்களாக என் குடும்பத்தினர் ரொட்டியையும் உருளைக் கிழங்கையும்தான் சாப்பிடுகிறார்கள். இன்று அதுவும் கிடைக்குமா என்பது சந்தேகமே.'' *

எவ்வளவு அதிகமான துன்பங்கள் வந்த போதிலும் மார்க்ஸ் தன்னுடைய விஞ்ஞான, புரட்சிகர வேலையைத் தொடர்ந்து செய்தார். அவர் **மூலதனம்** என்னும் நூலை எழுதி முடிப்பதற்கு நாற்பது ஆண்டுகளாயிற்று. அதன் பூர்வாங்கப் படிகள் 30—35 தொகுதிகளாக இருந்தன

---

* K. Marx, F. Engels, *Werke*, Band 28, Berlin, Dietz Verlag, 1963, S. 128.

என்பதிலிருந்து அது எவ்வளவு மாபெரும் பணி என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். மூலதனம் முதலாளி வர்க்கத்தின் தலை மீது இதுவரை போடப்பட்டதிலேயே மிகப் பயங்கரமான வெடி குண்டு என்று அவர் கூறினார். அதில் மார்க்சின் போதனை மிகவும் முழுமையான முறையில் விளக்கப்பட்டிருந்தது. உலகத்தை விஞ்ஞான ரீதியில் அறி வதற்கும் அதைப் புரட்சிகரமாக மாற்றியமைப்பதற்கும் மார்க்சியம் ஒரு மகத்தான சாதனமாக அந்த நூலில் வெளிப்படுகிறது. சோஷலிசத்துக்கு உறுதியான பொருளா தார அடிப்படையை அமைத்துக் கொடுத்தது அந்த நூலே.

மார்க்ஸ் மிகவும் பரந்த விஞ்ஞான, இலக்கிய பாரம் பரியத்தை விட்டுச் சென்றார். பல தொகுதிகளைக் கொண்ட மூலதனம் நூல், தனி நூல்கள், தொழிலாளி வர்க்க இயக்கத்தைப் பற்றிய ஆயிரக்கணக்கான கட்டுரைகள், ஆவணங்கள், ஏராளமான கடிதங்கள் அதிலடங்கியவை ஆகும். மார்க்ஸ், எங்கெல்சின் நூல்கள் ருஷ்ய மொழியில் உலகத்திலேயே மிகவும் முழுமையான பதிப்பில் 50 தொகுதி களாக வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பான்மை மார்க்சினால் எழுதப்பட்டவையே.

கார்ல் மார்க்ஸ் 1883 மார்ச் 14ந் தேதியன்று மரணமடைந்தார். அவர் உடல் லண்டனில் ஹைகேட் என்ற இடத்திலுள்ள இடுகாட்டில் புதைக்கப்பட்டது. ''மனிதகுலத்தில் ஒரு தலை குறைந்து விட்டது, அது நம் காலத்திலேயே மாபெரும் தலை'' என்று இடுகாட் டில் உரை நிகழ்த்திய பொழுது எங்கெல்ஸ் குறிப்பிட் டார். *

---

* K. Marx, F. Engels, *Selected Correspondence*, Moscow, Progress Publishers, 1975, p. 340.

கார்ல் மார்க்சின் நண்பரும் கூட்டாளியுமான பிரெடெரிக் எங் கெல்ஸ். பிரெடெரிக் எங்கெல்ஸ் ஜெர்மனியிலுள்ள பார் மென் என்னும் நகரத்தில் 1820 நவம்பர் 28இல் ஒரு தொழிலதிபருடைய மகனாகப் பிறந்தார். எங்கெல்ஸ் 1837இல் தன் தகப்பனாருடைய வற்புறுத்தல் காரணமாக வர்த்தகத்தில் ஈடுபட்டார். ஆனால் இளைஞரான எங் கெல்சுக்கு அத்தொழில் பிடிக்கவில்லை; அவர் சுய கல்வியில் தீவிரமாக முனைந்தார். அவர் சமூக விஞ்ஞானம், இலக் கியம், பல மொழிகளைக் கற்றார். அவர் விளையாட்டு, குதிரைச் சவாரி செய்தல், வாட் சண்டை, நீச்சல் ஆகியவற்றி லும் சிறந்து விளங்கினார்.

அவர் கற்பனாவாத சோஷலிசத்தின் வளர்ச்சியை நுணுக்கமாக ஆராய்ந்தார்; தீவிரமான சமூகப் பிரச்சினை களைக் கம்யூனிசம் மட்டுமே தீர்க்க முடியும் என்ற முடிவுக்கு இறுதியில் வந்தார்.

அவருடைய தந்தையார் பிரிட்டனிலுள்ள மாஞ்செஸ் டரில் ஒரு பஞ்சாலைக்குக் கூட்டுடைமையாளராக இருந் தார். எங்கெல்ஸ் 1842 நவம்பர் மாதத்தின் நடுப்பகுதியில் தொழில் மற்றும் கணக்குப் பயிற்சிக்காக அங்கே சென்றார். அந்தச் சமயத்தில் பிரிட்டன் மிகவும் வளர்ச்சியடைந்த தொழிலாளி வர்க்க இயக்கத்தைக் கொண்ட, மிகவும் முன்னேற்றமடைந்த தொழில்துறை நாடாக இருந்தது. பிரிட்டிஷ் பாட்டாளி வர்க்கம் தன்னுடைய பலத்தை நன்றாக உணர்ந்திருந்தது; அதன் நடவடிக்கைகள் அமைப்பு ரீதியான வெகுஜனத் தன்மையைப் பெற்றிருந்தன. அந்த நாட்டின் அரசியல் வாழ்க்கையையும் தொழிலாளி வர்க்கத் தின் நிலைமையையும் எங்கெல்ஸ் நுணுக்கமாக ஆராய்ந் தார். அவர் சாதாரணத் தொழிலாளர்களுடைய இல்லங் களுக்குச் சென்றார், அவர்களுடன் பேசினார்; பிரிட்டிஷ் முதலாளித்துவத்தின் கொடுமையான நிலைமைகளின் கீழ்

அவர்கள் எப்படி வசித்தார்கள், வேலை செய்தார்கள் என்பதை அவர் நேரில் கண்டார். அவர் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலைவர்களையும் சந்தித்தார்; தொழிலாளர்களின் வேலை, அன்றாட வாழ்க்கை பற்றிய புள்ளி விவரங்களடங்கிய நூல்கள், ஆவணங்களை ஆராய்ந்தார்.

எங்கெல்ஸ் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமையைப் பற்றி சில கட்டுரைகளை *Rheinische Zeitung* பத்திரிகைக்கு அனுப்பினார். அப்பொழுது அதன் ஆசிரியராக இருந்த கார்ல் மார்க்ஸ் அவற்றை உடனே வெளியிட்டார். மார்க்ஸ் வெளியிட்ட *Deutsch-Französische Jahrbücher* சஞ்சிகைக்கு எங்கெல்ஸ் சில கட்டுரைகளை அனுப்பினார். **அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு உருவரைகள்** என்பதும் அவற்றில் ஒன்றாகும். மார்க்ஸ் அக்கட்டுரையைப் பாட்டாளி வர்க்க அரசியல் பொருளாதாரத்தின் மேதாவிலாசம் நிறைந்த ஆராய்ச்சி என்று வர்ணித்தார், ஏனென்றால் அக்கட்டுரை முதலாளித்துவத்தின் பிரதான நிகழ்வுகளையும் முரண்பாடுகளையும் புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தின் நிலைகளிலிருந்து ஆராய்ந்திருந்தது. எங்கெல்ஸ் அந்தக் கட்டுரையில் முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தின் முக்கியமான விளக்குநர்களையும் முதலாளித்துவ வர்க்கத்துக்கு வக்காலத்து வாங்குபவர்களையும் விமர்சனம் செய்திருந்தார்.

எங்கெல்ஸ் பிரிட்டனில் இருந்த பொழுது **இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலை** என்ற புத்தகத்தை எழுதத் தொடங்கி 1845இல் முடித்தார். மார்க்ஸ் இப்புத்தகத்தை மிகவும் உயர்வாக மதிப்பிட்டார். இப்புத்தகம் தொழிலாளி வர்க்கத்தின் துன்பங்களைப் பற்றி உண்மையான சித்திரத்தைக் கொடுத்தது. அதே சமயத்தில் அந்த வர்க்கம் வேதனைகளை அனுபவிக்கும்படி விதிக்கப்பட்ட வர்க்கம் மட்டுமல்ல, கடினமான பொருளாதார நிலைமைகளே முத

லாளித்துவ அமைப்பைத் தூக்கியெறிந்து விடுதலைக்காகப் போராடுமாறு பாட்டாளி வர்க்கத்தை உந்தித் தள்ளுகின்றன என்பதை எங்கெல்ஸ் முதல் தடவையாக எடுத்துக் காட்டினார். ''ஆங்கில முதலாளி வர்க்கம் கொலை, கொள்ளை, பேரளவில் எல்லாவிதமான குற்றங்களையும் செய்திருக்கிறது என்று உலகத்துக்கு முன்பாக நான் குற்றம் சாட்டுகிறேன்.... ஜெர்மன் முதலாளி வர்க்கம் ஆங்கில முதலாளி வர்க்கத்தைப் போல மோசமானதே, எனினும் தொழிலாளர்களைக் கடுமையாக வேலை வாங்குவதில் அந்த அளவுக்குத் துணிவு, முரணற்ற தன்மை, திறமை அதற்குக் கிடையாது என்பதை நான் தெளிவாகக் கூறுகிறேன்.'' *

மார்க்சும் எங்கெல்சும் 1845—1846இல் எழுதிய **ஜெர்மன் சித்தாந்தம்** என்னும் நூலில் விஞ்ஞான கம்யூனிசத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை நுணுக்கமாக வர்ணித்திருந்தார்கள். ஒரு சமூக உருவாக்கம் தவிர்க்க இயலாத விதத்தில், உரிய காலத்துக்குப் பிறகு மற்றொரு சமூக உருவாக்கத்தினால் அகற்றப்படுகிறது என்னும் கருத்தை வெளியிட்டிருந்தார்கள். முதலாளித்துவத்தின் வீழ்ச்சி தவிர்க்க முடியாதது என்பதை நிரூபித்து உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் முன்னேற்றமே சமூக வளர்ச்சியின் அடிச்சரடு என்பதை எடுத்துக் காட்டியிருந்தார்கள்.

எங்கெல்ஸ் 1847இல் கம்யூனிஸ்ட் சங்கத்துக்கு செயல்திட்டத்தைத் தயாரித்தார். **கம்யூனிசத்தின் கோட்பாடுகள்** என்னும் தலைப்பு கொண்டிருந்த இச்செயல்திட்டம் பின்னர் **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையை** எழுதுவதற்கு அடிப்படையாக இருந்தது. 1848இல் எழுதப்பட்ட அந்த அறிக்கை பாட்டாளி வர்க்கத்துக்குத் தெளிவான உலகக் கண்ணோட்டத்தைக் கொடுத்தது.

---

* K. Marx, F. Engels, *Selected Correspondence*, p. 21.

எங்கெல்ஸ் ஏராளமான நூல்களை எழுதினார். அவற்றில் **டூரிங்குக்கு மறுப்பு** என்பது முக்கியமானதாகும். அதில் மார்க்சியத்தின் மூன்று முக்கிய பகுதிகளாகிய பொருள் முதல்வாதத் தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம், விஞ்ஞானக் கம்யூனிசம் ஆகியவற்றை விளக்கினார். கார்ல் மார்க்ஸ் மரணமடைந்த பிறகு அவர் **மூலதனம்** நூலின் இரண்டாவது, மூன்றாவது தொகுதிகளைப் பிரசுரத்திற்குத் தயாரித்தார். இந்த இரண்டு தொகுதிகளும் இலக்கியத் துறையில் மார்க்ஸ், எங்கெல்சினுடைய கூட்டுச் சாதனை ஆகும்.

எங்கெல்ஸ் மார்க்சின் நண்பர், கூட்டாளி என்ற முறை யில், புரட்சிகரமான தத்துவத்தை உருவாக்கிய புகழ் முக்கியமாக மார்க்சுக்கே உரியது என்று எப்பொழுதும் வற்புறுத்தினார். எங்கெல்ஸ் **லுட்விக் ஃபாயர்பாஹும் மூலச் சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும்** என்னும் நூலில் பின்வருமாறு எழுதினார்: ''இங்கே சொந்த முறை யில் ஒரு விளக்கமளிப்பதற்கு என்னை அனுமதிக்க வேண்டும். சமீப காலத்தில் இந்தத் தத்துவத்தில் என்னுடைய பங்கைப் பற்றி அடிக்கடி பேசப்பட்டு வருகிறது. எனவே இந்த விஷயத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு நான் இங்கே சில வார்த்தைகளை எழுதாமலிருக்க முடியாது. நாற்பது ஆண்டுகளாக எனக்கும் மார்க்சுக்கும் ஏற்பட்டிருந்த ஒத் துழைப்புக்கு முன்னரும் அதன் போதும் இந்தத் தத்துவத் தின் அடிப்படைகளைத் தயாரிப்பதில் — குறிப்பாக, அதை விரித்துரைப்பதில் — எனக்குச் சற்றுச் சுதந்திரமான பங்கு இருந்தது என்பதை நான் மறுக்க முடியாது. ஆனால் அதன் தலைமையான அடிப்படைக் கருத்துகளில் — சிறப்பாக, பொருளாதார மற்றும் வரலாற்றுத் துறைகளில் — மிகவும் பெரும் பகுதியும் மற்றும் எல்லாவற்றுக்கும் மேலாக அவற் றை முடிவாக, துல்லியமாக வகுத்தளித்ததும் மார்க்சின்

பங்காகும். ஒரு சில விசேஷமான துறைகளில் என்னுடைய பணியை விலக்கிப் பார்க்கும் பொழுது என்னுடைய பங்கினை நான் இல்லாமலேயே மார்க்ஸ் செய்திருக்க முடியும். ஆனால் மார்க்ஸ் சாதித்ததை நான் ஒருபோதும் செய்திருக்க முடியாது. எங்கள் எல்லோரையும் காட்டிலும் மார்க்ஸ் உயர்ந்து நின்றார், நெடுந்தொலைவுக்குப் பார்த்தார், அகல்விரிவாகவும் வேகமாகவும் கண்டார். மார்க்ஸ் ஒரு மேதை. மற்றவர்களாகிய நாங்கள் — எவ்வளவு உயர்வாக மதிப்பிட்டாலும் — திறமைசாலிகளே. அவர் மட்டும் இல்லையென்றால், இந்தத் தத்துவம் இன்று அடைந்திருக்கும் நிலையைச் சிறிதும் எட்டியிருக்காது. ஆகவே அது அவருடைய பெயரைத் தாங்கியிருப்பது பொருத்தமே.'' *

பிரெடெரிக் எங்கெல்ஸ் 1895 ஆகஸ்ட் 5இல் மரணமடைந்தார்.

மார்க்சும் எங்கெல்சும் தங்களுடைய வாழ்க்கை முழுவதையும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்துக்கு அர்ப்பணித்தார்கள். அவர்களுடைய தத்துவ நூல்களும் செய்முறை நடவடிக்கையும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகர இயக்கத்தில் ஒரு புதிய கட்டத்தை உருவாக்கின. சென்ற காலத்திலிருந்த வீண் கனவுகளுக்குப் பதிலாக விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட புரட்சிகரமான தத்துவத்தை உருவாக்கியது தொழிலாளி வர்க்கத்துக்கு அவர்களுடைய சேவையாகும்.

கம்யூனிசம் கற்பனையல்ல — விஞ்ஞானம். கம்யூனிசம் என்பது ஒரு தனிநபருடைய — அந்த நபர் மேதையாக இருந்தாலும் கூட — கண்டுபிடிப்பு அல்ல, அது மனித சமூக வளர்ச்சியின்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், வி. இ. லெனின், **இயக்கவியல் பொருள் முதல்வாதம்**, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1985, பக்கங்கள் 134—135.

தவிர்க்க முடியாத விளைவு என்று மார்க்சும் எங்கெல்சும் தங்களுடைய ஆராய்ச்சி மற்றும் புரட்சிகர நடவடிக்கையின் மூலம் முடிவு செய்தார்கள். அதன் மூலம் அவர்கள் சோஷலிசத்தைக் கற்பனை உலகத்திலிருந்து விஞ்ஞானமாக மாற்றினார்கள்.

இதற்குப் பல ஆண்டுகளுக்குப் பிறகு வி. இ. லெனின் பின் வருமாறு எழுதினார்: '' 'புதிய' சமுதாயம் ஒன்றைத் தாமே கற்பனா சக்தியால் தோற்றுவித்துக் கொண்டார், அல்லது கண்டுபிடித்துக் கொண்டார் என்கிற பொருளில் மார்க்சிடம் கற்பனாவாதத்தின் சாயல் இம்மியும் கிடையாது'' *.

மார்க்சும் எங்கெல்சும் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர் காலம் ஆகியவற்றைப் பொருள்முதல்வாதிகள் மற்றும் இயக்கவியல்வாதிகள் என்ற முறையில் ஆராய்வதற்குப் பாடு பட்டார்கள். சமூகத்தின் வாழ்க்கையில் மாற்றங்கள் ஏன் நடைபெறுகின்றன, சமூக மாற்றம் ஒரு குறிப்பிட்ட திசை யில் நடைபெறுவதும் வேறு திசையில் நடைபெறாததும் ஏன் என்ற பிரச்சினைகளை அவர்கள் ஆராய்ந்தார்கள். வரலாற்றை உண்மையில் படைப்பவர்கள் பெருந்திரளான உழைக்கும் மக்களே, அவர்களே பொருளாயதச் செல்வம் அனைத்தையும், அதாவது சமூகத்தின் வாழ்க்கைக்குப் பயன் படுகின்ற அனைத்துப் பொருட்களையும் படைக்கிறார்கள் என்பதை அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். எல்லா வர்க்க (அடிமையுடைமை, நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ) சமூகங்களின் வளர்ச்சியிலும் சுரண்டல்காரர்களை எதிர்த்து உழைக்கும் மக்களின் போராட்டமே இயக்கு சக்தி ஆகும். மார்க்சியத்தின் மூலவர்கள் முதலாளித்துவ அமைப்பை நுணுக்கமாக ஆராய்ந்து அதன் அடிப்படையான முரண்

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, நான்கு பாகங்களில், இரண்டாம் பாகம், மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1977, பக்கம் 274.

பாடுகளை அம்பலப்படுத்தினார்கள். முதலாளித்துவ சமூகத் தின் சீர்குலைவுக்கும் வீழ்ச்சிக்கும் உரிய பொருளாயத நிலைமைகள் அந்த சமூகத்திற்குள்ளாகவே படைக்கப்படு கின்ற செயல்முறையை அவர்கள் கவனமாக ஆராய்ந்தார் கள். அவர்கள் பழைய அமைப்பை ஒழிக்கக் கூடிய சக்தி பாட்டாளி வர்க்கமே என்பதைக் கண்டதுடன் சோஷலிச சமூகத்தை நிர்மாணிப்பதில் பாட்டாளி வர்க்கம் வகிக்கப் போகின்ற பாத்திரத்தை நிறுவினார்கள்.

முதலாளித்துவத்தை ஒழித்து சோஷலிச சமூகத்தைப் படைக்குமாறு விதிக்கப்பட்டிருப்பது பாட்டாளி வர்க்கமே தவிர சமூகத்தில் வேறு எந்த வர்க்கமும் அல்ல என்று ஏன் கூறுகின்றோம்?

முதலாவதாக, முதலாளித்துவ சமூகத்தில் பாட்டாளி வர்க்கத்திடம் எந்த வடிவத்திலும் உடைமை இல்லை: பாட்டாளிகள் தம்முடைய கரங்களைத் தவிர வேறு எதையும் சொந்தமாக வைத்திருக்கவில்லை. தனியுடைமை என்ற சுமை அவர்களை அழுத்தவில்லை, அவர்களுடைய புரட்சிகர ஆர்வத்தைக் குறைக்கவில்லை. எனவே ஒரு சோஷலிசப் புரட்சியில் பாட்டாளி வர்க்கம் தன்னுடைய அடிமைச் சங்கிலிகளைத் தவிர வேறு எதையும் இழப் பதில்லை.

இரண்டாவதாக, பாட்டாளி வர்க்கம் கடுமையான சுரண்டலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. முதலாளி வர்க்கம் பாட்டாளி வர்க்கத்திடமிருந்து திருடுவதன் மூலம் தன் னுடைய செல்வத்தின் பெரும் பகுதியைப் பெறுகிறது. தொழிலாளி வர்க்கம் சமூகத்தில் தன்னுடைய நிலை காரணமாக சோஷலிசத்துக்கு மிகவும் உறுதியாகப் போராடு கின்ற சக்தியாக இருக்கிறது.

மூன்றாவதாக, தொழிலாளி வர்க்கம் அதிக முற்போக் கான, அதே சமயத்தில் தொடர்ச்சியாக வளர்ச்சியடைகின்ற

உற்பத்தி வடிமாகிய இயந்திர உற்பத்தியுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. முதலாளித்துவ உற்பத்தியின் வளர்ச்சி சமூகத்தின் தலைமையான உற்பத்திச் சக்தியான பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சி, வலுப்படுதலுடன் சேர்ந்து நடைபெறுகிறது.

நான்காவதாக, முதலாளித்துவ உற்பத்தியின் வளர்ச்சி தொழிலாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்துக்கு எதிரான ஒற்றைப் புரட்சிகர ராணுவமாக இணைகின்ற நிலைமையைத் தவிர்க்க முடியாதபடி தோற்றுவிக்கிறது. தொழிலாளி வர்க்கமே நம் காலத்தின் மிகவும் அமைப்பு ரீதியான அரசியல் சக்தி ஆகும். அது மிகவும் முற்போக்கான, புரட்சிகரமான தத்துவத்தைப் பெற்றிருக்கிறது; கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் அதற்குத் தலைமை தாங்குகின்றன.

புதிய சமூகம் வெறும் கனவு அல்ல, அது இறுதி இலட்சியம், முதலாளித்துவத்தின் கீழ் உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சியின் விளைவு என்பதை முதன்முறையாக நிரூபித்தவர்கள் மார்க்சும் எங்கெல்சும் ஆவர். **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை** எல்லா நாடுகளிலும் உள்ள புரட்சிவீரர்களின் கொள்கை ஆவணமாகவும் நடவடிக்கையின் செயல்திட்டமாகவும் இருக்கிறது. அந்த **அறிக்கையில்** மார்க்சியத்தின் மூலவர்கள் தம்முடைய தத்துவத்தின் அடிப்படையான கருத்துகளையும் கோட்பாடுகளையும் உருவரையாக எழுதியிருந்தார்கள்; விஞ்ஞான சோஷலிசத்தின் கேந்திரமான ஷரத்துகளையும் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான கொள்கையையும் வகுத்தளித்திருந்தார்கள். பாட்டாளி வர்க்கத்தை சுயேச்சையான அரசியல் சக்தியாகத் திரட்டுகின்ற கட்சியைப் பற்றிய மார்க்சியக் கோட்பாட்டின் அடிப்படைகள் அதில் எழுதப்பட்டிருக்கின்றன. **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை** பின்வரும்

தீர்க்கதரிசனமான சொற்களுடன் முடிவடைகிறது: ''அஞ்சி நடுங்கட்டும் ஆளும் வர்க்கங்கள், கம்யூனிசப் புரட்சி வருகிற தென்று. பாட்டாளிகள் தமது அடிமைச் சங்கிலியைத் தவிர இழப்பதற்கு ஏதும் இல்லாதவர்கள். அவர்கள் வென்று பெறுவதற்கு அனைத்து உலகும் இருக்கிறது.

உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!'' *

உலகத்தை மாற்றுகின்ற முரணில்லாத செயல்திட்டம் என்ற முறையில் மார்க்சியம் **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில்** முதல் தடவையாக முன்வைக்கப்பட்டது. வி. இ. லெனின் பின்வருமாறு எழுதினார்: ''இந்த நூல் மாமேதைக்குரிய தெளிவுடனும் பெருந்திறமையுடனும் ஒரு புதிய உலகக் கண்ணோட்டத்தை விவரிக்கிறது; சமுதாய வாழ்வுத் துறையை அணைத்து நிற்கும் முரணற்ற பொருள்முதல்வாதம், வளர்ச்சியைப் பற்றிய மிகவும் முழுமையான ஆழ்ந்த போதனையான இயக்கவியல், வர்க்கப் போராட்டத்தைப் பற்றியும் கம்யூனிச சமுதாயத்தின் படைப்பாளி என்கிற வகையில் பாட்டாளி வர்க்கத்தின் உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, புரட்சிகரமான பாத்திரத்தைப் பற்றியும் அமைந்த ஒரு தத்துவம் ஆகியவை இந்த உலகக் கண்ணோட்டத்தில் அடங்கியவை''. **

கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை உலகத்தை சோஷலிச ரீதியில் மாற்றியமைக்கின்ற புரட்சிகர இயக்கத்தைத் தோற்றுவித்தது. ''இந்தச் சிறு பிரசுரம் மிகப் பெரிய நூல் தொகுதிகளுக்குச் சமமானது. அதன் உணர்ச்சி நாகரிக உலகத்தின்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்**, பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1983, பக்கம் 249.

** வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1979, பக்கம் 45.

மொத்த அமைப்பு ரீதியான மற்றும் போராடுகின்ற பாட்டாளி வர்க்கத்துக்கு இன்றளவும் உத்வேகமூட்டுகிறது, வழிகாட்டுகிறது'' என்று லெனின் எழுதினார்.*

ஆனால் **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின்** கருத்துகள் நம் காலத்தில் எப்படி, எந்தச் செய்முறை வழியில் நிறை வேற்றப்படுகின்றன?

— முதலாவதாக, சோஷலிச நாடுகளில் புதிய சமூகத்தை நிர்மாணிப்பதில், சோஷலிச சமூகத்தின் எல்லா அம்சங்களையும் வளர்ப்பதில், சோஷலிசக் குடும்பமும் தனித் தனியான ஒவ்வொரு சோஷலிச நாடும் எல்லாத் துறைகளிலும் வலுப்படுவதிலும் வெற்றிகரமாக வளர்ச்சியடைவதிலும்;

— சுரண்டல், ஒடுக்குமுறையைச் சமரசத்துக்கு இடமின்றி எதிர்த்துப் போராடுவதில், ஏகாதிபத்தியம், யுத்தங்களை எதிர்த்து நாடுகளுக்கு இடையில் சமாதானத்துக்கு ஆதரவாக அர்ப்பணிப்புடன் போராடுவதில், உலகத்தின் சோஷலிசம் அல்லாத பகுதியில் பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படையான வர்க்க இலட்சியங்களை ஆதரித்து, அதன் ஜீவாதாரமான நலன்களைத் தற்காத்துப் போராடுவதில், மக்களினங்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில், அவர்களுடைய புரட்சிகரமான வெற்றிகளை வளர்ப்பதிலும் வலுப்படுத்துவதிலும்;

— பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்துக்கு உறுதிமிக்க விசுவாசத்தில், கம்யூனிஸ்டுகளின் ஒற்றுமைக்கு, நம் காலத்தின் எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளையும் வலுப்படுத்துவதற்கு முரணில்லாத போராட்டத்தில்;

— சோஷலிசத்துக்கு எதிரான முதலாளி வர்க்க, தேசியவாத, சீர்திருத்தவாத மற்றும் திருத்தல்வாத சித்தாந்தத்

---

* வி. இ. லெனின், **மார்க்சியத்தின் வரலாற்று வளர்ச்சியின் சில சிறப்பியல்புகள்**, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1985, பக்கம் 92.

தின் வெளிப்பாடுகள் எதற்கும் சமரசமின்றி இருத்தலில், மார்க்சிய-லெனினியத்தின் தூய்மையைக் காப்பதற்குப் போராடுவதில், அதைப் படைப்புத் திறனுடன் கையாண்டு வளர்ப்பதில் **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின்** கருத்துகள் உருவெடுக்கின்றன.

இயற்கை மற்றும் சமூகத்தைப் பற்றிய கருத்துகளில் புரட்சி. வரலாற்றின் மொத்தப் போக்கும் மக்களது முந்திய தலை முறைகளின் விஞ்ஞான வளர்ச்சியும் மார்க்சியத்துக்கு அடிப் படையை அமைத்துக் கொடுத்திருக்கின்றன. மூலச்சிறப்பு டைய ஜெர்மானியத் தத்துவஞானமும் ஆங்கில அரசியல் பொருளாதாரமும் கற்பனாவாத சோஷலிசமும் மார்க்சியத் தின் தத்துவத் தோற்றுவாய்களாக இருந்தன.

மூலச்சிறப்புடைய ஜெர்மானியத் தத்துவஞானத்தின் தலைசிறந்த பிரதிநிதிகளாக கியோர்கு ஹெகல் *(1770—1831)* மற்றும் லுட்விக் ஃபாயர்பாஹ் *(1804—1872)* இருந் தனர். ஹெகல் வளர்ச்சி பற்றிய தனது தத்துவஞானக் கோட்பாட்டை அல்லது இயக்கவியலை வெளியிட்டார். எனினும் ஹெகலிய இயக்கவியல் அதன் அடிப்படையான கருத்துமுதல்வாதக் கோட்பாடுகளினால் குறுகிய தன்மை யைக் கொண்டிருந்தது. உலகம் இருப்பதற்கு அடிப்படையாக வும் முடிவான காரணமாகவும் ஏதோ ஒரு பரம கருத்து உண்டு என்று அவர் கருதினார். ஃபாயர்பாஹ் இதற்கு எதிரிடையான முறையில் இயற்கையை அது மெய்யாகவே எப்படி இருக்கிறதோ அப்படி விளக்க முடியும், அதற்கு இறைஞானக் கருத்துகள் அவசியமல்ல என்று நிரூபிப்பதற்கு முயன்றார். ஆனால் அவருடைய பொருள்முதல்வாதம் இயக்கமறுப்பியலாக இருந்தது. அது வளர்ச்சியை நிராகரித்து அளவு ரீதியான மாற்றங்களை மட்டுமே

கண்டது. ஃபாயர்பாஹ் ஹெகலிய இயக்கவியலின் மாபெரும் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளத் தவறினார்; ஆகவே அவரால் அதை இயற்கை அல்லது மனித சமூக வரலாற்றுக்குக் கையாள முடியவில்லை. ஹெகலின் இயக்கவியலும் ஃபாயர்பாஹின் பொருள்முதல்வாதமும் மார்க்சியத் தத்துவஞானத்தின் தோற்றத்தில் ஆரம்ப நிலையாக இருந்தன.

அரசியல் பொருளாதாரத்தில் மார்க்சியத்தின் முன்னோடிகளாக ஆடம் ஸ்மித் *(1723–1790)*, டேவிட் ரிக்கார்டோ *(1772–1823)* இருந்தனர்; சமூகத்திலுள்ள எல்லா செல்வங்களுக்கும் முக்கியமான தோற்றுவாய் உழைப்பு என்பதை அவர்கள் நிரூபித்தார்கள். அது விஞ்ஞான ரீதியான அரசியல் பொருளாதாரத்தை உருவாக்குவதற்குப் பேருதவியளித்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மாபெரும் கற்பனாவாத சோஷலிஸ்டுகளாகிய அன்ரீ சான்-சிமோன், ஷார்ல் ஃபூரியே, ராபர்ட் ஓவன் முதலாளித்துவ அமைப்பைக் கூர்மையாக விமர்சனம் செய்தார்கள், தாங்கள் கற்பனையில் கண்ட எதிர்கால சமூகத்தை உருவரையாகக் கூறினார்கள். ஆனால் அதை அடைவதற்குரிய செய்முறை வழிகளை அவர்கள் எடுத்துக் கூறுவதற்குத் தவறினார்கள்.

மனிதகுலம் 19ஆம் நூற்றாண்டில் உருவாக்கிய சிறப்புமிக்க அனைத்துக்கும், அதாவது ஜெர்மன் தத்துவஞானம், ஆங்கில அரசியல் பொருளாதாரம், கற்பனாவாத சோஷலிசம் ஆகியவற்றுக்கு முறைப்படியான வாரிசாக மார்க்சியம் இருந்தது. மார்க்சும் எங்கெல்சும் தத்துவ ரீதியில் தமக்கு முந்தியவர்களின் பாரம்பரியத்தை வளர்ப்பதுடன் நின்று விடவில்லை. அவர்கள் அதை விமர்சன ரீதியில் பகுப்பாய்வு செய்து மிகவும் முற்போக்கான, புரட்சிகரமான வர்க்கமாகிய பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படையான நலன்

களை வெளியிடுகின்ற புதிய போதனையை உருவாக்கினார் கள். அவர்கள் உழைக்கும் மக்களுடைய சமூக விடுதலை வரலாற்றில் உண்மையான புரட்சியை நிறைவேற்றி னார்கள். அப்புரட்சி பின்வரும் அம்சங்களைக் கொண் டிருந்தது.

முதலாவதாக, மார்க்சும் எங்கெல்சும் கருத்துமுதல் வாதத்தை எதிர்த்துப் போராடுகின்ற பொழுது தத்துவ ஞானப் பொருள்முதல்வாதத்தைத் தற்காப்பதிலும் வளர்த்துச் செல்வதிலும் வெற்றியடைந்தார்கள். அவர்கள் இப்பொருள்முதல்வாதத்துடன் இயக்கவியலை, அதாவது புறநிலையாக இருக்கின்ற உலகத்தின் வளர்ச்சி மற்றும் அதன் அறிதலைப் பற்றிய அதிக விரிவான கோட்பாட் டைச் சேர்த்துச் செழுமைப்படுத்தினார்கள். அதன் மூலம் அவர்கள் பொருள்முதல்வாத இயக்கவியலை உருவாக்கினார் கள். அது இயக்கமறுப்பியல் பொருள்முதல்வாதத்தின் வரை யறைகளுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது; கருத்துமுதல் வாதத்தை அடிப்படையாகக் கொண்ட ஹெகலிய இயக்க வியலிலிருந்து அதிகமாக வேறுபட்டிருந்தது. மார்க்சும் எங்கெல்சும் பொருள்முதல்வாதத்தையும் இயக்கவியலையும் சமூக வாழ்க்கைக்கு விரிவுபடுத்தினார்கள், அதன் மூலம் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தை உருவாக்கினார்கள்.

இரண்டாவதாக, மார்க்சியத்தின் மூலவர்கள் மூலச் சிறப்புடைய முதலாளித்துவ அரசியல் பொருளாதார மரபைச் சேர்ந்த ஆடம் ஸ்மித், டேவிட் ரிக்கார்டோ மற்றும் இதர பிரதிநிதிகளுடைய கருத்துகளைப் பயன் படுத்தி முதலாளிகளால் அபகரிக்கப்படுகின்ற உபரி மதிப்பின் இயல்பைக் கண்டுபிடித்தார்கள். மார்க்சிய அரசியல் பொரு ளாதாரம் அப்பொழுது பிறந்தது. அது முதலாளித்துவ சமூகத்தின் பொருளாதார விதிகளை விளக்கியது; தனி யுடைமைக்கு முடிவு கட்டி அதனிடத்தில் பொது உடை

மையை ஏற்படுத்துவது வரலாற்று ரீதியான அவசியம் என்று முடிவு செய்தது.

மார்க்சும் எங்கெல்சும் ஒரே சமயத்தில் எதார்த்தத்தைப் பற்றிய தத்துவஞானப் பகுப்பாய்வுடன் அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளையும் வளர்த்துக் கூறினார்கள். அவர்களுடைய தத்துவஞானப் பொருள்முதல்வாதம் தொழிலாளி வர்க்கத்துக்கு அதன் ஆன்மிக விடுதலைப் பாதையைச் சுட்டிக் காட்டியது; அவர்களுடைய பொருளாதாரத் தத்துவம் — உபரி மதிப்புத் தத்துவம் அதன் அடிப்படையாகும் — தொழிலாளி வர்க்கத்துக்கு முதலாளித்துவத்தின் கீழ் அதன் மெய்யான நிலையை எடுத்துக் காட்டியது.

மூன்றாவதாக, மார்க்சியத்தின் மூலவர்கள் வர்க்கப் போராட்டத்தை விஞ்ஞான ரீதியாக விளக்கினார்கள். அவர்கள் வரலாற்றில் பெருந்திரளான உழைக்கும் மக்களின் தீர்மானகரமான பாத்திரத்தை நிறுவினார்கள், முதலாளித்துவத்தை அகற்றுவதிலும் சோஷலிச அமைப்பை உருவாக்கி வலுப்படுத்துவதிலும் தொழிலாளி வர்க்கத்தின் உலக முக்கியத்துவம் நிறைந்த வரலாற்றுக் கடமையை விளக்கினார்கள்.

நான்காவதாக, மார்க்சும் எங்கெல்சும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தை நிறுவி அக்கால முதலாளித்துவ சமூகத்துக்கு அதைக் கையாண்டதன் மூலம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற புறநிலை விதிகளை வெளிக்காட்டினார்கள், அதன் மூலம் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கு புரட்சிகர நடவடிக்கையின் செயல் திட்டத்தை, வர்க்கப் போராட்டத்தின் போர்த்திட்டத்தையும் செயல்தந்திரத்தையும் கொடுத்தார்கள்; விஞ்ஞான சோஷலிசத் தத்துவத்தைப் படைத்தார்கள்.

கார்ல் மார்க்சின் போதனை சர்வவல்லமை கொண்டது; ஏனென்றால் அது சரியானது. மார்க்சியப் போதனையின்

தாக்கம், பலத்தின் மிக முக்கியமான தோற்றுவாய் இதுவே.

மார்க்சும் எங்கெல்சும் மாபெரும் சிந்தனையாளர்கள் மட்டுல்ல; அவர்கள் மாபெரும் புரட்சிவீரர்கள், உலகப் பாட்டாளி வர்க்கத்தின் தலைவர்கள். அவர்கள் தம்முடைய செய்முறை நடவடிக்கையில் மார்க்ஸ் வகுத்தளித்த கருத்தைப் பின்பற்றினார்கள்: ''தத்துவஞானிகள் உலகத்துக்குப் பல்வேறு வழிகளில் **விளக்கமளிப்பதை** மட்டுமே செய்து வந்திருக்கிறார்கள்; ஆனால் அதை **மாற்றுவதுதான்** இன்று முக்கியமாகும்.'' * உலகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைக்கின்ற மாபெரும் பணிக்கு அவர்கள் தங்களுடைய மொத்த வாழ்க்கையையும் தங்களுடைய மகத்தான அறிவின் சக்தியையும் அர்ப்பணித்தார்கள்.

மார்க்சும் எங்கெல்சும் கம்யூனிஸ்ட் சங்கத்தை அமைத்தார்கள். அதுவே வரலாற்றில் புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தின் முதல் அரசியல் அமைப்பாகும். அவர்கள் 1864இல் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தை நிறுவினார்கள். அதை முதலாவது அகிலம் என்று சொல்கிறோம். பல்வேறு நாடுகளில் பெருந்திரளான பாட்டாளி வர்க்கக் கட்சிகளை அமைத்தல், பெருந்திரளான உழைக்கும் மக்களைப் புரட்சிகரமான தத்துவத்தின் உணர்ச்சியில் பயிற்றுவித்தல் அதன் நோக்கங்களாகும். அகிலத்தின் முக்கியமான கொள்கை ஆவணங்கள், அதாவது **தொடக்க அறிக்கை, விதிமுறைகள்** ஆகியவற்றை மார்க்சே எழுதினார். தொழிலாளி வர்க்கம் தன்னுடைய விடுதலையைத் தானே நிறைவேற்றிக் கொள்ள வேண்டும், அதன் முக்கியமான கடமை அரசியல் அதிகாரத்தை வென்று சோஷலிச சமூகத்தை நிர்மாணித்தல் என்பதை இவை வலியுறுத்தின.

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், வி. இ. லெனின், **இயக்கவியல் பொருள் முதல்வாதம்**, பக்கம் 10.

''முதலாவது அகிலம் (1864—1872) மூலதனத்தின் மீது புரட்சிகரமான தாக்குதலைத் தொடுப்பதற்குத் தொழிலாளர்களைத் தயாரிப்பதற்கு சர்வதேச ஸ்தாபனத்துக்கு அடிப்படையை அமைத்தது..., சோஷலிசத்துக்குப் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசப் போராட்டத்துக்கு அடிப்படையை அமைத்தது'' என்று லெனின் கூறினார். *

இவ்விதம் மார்க்சும் எங்கெல்சும் உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தைத் தொடங்கினார்கள். அவர்கள் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தில் உத்வேகம் பெற்ற புரட்சிகரச் சிந்தனையாளர்களாக இருந்தார்கள்.

லெனினியம் — மார்க்சியத்தின் வளர்ச்சியில் ஒரு புதிய கட்டம்

வி. இ. லெனின் — கார்ல் மார்க்ஸ் மற்றும் பிரெடெரிக் எங்கெல்சின் இலட்சியத்தைத் தொடர்ந்த மாமனிதர். ருஷ்ய மக்களின் தலைசிறந்த புதல்வர் வி. இ. லெனின் (1870—1924). அவருடைய நூல்களிலும் புரட்சிகர நடவடிக்கைகளிலும் மார்க்சியம் மேலும் வளர்த்துச் செல்லப்பட்டது, விரிவுபடுத்தப்பட்டது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முதலாளித்துவம் தன்னுடைய கடைசிக் கட்டத்தில், ஏகாதிபத்தியக் கட்டத்திற்குள் நுழைந்தது. அது முன்னர் வளர்ச்சியடைகின்ற, முற்போக்கான அமைப்பாக இருந்தது; அந்த நிலையிலிருந்து இரத்தத்தை உறிஞ்சுகின்ற, அழிகின்ற, மரணத் தறுவாயிலுள்ள முதலாளித்துவமாக மாறியது. அந்த சமயத்தில் ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் முன்னணிப் படையாக மாறியது. ஜாரிசமும் நிலப்பிரபுத்துவத்தின் எச்சங்களும் ருஷ்யாவின் சமூக-பொருளாதார வளர்ச்சியைத் தடை

* V. I. Lenin, *Collected Works*, vol. 29, Moscow, Progress Publishers, 1977, pp. 306, 307.

செய்தன; அங்கே சமூக முரண்பாடுகள் தீப்பற்றிக் கொள்ளக் கூடிய நிலையை அடைந்திருந்தன. தொழிலாளி வர்க்கம் முதலாளிகளை எதிர்த்தும் விவசாயிகள் நிலப்பிரபுக்களை எதிர்த்தும் போராடிக் கொண்டிருந்தனர். ருஷ்யாவின் எல்லைப் பிரதேசங்களில் வசித்த தேசியச் சிறுபான்மை மக்களினங்கள் ஜாரிஸ்ட் எதேச்சாதிகாரம், ஸ்தல சுரண்டல் காரர்கள் ஆகிய இரட்டை ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடின. தொழிலாளி வர்க்க, விவசாயிகளுடைய மற்றும் தேசிய விடுதலை இயக்கங்கள் ஒன்றுக்கொன்று துணைநின்று ஒன்றையொன்று வலுப்படுத்திக் கொண்டு ருஷ்யாவில் முத லாளித்துவ-நிலப்பிரபுத்துவ அமைப்பை மேன்மேலும் வீழ்ச்சி யை நோக்கிக் கொண்டு வந்தன. அதன் விளைவாக, ருஷ்யா படிப்படியாக உலக முதலாளித்துவச் சங்கிலியில் மிகவும் பலவீனமான கண்ணியாக மாறியது. மார்க்ஸ், எங்கெல்சின் மகத்தான பணியை லெனின் தொடர்ந்தார். ருஷ்யாவில் லெனினியம் பிறந்தது.

வி. இ. லெனின் (உலியானவ்) 1870 ஏப்ரல் 22இல் ஸிம்பீர்ஸ்க் (தற்பொழுது உலியானவ்ஸ்க் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது) நகரத்தில் பிறந்தார். அவருடைய பெற்றோர்கள் முற்போக்கான ருஷ்ய அறிவுஜீவிகள். அவரு டைய தகப்பனாரின் முன்னோர்கள் எல்லோரும் மிகவும் ஏழைகளாக இருந்தனர். எனினும் அவர் தன்னுடைய இடைவிடாத முயற்சிகள், சிறந்த திறமைகளினால் பல் கலைக்கழகப் படிப்பை முடித்தார்; முதலில் ஆசிரியராகவும் பிறகு ஸிம்பீர்ஸ்க் குபேர்னியாவில் (மண்டலத்தில்) பள் ளிக்கூட ஆய்வாளராகவும் இருந்தார்.

லெனினுடைய தாயார் பல திறமைகளைப் பெற்றிருந் தாள். அவளுக்குப் பல மொழிகள் தெரியும்; பியானோ வாசிப்பாள், நிறையப் படித்தவள். அவள் ஒல்லியான உடலமைப்புக் கொண்டிருந்த போதிலும் சிறந்த

துணிச்சல், உறுதி, தியாக உணர்ச்சியைக் கொண்டிருந்தாள். உலியானவ் குடும்பத்துக்கு சோதனை ஏற்பட்ட ஆண்டுகளில் மேற்கூறிய குணங்கள் அவளைப் பாதுகாத்தன. 1886இல் அவளுடைய கணவர் மரணமடைந்தார். அதற்கு ஒரு ஆண்டுக்குப் பிறகு ஜாரை எதிர்த்து நடைபெற்ற சதியில் பங்கெடுத்ததற்காகக் கைது செய்யப்பட்ட அவளுடைய மூத்த மகன் அலெக்சாந்தருக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டது. பிந்திய ஆண்டுகளில் அவளுடைய மற்ற மக்கள் புரட்சிகர நடவடிக்கையில் ஈடுபட்டதற்காகப் பல முறை கைது செய்யப்பட்ட பொழுது அவள் மனங்கலங்கவில்லை.

வி. இ. லெனின் தன்னுடைய பாலபருவத்தை ஜாரிஸ்ட் ஆட்சியின் அடக்குமுறை ஆட்சிக் காலத்தில், பிற்போக்கு வாதம் தலை விரித்தாடிய காலத்தில் கழித்தார்.

அவர் 1880க்களின் நடுப்பகுதியில் தானாகவே மார்க்ஸ், எங்கெல்சின் தத்துவத்தைக் கற்கத் தொடங்கினார். 1885ஆம் ஆண்டின் கோடைகாலத்தில் அவர் மூலதனம் நூலின் பிரதியை முதல் தடவையாகப் பார்த்தார். அவருடைய அண்ணன் செயின்ட் பீட்டர்ஸ்பர்கிலிருந்து அந்தப் பிரதி யைக் கொண்டு வந்திருந்தார். 1888ஆம் ஆண்டின் குளிர் காலத்தில் அவர் மூலதனத்தைப் படித்து அதிலிருந்து குறிப்பு கள் எடுத்துக் கொண்டார், மார்க்ஸ், எங்கெல்ஸ் எழுதிய மற்ற நூல்களையும் படித்தார்.

வி. இ. லெனின் கஸான் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும் பொழுது தன்னுடைய பதினேழாம் வயதில் புரட்சிகர நடவடிக்கையில் ஈடுபட்டார். அவருடைய ஆழ மான மார்க்சியப் புலமையின் விளைவாக அவர் சமாரா விலும் (1892–1893) பின்னர் செயின்ட் பீட்டர்ஸ்பர் கிலும் மார்க்சிய ஆய்வுக் குழுக்களுக்குத் தலைவரானார். இந்த மார்க்சிய ஆய்வுக் குழுக்களை ஒன்றுசேர்ந்து தொழி லாளி வர்க்க விடுதலைப் போராட்டக் கழகம் அமைக்கப்

பட்டது. அதே சமயத்தில் லெனின் ருஷ்யாவின் தலைநகரத் தில் பாட்டாளி வர்க்கத்தின் மத்தியில் தன்னுடைய பிரசார, அமைப்பு வேலையைத் துவக்கினார்.

லெனின் 1898இல் ஒரு புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சியை, ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியை நிறு வினார். ருஷ்யாவிலும் இதர நாடுகளிலும் தொழிலாளர் இயக்கத்தில் புதிய கட்டத்தைத் துவக்கிய இக்கட்சியை நிறுவியது அவருடைய மாபெரும் சேவையாகும். புதிய வரலாற்று நிலைமைகளில் பாட்டாளி வர்க்கத்தின் சமூக விடுதலைப் போராட்டத்துக்கு வழிகாட்டக் கூடிய கட்சி முதல் தடவையாக அதற்குக் கிடைத்தது.

லெனின் தன்னுடைய புரட்சிகர நடவடிக்கையில் மார்க் சியத்தைப் படைப்பாற்றலுடன் கையாண்டார்; எப்பொ முதும் அதைத் தீவிரமாக ஆதரித்தார். லெனின் தன்னுடைய ஆரம்ப நூல்களிலேயே மார்க்சின் புரட்சிகரமான தத்துவத் தைப் படைப்பாற்றலுடன் கையாள்கின்ற அணுகுமுறை யைப் பின்பற்றினார். ''**மக்களின் நண்பர்கள்**'' **எப்படிப்பட்ட வர்கள்? அவர்கள் சமூக-ஜனநாயகவாதிகளை எதிர்த்துப் போரிடுவது எப்படி?** *(1894)* என்ற நூலில் அவர் ருஷ்யாவில் முதலாளித்துவ வளர்ச்சியை ஆழமாக ஆராய்ச்சி செய்து ருஷ்யாவிலும் மற்ற நாடுகளிலும் ஒரே அளவில் செல் தகைமையைக் கொண்டிருக்கின்ற புறநிலையான விதிகளை எடுத்துக் காட்டினார். ருஷ்யாவில் எதேச்சாதிகாரத்தை விவசாயி வர்க்கப் புரட்சியின் மூலம் தூக்கியெறிய வேண்டும் என்று கூறிய நரோத்னிக்குகளின்* தத்துவ ரீதியான

---

* நரோத்னிக்குகள் — எதேச்சாதிகார முறையை ஒழித்தல் மற்றும் நிலப்பிரபுக்களின் நிலத்தை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்பதை ஆதரித்தார்கள். அவர்கள் தம்மை சோஷலிஸ்டுகள் என்று கருதிக் கொண் டனர், ஆனால் அவர்களது சோஷலிசம் கற்பனாவாத சோஷலிசமாகும். — மொ-ர்.

தவறுகளை அவர் இந்த நூலில் விமர்சனம் செய்தார்.

ஜாரிஸ்ட் அதிகாரிகள் லெனினை 1896ஆம் ஆண்டின் இறுதியில் கைது செய்து சைபீரியாவிலுள்ள ஷுஷென்ஸ்கொயே என்னும் கிராமத்திற்கு நாடுகடத்தினார்கள். சைபீரியாவுக்கு நாடுகடத்தப்பட்டிருந்த அவரது துணைவியான நதேஷ்தா குரூப்ஸ்கயாவும் அவருடன் சேர்ந்து கொண்டாள். லெனின் அவளை 1894இல் செயின்ட் பீட்டர்ஸ்பர்கின் மார்க்சிய ஆய்வுக் குழுவில் முதல் தடவையாகச் சந்தித்தார். நதேஷ்தா குரூப்ஸ்கயா அவருடைய மனைவியாக, விசுவாசமுள்ள நண்பனாக, அவருடைய புரட்சிகரமான கருத்துகளை ஆதரித்த சகாவாக இருந்தாள்.

லெனின் சைபீரியாவில் இருந்த பொழுது **ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி** *(1899)* என்ற மாபெரும் நூலை எழுதி முடித்தார். அவர் இந்த நூலில் ஏராளமான விவரங்கள், புள்ளிவிவரக் கணக்குகளைக் கவனமாக ஆராய்ச்சி செய்து சரிபார்த்த பிறகு ருஷ்யாவில் கிராம சமூகம் தகர்ந்து கொண்டிருக்கின்ற நிகழ்வுப் போக்கை, விவசாயி வர்க்கம் கூலித் தொழிலாளர்கள் மற்றும் கிராம முதலாளி வர்க்கமாகப் பிரிகின்ற படிநிலை அமைப்பை, அகில ருஷ்யச் சந்தையின் உருவாக்கத்தை எடுத்துக் காட்டினார். அவர் ருஷ்யாவில் பெரிய அளவு இயந்திரத் தொழில் துறையின் வளர்ச்சியைக் கவனமாக ஆராய்ந்தார்; தொழில் துறை உற்பத்தியின் முதலாளித்துவத் தன்மையை வெளிப்படுத்தினார்; பாட்டாளி வர்க்கத்தின் முக்கியத்துவம் வளர்ந்து கொண்டு வருவதைத் தெளிவுபடுத்தினார்.

ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் ஜாராட்சியையும் முதலாளித்துவத்தையும் முரணில்லாமல் எதிர்க்கின்ற போராளி, வரப் போகின்ற சோஷலிசப் புரட்சியின் தலைமையான சக்தி என்னும் வரலாற்றுப் பாத்திரத்தை லெனின்

நிறுவினார். ''அதன் முன்னணிப் பிரதிநிதிகள் விஞ்ஞான சோஷலிசக் கருத்துகளில், ருஷ்யத் தொழிலாளியின் வரலாற்றுப் பாத்திரம் என்னும் கருத்தில் தேர்ச்சி பெறும் பொழுது, இக்கருத்துகள் விரிவாகப் பரவுகின்ற பொழுது, தொழிலாளர்கள் இன்று தனித்தனியாக நடத்துகின்ற பொருளாதாரப் பொராட்டங்களை உணர்வு பூர்வமான வர்க்கப் போராட்டமாக மாற்றக் கூடிய நிலையான அமைப்புகள் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்படுகின்ற பொழுது — அப்பொழுது எல்லா ஜனநாயக சக்திகளுக்கும் தலைவனாக எழுகின்ற ருஷ்யத் தொழிலாளி எதேச்சாதி காரத்தை ஒழித்து **ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தை (எல்லா நாடுகளையும்** சேர்ந்த பாட்டாளி வர்க்கத்துடன் ஒன்று சேர்ந்து) **வெற்றிகரமான கம்யூனிசப் புரட்சிக்குப் பகிரங்க மான அரசியல் போராட்டம் என்ற நேர்பாதை யில் தலைமை தாங்கி நடத்துவார்''** என்று லெனின் எழுதினார். *

லெனின் தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் புரட்சி கரமான கூட்டணி என்னும் கருத்தை அதன் ஒவ்வொரு அம்சத்திலும் முதலில் வளர்த்துக் கூறினார். இக்கூட்டணி ஜாராட்சியை ஒழிப்பது மட்டுமன்றி, எதிர்கால சோஷலிச சமூகத்தையும் நிர்மாணிக்கின்ற சக்தி உடையது என்று அவர் கருதினார்.

லெனின் சைபீரியாவிலிருந்து திரும்பியவுடன் நாட் டிலுள்ள புரட்சிகர சக்திகளை மார்க்சியத்தின் தத்துவ, அரசியல், அமைப்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒன்றுபடுத்துகின்ற பணியில் ஈடுபட்டார். ஆனால் போ லீஸ் அடக்குமுறையின் காரணமாக அவர் வெளிநாட் டுக்குப் போகுமாறு நேர்ந்தது. அவர் வெளிநாட்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 1, p. 300.

டிலிருந்து கொண்டே ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டத்துக்குத் தொடர்ந்து வழிகாட்டினார்.

லெனின் பாட்டாளி வர்க்கக் கட்சிக்கு, புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சிக்கு, உழைக்கின்ற பெருந்திரளான மக்களின் போராட்டத்துக்குத் தலைமை தாங்கக் கூடிய கட்சிக்கு, சோஷலிச சமூக நிர்மாணத்தை இயக்குகின்ற பொறுப்பளிக்கப்பட்டுள்ள கட்சிக்கு எப்பொழுதும் சிறப்பான முக்கியத்துவம் கொடுத்தார். ஆனால் பாட்டாளி வர்க்கத்தின் சித்தாந்தத்தை மெய்வடிவமாகக் கொண்டு அதை வாழ்க்கை எதார்த்தங்களுடன் இணைக்கின்ற புரட்சிகரமான தத்துவம் இல்லாமல் ஒரு புரட்சிகரமான கட்சி என்பது கிடையாது. இந்த முடிவு எந்தப் புரட்சிகரமான கட்சிக்கும் (அதன் நடவடிக்கையின் நிலைமைகள், இடம், காலம் ஆகியவை எப்படியிருந்தாலும்) பொருந்துவதே. கம்யூனிஸ்டுகளுடைய கட்சியின் முற்போக்கான, புரட்சிகரத் தத்துவம் என்பது முதலாவதாகவும் பிரதானமாகவும் நடவடிக்கைக்கு வழி காட்டியே.

லெனின் எழுதிய **என்ன செய்ய வேண்டும்?** *(1902)*, **ஓரடி முன்னால் ஈரடி பின்னால்** *(1904)* ஆகிய நூல்கள் உண்மையான புரட்சிகரக் கட்சியை உருவாக்குகின்ற போராட்டத்தில் முக்கியமான பாத்திரத்தை வகித்தன. முதல் நூலில் அவர் சமூக-ஜனநாயகத்தில் இடம் பெற்றிருந்த சந்தர்ப்பவாதப் போக்கை அம்பலப்படுத்தினார். ''விமர்சன சுதந்திரம்'' என்னும் உணர்ச்சியைத் தூண்டும் சொற்றொடரில் தங்கள் நடவடிக்கைகளை மறைத்துக் கொண்ட சந்தர்ப்பவாதிகள் முதலாளி வர்க்கக் கருத்துகள் பரவுதலைப் பற்றி விமர்சனமில்லாத, சமரச அணுகுமுறையைக் கடைப்பிடித்தார்கள். சமூக-ஜனநாயகம் இந்த நிலையின் விளைவாகப் புரட்சிகரமான கட்சி என்பதிலிருந்து

சீர்திருத்தவாதக் கட்சியாகத் தவிர்க்க முடியாதபடி மாற நேர்ந்தது.

லெனின் **ஓரடி முன்னால் ஈரடி பின்னால்** என்ற நூலில் கட்சியின் குண ரீதியான இயல்பு, கட்சி வாழ்க்கையின் முறைகளைக் கறாராகப் பின்பற்றுதல், கட்சியின் ஒற்றுமை மற்றும் கட்டுப்பாட்டை மேலும் வலுப்படுத்துதல் ஆகியவை பற்றி சிறப்பான முறையில் கவனம் செலுத்தினார். ''ஆட்சி அதிகாரத்திற்கான தனது போராட்டத்தில், பாட்டாளி வர்க்கத்துக்கு ஸ்தாபனத்தைத் தவிர வேறு ஆயுதம் ஏதும் கிடையாது.... பாட்டாளி வர்க்கம், பல கோடி உழைப்பாளி களை ஒரு தொழிலாளி வர்க்கப் படையாக ஒருங்கிணைக் கும் ஸ்தாபனத்தின் பௌதிக ஐக்கியத்தால் மார்க்சியக் கோட்பாடுகளின் அடிப்படையில் அதன் சித்தாந்த ஒருமைப் பாடு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது காரணமாக ஒரு வெல்லற் கரிய சக்தியாக மாறக் கூடும், தவிர்க்க முடியாதபடி மாறும். ருஷ்ய எதேச்சாதிகாரத்தின் கிழடுதட்டிய ஆட் சியோ அல்லது சர்வதேச முதலாளித்துவத்தின் முதுமைக் கூரான ஆட்சியோ இந்தப் படையை எதிர்த்து நிற்க முடியாது.'' *

1905ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்தில் முதல் மக்கள் ஜனநாயகப் புரட்சி அதன் உச்ச கட்டத்தில் இருந்த பொழுது லெனின் செயின்ட் பீட்டர்ஸ்பர்குக்குத் திரும் பினார். புரட்சிகரப் போராட்டத்தின் அடிப்படையான பிரச்சினைகளைப் பற்றி அவர் முழு கவனத்தையும் செலுத் தினார்.

1905 ஜூலையில் லெனின் எழுதிய **ஜனநாயகப் புரட்சியில் சமூக-ஜனநாயகவாதத்தின் இரண்டு போர்த்தந்திரங்கள்** என்ற நூல் ஜெனீவாவில் வெளியிடப்பட்டது. அப்புத்தகத்தில்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 2, பக்கம் 358.

புரட்சியில் தொழிலாளி வர்க்கத்தின் போர்த்திட்டமும் செயல்தந்திரப் போக்கும் தத்துவ ரீதியில் நிறுவப்பட்டிருந்தன. லெனின் பின்வருமாறு எழுதினார்: ''எதேச்சாதிகார முறையின் எதிர்ப்பைப் பலத்தின் மூலமாக நசுக்கவும் முதலாளி வர்க்கத்தின் தடுமாற்ற நிலையை முடக்கம் செய்து விடவும் திரளான விவசாயி மக்களுடன் கூட்டணி வகுத்துக் கொண்டு பாட்டாளி வர்க்கம் ஜனநாயகப் புரட்சியை நடத்தி முடிக்க வேண்டும். முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்பைப் பலத்தின் மூலமாக நசுக்கவும் விவசாயி மக்களின், சிறு முதலாளி வர்க்கத்தினரின் தடுமாற்ற நிலையை முடக்கம் செய்து விடவும் மக்களிடையேயுள்ள அரைப் பாட்டாளி வர்க்கத் தன்மையுள்ள பகுதிகளோடு கூட்டணி வகுத்துக் கொண்டு பாட்டாளி வர்க்கம் சோஷலிசப் புரட்சியைச் சாதித்து முடிக்க வேண்டும்.'' *

முதல் ருஷ்யப் புரட்சி தோல்வியடைந்தது. கட்சி மையத்தின் முடிவுப்படி லெனின் 1907 டிசம்பரில் ருஷ்யாவை விட்டுச் சென்றார். அவர் இரண்டாவது தடவையாக நாட்டிலிருந்து வெளியேறி அந்நிய நாட்டுக்குச் சென்றார்; தாய்நாட்டுக்கு வெளியே பத்து ''வேதனையான'' ஆண்டுகளைக் கழித்தார்.

லெனின் 1908 ஏப்ரலில் மார்க்சியமும் திருத்தல்வாதமும் என்ற கட்டுரையை எழுதினார்; அதில் முதலாளித்துவ சித்தாந்தத்தை ஆதரிக்கின்ற திருத்தல்வாதத்தின் தத்துவ சாராம்சத்தை அம்பலப்படுத்தினார். திருத்தல்வாதிகள் மார்க்சியத்தின் வர்க்க உள்ளடக்கத்தைச் சீர்குலைப்பதற்காக அப்போதனையில் ''திருத்தங்களை'', ''சரிக்கட்டல்களைச்'' செய்தார்கள். அவர்கள் வர்க்கப் போராட்டத்தை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை, சோஷலிசம் என்னும்

---

* வி. இ. லெனின், ஜனநாயகப் புரட்சியில் சமூக-ஜனநாயகவாதத்தின் இரண்டு போர்த்தந்திரங்கள், மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1976, பக்கம் 133.

கருத்தையே ''நிராகரிப்பதற்கு'' முனைந்தார்கள், அதன் மூலம் தொழிலாளர்கள் இயக்கத்தை சீர்திருத்தவாதம், முதலாளி வர்க்கத்துடன் சமரசம் என்ற பாதைக்குத் திருப்புவதற்குப் பாடுபட்டார்கள்.

லெனின் *1912—1913*ஆம் ஆண்டுகளின் போது தேசிய இனப் பிரச்சினையைப் பற்றி ஐம்பதுக்கும் அதிகமான கட்டுரைகளை எழுதினார். அவர் இக்கட்டுரைகளில் ஏகாதிபத்திய சகாப்தத்தில் தேசிய இனங்கள் மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களைப் பற்றிய மார்க்சியத் தத்துவத்தை வளர்த்துக் கூறினார்; எல்லா தேசிய இனங்களுக்கும் முழு சமத்துவம், தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை, இதரவற்றை அடிப்படையான கோட்பாடுகளாகக் கொண்ட கட்சியின் தேசிய இனச் செயல்திட்டத்தை வகுத்தளித்தார்.

லெனின் *1916*இல் எழுதிய **ஏகாதிபத்தியம் — முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்** என்ற நூல் மார்க்சியத்தின் வளர்ச்சியில் புதிய கட்டத்தைக் குறித்தது. அவர் ஏகாதிபத்தியத்தின் பொருளாதார சாரம், அதன் முரண்பாடுகள், அதன் தவிர்க்க முடியாத வீழ்ச்சி ஆகியவற்றை வெளிப்படுத்திய பிறகு ஏகாதிபத்தியம் சோஷலிசப் புரட்சியின் முற்பொழுது என்று முடிவு செய்தார். இந்த நூல் மார்க்ஸ் எழுதிய **மூலதனத்தின்** நேரடியான தொடர்ச்சியாக, அதன் அடிப்படையான கருத்துகளைப் படைப்புத் தன்மையுடன் வளர்ப்பதாக இருந்தது. லெனின் இதற்குப் பின்னர் எழுதிய நூல்கள் சிலவற்றிலும் கூட ஏகாதிபத்தியத்தை விஞ்ஞான ரீதியில் பகுப்பாய்வு செய்திருந்தார். அவர் ஏராளமான விவரங்களையும் தத்துவ விஷயங்களையும் ஆராய்ச்சி செய்து அறிந்து கொண்டதன் காரணமாக ஏகாதிபத்திய சகாப்தத்தில் முதலாளித்துவத்தின் சமமற்ற மற்றும் பாய்ச்சலான வளர்ச்சி என்னும் விதியைக் கண்டுபிடித்தார்; சோஷலிசப் புரட்சி முதலில் சில நாடுகளில் — ஒரு முதலாளித்துவ

நாட்டில் கூட — வெற்றி பெற முடியும் என்ற முக்கியமான விஞ்ஞான ரீதியான முடிவைச் செய்தார். அது உலகப் புரட்சிகர இயக்கத்துக்கு மிகவும் முக்கியமான முடிவாகும்.

முதலாவது உலக யுத்தத்தின் போது லெனின் கொள்ளைக்காரத்தனமான ஏகாதிபத்திய யுத்தங்களை எதிர்த்து சமரசத்துக்கு இடமில்லாத, முரணில்லாத நிலையைக் கடைப்பிடித்தார்; பெருந்திரளான மக்களின் புரட்சிகர நடவடிக்கைகளை ஆதரித்து ஊக்குவிப்பதனால், அவர் கூளுடைய சர்வதேசப் பாட்டாளி வர்க்க ஒற்றுமையைப் பலப்படுத்துவதனால் மட்டுமே ஏகாதிபத்திய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியும் என்ற முக்கியமான முடிவைச் செய்தார்.

ருஷ்யாவில் 1917 பிப்ரவரியில் நடைபெற்ற முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி ஜாரிசத்தை ஒழித்த பிறகு லெனின் 1917 ஏப்ரல் 3ஆம் தேதியன்று தாய்நாட்டுக்குத் திரும்பினார். அவருடைய இரண்டாவது நாடு துறந்த வாழ்க்கை முடிவடைந்தது. அவர் 1917 செப்டெம்பரில் எழுதிய **அரசும் புரட்சியும்** என்ற நூல் மார்க்சிய வளர்ச்சிக்கு மாபெரும் பங்களிப்பாக இருந்தது. அவர் சோஷலிசப் புரட்சியின் போது முதலாளித்துவ அரசின் பால் பாட்டாளி வர்க்கத்தின் அணுகுமுறை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியவை பற்றித் தன்னுடைய தத்துவத்தை விளக்கி கம்யூனிசத்தின் கீழ் அரசு உலர்ந்து உதிர்கின்ற நிகழ்வுப் போக்கின் பொருளாதார அடிப்படைகளை ஆழமாகத் தத்துவ ரீதியில் பகுப்பாய்வு செய்திருந்தார்.

சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நிர்மாணிக்கின்ற வழிமுறைகளைப் பற்றி அவர் விஞ்ஞான ரீதியில் வகுத்தளித்தது அவருடைய தத்துவப் பணியில் சிகரத்தைப் போன்ற சாதனை என்று கூறலாம். அவர் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் காலத்தின் விதிகளையும் அந்த

மாறுகாலத்தின் பிரதான கூறுகளையும் எடுத்துக் கூறினார். அதன் மூலம் லெனின் புதிய சமூகத்தைப் பற்றிய மார்க்ஸ், எங்கெல்சின் போதனையை ஆழப்படுத்தி படைப் பாற்றலுடன் வளர்த்தார், புதிய சமூகத்தை நிர்மாணிப் பதற்குப் பெருந்திரளான மக்களை அமைப்பு ரீதியாக்குகின்ற புதிய கோட்பாடுகளினால் மார்க்சியத்தைச் செழுமைப் படுத்தினார்.

ருஷ்யாவின் உழைக்கும் மக்கள் லெனின் மற்றும் அவர் உருவாக்கிய கட்சியின் தலைமையின் கீழ் 1917 நவம்பரில் சோஷலிசப் புரட்சியை நிறைவேற்றினார்கள் (பழைய காலக் கணித முறைப்படி அது அக்டோபா மாதம் என்பதால் அப்புரட்சி மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி என்று சொல்லப்படுகிறது) சுரண்டல்காரர்களின் ஆட்சியைத் தூக்கியெறிந்து மனிதகுலத்தின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தைத் துவக்கினார்கள்.

லெனின் வீரமிக்க வாழ்க்கையை நடத்தினார். அவருடைய வாழ்க்கை முடிவில்லாத அறிவு முயற்சிகளில், தளர்ச்சியில்லாத புரட்சிகரமான போராட்டத்தில், சித்தாந்த மற்றும் அரசியல் சமர்களில் கழிந்தது. லெனின் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காரருக்குரிய தலைசிறந்த பண்புகளைக் கொண்டிருந்தார்: சக்திமிக்க அறிவு, எல்லாத் தடைகளையும் வெல்கின்ற மன உறுதி, அடிமைத்தனம், ஒடுக்கு முறைக்கு எதிரான அறச்சீற்றம், புரட்சிகர வேகம், முரணற்ற சர்வதேசியவாதம், பெருந்திரளான மக்களுடைய படைப்புத் திறனில் எல்லையற்ற நம்பிக்கை, மகத்தான அமைப்புத் திறமை. லெனினுடைய போதனை, புரட்சிகரத் தத்துவத்துக்கு அவருடைய பங்களிப்பு லெனினியம் என்று சொல்லப்படுகிறது.

லெனின் தன்னுடைய மாபெரும் ஆசான்களின் தத்துவப் பாரம்பரியத்தைப் புதிய வரலாற்று நிலைமைகளுக்குப் பொ

ருந்தக் கூடிய முறையில் வளர்த்து விரிவுபடுத்தினார். அவர் மார்க்சியத்தின் எல்லா உட்பகுதிகளையும் — தத்துவ ஞானம், அரசியல் பொருளாதாரம், விஞ்ஞான கம்யூனிசம் ஆகியவற்றை — செழுமைப்படுத்தினார். மார்க்ஸ், எங்கெல்சின் போதனையை உயிரில்லாத வறட்டுக் கோட்பாடாக மாற்றுவதற்குச் செய்த முயற்சிகள் அனைத்தையும் அவர் எதிர்த்துப் போராடினார். ''மார்க்சின் தத்துவத்தை நாங்கள் முற்றும் முடிவான ஒன்றாய், மீறவொண்ணாத ஒன்றாய்க் கருதவில்லை. மாறாக, அது சோஷலிஸ்டுகளுக்குரிய விஞ்ஞானத்தின் அடிக்கல்லை மட்டுமே அமைத்துக் கொடுத்திருக்கிறது, சோஷலிஸ்டுகள் வாழ்க்கையுடன் சேர்ந்து நடைபோட விரும்பினால் இந்த விஞ்ஞானத்தை எல்லாத் திசைகளிலும் வளர்த்துச் செல்வது **அவசியம்** என்பதை நாம் ஐயமற அறிவோம்'' என்று லெனின் எழுதினார். *

லெனினியம் என்பது ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின், காலனியாதிக்க அமைப்பு வீழ்ச்சியடைகின்ற சகாப்தத்தின், மனிதகுலம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற, சோஷலிசமும் கம்யூனிசமும் உலகு தழுவிய அளவில் வெற்றியடைகின்ற சகாப்தத்தின் மார்க்சியமாகும். புரட்சிகரத் தத்துவத்துக்கு லெனினுடைய பங்களிப்பு பேரளவில் இருப்பதால் அத்தத்துவம் மார்க்சிய-லெனினியம், உலகப் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசியப் போதனை என்று சொல்லப்படுகிறது.

மார்க்சிய-லெனினியம் என்பது தொழிலாளி வர்க்கத்தின் உலகக் கண்ணோட்டத்தை உருவாக்குகின்ற தத்துவஞான, பொருளாதார, சமூக-அரசியல் கருத்துகளின் விஞ்ஞான ரீதியான அமைப்பு; உலகத்தை அறிதல் மற்றும் அதைப் புரட்சிகரமாக மாற்றியமைத்தலைப் பற்றிய விஞ்ஞானம்;

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, முதற் பாகம், பக்கம் 54.

இயற்கை, சமூகம், மனித சிந்தனை ஆகியவற்றின் வளர்ச்சி யின் விதிகளைப் பற்றிய, முதலாளித்துவத்தை ஒழிப்பதற்கு, சோஷலிச மற்றும் கம்யூனிச சமூகத்தை நிர்மாணிப்பதற்குத் தொழிலாளி வர்க்கத்தின், எல்லா உழைக்கும் மக்களின் போராட்டத்தின் விதிகளைப் பற்றிய விஞ்ஞானம்.

மார்க்சிய-லெனினியம் என்பது என்றும் வாழ்கின்ற தத் துவம், பெருந்திரளான மக்களுடைய போராட்டம் மற்றும் படைப்பு நடவடிக்கைகளின் அனுபவத்தை படைப்புத் திற னுடன் புரிந்து கொள்வதற்குச் சக்தி நிறைந்த முறை; அது நடவடிக்கைக்கு மிகவும் அவசியமான வழிகாட்டி. மார்க்சிய-லெனினியம் நிரந்தரமாகச் செல்லுபடியாவதன் ரகசியம் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனினுடைய போதனை, அதன் முறைகள், கோட்பாடுகள், இலட்சியங்கள் கோடிக்கணக் கான மக்களுடைய இதயங்களிலும் அறிவிலும் இடம் பெற்றிருக்கின்றன என்னும் மெய்விவரத்தில் அடங்கியிருக் கிறது. ஒவ்வொரு புதிய தலைமுறையும் தனக்கு முன்னால் எழுந்துள்ள எல்லாக் கேள்விகளுக்கும் அதில் தெளிவான பதில்களைக் கண்டு கொள்கிறது. மார்க்சிய-லெனினியம் எதிர்காலத்தை நோக்கிச் செல்கின்ற பாதையில் ஒளி பாய்ச்சுகிறது, உலகத்திலுள்ள மக்களினங்களுக்குச் சமா தானம், முன்னேற்றம் என்னும் செய்தியைத் தருகிறது.

அத்தியாயம் இரண்டு

மார்க்சிய-லெனினியத் தத்துவஞானக் கோட்பாடுகள்

கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தைத் தொகுப்புரை செய்து அதைப் பற்றித் தம்முடைய ஆராய்ச்சியின் அடிப் படையில் இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல் வாதம் என்கின்ற புதிய தத்துவஞானத்தை வளர்த்தார்கள். வி. இ. லெனின் புதிய சகாப்தத்தின் வரலாற்றுச் சாரத்தை ஆராய்ந்து எழுதிய நூல்களில் மார்க்சியத் தத்துவஞானம் மேலும் வளர்த்துக் கூறப்பட்டது. மார்க்சிய-லெனினியத் தத்துவஞானம் வாழ்கின்ற, படைப்புத் தன்மையுள்ள போ தனை என்ற முறையில் உலக வரலாற்று அனுபவம், இயற்கை மற்றும் சமூக விஞ்ஞானங்களின் சாதனைகளின் அடிப்படையில் வளர்ச்சியடைந்து வருகிறது. இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் மார்க்ஸ், எங் கெல்ஸ், லெனினுடைய போதனையின் தத்துவஞான அடிப் படையாக இருக்கிறது; இயற்கை, சமூகம் மற்றும் சிந் தனையில் வளர்ச்சியின் ஆகப் பொதுப்படையான விதி களைப் பற்றிய விஞ்ஞானமாக இருக்கிறது.

தத்துவஞானத்தின் அடிப்படைக் கேள்வி. நெடுங்காலத்துக்கு முன்பு மக்கள் முதன்முறையாக உலகத்தின் தோற்று

வாய்கள், அதன் கட்டமைப்பு, அந்த உலகத்தில் மனிதன் வகித்த இடம் ஆகியவற்றைப் பற்றிச் சிந்தித்த பொழுது தத்துவஞானம் தோன்றியது.

நம்மைச் சுற்றியுள்ள எல்லாப் பொருட்களும் பொருளாயதமானவை அல்லது கருத்தியலானவை அல்லது பொருளாயதம் அற்றவை என்ற உண்மை உலகத்தைப் புரிந்து கொள்வதற்கு முக்கியமானதாகும். சுற்றியுள்ள உலகத்தைப் பற்றி மக்களுடைய அணுகுமுறை என்ன, உலகத்தின் தோற்றத்தை அவர்கள் எப்படிப் புரிந்து கொள்கிறார்கள் ஆகியவை தத்துவஞானிகளைக் கருத்துமுதல்வாதிகள், பொருள்முதல்வாதிகள் என்னும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கின்றன. வாழ்நிலைக்கும் சிந்தனைக்கும், பொருளாயதத்துக்கும் ஆன்மிகத்துக்கும் இடையிலுள்ள உறவு தத்துவஞானத்தின் அடிப்படைக் கேள்வியாகும். இந்த இரண்டு பிரிவினரும் பல நூற்றாண்டுகளாக இதைப் பற்றிக் காரசாரமான போராட்டத்தை நடத்தி வருகிறார்கள்.

பருப்பொருள் முதன்மையானது, உணர்வு இரண்டாம் நிலையானது, உணர்வு பருப்பொருளிலிருந்து தோன்றுகிறது என்று பொருள்முதல்வாதிகள் கருதுகிறார்கள். நம்மைச் சுற்றியுள்ள உலகத்தைக் கடவுள் படைக்கவில்லை; அது சுயேச்சையான எந்த அறிவினாலோ, ஆன்மாவினாலோ படைக்கப்படவில்லை. உணர்விலிருந்து சுயேச்சையாக இருக்கின்ற புறநிலையான பொருட்களை மக்களுடைய உணர்வு பிரதிபலிக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

இயற்கை தோன்றுவதற்கு நெடுங்காலத்துக்கு முன்பே மெய்ப்பொருள் (பகுத்தறிவு, ஆன்மா, இதரவை) இருக்கிறது, உண்மையில் அதைப் படைத்ததும் அதுவே என்று கருத்துமுதல்வாதிகள் கூறுகிறார்கள். ஆனால் எந்த உணர்வு உலகத்தைப் ''படைத்தது'' என்ற கேள்விக்குப் பதிலளிக்கின்ற பொழுது கருத்துமுதல்வாதிகள் பிரிந்து விடுகிறார்

கள். வெளியுலகத்தின் பொருட்களும் நிகழ்வுகளும் ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனாலும் படைக்கப்பட்டவை என்று அகநிலைக் கருத்துமுதல்வாதிகள் கருதுகிறார்கள். ''மொத்த உலகமும் என்னுடைய பல உணர்ச்சிகளின் தொகுதியே'' என்னும் வாக்கியத்தில் அவர்கள் தம்முடைய தத்துவம் முழுவதையும் சுருக்கிக் கூறுகிறார்கள். பொருளாயத உலகம் தனிநபருடைய உணர்வுக்கு அப்பால் எங்கோ இருக்கின்ற ஏதோ ஒரு விதமான சர்வப்பொது அறிவின் விளைவு என்று புறநிலைக் கருத்துமுதல்வாதிகள் கருதுகிறார்கள்.

தத்துவஞானத்தின் அடிப்படையான கேள்வி இரண்டு அம்சங்களில் ஆராயப்படுகிறது. முதலில் தோன்றியது பருப்பொருளா, உணர்வா என்ற கேள்வி இதில் ஒரு அம்சமாகும்; உலகம் அறியப்படக் கூடியதா, மனிதன் இயற்கையின் ரகசியங்களுக்குள் ஊடுருவிச் சென்று அதன் விதிகளைக் கண்டுபிடிக்க முடியுமா என்ற கேள்விக்கு இரண்டாவது அம்சம் பதிலளிக்க முற்படுகிறது. உலகம் **அறியப்படக் கூடியதே** என்று பொருள்முதல்வாதிகள் வலியுறுத்துகிறார்கள். சில கருத்துமுதல்வாதிகள் இதை மறுத்து உலகம் அறியப்படக் கூடியதல்ல என்று கூறுகிறார்கள். ஆகவே அவர்கள் அறியொணாவாதிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஒரு நபர் தன்னுடைய சொந்தச் சிந்தனைகள், உணர்ச்சிகளை மட்டுமே அறிய முடியும் என்று அகநிலைக் கருத்துமுதல்வாதிகள் கூறுகிறார்கள். மனிதன் ''மெய்ப்பொருள்'', ஏதோ ஒரு வகையான இறைஞானப் ''பரம கருத்து'', இதரவற்றை மட்டுமே அறிய முடியும் என்று புறநிலைக் கருத்துமுதல்வாதிகள் வலியுறுத்துகிறார்கள்.

வாழ்நிலைக்கும் சிந்தனைக்கும் இடையேயுள்ள உறவு மற்றும் உலகத்தை அறிதல் பற்றிய கேள்வி தத்துவஞானத்தின் அடிப்படையான கேள்வியாகும், ஏனென்றால் இதற்குத்

தரப்படுகின்ற பதிலே சுற்றியுள்ள உலகத்தின் வளர்ச்சி விதிகளின் தன்மை, உலகத்தை அறிகின்ற வழிகள், இதரவை போன்ற தத்துவஞானப் பிரச்சினைகள் அனைத்தின் தீர் வுக்கும் ஆதாரமாக இருக்கிறது. உதாரணமாக, உணர்வு, மெய்ப்பொருள் அல்லது கருத்து முதன்மையானது என்றால், நிலவுகின்ற சுரண்டல் சமூக அமைப்பு மாற்றப்பட முடி யாதது, நிரந்தரமானது என்று கருதப்படும்; அது கடவுளால் படைக்கப்பட்டது, ஆகவே அதை மாற்ற முடியாது. பருப் பொருள் முதன்மையானது என்றால், மக்கள் தம்மால் வெறுக்கப்படுகின்ற சமூக-பொருளாதார அமைப்பை ஒழித்து சுரண்டலற்ற புதிய சமூகத்தை நிர்மாணிக்க முடியும். கருத்துமுதல்வாதம் பிற்போக்கான சமூக சக்திகளின் நலன் களுக்குப் பாடுபடுகிறது, பொருள்முதல்வாதம் முற்போக் கான, புரட்சிகர சக்திகளின் நலன்களுக்கு உதவுகிறது.

1. இயக்கவியல் பொருள்முதல்வாதம்

பருப்பொருள் — அதன் குணாம்சங்களும் வாழ்நிலையின் வடிவங்களும்

பருப்பொருளும் இயக்கமும். தத்துவஞானத்தின் அடிப்படை யான கேள்விக்கு மார்க்சிய-லெனினியத் தத்துவஞானம் எப்படி பதிலளிக்கிறது? வெளியுலகம் நம்முடைய உணர் வுக்குச் சம்பந்தமில்லாத முறையில் புறநிலையாக இருக்கிறது என்ற அனுமானத்திலிருந்து அது முன்னேறுகிறது. இது பொருளாயத உலகம்.

மக்கள் சிகப்பு நிறத்துக்கு அப்பால் கண்ணுக்குப் புலப் படாத ஒளிக்கதிர்களை [infra-red radiation] அல்லது ஒலியைக் காட்டிலும் வேகமானவற்றை [ultra-sound] அறியாத காலம் இருந்தது. அவை இருந்தன, ஆனால்

மனிதன் அவற்றை அப்பொழுது அறியவில்லை. அவை மனிதனுடைய உணர்விலிருந்து புறநிலையானவை, சுயேச்சையாக இருப்பவை என்ற காரணத்தினால்தான் மார்க்சிய-லெனினியத் தத்துவஞானம் பொருட்கள், நிகழ்வுகள் ஆகிய எல்லாவற்றையும் பருப்பொருள் என்ற மொத்த இனத்தில் சேர்க்கிறது.

பருப்பொருளை அறிவது எப்படி? வெளியுலகத்திலுள்ள பொருட்களின் பொருளாயதத் தன்மையை, அப்பொருட்கள் நம்முடைய புலனுறுப்புகளின் மீது ஏற்படுத்துகின்ற தாக்கத்திலிருந்தும் அவை நம்முடைய புலனுணர்ச்சிகளினால் பிரதிபலிக்கப்படுகின்ற தன்மையிலிருந்தும் அறிய முடியும். எல்லாவற்றையும் நாம் பார்க்க முடியாது அல்லது உணர முடியாது என்பது உண்மையே. உதாரணமாக, நாம் மின் அலையை அல்லது காந்தக் களத்தை நம்முடைய கைகளால் தொட முடியாது. ஆனால் விசேஷமான கருவிகளைக் கொண்டு அவற்றைக் கண்டுபிடிக்க முடியும். பருப்பொருள் எந்த வடிவத்திலிருந்தாலும் நம்முடைய உணர்ச்சிகளின் மூலமாக நாம் அதை அறிய முடியும்.

''பருப்பொருள்'' என்பது பரந்த கருத்து; இரசாயனப் பொருள், புவி ஈர்ப்புக் களம் மற்றும் இதர ஸ்தூலமான ரகங்களில் ஏதாவது ஒன்றுடன் அதை இனங்கண்டு கொள்ளக் கூடாது. பருப்பொருள் என்பது உலகத்தின் ஒருமை மற்றும் பல்வகையானது; பொருட்கள் மற்றும் நிகழ்வுகள் — அவற்றின் குணாம்சங்கள், அவற்றுக்கு இடையிலான உறவுகளின் கூட்டு மொத்தம். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் பருப்பொருள் என்பது நம்முடைய புலனுணர்ச்சிகளின் மூலம் நாம் அறிகின்ற புறநிலை எதார்த்தம் ஆகும்.

பருப்பொருளின் கட்டமைப்பின் வேறுபடுந்தன்மை மற்றும் குறையாத தன்மையைப் பற்றிய ஆராய்ச்சி முடிவுகளை ஆதாரமாகக் கொண்டு லெனின் பருப்பொருளைப்

பற்றிய தத்துவஞானக் கருத்தைப் பின்வருமாறு வகுத்தளித்தார்: ''பருப்பொருள் என்பது மனிதனுடைய புலனுணர்ச்சிகள் அவனுக்கு எடுத்துக்காட்டுகின்ற புறநிலை எதார்த்தத்தைக் குறிக்கின்ற தத்துவஞான வகையினம்; அந்த எதார்த்தம் நமது புலனுணர்ச்சிகளிலிருந்து சுயேச்சையான முறையில் இருக்கிறது, அவற்றால் பிரதி எடுக்கப்படுகிறது, புகைப்படம் எடுக்கப்படுகிறது, பிரதிபலிக்கப்படுகிறது.'' *

பருப்பொருளைப் பற்றி லெனின் கொடுத்துள்ள வரையறுப்பு ஏற்கெனவே மனிதன் அறிந்திருக்கின்ற பொருட்களை மட்டுமன்றி, எதிர்காலத்தில் அறிவியல் கண்டுபிடிக்கக் கூடிய பொருட்களையும் உள்ளடக்கியிருக்கிறது. மக்கள் விண்வெளிக்குள் ஊடுருவுவதன் மூலம் அல்லது அணுத் திரண்மங்களை ஆராய்வதன் மூலம் பருப்பொருளின் புதிய ரகங்களைக் கண்டுபிடிப்பது உறுதி. ஆனால் பருப்பொருள் எவ்விதமான புதிய குணாம்சங்களைக் கொண்டிருந்தாலும் அது இன்னும் நம்முடைய உணர்விலிருந்து தனித்த முறையில் புறநிலை எதார்த்தமாகவே இருக்கும்.

நம்மைச் சுற்றி இருக்கின்ற உலகம் ஒன்றுபட்ட பொருளாயத உலகம் ஆகும். எல்லாப் பொருட்களும் எல்லா நிகழ்வுப் போக்குகளும் பருப்பொருளின் வெளிப்பாடுகளும் வடிவங்களும் மட்டுமே. அறிவியலின் வளர்ச்சியும் மனிதனுடைய மொத்த செய்முறை நடவடிக்கையும் உலகத்தின் பொருளாயத ஒருமையின் இருத்தலைச் சுட்டிக் காட்டுகின்றன. வான இயல், பௌதிகம் மற்றும் இரசாயன இயல் பூமி மற்றும் வான மண்டலத்திலுள்ள பொருட்களின் பௌதிக-இரசாயனக் கட்டமைப்பின் ஓரினத் தன்மையைச் சுட்டிக் காட்டுவதுடன் அவற்றின் இயக்கத்தை அதே

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 14, p. 130.

விதிகள் நிர்ணயிக்கின்றன என்பதையும் நிரூபிக்கின்றன. உயிரியலும் மரபுவழிப்பண்பியலும் அனைத்து உயிரிகளின் கட்டமைப்பிலும் செயல்பாட்டிலும் உள்ள ஒருமையை நிரூபிக்கின்றன. உடலியல் ஆன்மிக ஆற்றலுக்குப் பொருளாயத அடிப்படை இருப்பதை நிரூபிக்கிறது.

புறநிலை எதார்த்தம் என்ற முறையில் பருப்பொருளைப் பற்றிய கருதுகோள் பருப்பொருளின் எல்லா இயல்புகள், இயக்கத்தின் வடிவங்கள், இருத்தலின் விதிகள் இதரவற்றைக் குறிக்கிறது.

பருப்பொருளின் அழியாத இயல்புகளில் ஒன்று அது இயக்கத்தில் மட்டுமே இருக்கிறது, ''...சாதாரண இடப் பெயர்ச்சி முதல் சிந்தனை வரை பிரபஞ்சத்தில் நிகழ்கிற எல்லா மாற்றங்களையும் வளர்ச்சிப் போக்குகளையும் விரிவாகத் தழுவுகிறது''.* பிரபஞ்சத்தில் நடைபெறுகின்ற எல்லா பௌதிக, இரசாயன மற்றும் இதர நிகழ்வுப் போக்குகள் நின்று விடுவதாகக் கற்பனை செய்யுங்கள். உலகம் மொத்தமாக மறைவதற்கு அது சமமாக இருக்கும்.

பொதுவாக மாற்றம், முடிவில்லாத வளர்ச்சி நிகழ்வுப் போக்கு என்று கருதப்படுகின்ற இயக்கம் பருப் பொருளின் அடிப்படையான இயல்பு, அதன் இருத்தலின் சாதனம். எளிய துகள்கள், அணுக்கள், மூலக்கூறுகளின் இயக்கம் எல்லா பொருளாயதப் பொருட்களிலும் நடைபெறுகிறது. அப்படிப்பட்ட ஒவ்வொரு பொருளும் புறச்சூழலுடன் இடைச் செயல் புரிகிறது, அந்த இடைச் செயல் ஏதாவதொரு வகையான இயக்கமாகும். பூமியைப் பொறுத்த மட்டில் இயங்கா நிலையில் இருக்கின்ற எந்தவொரு பொருளும் அதனுடன் சேர்ந்து சூரியனைச் சுற்றி வருகிறது; சூரியனுடன் சேர்ந்து நட்சத்திர மண்டலத்தில் உள்ள

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், வி. இ. லெனின், இயக்கவியல் பொருள் முதல்வாதம், பக்கம் 85.

மற்ற நட்சத்திரங்களைப் பொறுத்தமட்டில் நகர்ந்து கொண்டிருக்கிறது; நட்சத்திர மண்டலம் இதர நட்சத்திர மண்டலங்களைப் பொறுத்தமட்டில் நகர்ந்து கொண்டிருக்கிறது, இதரவை. முற்றிலும் இயங்கா நிலை, முற்றிலும் சமநிலை, அசைவில்லாத நிலை என்று எதுவும் இல்லை. எந்த இயங்கா நிலை அல்லது சமநிலையும் சார்புநிலையானவையே. உதாரணமாக, ஒரு பொருள் பூமியைப் பொறுத்தமட்டில் முற்றிலும் இயங்கா நிலையில் இருக்க முடியும்; ஆனால் அதே சமயத்தில் நம்முடைய கிரகத்துடன் சேர்ந்து சூரியனைச் சுற்றி வர முடியும்.

அறிவியல் இயக்கத்தின் பின்வரும் வடிவங்களை வரையறுத்திருக்கிறது: இயந்திர வடிவம் (இடஞ்சார்ந்த இயக்கம்); பௌதிக வடிவம் (மின் காந்தம், புவி ஈர்ப்பு, வெப்பம், ஒலி, பொருளின் மொத்த நிலைகளில் மாற்றங்கள், இதரவை); இரசாயன வடிவம் (பொருட்களில் உள்ள அணுக்கள், மூலக்கூறுகளின் மாற்றம்); உயிரியல் வடிவம் (உயிரிகளின் வளர்சிதை மாற்றம்); சமூகவியல் வடிவம் (சமூக மாற்றங்கள், சிந்தனை நிகழ்வுப் போக்குகள்). இயக்கத்தின் புதிய வடிவங்கள் பல சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. எளிய துகள்களின் போக்குவரத்து மற்றும் உருமாற்றம், அணுக்கூறுகள், அணுக்கருக்களுக்கு உள்ளே நடைபெறுகின்ற நிகழ்வுப் போக்குகள், இதரவை இவற்றில் அடங்கும்.

ஆகவே இயக்கம் என்பது பருப்பொருளின் சர்வப் பொதுவான இயல்பு, அதன் இருத்தலின் சாதனம். இயக்கம் இல்லாமல் பருப்பொருள் இருக்க முடியாது; பருப்பொருள் இல்லாமல் இயக்கம் இருக்க முடியாது.

விசும்பும் காலமும் — பருப்பொருள் நிலவும் வடிவங்கள். பருப்பொருளின் இயக்கம் விசும்பிலும் காலத்திலும் நடை

பெறுகிறது. விசும்புக்கும் காலத்துக்கும் வெளியே பருப் பொருள் இருப்பதில்லை. அவற்றின் தத்துவஞான விளக்கம் என்ன?

விசும்பும் காலமும் நம்முடைய உணர்விலிருந்து புற நிலையாக, சுயேச்சையாக இருக்கின்றன. தத்துவஞானம் விசும்பைப் பருப்பொருள் நிலவும் வடிவமாகக் கருதுகிறது; விசும்பு பருப்பொருளின் விரிவை, பொருளாயத உலகத்தின் மற்ற பொருட்கள் மத்தியில் அதன் இடத்தையும் நிலைமாறு வதையும் குறிக்கிறது.

பருப்பொருள் நிலவும் மற்றொரு வடிவம் காலம். அது எல்லாப் பொருட்களின் இருத்தலின் கால அளவையும் அவற்றின் நிலைமைகள் ஒன்றை மற்றொன்று அகற்றுகின்ற காலவரிசை முறையையும் குறிக்கிறது.

வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் விசும்பில் இருத்தல் என்பது மற்ற பொருட்களுடன் உள்ள உறவில், ஒன்று மற்றொன்றுடன் கொண்டுள்ள உறவில் இருத்தல் எனப் பொருள்படும்; காலத்தில் இருத்தல் என்பது அடுத் தடுத்துத் தொடர்கின்ற கால வரிசையில் இருத்தல் எனப் பொருள்படும்.

பருப்பொருள், விசும்பு, காலம் ஆகியவை மனித உணர் விலிருந்து சுயேச்சையான முறையில் இருக்கின்றன; அவை நெருக்கமாக இணைந்திருக்கின்றன. பருப்பொருள் காலத் துக்கும் விசும்புக்கும் அப்பால் இருக்க முடியாது என்பதைப் போல அவையும் பருப்பொருள் இல்லாமல் இருக்க முடியாது. விசும்பும் காலமும் பருப்பொருளுடன் பிணைக்கப்பட் டிருப்பது மட்டுமன்றி அவை ஒன்றோடொன்று பிணைக்கப் பட்டிருக்கின்றன. ''உலகத்தில் இயக்கத்தில் இருக் கின்ற பருப்பொருளைத் தவிர வேறு எதுவுமில்லை; இயக்கத் தில் இருக்கின்ற பருப்பொருள் விசும்பையும் காலத் தையும் அன்றி வேறு முறையில் இயங்க முடியாது''

என்று லெனின் கூறினார்.*

நித்தியமான பொருட்கள், நிகழ்வுப் போக்குகள் அல்லது நிகழ்வுகள் என்பவை கிடையா என்பதை மனிதகுலத்தின் மொத்த அனுபவமும் நிரூபித்திருக்கிறது. பல பில்லியன் ஆண்டுகளாக இருந்து வருகின்ற வான மண்டலப் பொருட்கள் கூட ஆரம்பத்தையும் முடிவையும் கொண்டிருக்கின்றன; ஏனென்றால் அவை தோன்றி முடிவில் மறைகின்றன. ஆனால் தத்துவஞான அர்த்தத்தில் பருப்பொருள் நித்தியமானது; ஏனென்றால் சிதைவுறுதல் அல்லது அழிதல் மூலம் பொருட்கள் எந்தச் சுவடும் இல்லாமல் மறைவதில்லை; அவை வேறு பொருட்களாக, நிகழ்வுகளாக மாற்றமடைகின்றன. உதாரணமாக, ஒரு பொருளின் மூலக்கூறுகள் சிதைவுறுதல் வேறு பொருட்களின் மூலக்கூறுகள் தோன்றுவதற்கு வழி வகுக்கிறது. உயிரிகளின் ஒரு தலைமுறை — உயிரினங்கள் கூட — அடுத்த தலைமுறைகளாலும் உயிரினங்களாலும் அகற்றப்படுகின்றன. ஒரு விண்மீன் அழிந்து விட்டது என்றால் அதன் பொருளில் எதுவும் மிஞ்சவில்லை என்பது அர்த்தமல்ல. பருப்பொருளின் நிலைப்பு விதிகளைக் கண்டுபிடித்த விஞ்ஞானங்கள் பருப்பொருள் பல்வேறு மாற்றங்களை அடைந்தாலும் அது ஒருபோதும் ''ஒன்றுமில்லாததாக'' மறைந்து விடுவதில்லை, அது ''ஒன்றுமில்லாததிலிருந்து'' தோன்றுவதும் இல்லை என்பதை நிரூபிக்கின்றன. பருப்பொருள் நித்தியமானது, அதைப் படைக்க முடியாது, அழிக்கவும் முடியாது. பருப்பொருள் எப்பொழுதும் எங்கும் இருக்கிறது.

பருப்பொருள் காலத்தைப் பொறுத்தமட்டில் நித்தியமாக இருப்பது மட்டுமன்றி, விசும்பைப் பொறுத்தமட்டில் முடிவில்லாததாகவும் இருக்கிறது. இயற்கை விஞ்ஞானத்தின் புதிய கண்டுபிடிப்புகள் நமக்குத் தெரிந்துள்ள உலகத்தின் விசும்பின்

* V. I. Lenin, *Collected Works*, vol. 14, p. 175.

எல்லைகளைத் தொடர்ச்சியாக விரிவுபடுத்திக் கொண்டிருக்கின்றன. நம்மிடமிருந்து பில்லியன் ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் இருக்கின்ற விண்மீன்களை நாம் பார்ப்பதற்கு நவீனத் தொலைநோக்கிகள் நமக்கு உதவுகின்றன. ஒரு மின்னணு நுண்ணோக்கியினால் கூடக் கண்டுபிடிக்கப்பட முடியாத மிகச் சிறிய தூரங்களை அளப்பதற்கு அணுத்துகள்களின் முடுக்குப் பொறிகள் உதவுகின்றன. பொருளாயத உலகத்தின் எல்லைகள் உண்மையாகவே முடிவில்லாதவை ஆகும்.

உணர்வு — உயர்வாக ஒழுங்கமைக்கப்பட்ட பருப்பொருளின் பண்பு. மனிதனுக்கு உணர்வு இருக்கிறது, அதாவது சிந்திக்க, உணர, அறியக் கூடிய திறமை, சொந்தக் கருத்துகள், எண்ணங்கள், இதரவற்றை உருவாக்கிக் கொள்கின்ற ஆற்றல் இருக்கிறது. இந்த நிகழ்வின் உண்மையான இயல்பு என்ன, அதன் பிறப்பிடம் எங்கே இருக்கிறது, உணர்வுக்கும் பருப்பொருளுக்கும் இடையிலான உறவு என்ன என்ற கேள்வி தானாகவே தோன்றுகிறது.

மிகவும் தொன்மையான காலத்தில் மனிதன் தன்னுடைய அறிவின் மர்மத்தைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினான். உயிரில்லாத பருப்பொருள் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்தை அடைந்ததும் உயிருள்ள பருப்பொருளை எப்படித் தோற்றுவிக்கிறது, அது உணர்வை எப்படி உருவாக்குகிறது என்பதைப் பற்றி மக்கள் வியப்படைந்தார்கள்.

பருப்பொருளின் நீண்ட பரிணாமத்தின் விளைவாக உணர்வு உருவாகிறது என்பதை நவீன விஞ்ஞானம் நிரூபித்திருக்கிறது. பருப்பொருள், இயற்கை ஆகியவை எப்பொழுதுமே இருந்து வந்திருக்கின்றன. ஆனால் சிந்திக்கின்ற திறனுடைய மனிதன் தோன்றுவதற்குப் பல மில்லியன் ஆண்டுகளாயின.

உணர்வு வளர்ச்சியடைகின்ற பருப்பொருளிலிருந்து தோன்றியது; அதிலிருந்து அதைப் பிரிக்க முடியாது. பருப்பொருளிலிருந்து சுயேச்சையான முறையில் தோன்றியிருக்கக் கூடிய உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் ஒருவரும் ஒருபோதும் அனுபவித்ததில்லை. எல்லா மனிதர்களுக்கும் மூளை சிந்தனை உறுப்பாக இருக்கிறது; மூளை இருப்பதால் மட்டுமே உணர்வு இருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், உணர்வு எந்த ரகத்தைச் சேர்ந்த பருப்பொருளுக்கும் இயல்பு அல்ல; அது உயர்ந்த அமைப்பு ரீதியாக்கப்பட்ட பருப்பொருளுக்கு மட்டுமே இயல்பாகும். அது மனித மூளையின் நடவடிக்கையுடனும் பிரத்யேகமான மனிதத் தன்மையைக் கொண்ட, சமூக வாழ்க்கை முறையுடனும் இணைந்திருக்கிறது.

உணர்வு மூளை இருத்தலை மட்டுமின்றி, மூளையின் மீது தாக்கம் செலுத்தி அதனால் பிரதிபலிக்கப்படுகின்ற பொருளாயதப் பொருட்களின் இருத்தலையும் வலியுறுத்துகிறது. பொருளாயத உலகம் புலனுறுப்புகளின் மூலமாக மூளையின் மீது ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் வழியே உணர்வு தோன்றுகிறது. நம்முடைய புலனுறுப்புகள் உயிரியின் உடலுக்குள் அல்லது புறச் சூழலில் ஏற்படுகின்ற பல்வேறு மாற்றங்களைப் பிரதிபலித்து உடலுக்குச் சமிக்கை அளிக்கின்ற ''கருவிகளே''. நம்முடைய புலனுறுப்புகளிலிருந்து (காண்பது, கேட்டல், முகர்தல், ருசித்தல், தொடுதல்) மூளைக்கு வருகின்ற சமிக்கைகள் பொருட்களின் இயல்புகளையும் அவற்றின் இணைப்புகளையும் அவை ஒன்றோடொன்று வைத்திருக்கின்ற தொடர்புகளையும் பற்றி செய்திகளைத் தருகின்றன. புலனுறுப்புகளின் மீது தாக்கத்தினால் கிளறிவிடப்படுகின்ற தூண்டுதல் மூளையை அடைகின்ற பொழுது மட்டுமே புலனுணர்ச்சியாக, உணர்வுக் காரணியாக ஆகிறது.

உணர்வு என்பது புறநிலையான உலகத்தின் அகநிலையான பிம்பம். ஒரு பிம்பத்தின் அகநிலைத் தன்மையைப் பற்றி நாம் பேசுகின்ற பொழுது அந்த பிம்பம் ஒரு மனிதனுடைய மூளையில் உருமாற்றப்பட்டு மறு செயல்முறைக்கு உள்ளாகிய பொருளாயத நிலை என்று பொருள் கொள்கிறோம். மனிதனுடைய மூளையில் ஒரு பொருள், ஒரு வஸ்து ஒரு பிம்பமாகிறது, ஸ்தூலமான பொருள் அதன் முன்மாதிரியாகிறது. ''பொருள்முதல்வாதிக்கும் கருத்து முதல்வாதத் தத்துவத்தை ஆதரிப்பவருக்கும் இடையில் அடிப்படையான வேறுபாடு — பொருள்முதல்வாதி புலனுணர்ச்சி, புலனறிவு, எண்ணம் பொதுவாக மனிதனுடைய உணர்வு ஆகியவை புறநிலை எதார்த்தத்தின் பிம்பம் என்று கருதுகின்ற மெய்விவரத்தில் அடங்கியிருக்கிறது. உலகம் என்பது நம்முடைய உணர்வினால் பிரதிபலிக்கப் படுகின்ற புறநிலை எதார்த்தத்தின் இயக்கம் ஆகும். எண்ணங்கள், புலனறிதல்கள், இதரவற்றின் இயக்கம் எனக்கு வெளியே இருக்கின்ற பருப்பொருளின் இயக்கத்துடன் பொருந்துகிறது'' என்று லெனின் கூறினார். *

மனிதனுடைய புலனுணர்ச்சிகளும் சிந்தனைகளும் புற நிலையான உலகத்தின் பொருட்களின் பிம்பங்கள், பிரதிகள் என்று லெனின் கூறுகின்ற பொழுது நம்மைச் சுற்றியுள்ள பொருட்களை நம்முடைய உணர்வில் தன்னியக்க, செயலற்ற முறையில் ''புகைப்படம்'' எடுத்தல் என்பது அர்த்தமல்ல. மனிதனுடைய மூளை புகைப்படத் தகடு அல்ல, அது கண்ணாடியும் அல்ல. ஒரு நபர் தன்னுடைய சமூக வளர்ச்சி, கல்வி நிகழ்வுப் போக்கில், சமூக நடைமுறை நிகழ்வுப் போக்கில் வெளியுலகத்தைப் புறநிலை ரீதியில் பிரதிபலிக்கின்ற திறமையை வளர்த்துக் கொள்கிறார்.

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 14, p. 267.

அவருடைய படைப்புத் திறமை, ஆற்றல்கள் வளர்ச்சியடையவில்லை என்றால் இப்பிரதிபலிப்பு ஏற்படாது. அவர் பொருட்களை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் வேறுபடுத்திக் கொள்வதற்கும், பொதுமையில் குறிப்பிட்டவற்றைக் காண்பதற்கும் படைப்புத் திறமை அவசியம்.

உலகத்தை மாற்றுவதற்கும் மனிதன் மற்றும் சமூகத்தின் நலன்களுக்கு அதை உட்படுத்துவதற்கும் உரிய மனிதனுடைய நடவடிக்கை உணர்வின் தோற்றம் மற்றும் வளர்ச்சியின் முக்கியமான சாரமாகவும் வரலாற்று அவசியமாகவும் இருக்கிறது. லெனின் உணர்வின் சுறுசுறுப்பான பாத்திரத்தைப் பின்வரும் சொற்களில் தொகுத்துக் கூறினார்: ''மனிதனுடைய உணர்வு புறநிலை உலகத்தைப் பிரதிபலிப்பது மட்டுமின்றி, அதைப் படைக்கிறது.... உலகம் மனிதனுக்குத் திருப்தி அளிக்கவில்லை, மனிதன் தன்னுடைய நடவடிக்கையினால் அதை மாற்ற முடிவு செய்கிறான்.'' *

மார்க்சிய-லெனினியத் தத்துவஞானம் — இயக்கவியல் பொருள்முதல்வாதம் — பருப்பொருள் முதன்மையானது, உணர்வு, சிந்தனை மற்றும் உணர்ச்சி இரண்டாம் நிலையானது, பருப்பொருளிலிருந்து தோன்றியது என்று கருதுகிறது. உணர்வு பருப்பொருளிலிருந்து, இயற்கையிலிருந்து, அதன் வளர்ச்சியின் மிக உயர்ந்த உற்பத்தியாகத் தோன்றுகிறது. உணர்வு வெறும் பிம்பமே, வெளியுலகத்தின் பிரதிபலிப்பே.

பொருள்முதல்வாத இயக்கவியல்

இயக்கவியல் — வளர்ச்சி மற்றும் சர்வாம்சத் தொடர்பு பற்றிய போதனை. பொருள்முதல்வாத இயக்கவியல் இயற்கையும்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 38, pp. 212—213.

நம்மைச் சுற்றியுள்ள உலகமும் ஓய்வு நிலையில், அசையா நிலையில், தேக்க நிலையில், மாறா நிலையில் இருப்பதாகக் கருதவில்லை; ஆனால் அவை தொடர்ச்சியான இயக்கம் மற்றும் மாற்றம் அல்லது உள்முரண்பாடுகளினால் தூண்டப் படுகின்ற தொடர்ச்சியான புத்தெழுச்சி மற்றும் வளர்ச்சி நிலையில் இருக்கின்றன என்று கருதுகிறது. லெனின் தன் னுடைய **இயக்கவியல் பிரச்சினையைப் பற்றி (தத்துவஞானக் குறிப்பேடுகளில்** ஒரு பகுதி) என்னும் கட்டுரையில் இயக்க வியலின் கரு முரண்பாடுகளின் தத்துவம், எதிர்நிலைகளின் ஒருமைத் தத்துவம் என்ற அடிப்படையான கருத்தை மார்க்சிய வரலாற்றில் முதல் தடவையாக வகுத்துக் கூறி நிறுவினார். ''சுருக்கமாகச் சொல்வதென்றால், இயக்க வியலை எதிர்நிலைகளின் ஒருமைத் தத்துவம் என்று வரையறுக்க முடியும்'' என்று அவர் எழுதினார். *

பொருள்முதல்வாத இயக்கவியல் வளர்ச்சியின் தோற்று வாய்களைப் பொருட்கள், நிகழ்வுகளிலேயே உள்ளுறையாக இருக்கின்ற **முரண்பாடுகளில்** காண்கிறது. அது வளர்ச்சி யைக் கீழ்நிலையிலிருந்து உயர்நிலைக்கு, எளிமையான வற்றிலிருந்து சிக்கலானவற்றுக்கு இயக்கம், பாய்ச்சலான, புரட்சிகர நிகழ்வுப் போக்கு என்று கருதுகிறது. இந்த இயக்கம் மூடிய வளையத்துக்குள் நடைபெறவில்லை, ஒரு சுழலேணியில் நடைபெறுகிறது; அதன் ஒவ்வொரு சுழலும் முந்தியதைக் காட்டிலும் ஆழமானதாக, வளமானதாக, பன்முகத்தன்மை உடையதாக இருக்கிறது.

பொருள்முதல்வாத இயக்கவியலுக்கு எதிரிடையான இயக்கமறுப்பியல் மாற்றத்தை, பொதுவாக வளர்ச்சியை நிராகரிக்கிறது, அல்லது இந்த வளர்ச்சியை வெறும் அளவு ரீதியில் குறைத்தல் அல்லது சேர்த்தல் என்பதாகச் சுருக்கி

---

* *Ibid*, p. 222.

விடுகிறது. இயக்கமறுப்பியல் நிகழ்ச்சிகளின் வளர்ச்சியின் உள் தோற்றுவாயை (முரண்பாடுகளைக்) காண்பதில்லை.

பொருளாயத உலகம் வளர்ச்சியடைந்து கொண்டிருப்பது மட்டுமின்றி, ஒரு ஒற்றை மொத்தமாகவும் இருக்கிறது. வெவ்வேறு பொருட்களுக்கு இடையில், ஒவ்வொரு தனிப் பொருளின் வெவ்வேறு அம்சங்கள் மற்றும் கூறுகளுக்கு இடையில் தொடர்பும் இடைச்செயலும் இல்லாமல் வளர்ச்சி என்பது சாத்தியமல்ல. ஒவ்வொரு பொருளும் உலகத்தில் இதரவற்றுடன் இணைக்கப்பட்டு, கடைசிப் பகுப்பாய்வில், எல்லாம் எல்லாவற்றுடன் சர்வப்பொதுவான தொடர்பும் இடைச்செயலும் கொண்டிருக்கின்ற ஒற்றை அங்கக நிகழ்வுப் போக்காக இருக்கிறது. ஏதாவதொரு நிகழ்வைச் சரியாகப் புரிந்து கொண்டு ஆராய வேண்டுமென்றால் அதை மற்ற நிகழ்வுகளுடன் தொடர்புடைய முறையில் பார்க்க வேண்டும், அதன் தோற்றுவாய்களும் வளர்ச்சியும் நெருங்கி ஆராயப்பட வேண்டும் என்பதற்கு இதுவே துல்லியமான காரணம் ஆகும். இயக்கவியல் சர்வப்பொதுவான தொடர்பின் விஞ்ஞானம் என்று கூறப்படுவதற்கும் இதுவே காரணம்.

உலகத்தை ஒற்றை அங்கக மொத்தமாக ஆராய்தல், தனிப் பொருட்களுக்கு இடையில் சர்வப்பொது இணைப்புகளை ஆராய்தல் ஆகியவற்றுக்குப் பொருள்முதல்வாத இயக்கவியலின் விதிகளும் வகையினங்களும் துணை புரிகின்றன.

விதி என்பது என்ன? அதன் தத்துவஞான விளக்கம் என்ன? விதி என்பது நிலையான தன்மை, திரும்பத் திரும்ப நிகழுதல் ஆகிய குணாம்சங்களைக் கொண்ட, நிகழ்வுகள் மற்றும் பொருட்களுக்கு இடையில் உள்ள புறநிலையான, பொதுப்படையான, அவசியமான, இன்றியமையாத தொடர்பு ஆகும்.

மக்கள், இயற்கை மற்றும் சமூகத்தின் விதிகளைப் பற்றிய

தம்முடைய அறிவை ஆதாரமாகக் கொண்டு உணர்வுபூர்வ மாக நடந்து கொள்கிறார்கள், சம்பவங்கள் நிகழவிருப்பதை முன்னரே அறிந்து கொள்கிறார்கள், இயற்கையின் பொருட் களையும் அவற்றின் இயல்புகளையும் சமூக நலன்களுக்காக மாற்றியமைக்கிறார்கள், குறி வழிப்பட்ட முறையில் சமூக நிலைமைகளை மாற்றுகிறார்கள். ''இடையிணைப்பைப் புரிந்து கொண்டதும் இருக்கின்ற நிலைமைகளின் நிரந் தரமான அவசியத்தைப் பற்றி எல்லாத் தத்துவ ரீதியான நம்பிக்கைகளும் — அவை நடைமுறையில் வீழ்ச்சியடைவதற்கு முன்பே — வீழ்ச்சி அடைந்து விடுகின்றன'' என்று மார்க்ஸ் எழுதினார். *

தனிப்பட்ட விதிகள் இயற்கை, சமூகம் அல்லது சிந்தனை யின் தனித்துறைகளில் நடைபெறுகின்ற நிகழ்வுகளை எடுத்துக் கொள்கின்றன, ஆனால் மார்க்சிய-லெனினியத் தத்துவஞானம் உலகத்தின் சர்வப்பொதுவான இடைத் தொடர்புகளை நிறுவுகின்ற பொது விதிகளை ஆராய் கிறது. இந்த விதிகள் எல்லாப் பொருட்கள், நிகழ்வு களுக்கும் கையாளப்படுகின்றன; இவை இயக்கவியலின் விதிகள் என்று அழைக்கப்படுகின்றன.

பொருள்முதல்வாத இயக்கவியலின் பிரதான விதிகள். எதிர் நிலைகளின் ஒற்றுமையும் போராட்டமும், அளவுநிலை மாற்றங்கள் பண்புநிலை மாற்றங்களாகப் பரிணமித்தல், நிலைமறுப்பின் நிலைமறுப்பு ஆகியவை இயக்கவியலின் பிரதான விதிகள் ஆகும்.

எதிர்நிலைகளின் ஒற்றுமையும் போராட்டமும். இயற்கை,

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்**, தொகுதி 6, பக்கம் 178.

சமூகம் மற்றும் அறிதலின் எல்லா நிகழ்வுகளிலும் அவற்றின் உள் எதிர்நிலைகள், முரண்படுகின்ற அம்சங்கள் மற்றும் போக்குகள் குணாம்சமாக இருக்கின்றன. உதாரணமாக, உயிரற்ற இயற்கையில் ஒரு பக்கத்தில் அணுவின் நேர்ச் சக்திக் கருவுக்கும் மறு பக்கத்தில் அதன் எலெக்ட்ரானுக்கும் இடையில் ஒற்றுமை மற்றும் எதிர்நிலையின் மூலம் இதை விளக்க முடியும்; உயிருள்ள இயற்கையில் இந்த எதிர்நிலை களை தன்மயமாக்கல் மற்றும் சிதைதலில் விளக்க முடியும்; சமூகத்தில் இவை வர்க்க முரணியல்புகள் எனப்படுகின்றன; சிந்தனையில் இவை பகுப்பாய்வு மற்றும் ஒருங்கிணைப்பு எனப்படுகின்றன. இந்த இயக்கவியல் முரண்பாட்டில் ஒரு எதிர்நிலையானது மறு எதிர்நிலை இல்லாமல் இருக்க முடியாது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் எதிர் நிலைகள் ஒரே நிகழ்வுக்குள் இருக்கின்றன; ஒருமையில் தம்மை வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக, தன் மயமாக்கல் மற்றும் சிதைதலில் ஒரு எதிர்நிலை தன னுடைய மறு எதிர்நிலையிலிருந்து பிரிந்து விடுவதாகக் கண நேரம் கற்பனை செய்து பாருங்கள். இது உயிருள்ள பொருளைத் தவிர்க்க முடியாதபடி அழித்து விடும், அதாவது அந்த நிகழ்வை அழித்து விடும். அவை பிரிக்கப்பட முடியா தவை; அவை அதே சமயத்தில் சமாதானமான, உடன்பாட்டு முறையில் இருக்க முடியாது; ஏனென்றால் அவை எதிர்நிலை கள். அதனால்தான் ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு நிகழ்வும் எதிர்நிலைகளின் போராட்டத்தையும் அவற்றின் ஒருமையையும் கொண்டிருக்கின்றன.

ஒரு நிகழ்வினுடைய வளர்ச்சிக்கு அடிகோலுகின்ற போராட்டம் இங்கே தலைமையான பாத்திரத்தை வகிக் கிறது. இந்தப் போராட்டம் பொருட்கள் மற்றும் நிகழ்வு களின் எல்லாக் கட்டங்களிலும் நடைபெறுகிறது. அது அத்தகைய ஒற்றுமையின் ஒவ்வொரு தோற்றத்திலும் அதன்

சுற்றுவட்டத்திற்குள்ளேயும் நடைபெறுகிறது. போராட்டம் ஒற்றுமையின் தோற்றத்தையும் அதன் வளர்ச்சியையும் இன்றியமையாததாக்குகிறது. இந்த ஒற்றுமை நொறுங்கித் தகர்ந்து புதிய ஒற்றுமைக்கு வழி வகுக்கின்ற பொழுது அது குறிப்பிடத்தக்க தீவிரமான வடிவங்களை அடைகிறது. எதிர்நிலைகளின் போராட்டம் பழைய ஒற்றுமை சீர் குலைவதற்கும் அதற்குப் பதிலாகப் புதிய நிலைமைகளுக்குப் பொருத்தமான புதிய ஒற்றுமை ஏற்படுவதற்கும் வழி வகுக்கிறது.

எதிர்நிலைகளின் ஒற்றுமை போராட்டத்தைப் போன்ற தல்ல, அது தற்காலிகமாக மட்டுமே இருக்கிறது. ஒற்றுமை போராட்டத்தின் விளைவாகத் தோன்றி அது பிணைக்கப் பட்டிருக்கின்ற முரண்பாடு முதிர்ச்சியடைந்து தீர்வு நிலையை அடைகின்ற வரை நீடித்த பிறகு, ஒரு புதிய ஒற்றுமைக்கு வழிவகுக்கிறது. குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு இந்த ஒற்றுமையின் எதிர்நிலைகளின் போராட்டத் தின் விளைவாக அது தகர்கிறது, அதன் பிறகு மற்றொரு ஒற்றுமை ஏற்படுகிறது, அதன் பிறகு நான்காவது ஒற்றுமை ஏற்படுகிறது, இப்படியே முடிவில்லாமல் நடைபெறுகிறது.

முரண்பாடுகள், எதிர்நிலைகளின் போராட்டம் எல்லா நிகழ்வுகள், நிகழ்வுப் போக்குகளின் இயக்கம் மற்றும் வளர்ச்சிக்கு உள் தோற்றுவாயாக இருக்கின்றன. உள் சக்திகளின் மூலம் பருப்பொருள் வளர்ச்சியடைகிறது; அது தனக்குள்ளே இந்த இயக்கத்தின் தோற்றுவாயைக் கொண் டிருக்கிறது.

இயக்கவியல் முரண்பாடுகளை எதிர்நிலைகள் ஒன்றை யொன்று முன்வைத்து, அதே சமயத்தில் ஒன்றையொன்று நிராகரிக்கின்ற பொழுது அவற்றின் இடையுறவு மற்றும் இடைத் தொடர்பு என்று தொகுத்துரைக்க முடியும். அவற்றுக்கு இடையிலான போராட்டமே வளர்ச்சியின்

இயக்குச் சக்தியாகவும் தோற்றுவாயாகவும் இருக்கிறது. எதிர்நிலைகளின் ஒற்றுமை மற்றும் போராட்டத்தின் விதி இயக்கவியலின் மிக முக்கியமான குணாம்சங்களில் ஒன்றை வெளியிடுகிறது: இயக்கமும் வளர்ச்சியும் சுய இயக்கம், சுய வளர்ச்சி என்ற முறையில் நடைபெறுகின்றன.

அளவுநிலை மாற்றங்கள் பண்புநிலை மாற்றங்களாகப் பரிணமித்தல் மற்றும் அதன் எதிரிடை. எந்தப் பொருளுக்கும் அதை மற்ற பொருட்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்ற பண்பு உண்டு. அதற்கு ஒரு அளவுநிலை, அதாவது பரிமாணம் மற்றும் எடை இருக்கிறது.

அளவுநிலையும் பண்புநிலையும் நெருக்கமாக இணைந்திருப்பவை; அவற்றைப் பிரிக்க முடியாது. அதே சமயத்தில் அவை ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. பண்புநிலை மாற்றம் பொருளை மாற்றுகிறது, அது மற்றொரு பொருளாக மாறுவதற்கு இட்டுச் செல்கிறது. அளவுநிலை மாற்றங்கள் பொருளை உடனடியாக மாற்றிவிடுவதில்லை. உதாரணமாக, உலோகத்தின் வெப்ப நிலையைப் பத்து டிகிரிகள் — நூறு டிகிரிகள் கூட — அதிகப்படுத்த முடியும்; எனினும் அது உடனே உருகி விடுவதில்லை. வெப்ப நிலை உச்ச கட்டத்தை, உருகு நிலையை அடைகின்ற வரை அது தன்னுடைய பௌதிக நிலையில் மாற்றமில்லாதிருக்கிறது; உருகு நிலையை அடைந்தவுடன் கடினமான பொருள் ஒரு திரவமாக மாறுகிறது. திரவம் கொதி நிலையை அடைகின்ற பொழுது வாயுவாக மாறுகிறது. இவ்விதத்தில் அளவு ரீதியான மாற்றங்கள் பண்பு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

அளவு ரீதியான மாற்றங்கள் இடையீடில்லாமலும் படிப்படியாகவும் நடைபெறுகின்றன. பண்பு ரீதியான மாற்றங்கள் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் பாய்ச்சலைப் போல நடைபெறுகின்றன. இயற்கையிலும் சமூகத்திலும் வளர்ச்சி

மெதுவான பரிணாமம், வேகமான பாய்ச்சல்கள் என்னும் இரண்டு வடிவங்களில் நடைபெறுகின்றது.

அளவுநிலை மாற்றம் பண்புநிலை மாற்றமாகப் பரிணமிக் கின்ற நிகழ்வுப் போக்கு, ஒரு பொருள் அல்லது நிகழ்வு ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறுதல் பாய்ச்சல் எனப்படும். பண்புநிலை மொத்தமாக, உடனடியாக மாறு கின்ற பொழுது (உதாரணமாக, இரசாயனக் கிரியைகள் அல்லது அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுதல்) பாய்ச்சல் மிகவும் திடீரென்று நடைபெறக் கூடும். ஒரு பண்புநிலை மற்றொரு பண்புநிலையாகப் படிப்படியாக மாறுகின்ற பொழுது அது மெதுவாக நடைபெறக் கூடும் (உதாரண மாக, தாவரங்கள் பிராணிகளின் புதிய ரகங்கள் தோன்று தல்). இந்த உதாரணத்தில் பழைய பண்புநிலை புதிய பண்புநிலையாக உடனடியாக, முற்றாக அல்லாமல் பகுதி பகுதியாக மாறுகிறது; பழைய பண்புநிலையின் சில கூறுகள் அழிகின்றன; அவற்றுக்குப் பதிலாகப் புதிய பண்புநிலையின் கூறுகள் ஏற்படுகின்றன.

இந்த ரகத்தைச் சேர்ந்த பாய்ச்சலைப் பழைய பண்பு நிலையின் சுற்றுவட்டத்துக்குள் படிப்படியாக நடைபெறு கின்ற கூறுகளின் அளவு ரீதியான அதிகரிப்புடன் சேர்த்துக் கருதக் கூடாது.

அளவு ரீதியான மாற்றங்கள் பண்பு ரீதியான மாற்றங் களாகப் பரிணமித்தல் மற்றும் அதன் எதிரிடையின் விதி என்பது ஒரு பொருளின் அளவு ரீதியான மற்றும் பண்பு ரீதியான அம்சங்களின் இடைத் தொடர்பும் இடைச் செயலும் ஆகும்; அங்கே சிறிய, ஆரம்பத்தில் புலனறியப்பட முடியாத, அளவு ரீதியான மாற்றங்கள் படிப்படியாகச் சேர்ந்து அடிப்படையான பண்புநிலை மாற்றங்களை ஏற் படுத்துகின்றன; அவை பாய்ச்சலில் நடைபெற்று பொருளின் இயல்பு மற்றும் அதன் வளர்ச்சியின் நிலைமை வற்புறுத்து

கின்ற வடிவத்தை அடைகின்றன.

அளவு ரீதியான மாற்றங்கள் பண்பு ரீதியான மாற்றங்களாகப் பரிணமித்தலைப் பற்றிய புறநிலையான விதி பொருளாயத உலகத்தைப் புத்துிளமையாக்குவதைக் குறிக்கிறது; அங்கே ஒவ்வொரு பாய்ச்சலும் பழமையை ஒழித்துப் புதுமையைத் தோற்றுவிக்கிறது.

நிலைமறுப்பின் நிலைமறுப்பு. முந்திய நிலையை நிலைமறுப்புச் செய்கின்ற பொழுது மட்டுமே பண்புநிலை மாற்றம் சாத்தியம். நிலைமறுப்பு எந்த வளர்ச்சியிலும் தவிர்க்க முடியாத, முறைப்படியான கட்டமாகும். இருத்தலின் பழைய வடிவங்களை நிலைமறுப்புச் செய்யாமல் எத்தகைய வளர்ச்சியும் சாத்தியமல்ல; ஏனென்றால் அப்படி நடைபெறும் பொழுது புதிதாக எதுவும் தோன்றாது என்பது இதற்குக் காரணமாகும். நிலைமறுப்பு என்றால் என்ன?

இயக்கவியல் பொருள்முதல்வாதத் தத்துவத்தின்படி நிலைமறுப்பு என்பது பழையனவற்றை முற்றிலும் ஒழித்தல் என்று அர்த்தமல்ல. முதலாவதாக, எளிமையான நிகழ்வுகள் அதிகச் சிக்கலான நிகழ்வுகளுடன் சேர்ந்தே இருக்கின்றன. உதாரணமாக, உயிருள்ள இயற்கையில் பல பழங் காலத்து உயிரிகள் மிகவும் அமைப்பு ரீதியான பிற்காலத்துப் பிராணிகளுடன் சேர்ந்து வாழ்கின்றன. இரண்டாவதாக, ஏறுமுக வளர்ச்சி நிகழ்வுப் போக்கின் போது புதியவை பழையனவற்றிலிருந்து தோன்றுகின்ற பொழுது அவற்றிலிருக்கின்ற ஆக்கபூர்வமான மதிப்புடையவை அனைத்தையும் தன்வயப்படுத்திக் கொள்கின்றன. உதாரணமாக, உயிருள்ள இயற்கையில் ஒவ்வொரு புதிய உயிரினமும் பரிணாம வளர்ச்சியின் போது முந்திய தலைமுறைகள் திரட்டிய ஆக்கபூர்வமான, மதிப்புடைய குணாம்சங்களைப் புனருற்பத்தி செய்து கொள்கிறது. மனித

சமூக வரலாற்றிலும் கூட ஒவ்வொரு புதிய சமூக அமைப்பும் முந்திய சகாப்தங்களில் தோற்றுவிக்கப்பட்ட பொருளாயத, கலாசார மதிப்புகளை சுவீகரித்துக் கொள்கிறது.

நிலைமறுப்பு இணைப்பை, வளர்ச்சியின் தொடர்ச்சியை முன்னிலைப்படுத்துகிறது. நிலைமறுப்பின் விளைவாகத் தோன்றுகின்ற புதிய நிகழ்வு முந்திய கட்டத்தின் சாதனைகளைத் தன்வயப்படுத்திக் கொள்கிறது, அதே சமயத்தில் ஏதோ புதிய ஒன்றாக, சாரத்தில் வளமான ஏதோ ஒன்றாக வெளிவருகிறது. நிலைமறுப்பின் நிலைமறுப்பு விதி வளர்ச்சியின் ஏறுமுகத் தன்மையை, கீழ்நிலையானவற்றிலிருந்து உயர்நிலையானவற்றுக்கு, எளிமையானவற்றிலிருந்து சிக்கலானவற்றை நோக்கி முன்னேறிச் செல்வதை விளக்குகிறது.

இயக்கவியலின் கருத்தினங்கள். வேறு எந்த விஞ்ஞானத்தையும் போல பொருள்முதல்வாத இயக்கவியல் விதிகளின் அமைப்பு மட்டுமல்ல, அது தத்துவஞானக் கருத்தினங்களின், அதாவது நம்மைச் சுற்றியுள்ள உலகத்தின் பொதுவான கூறுகளையும் தொடர்புகளையும், அம்சங்களையும் இயல்புகளையும் தொகுத்துக் கூறுகின்ற கருத்தமைப்புகளின் அமைப்பாகவும் இருக்கிறது.

இனி இயக்கவியலின் கருத்தினங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

தனியானதும் சிறப்பானதும் பொதுவானதும். ஒவ்வொரு பொருளும் நிகழ்வும் அவற்றுக்கு உரிய தனி வகையான, உள்ளுறையான கூறுகளைக் கொண்டிருக்கின்றன. எல்லா அம்சங்களிலும் முற்றான ஒருமையைக் கொண்டிருக்கின்ற இரண்டு பொருட்கள் இல்லை. ஒரு குறிப்பிட்ட நிகழ்வில் இருக்கின்ற, மற்ற நிகழ்வுகளில் இல்லாத அனைத்தும்

தனியானவை எனப்படும். அதே சமயத்தில் மற்ற பொருட்கள், நிகழ்வுகளுடன் பொதுப்படையான எக்கூறுகளையும் கொண்டிராத பொருட்கள், நிகழ்வுகள் கிடையாது. ஒரு நிகழ்வில் மட்டுமின்றி பல நிகழ்வுகளில் இருக்கின்ற, திரும்பத் திரும்பத் தோன்றுகின்ற கூறுகள் பொதுவானவை எனப் படும். ஒரு பொருளை மற்ற பொருட்களுடன் ஒப்பிடுவதன் மூலம் அவற்றின் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் நாம் இனங்காணுகிறோம். ஒப்பிடத்தக்க பொருட்களை வேறுபடுத்திக் காட்டுபவை அவற்றிலுள்ள சிறப்பம்சம் எனப்படும். இயற்கையில் அடிக்கடி காணப்படுகின்ற இரும்பை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். உயிரற்ற இயற்கையின் கூறு என்ற முறையில் அதைப் பொதுவான நிகழ்வு எனக் கருதலாம்; உலோகம் என்ற முறையில் அது சிறப்பானது; இரும்பு என்ற வகையில் அது தனியானது. மனித சமூகத்தில் சமூகப் புரட்சி ஒரு பொது நிகழ்வு; தேசிய விடுதலைப் புரட்சியைப் புரட்சியின் சிறப்பான ரகம் எனக் கருதலாம்; ஆனால் ஒரு குறிப்பிட்ட நாட்டில் நடைபெற்றிருக்கின்ற அதே புரட்சியைத் தனியான நிகழ்வு என்று கூறலாம்.

தனியானவை, பொதுவானவை, சிறப்பானவை ஆகியவை ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாதவை. தனியானது பொது அம்சத்தைக் கொண்டிருக்கிறது, பொதுவானது சிறப்பானதில், சிறப்பானதன் மூலமாக மட்டுமே இருக்கிறது.

காரணமும் விளைவும். ஒரு நிகழ்வை ஏற்படுத்துகின்ற மற்றொரு நிகழ்வு முந்திய நிகழ்வுக்குக் காரணம் எனப் படும். அந்தக் காரணத்தின் முடிவுதான் விளைவாகும். காரணகாரியத் தன்மை என்பது நிகழ்வுகளுக்கு இடையிலுள்ள உள்தொடர்பாகும்; அதில் ஒன்று நடைபெற்றவுடன் அடுத்தது உடனடியாகத் தொடர்கிறது. உதாரணமாக,

நீரைச் சூடாக்குதல் அது நீராவியாக மாறுவதற்குக் காரணம்; ஏனென்றால் நீரின் வெப்பநிலை அதிகரிக்கின்ற பொழுது அது மேன்மேலும் ஆவியாகிறது.

காரணகாரியத் தன்மை பொதுவான தன்மையைக் கொண்டிருக்கிறது. காரணம் இல்லாத நிகழ்வு அல்லது சம்பவம் கிடையாது, அது ஏற்பட முடியாது. நாம் பல நிகழ்வுகளைச் சந்திக்கிறோம், அவை ஏற்படுகின்ற காரணம் இன்னும் நமக்குத் தெரியவில்லை என்பது உண்மையே. எனினும் அறிதல் செயல்முறையின் முன்னேற்றம் இக் காரணங்களை இனங்காணுவதற்கு நமக்கு உதவி செய்யும். பொருளாயத உலகம் மற்றும் பொதுப்படையாகப் பருப் பொருளின் எந்த வளர்ச்சியும் காரணங்களையும் விளைவு களையும் கொண்ட சிக்கலான முடிச்சாகும்.

இன்றியமையாமையும் தற்செயலும். ஒரு நிகழ்வின் உறுப்பு களின் உள்ளார்ந்த தன்மையினால் ஏற்படுகின்ற இயல்பு களும் தொடர்புகளும் இன்றியமையாதவை என்று கூறப்படு கின்றன. வெளிப்புற சந்தார்ப்பங்களின் தாக்கத்தினால் ஏற்படுகின்ற இயல்புகளும் தொடர்புகளும் தற்செயலானவை எனப்படும். உதாரணமாக, ஒரு முதலாளி இன்றியமையா மையின் காரணமாக ஒரு தொழிலாளியை வேலைக்கு அமர்த்துகிறார்; ஏனென்றால் தொழிலாளி இல்லாமல் முதலாளியினால் தொழிலை நடத்த முடியாது. ஆனால் அவர் இவான், பியோத்தர் அல்லது வேறு எந்தத் தொழி லாளியை வேலைக்கு அமர்த்துகிறார் என்பது தற்செய லானதாகும். குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் நிச்சயமாக நடைபெறுவது இன்றியமையாதது எனப்படும். குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் நடைபெறக் கூடியது அல்லது நடை பெறாமற் போவது தற்செயலானது எனப்படும். தற்செய லானவற்றில் சம்பவங்கள் கற்பனை செய்யப்படக் கூடிய எந்த முறையிலும் நடைபெறலாம். தற்செயலானது

இன்றியமையாமையின் வெளிப்பாடாக, அதற்குத் துணை செய்வதாக இருக்கிறது.

சாத்தியமும் எதார்த்தமும். தகுந்த நிலைமைகளில் நடை பெறக் கூடியது சாத்தியம் எனப்படும். ஏற்கெனவே நடை பெற்றிருப்பது எதார்த்தம் எனப்படும். வேறு வார்த்தை களில் சொல்வதென்றால் எதார்த்தத்தில் இல்லாத ஆனால் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறக் கூடிய எதார்த்தத்தின் உள்ளுறையான ஆற்றலின் காரணமாக எதிர்காலத்தில் தோன்றக் கூடிய இயல்புகள், நிகழ்வுப் போக்குகள், பொருட்கள் ஆகியவற்றை நாம் சாத்தியம் எனக் கருதுகிறோம். சாத்தியம் நிறைவேறுகின்ற பொழுது எதார்த்தமாக மாறுகிறது. ஆகவே எதார்த்தத்தை நிறை வேற்றப்பட்ட சாத்தியம் என்றும் சாத்தியத்தை எதிர்கால எதார்த்தம் என்றும் வரையறுக்கலாம்.

சாத்தியங்கள் எதார்த்தமானவையாகவும் சூக்குமமான வையாகவும் இருக்கக் கூடும். எதார்த்தமான சாத்தியங்கள் விதிவழிப்பட்ட வளர்ச்சிப் போக்கை வெளியிடுகின்றன. இந்த சாத்தியங்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான நிலைமைகள் மெய்யாகவே இருக்கின்றன (உதாரணமாக, சில வளர்முக நாடுகள் புதிய காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பெற முடியும் என்பதைப் போல). சூக்குமமான சாத்தியங்கள் இன்றைய வளர்ச்சிக் கட்டத்தில் எதார்த் தமாக மாறுவதற்கு உரிய நிலைமைகள் இல்லை; ஆனால் இந்த நிலைமைகள் எதிர்காலத்தில் தோன்றக் கூடும் (மனிதன் சூரிய மண்டலத்தில் உள்ள இதர கிரகங்களை ஆராய்வதைப் போல).

உள்ளடக்கமும் வடிவமும். எதார்த்தத்தில் எந்தப் பொரு ளும் உள்ளடக்கம் மற்றும் வடிவத்தின் ஒற்றுமையாக இருக்கிறது. பொருள்முதல்வாத இயக்கவியலின் கருத்தினம் என்ற முறையில் உள்ளடக்கம் என்பது ஒரு குறிப்பிட்ட

நிகழ்வினுள்ள எல்லாக் கூறுகள், அவற்றின் இடைச்செயல் மற்றும் அவற்றின் மாற்றங்களின் கூட்டு மொத்தம் ஆகும். இந்த நிகழ்வில் உள்ளுறையாகவுள்ள இடைச்செயல்களும் மாற்றங்களும் முறைப்படியாக நடைபெறுகின்றன, சார்பு நிலையில் நிலையான உறவுகளின் அமைப்பையும் நிர்ணயிக்கப்பட்ட கட்டமைப்பையும் கொண்டிருக்கின்றன. உள்ளடக்கத்தின் பல்வித அம்சங்களுக்கும் இடையிலான, சார்பு நிலையில் நிலையான உறவுகளின் அமைப்பு, அதன் கட்டமைப்பு ஒரு குறிப்பிட்ட நிகழ்வின் வடிவமாக அமைகின்றன. வடிவமும் உள்ளடக்கமும் பிரிக்கப்பட முடியாதவை; அவை ஒற்றுமையில் மட்டுமே இருக்கக் கூடிய இரண்டு எதிர்நிலைகள். உள்ளடக்கம் வடிவத்தை நிர்ணயிக்கிறது. அது வடிவத்தைக் காட்டிலும் வேகமாக மாறுகிறது, சீக்கிரத்தில் இரண்டும் மோதுகின்றன. புதிய உள்ளடக்கம் பழைய வடிவத்தை உதறி விட்டுப் புதிய வடிவத்தை அமைத்துக் கொள்கிறது. வடிவம் உள்ளடக்கத்தின் மீது தாக்கம் செலுத்துகிறது: புதிய வடிவம் வளர்ச்சியை விரைவுபடுத்துகிறது, பழைய வடிவம் அதைப் பின்னால் இழுக்கிறது.

சாராம்சமும் நிகழ்வும். பொருட்கள், நிகழ்வுகளின் வெவ்வேறு அம்சங்களைக் குறிக்கின்ற இரண்டு கருத்தமைப்புகள் ஆகும். சாராம்சம் என்பது ஏதாவதொரு பொருளின் இன்றியமையாத அம்சங்கள் மற்றும் தொடர்புகளின் மொத்தமாகும்; ஒரு நிகழ்வு என்பது இந்த அம்சங்கள் மற்றும் தொடர்புகள் மேற்பரப்பில் வெளிப்படுதல் ஆகும்; அது சாராம்சத்தின் பொருளை வெளிக்கொண்டு வருகிறது. சாராம்சம் நிகழ்வுடன் அங்கக ரீதியில் இணைக்கப்பட்டிருக்கிறது, தனது உள்ளடக்கத்தை நிகழ்விலும் அதன் மூலமாகவும் மட்டுமே வெளிப்படுத்துகிறது. நிகழ்வு சாராம்சத்திலிருந்து பிரிக்கப்பட முடியாதது, அது இல்லாமல்

இருக்க முடியாது. லெனின் சாராம்சத்துக்கும் நிகழ்வுக்கும் இடையிலான இடையுறவை ஒரு ஆழமான, வேகமான நீரோட்டத்துக்கு ஒப்பிட்டார்; அதன் ஆழத்தையும் வேகத்தையும் கண்களுக்குத் தெரிகின்ற அலைகளையும் நுரையையும் கொண்டுதான் மதிப்பிட முடியும். ''...மேலே நுரை, கீழே ஆழமான நீரோட்டங்கள். ஆனால் அந்த நுரை கூட சாராம்சத்தின் வெளியீடே.'' *

இயக்கவியல் பொருள்முதல்வாதத்தின் அறிதல் தத்துவம்

உலகம் அறியப்படக் கூடியதா? மார்க்சிய-லெனினியத் தத்துவம் இக்கேள்விக்கு ''ஆம், உலகம் அறியப்படக் கூடியதே'' என்ற தெளிவான, விஞ்ஞான ரீதியாக நிறுவப்பட்ட பதிலைத் தருகிறது. உலகத்தை அறிய முடியும் என்னும் இந்த நம்பிக்கை நடைமுறையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

அறிதல் என்பது மனிதனுடைய உணர்வில் எதார்த்தத்தின் பிரதிபலிப்பு ஆகும்; நம்மைச் சுற்றியுள்ள உலகமே நம்முடைய அறிதலின் ஒரே தோற்றுவாய் ஆகும். இந்த உலகம் மனிதன் மீது தாக்கம் செலுத்துகிறது; அவனிடம் சில உணர்ச்சிகளை, எண்ணங்களை, கருத்தமைப்புகளைத் தோற்றுவிக்கிறது; அவன் பின்னர் அவற்றைத் தன்னுடைய நடைமுறை நடவடிக்கையில் சோதித்துப் பார்க்கிறான்.

இயற்கை, சமூகம் ஆகிய இரண்டையும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட மனிதனுடைய நடவடிக்கையே நடைமுறை ஆகும். அது மனிதனுடைய செயலையும் பொருளாயத உற்பத்தியையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது; அரசியல் போராட்டம், வர்க்கப் போராட்டம்,

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 38, p. 130.

தேசிய விடுதலை இயக்கம், அறிவியல் பரிசோதனை ஆகிய வற்றை அது உள்ளடக்கியிருக்கிறது. சுற்றியுள்ள உலகத்தை அறிய முயலுவதன் ஆரம்பம் மற்றும் முடிவுக் கட்டமாக நடைமுறை இருக்கிறது.

இரண்டு பொருட்கள் – அவற்றில் ஒன்று அடுத்த பொரு ளைப் போல நூறு மடங்கு அதிக எடையுள்ளது – ஒரே உயரத்திலிருந்து கீழே போடப்படுகின்ற பொழுது அதிக எடையுள்ள பொருள் குறைவான எடையுள்ள பொருளைக் காட்டிலும் நூறு மடங்கு வேகத்துடன் பூமியில் விழும் என்று மத்திய காலத்தில் சமயவாதிகள் உறுதியாக கூறினார் கள். கலிலியோ (1564–1642) இக்கருத்து தவறானது என் பதை நிரூபித்தார். அவர் ஒரு உயரமான ஸ்தூபியிலிருந்து வெவ்வேறு எடையுள்ள இரண்டு உருண்டைகளை கீழே போட்டார். அவை இரண்டும் ஒரே சமயத்தில் பூமியின் மீது விழுந்தன. சமயவாதிகளின் கருத்து தவறானது, கீழே விழுகின்ற பொருட்களின் எடை எப்படியிருந்தாலும் அவை ஒரே வேகத்தைக் கொண்டிருக்கின்றன என்பவற்றை அவர் நடைமுறையில் நிரூபித்தார்.

நடைமுறை அறிதலின் ஆரம்ப நிலையாக, அடிப்படை யாக இருக்கிறது. ஏனென்றால் அறிதல் நடைமுறை நடவடிக் கையிலிருந்து தோன்றுகிறது. உதாரணமாக, மனிதன் தன் னுடைய பிறந்த கால முதலாகவே உழைத்தான்; தன் னுடைய கடுமையான உழைப்பின் போது இயற்கைச் சக்திகளைப் பற்றி அறிந்து கொண்டான், அவைப் பற்றிய அறிவைச் சேகரித்தான்.

அறிதலின் நோக்கமும் நடைமுறையே; ஏனென்றால் மனிதன் உலகத்தைப் பற்றி அறிந்துக் கொள்வதும் அதன் வளர்ச்சியின் விதிகளைக் கண்டுபிடிப்பதும் தன்னுடைய நடைமுறை நடவடிக்கையில் அந்த அறிதலின் விளைவு களைப் பயன்படுத்திக் கொள்வதற்கே.

அறிதல் நிகழ்வுப் போக்கு. மனிதன் பிறக்கின்ற பொழுது அவனுடைய தலையில் அறிவு இருப்பதில்லை. அவனுடைய வாழ்க்கையில் அறிதலின் விளைவாக அது சிறிது சிறிதாகச் சேகரிக்கப்படுகிறது. மேலும் அறிதல் என்பது மனிதனுடைய மூளையில் உலகத்தைப் பற்றிய தானியக்கப் பிரதிபலிப்பு மட்டுமல்ல. அது ஒரு சிக்கலான நிகழ்வுப் போக்கு; அதில் அவனுடைய சிந்தனைகள் அறியாமையிலிருந்து அறிவை நோக்கி, அரைகுறையான, துல்லியமற்ற அறிவிலிருந்து அதிக முழுமையான, அதிகத் துல்லியமான அறிவை நோக்கி முன்னேறுகின்றன. உலகம் முடிவில்லாததாக இருப்பதால் அறிதலும் கூட முடிவில்லாததே.

அறிதலின் கட்டங்கள் எவை?

முதல் கட்டம் புலனுணர்ச்சி அறிதல். மக்கள் தங்களுடைய கண்கள், காதுகள், தொட்டறியக் கூடிய உறுப்புகளின் மூலமாக உலகத்தைப் பற்றித் தெரிந்து கொள்கிறார்கள். நாம் பொருளாயத உலகத்தைப் பற்றிய தகவலை அவற்றின் மூலமாகப் பெறுகின்றோம்.

அறிதலின் இரண்டாவது கட்டம் தர்க்க ரீதியான அல்லது சூக்குமமான சிந்தனை எனப்படும். எந்த ஒரு நிகழ்வின் சாரத்தையும் அறிவதற்கு நம்முடைய புலனுறுப்புகளின் உதவியினால் பெற்ற தகவலை நாம் புரிந்து கொள்ள வேண்டும்; தகவலை முறைப்படுத்த வேண்டும்; தற் செயலான, அற்பமான விவரங்களை ஒதுக்கி விட்டு முக்கியமானவற்றை வெளியே கொண்டு வர வேண்டும்.

ஆனால் நம்முடைய புலனுறுப்புகள் சரியான தகவல்களை அளிக்கின்றன என்று நாம் உறுதியாகக் கருதுவது எப்படி? அந்தத் தகவல் அனுப்பப்படுகின்ற, புரிந்து கொள்ளப்படுகின்ற செயல்முறையின் போது சிதைக்கப்படுதல் சாத்தியமா? அறிதல் செயல்முறையின் மூலம் பெறப்படுகின்ற அறிவு நடைமுறையில் நிரூபிக்கப்பட்ட பிறகுதான்

முடிவான உண்மை என்று கருதப்படுகிறது. ஒரு நபர் தனக்குக் கிடைத்திருக்கின்ற அறிவுக்குப் பொருத்தமான விளைவை நடைமுறை நடவடிக்கையில் பெறுவாரானால் இந்த அறிவு முடிவான உண்மைக்கு, எதார்த்தத்துடன் பொருந்துகிறது என்பது அர்த்தமாகும்.

இனி அடுத்த கேள்வி எழுகிறது: உண்மை என்பது என்ன?

உண்மை பற்றிய கோட்பாடு. உண்மை என்பது ஒரு பொருள் மற்றும் நிகழ்வைப் பற்றிய அறிவு; அது எதார்த்தத்துடன் பொருந்தியிருக்கிறது, உண்மையான நிலையைப் பிரதிபலிக்கிறது. உண்மையான அறிவு எதார்த்தத்துடன் பொருந்தியிருப்பதால் அது ''தனி மனிதரையோ, மனித சமூகத்தையோ பொறுத்திருக்கவில்லை'' *. உண்மையான அறிவு நம்மிலிருந்து புறநிலையாக, சுயேச்சையாக இருக்கின்ற வெளியுலகத்தினால் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த அறிவு புறநிலையான உண்மை எனப்படும்.

புறநிலையான உண்மை மாறாதிருக்க முடியாது; ஏனென்றால் அதனால் பிரதிபலிக்கப்படுகின்ற எதார்த்தம் தொடர்ச்சியான இயக்கத்தில் இருக்கிறது, எப்பொழுதும் மாறிக் கொண்டும் வளர்ச்சியடைந்து கொண்டும் இருக்கிறது. ஆனால் நம்முடைய அறிவில் பிரதிபலிக்கப்படுகின்ற பொருள் மாறுகிறது என்றால், அது ஒரு பண்பு ரீதியான நிலையிலிருந்து மற்றொரு நிலையை அடைகிறது என்றால், அது தன்னுடைய இயல்புகள், தொடர்புகள் சிலவற்றை இழந்து வேறு சிலவற்றை உருவாக்கிக் கொள்கிறது என்றால் இப்பொருளைப் பற்றிய நம்முடைய அறிவும் மாறாமல் இருக்க முடியாது. முடிவான உண்மையாக இருப்பதற்குக்

* V. I. Lenin, *Collected Works*, vol. 14, p. 122.

குறிப்பிட்ட பொருளைப் பற்றி நம்முடைய அறிவும் மாற வேண்டும், கூடுதலாகச் சேர்க்கப்பட்டு மாறுகின்ற எதார்த் தத்துடன் பொருந்தும்படிச் செய்யப்பட வேண்டும். அதனால்தான் புறநிலையான உண்மை சார்புநிலையாக இருக்கிறது. அது சமூக அறிவின் வளர்ச்சியுடன் சேர்ந்து, மாறுகின்ற எதார்த்தம் மற்றும் தன்னுடைய இருத்தலின் நிலைமைகளுடன் சேர்ந்து தவிர்க்க முடியாதபடி மாறு கிறது. எதார்த்தத்துடன் அரைகுறையாகப் பொருந்துகின்ற நம்முடைய அறிவு, அதாவது அறிதல் செயல்முறையின் போது இன்னும் அதிகத் துல்லியமாக வரையறுக்கப்பட வேண்டிய அறிவு சார்புநிலை உண்மை எனப்படும்.

ஆனால் நம்முடைய அறிவின் சார்புநிலையான தன்மை தனிமுதலான உண்மை என்பதை இல்லாமற் செய்து விடவில்லை. ஏனென்றால் சார்புநிலையானதில் தனிமுத லான அம்சம் இருக்கிறது. புறநிலையான உண்மை சார்பு நிலையாகவும் இருக்கிறது, தனிமுதலாகவும் இருக்கிறது. அது எதார்த்தத்தின் சில அம்சங்களையும் அதற்குள்ளே இருக்கின்ற சில உறவுகளையும் சரியாகப் பிரதிபலிக்கின்ற படியால் தனிமுதலானது. அதே சமயத்தில் அது எதார்த் தத்தைப் பூரணமாகவும் முழுமையாகவும் ஒருபோதும் பிரதி பலிப்பதில்லை, குறிப்பிட்ட பொருளின் மொத்த உள் ளடக்கத்தை (அது முடிவில்லாதது) தழுவவில்லை — தழுவ முடியாது என்பது மெய்யே — என்பதால் சார்புநிலை யானது.

நம்முடைய அறிவு எப்பொழுதுமே சார்புநிலையானது என்று கூறுகின்ற பொழுது அது புறநிலையானது அல்ல, ஆகவே அது தனிமுதலானது அல்ல என்று புரிந்து கொள்ளக் கூடாது. ''மனித சிந்தனை தன் இயல்பு காரணமாகச் சார்புநிலையான உண்மைகளின் கூட்டு மொத்தமாகிய தனிமுதலான உண்மையைக் கொடுக்க முடியும், அது

அப்படிக் கொடுக்கிறது. அறிவியல் வளர்ச்சியின் ஒவ்வொரு காலடியும் தனிமுதலான உண்மை என்னும் மொத்தத்தில் புதிய கூறுகளைச் சேர்க்கிறது; ஒவ்வொரு அறிவியல் கருதுகோளின் மெய்ம்மையின் வரையறைகளும் சார்பு நிலையானவை, அவை அறிவின் வளர்ச்சியுடன் ஒரு சமயத்தில் விரிவடைகின்றன, மறு சமயத்தில் குறுகி விடுகின்றன.'' *

2. வரலாற்றுப் பொருள்முதல்வாதம்

பொருளாயதச் செல்வத்தின் உற்பத்தி முறை — சமூக வளர்ச்சியில் பிரதான காரணி

வரலாற்றைப் பற்றிய பொருள்முதல்வாதக் கருதுகோள். மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தின் உட்பிரிவுகளில் ஒன்றாகிய வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்பது சமூகத்தின் தோற்றுவாய்களையும் வளர்ச்சியையும் ஆராய்கின்ற விஞ்ஞானமாகும். சமூகம் என்றால் என்ன, அது எப்படித் தோன்றியது, அது எப்படி முன்னேறுகிறது, அந்த வளர்ச்சியை நிர்ணயிக்கின்ற விதிகள் எவை என்ற கேள்விகளை மக்கள் பல நூற்றாண்டுகளாகவே எழுப்பினார்கள். சமூகத்தைப் பற்றிய ஸ்தூலமான விஞ்ஞானங்களாகிய வரலாறு, அரசியல் பொருளாதாரம், சட்டவியல், இதரவற்றிலிருந்து வரலாற்றுப் பொருள்முதல்வாதம் வேறுபடுகிறது. அது சமூக வளர்ச்சியின் மிகவும் பொதுவான விதிகளை ஆராய்கிறது.

---

* *Ibid.*, p. 135.

கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் அல்லது வரலாற்றைப் பற்றிய பொருள்முதல்வாதக் கருதுகோளை உருவாக்கி சமூகத்தைப் பற்றி அன்றைக்கிருந்த கருத்துகளில் புரட்சியை நிறை வேற்றினார்கள். லெனின் அவர்களுடைய பணியைத் தொ டர்ந்தார்.

அதுவரை வரலாறு பகுத்தறிவுக்குப் புறம்பான முறையில் கருத்துமுதல்வாத அடிப்படையில் அறியப்பட்டது. இப்புதிய விஞ்ஞானம் அதை மாற்றி விஞ்ஞான, பொருள்முதல்வாத அறிவைக் கொடுத்தது. மக்கள் தம்முடைய உணர்வு மற்றும் சித்தத்தின் மூலமாக வரலாற்றைப் படைக்கிறார்கள் என்று மார்க்சுக்கு முந்திய சிந்தனையாளர்கள் கூறினார்கள். ஆகவே சமூக வளர்ச்சியில் எல்லா மாற்றங்களும் கருத்து களை, தத்துவங்களைப் பொறுத்திருக்கின்றன என்று அவர் கள் முடிவு செய்தார்கள். சமூக முன்னேற்றமும் மக்களினங் களின் வாழ்க்கையும் ஒரு வகையான இயற்கைக்கு மேம் பட்ட தெய்விக சக்திகளினால் இயக்கப்படுகின்றன என்று சில தத்துவஞானிகள் நம்பினார்கள். இந்தச் சக்திகள் மக்களுடைய விதிகளையும் அவர்களுடைய நடவடிக்கை களையும் முடிவு செய்கின்றன என்று அவர்கள் கருதினார் கள். இக்கருத்துகள் அனைத்தையும் கருத்துமுதல்வாதம் என்றுதான் வகைப்படுத்த முடியும்.

சமூக வளர்ச்சியை ஒருங்கிணைந்த, விதி வழிப்பட்ட நிகழ்வுப் போக்காக விளக்குவதற்குரிய திறவுகோலை மார்க் சியமே தருகிறது. சமூகம் குறிப்பிட்ட விதிகளின் அடிப் படையில் வளர்ச்சியடைகிறது; அவை மக்களது விருப்பங் கள், ஆர்வங்களிலிருந்து சுயேச்சையானவை, அவை இருத் தலையும் இல்லாதிருத்தலையும் பற்றி மனிதனுடைய அறிவி லிருந்து சுயேச்சையானவை. ஆனால் மனிதன் இந்த விதி களை அறிந்தவுடன் அவற்றைத் தன்னுடைய சொந்த

நலன்களுக்குச் சிறப்பான முறையில் பயன்படுத்துகிறான். மக்கள் பகுத்தறியும் திறனுடையவர்கள். அவர்கள் குறிப்பிட்ட இலட்சியங்களை நிறுவி அவற்றைச் சாதிப்பதற்குரிய மனோவலிமையும் விருப்பமும் உடையவர்கள். அதனால் தான் அவர்களுடைய நடவடிக்கைகள் சமூகத்தின் ஏறுமுக வளர்ச்சியின் மீது தாக்கம் செலுத்துகின்றன.

மக்கள் அரசியல், விஞ்ஞானம், கலைகளை அறிவதற்கு முன்னால் உணவைச் சேகரிப்பது எப்படி, இருப்பிடம் அமைப்பது எப்படி, உடைகளைத் தயாரிப்பது எப்படி என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை மார்க்சும் எங்கெல்சும் எடுத்துக் காட்டினார்கள். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், மக்களுடைய வாழ்க்கையின் பொருளாயத நிலைமைகள் அல்லது அவர்களுடைய சமூக இருத்தல் அவர்களுடைய ஆன்மிக, கலாசார, அறிவுத் தேடல்களை, உணர்வு மற்றும் தத்துவங்களை — இவையே சமூகத்தின் அறிவு சார்ந்த வாழ்க்கையாக அமைகின்றன — முன்நிர்ணயிக்கின்றன.

பொருளாயதச் செல்வத்தை உற்பத்தி செய்கின்ற செயல்முறை, மனிதனுடைய உழைப்பு மற்ற எல்லா சமூக நிகழ்வுப் போக்குகளுக்கும் தலைமையானதாக இருக்கிறது. அந்த செயல்முறை நித்தியமாக, இயற்கையான அவசியமாக, மனித சமூகத்தின் இன்றியமையாத நிபந்தனையாக இருக்கிறது.

சமூகத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியில் உழைப்பின் பாத்திரம். மனிதன் தோன்றியதிலிருந்து மனித சமூகம் தொடங்கியது. பூமியில் சுமார் 40,000 ஆண்டுகளுக்கு முன்னர் மனிதன் இன்றைய வடிவத்தில் தோன்றினான்; ஆனால் உயிரின் தோற்றம், மிகப் பூர்விகமான, எளிமை

யான வடிவங்களிலிருந்து மனிதனைப் படைத்த உயிருலகத்தின் பரிணாமம் அதற்குப் பல நூறு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கியது.

மனிதன் விலங்குலகத்திலிருந்து தோன்றினான், இன்னும் துல்லியமாகக் கூறுவதென்றால் மிகவும் வளர்ச்சியடைந்த மனிதக் குரங்கிலிருந்து தோன்றினான் என்பதை சார்லஸ் டார்வின் விஞ்ஞான ரீதியாக நிரூபித்தார். ஆனால் அது எப்படி ஏற்பட்டது, ஏன் ஏற்பட்டது என்பதை அவரால் விளக்க முடியவில்லை. மனிதனுடைய தோற்றத்தில் உழைப்பு கேந்திரமான பாத்திரத்தை வகித்தது என்பதை எங்கெல்சே நிரூபித்தார்.

பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதனுடைய மிகப் பழங்காலத்து முன்னோர்கள் தம்முடைய உறுப்புகளின் முனைப் பகுதிகளை எளிமையான காரியங்களுக்கு, ஒரு பொருளைப் பற்றிப் பிடிக்கின்ற செயல்களுக்குப் பயன்படுத்துவதற்குக் கற்றுக் கொண்டார்கள். மனிதனுடைய கரத்தின் செயலில் ஏற்பட்ட இந்த மாற்றம், அவன் நிமிர்ந்து நின்றது ஆகியவை மொத்த மனித உடலின் வளர்ச்சியையும் பாதித்தன. இதன் விளைவாக மக்கள் ஒன்றுசேருதல் ஆரம்பமாயிற்று; அவர்கள் பரஸ்பரம் உதவி செய்து கொண்டார்கள்; கூட்டு நடவடிக்கைகள் தொடங்கின. உழைப்பு நிகழ்வுப் போக்கிலிருந்து, உழைப்புடன் சேர்ந்து மனித உறவுக்கு அவசியமான மொழியும் திருத்தமான பேச்சும் தோன்றின.

உழைப்பும் திருத்தமான பேச்சும் மனிதக் குரங்கின் மூளை மனித மூளையாகப் படிப்படியாகப் பரிணமிப்பதற்கு முக்கியமான தூண்டுவிப்பிகளாக இருந்தன. ''...கையின் வளர்ச்சியுடன் படிப்படியாக மூளையும் வளர்ச்சி பெற்றுச் சென்றது; ஆரம்பத்தில், நடைமுறையில் பயனுள்ள தனித்தனி செய்கைகளுக்கு அவசியமான சூழ்நிலைகளைப்

பற்றிய உணர்வும், பின்னர், அதிக சாதக நிலையிலுள்ள மக்களிடையே, அந்த உணர்விலிருந்து, அந்தச் சூழ்நிலைகளை ஆளும் இயற்கை நியதிகளைப் பற்றிய உட்பார்வையும் வந்தன. இயற்கையின் நியதிகளைப் பற்றிய அறிவு விரைவாகப் பெருகப்பெருக இயற்கையின் மீது எதிரியக்கமாகச் செயல்படுவதற்கான சாதனங்களும் வளர்ந்தன...'' என்று எங்கெல்ஸ் எழுதினார். *

பொருளாயத உற்பத்தி — வாழ்க்கை மற்றும் சமூக வளர்ச்சியின் அடிப்படை. பொருளாயத உற்பத்தியில் ஏராளமான அம்சங்கள் அடங்கியிருக்கின்றன. முதலாவதாக, மனிதன் தனக்குத் தேவையான பொருட்களை உருவாக்குவதற்கு அவசியமான முதல் பொருட்கள் — இவற்றில் பூமி, அதன் உட்பகுதி, தாவர உலகம், பிராணி உலகம் அடங்கும்; வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், மனிதன் தனது உழைப்பில் பயன்படுத்துகின்ற பொருட்கள் அல்லது **உழைப்புப் பொருட்கள்** தேவைப்படுகின்றன. பொருளாயத உற்பத்தியில் ஈடுபடுவதற்கு **உழைப்புச்சாதனங்கள்** அல்லது மக்கள் தமக்கும் உழைப்புப் பொருட்களுக்கும் இடையில் வைக்கின்ற, அதாவது உழைப்புப் பொருட்களின் மீது செயல்படுகின்ற பொருட்கள் அவசியமாக இருக்கின்றன. இந்த ரகத்தில் முதலாவதாக, உழைப்புக் கருவிகள் (கோடரி, ரம்பம், கடைசல் கருவி, பலவிதமான இயந்திரங்கள், இதரவை) அடங்கும். இக்கருவிகள் தொடர்ச்சியாக மாற்றப்பட்டு, அபிவிருத்தி செய்யப்படுகின்றன. உழைப்புப் பொருட்களும் உழைப்புக் கருவிகளும் **உற்பத்திச் சாதனங்கள்** ஆகும்.

---

* பி. எங்கெல்ஸ், **இயற்கையின் இயக்கவியல்**, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1975, பக்கம் 61.

உற்பத்திச் சாதனங்கள் தாமாகவே செயல்பட முடியாது. பொருளாயதச் செல்வத்தைப் படைக்கின்ற நிகழ்வுப் போக்கில் உழைக்கும் மக்கள், (அவர்களுடைய அறிவு, ஆற்றல்) தலைமையான பாத்திரத்தை வகிக்கின்றனர். மக்கள் உழைப்புச் சாதனங்களைப் படைத்து அவற்றை இயக்குகிறார்கள். உழைப்புச் சாதனங்களும் பொருளாயதச் செல்வத்தைப் படைக்கின்ற மக்களும் சமூகத்தின் **உற்பத்திச் சக்திகளாக** இருக்கிறார்கள். உற்பத்திச் சக்திகள் சமூகத்துக்கும் இயற்கைக்கும் இடையிலான பொருளாயத உறவுகளைக் குணாம்சப்படுத்துகின்றன. அவற்றின் வளர்ச்சி மட்டம் இயற்கையின் மேல் மனிதனுடைய ஆதிக்கத்தின் அளவை எடுத்துக் காட்டுகிறது. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மட்டம் உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியின் அளவினால், உற்பத்தியில் மனித சக்தியின் விகிதாசாரத்தினால், மக்களுடைய தொழில் தேர்ச்சியினால், அவர்களுடைய தொழில்நுட்ப அறிவு மற்றும் அனுபவத்தினால் நிர்ணயிக்கப்படுகிறது.

மக்கள் பழங்காலத்திலிருந்தே உயிர் வாழ்வதற்காக, தம்மைச் சுற்றியுள்ள பகைமையான சூழலிலிருந்து ஜீவனத்தைப் பெறுவதற்காக, காட்டு விலங்குகளையும் பாதகமான பருவ நிலைமைகளையும் எதிர்த்துப் போராடுவதற்காக ஒன்றுசேர்ந்து வாழ வேண்டியிருந்தது. சில மனிதர்கள் மற்றவர்களைச் சார்ந்திருக்கின்ற இந்த நிலை உற்பத்திச் சாதனங்களின் வளர்ச்சியுடன் சேர்ந்து அதிகரித்தது. உழைப்புச் சாதனங்கள், உற்பத்தி அனுபவம் மற்றும் உழைப்பின் உற்பத்திப் பொருட்கள் மக்களுடைய கூட்டு நடவடிக்கைகளின் விளைவாக ஏற்பட்டன.

மக்கள் பொருளாயதச் செல்வத்தைப் படைக்கின்ற செயல்முறையில் அவசியமாகவே தமக்குள் **உற்பத்தி உறவுகளில்** ஈடுபடுகிறார்கள். இந்த உறவுகள் உற்பத்திச் சாத

னங்கள் மீதான உடைமையை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், உற்பத்திச் செயல்முறையின் போது மக்களுக்கு இடையிலான உறவுகள் பிரதானமாக உற்பத்திச் சாதனங்களுக்கு யார் உடைமையாளர் என்பதைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றன.

உற்பத்திச் சாதனங்கள் பொது உடைமையாக இருக்கின்ற அமைப்பில் மக்களுக்கு இடையில் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி என்னும் உறவுகள் ஏற்படுகின்றன; அவர்களுடைய உழைப்பின் பலன்கள் உழைக்கும் மக்களின் நலன்களுக்கு வினியோகிக்கப்படுகின்றன. தனியுடைமை சுரண்டல், ஒடுக்குமுறை ஆகிய உறவுகளைத் தோற்றுவிக்கின்றது. சுரண்டல்காரர்கள் சுரண்டப்படுகின்ற வர்க்கங்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருளாயதச் செல்வத்தில் மாபெரும் பகுதியைச் சுவீகரிக்கின்றார்கள்; ஒடுக்கப்பட்ட மக்கள் வறுமையில் வாடுகிறார்கள்.

உற்பத்திச் சக்திகளும் உற்பத்தி உறவுகளும் மொத்தமாக உற்பத்தி முறை எனப்படும். உற்பத்தி முறையும் அதன் உட்பகுதிகளும் — உற்பத்திச் சக்திகளும் உற்பத்தி உறவுகளும் — மக்களுடைய விருப்பம், சித்தம், உணர்விலிருந்து சுயேச்சையான முறையில் புறநிலை எதார்த்தமாக இருக்கின்றன. லெனின் உற்பத்தி முறையை சமூகத்தின் ''எலும்புக்கூடு'', ''தசை, ரத்தத்தினால்'', அதாவது மற்ற எல்லா சமூக நிகழ்வுகள், உறவுகள் மற்றும் நிறுவனங்களினாலும் மூடப்பட்ட எலும்புக்கூடு என்று வர்ணித்தார்.* அவை ஒன்றுசேர்ந்து ஒரு வாழ்கின்ற மொத்தமாக, ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பாக, குறிப்பிட்ட சமூக-பொருளாதார உருவாக்கமாக இருக்கின்றன.

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 1, p. 317.

சமூக-பொருளாதார உருவாக்கம். சமூக-பொருளாதார உருவாக்கம் என்பது சமூகத்தின் ஒரு ரகம்; ஒரு குறிப்பிட்ட உற்பத்தி முறையை அடிப்படையாகக் கொண்டு தன்னுடைய பிரத்யேகமான விதிகளைக் கொண்டு இயங்குகின்ற, வளர்ச்சியடைகின்ற ஒருங்கிணைந்த சமூக அமைப்பு அது.

உற்பத்தி முறையின் முக்கியமான அம்சம் அது எல்லாக் காலத்திலும் மாறிக் கொண்டும் வளர்ச்சியடைந்து கொண்டும் இருக்கிறது என்பதாகும். உற்பத்தியில் மாற்றங்களும் வளர்ச்சியும் உற்பத்திச் சக்திகளின் மாற்றங்களுடன் தொடங்குகின்றன என்பது முக்கியமாகும். இம்மாற்றங்களைத் தொடர்ந்து உற்பத்தி உறவுகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பின்னர் அவை மொத்த சமூக அமைப்பின், சமூகத்தின் மேற்கட்டுமானமாக இருக்கின்ற சமூகக் கருத்துகளின், அரசியல் கண்ணோட்டங்களின் மாற்றத்துக்கு இட்டுச் செல்கின்றன. மேற்கட்டுமானம் பொருளாதார அடிப்படையிலிருந்து (உற்பத்தி, பரிவர்த்தனை மற்றும் வினியோகச் செயல்முறையில் நிலவுகின்ற உற்பத்தி உறவுகளின் மொத்தம்) சுயேச்சையாக இருப்பது மட்டுமின்றி, அடிப்படையின் மீதும் தாக்கம் செலுத்துகிறது என்று மார்க்சியத்தின் மூலவர்கள் வலியுறுத்தினார்கள். ''அரசியல், சட்டவியல், தத்துவஞானம், சமயம், இலக்கியம், கலை, இதரவற்றின் வளர்ச்சி பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஆனால் இவை அனைத்தும் ஒன்றின் மீதொன்றும் பொருளாதார அடிப்படை மீதும் தாக்கம் செலுத்துகின்றன. பொருளாதார நிலைமைதான் காரணம் மற்றும் சுறுசுறுப்பான ஒரே சக்தி, மற்றவை அனைத்தும் செயலற்ற தாக்கத்தையே கொண்டிருக்கின்றன என்று ஒருவர் கருத முடியும். இல்லை, அதற்கு மாறாக, இடைச்செயல் பொருளாதார அவசியத்தின் அடிப்படையில் — முடிவில் அது எப்பொழுதும் தன்னை நிறுவிக் கொள்

வர்க்கப் போராட்டம் — சமூக வளர்ச்சியின் தோற்றுவாய். வர்க்கங்கள் என்றால் என்ன, அவை எப்படித் தோன்றின என்னும் கேள்விகளை மக்கள் நெடுங்காலமாகவே சிந்தித்து வந்திருக்கிறார்கள். வர்க்க ஏற்றத்தாழ்வு நெடுங்காலத்திலிருந்தே இருந்து வந்திருக்கிறது, அது ஒருபோதும் மறையாது, கடவுள் செல்வர்களையும் ஏழைகளையும் நிரந்தரமாகப் படைத்திருக்கிறார் என்று சுரண்டுபவர்கள் போதிக்கிறார்கள்.

சமூகத்தில் ஏழைகள், செல்வர்கள், சுரண்டுபவர்கள், சுரண்டப்படுபவர்கள் என்னும் பிரிவினை வர்க்கப் பிரிவினை ஆகும். சமூகத்தில் ஒரு பகுதியினர் நிலத்தை உடைமையாக வைத்திருக்கிறார்கள், மறு பகுதியினர் அந்த நிலத்தில் பாடுபடுகிறார்கள் என்றால் அங்கே இரண்டு பகை வர்க்கங்கள் — நிலக்கிழார்கள் மற்றும் விவசாயிகள் — இருக்கின்றன என்று அர்த்தமாகும். மக்களில் ஒரு பிரிவினர் பாக்டரிகளையும் தொழிற்சாலைகளையும் உடைமையாகக் கொண்டிருக்கின்ற பொழுது, மறு பிரிவினர் அவற்றில் பாடுபடுகின்ற பொழுது நாம் முதலாளிகள், தொழிலாளர்கள் என்னும் இரண்டு வர்க்கங்களைப் பார்க்கிறோம். முதலாளிகள் தொழிலாளர்களுடைய வருமானத்தில் கணிசமான பகுதியை சுவீகரிக்கிறார்கள். உற்பத்திச் சாதனங்களின் பால் தமக்கு இருக்கின்ற வேறுவிதமான உறவை ஆதாரமாகக் கொண்டு மக்களில் ஒரு பிரிவினர் மற்றவர்களுடைய உழைப்பை சுவீகரித்துக் கொள்கின்ற பொழுது அந்த மக்கட் பிரிவுகள் வர்க்கங்கள் எனப்படும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் உற்பத்திச் சாதனங்கள் பாலான தம்முடைய உறவினால், உழைப்பின் சமூக ஒழுங்கமைப்பில் தாங்கள்

வகிக்கின்ற பாத்திரத்தினால், பொதுச் செல்வத்தை சுவீகரிக்கின்ற முறையினால், அதன் அளவினால் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்ற மக்கட் குழுக்கள் வர்க்கங்கள் ஆகும்.

வர்க்கங்கள் எப்பொழுதும் இருந்திருக்கின்றனவா, அவை எப்பொழுதும் இருக்குமா? வர்க்கங்கள் இல்லாத காலம் ஒன்று இருந்தது. பூர்விக சமூக அமைப்பில் மக்கள் சமத்துவ உரிமைகளைக் கொண்டு சிறு சமூகங்களாக வாழ்ந்தார்கள். அவர்கள் கூட்டாக உழைத்தார்கள்; தங்களிடமிருந்த எல்லாவற்றையும் பொதுவாக வைத்திருந்தார்கள். அவர்களுக்கு என்ன கிடைத்தாலும் அது எல்லோருடைய உடைமையாகவும் இருந்தது; எல்லோரும் அதைச் சமமாகப் பகிர்ந்து கொண்டனர். ஆனால் பொருளாதார வளர்ச்சி மிகவும் கீழ்நிலையில் இருந்தபடியால் மனிதனுக்கு மிகக் குறைவான உணவே கிடைத்தது; அது அவன் உயிர் வாழ்வதற்கு மட்டுமே போதுமானதாக இருந்தது. இத்தகைய நிலைமைகளில் ஒரு நபர் மற்றொருவரைச் சுரண்டி அவருடைய உழைப்பில் வாழ்க்கை நடத்த முடியாது.

கம்யூனிசத்தின் கீழ் வர்க்கப் பிரிவினைகள் மறைந்து விடும். ஒரு சமயத்தில் லெனின் சொற்பொழிவாற்றச் சென்ற அரங்கத்தில் ''தொழிலாளர்கள், விவசாயிகள் ஆட்சி நிரந்தரமாக இருக்கும்'' என்று எழுதப்பட்ட சுவரொட்டியைப் பார்த்தார். இந்தக் கோஷம் தவறானது என்பதை லெனின் அக்கூட்டத்தில் விளக்கினார். தொழிலாளர்களது இலட்சியம் வர்க்கம் என்ற முறையில் தங்களை நிரந்தரமாக்கிக் கொள்வது அல்ல, வர்க்க வேறுபாடுகளை ஒழித்து, வர்க்கமற்ற சமூகத்தை, கம்யூனிசத்தை நிர்மாணிப்பதே அவர்களுடைய இலட்சியம் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

வர்க்கங்கள் முதலில் எப்பொழுது, எப்படித் தோன்றின? வர்க்கமற்ற பூர்விக சமூகம் பல்லாயிரக்கணக்கான ஆண்டு

களாக நிலவியது; அக்காலத்தில் மெதுவாக, ஆனால் தொடர்ச்சியாக உற்பத்திச் சக்திகள் வளர்ச்சியடைந்து பூர்விக சமூகத்தின் வாழ்க்கை முறை மாறியது. காலப் போக்கில் பூர்விக சமூகத்தில் படிவரிசை நிலை ஏற்பட்டது. சிலர் செல்வர்களானார்கள்; நிலத்தை, கால்நடைகளை, உற்பத்திக் கருவிகளைக் கைப்பற்றித் தம்முடையதாக்கிக் கொண்டார்கள். உடைமை இல்லாத மற்றவர்கள் செல்வர் களுக்குப் பணிந்து உழைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது; அவர்கள் படிப்படியாக செல்வர்களுடைய அடிமைகளாக மாறினார்கள். நிலம், காடுகள், நீர், உழைப்புக் கருவிகளில் தனியுடைமை இப்படி உருவாயிற்று. பிரெஞ்சுத் தத்துவஞானியும் எழுத்தாளரும் அறிவியக்கவாதியுமான ழான் ழாக் ரூஸோ *(1712—1778)* முதன்முதலாக நிலத்தில் வேலியமைத்து ''இது என்னுடைய நிலம்!'' என்று கூறியவர் களைப் பற்றிக் கடுஞ்சீற்றத்துடன் பேசினார். தனியுடைமை யும் அதன் விளைவாகிய ஆபத்துகளும் துன்பங்களும் சில தனிநபர்களது தீய எண்ணங்களால் தோன்றின என்று அவர் கருதியது ஓரளவுக்கு வெகுளித்தனமே. எனினும் அதில் சிறிதளவு உண்மை உண்டு. தனியுடைமை வர்க்கங் களைத் தோற்றுவித்தது; சமூகத்தை ஆண்டானும், அடிமை யும், ஒடுக்குபவர்களும் ஒடுக்கப்படுபவர்களும் என்ற பகைமை யான இரண்டு வர்க்கங்களாகப் பிரித்தது.

ஒவ்வொரு பகையியல் சமூகத்திலும் அடிப்படையில் எதிரெதிரான இரண்டு வர்க்கங்கள் இருப்பதும் அவை ஒன்றையொன்று எதிர்த்துப் போராடுவதும் குணாம்சங் களாகும். உதாரணமாக, அடிமை உடைமைச் சமூகத்தில் அடிமைகளும் அடிமை உடைமையாளர்களும் இருந்தார்கள்; நிலப்பிரபுத்துவ சமூகத்தில் நிலக்கிழார்களும் விவசாயிகளும் இருந்தார்கள்; முதலாளித்துவ சமூகத்தில் முதலாளிகள், தொழிலாளர்கள் என்னும் இரண்டு எதிர்நிலையான வர்க்

கங்கள் இருக்கின்றன. மனித சமூகம் பகைமையான வர்க்கங்கள் தோன்றிப் பிளவுற்ற கால முதலாகவே மனித சமூக வரலாறு என்பது ஒடுக்குபவர்களை எதிர்த்து ஒடுக்கப் பட்டவர்களின் தீவிரமான போராட்டத்தின் வரலாறாக இருந்தது. சோஷலிசம் வெற்றியடைகின்ற வரை இந்த நிலை நீடித்தது. சுரண்டப்படுகின்ற வர்க்கங்கள் தம்முடைய விடுதலைக்குப் போராடுகின்றன. சுரண்டுபவர்கள் தம் முடைய செல்வத்தையும் அதிகாரத்தையும் இழக்க விரும்புவது இல்லை. அவர்கள் மெய்யாகவே என்ன செய்கிறார்கள் என்றால் உழைக்கும் மக்களை இன்னும் அதிகமாக அடிமைப்படுத்தி அதன் மூலம் தங்களுடைய ஆதிக்கத்தை வலுப்படுத்துவதற்கே பாடுபடுகிறார்கள். ''சுதந்திரம் உடையோனும் அடிமையும், பட்ரீஷிய உயர்குலச் சீமானும் பிலேபியப் பாமரக் குடியோனும், நிலப்பிரபுவும் பண்ணையடிமையும், கைவினைச் சங்க ஆண்டானும் கைவினைப் பணியாளனும், சுருங்கக் கூறுமிடத்து ஒடுக்குவோரும் ஒடுக்கப்படுவோரும் ஒருவருக்கொருவர் தீராப்பகை கொண்டோராய், ஒரு நேரம் மறைவாகவும் ஒரு நேரம் பகிரங்கமாகவும் இடையறாப் போராட்டம் நடத்தி வந்தனர். இந்தப் போராட்டம் சமுதாயம் முழுவதன் புரட்சிகரப் புத்தமைப்பிலோ, அல்லது போராடும் வர்க்கங்களது பொது அழிவிலோதான் எப்போதும் முடிவுறலாயிற்று'' என்று மார்க்சும் எங்கெல்சும் எழுதினார்கள். *

சுரண்டல் அமைப்பின் கீழ் வர்க்கங்களுக்கு இடையில் போராட்டம் சமூக வளர்ச்சியின் விதியாக, சமூக முன்னேற்றத்தின் சக்தி வாய்ந்த இயக்கு சக்தியாக இருக்கிறது. சுரண்டப்படுகின்ற வர்க்கங்களின் புரட்சிகரமான போ

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்**, தொகுதி 1, பக்கம் 191.

ராட்டம் பழைய, காலாவதியான எல்லாவற்றையும் அகற்று கிறது, அதே சமயத்தில் புதியனவற்றுக்கு, முற்போக் கானவற்றுக்குக் களத்தைச் சுத்தமாக்குகிறது. கி. மு. முதல் நூற்றாண்டில் அடிமை முறை நிலவிய பொழுது ஸ்பார்ட்ட கஸ் தலைமையில் அடிமைகள் கலகம் செய்தது அத்தகைய போராட்டங்களில் ஒன்றாகும். 16ஆம் நூற்றாண்டில் ஜெர் மனியில் நடைபெற்ற மாபெரும் விவசாயிகள் போர், 14—15ஆம் நூற்றாண்டுகளில் பிரான்சில் நடைபெற்ற ஜாக் கெரி, 18ஆம் நூற்றாண்டில் ருஷ்யாவில் (நிலப்பிரபுத்துவ அமைப்பின் கீழ்) புகச்சோவ் தலைமையில் நடைபெற்ற விவசாயிகள் போர், பிரான்சில் முதலாளித்துவ அமைப்பை நிறுவிய, 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நடைபெற்ற பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சி, உலகத்தில் சோஷலிச சகாப்தத்தைத் தொடக்கிய ருஷ்யாவின் மாபெரும் அக் டோபர் சோஷலிசப் புரட்சி ஆகியவை மற்ற உதாரணங் களாகும்.

அரசு. அரசு என்பது என்ன? அது எப்படித் தோன்றியது? அரசின் தோற்றமும் அதன் இருத்தலும் வர்க்கங்கள் இருத் தலுடன் பின்னிப் பிணைந்திருக்கின்றன. பூர்விகக் கூட்டு வாழ்க்கைச் சமூகத்தில் வர்க்கங்கள் இல்லை, அங்கே அரசும் இல்லை. ஆனால் சமூகத்தில் தனியுடைமை தோன் றிய பொழுது, சமூகம் பகைமையான வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்ட பொழுது அரசு உருவாகியது.

பகையியல் சமூகங்கள் எல்லாவற்றிலும் ஒரு வர்க்கத்தின் மீது மற்றொரு வர்க்கத்தின் ஆதிக்கத்தைத் தக்கவைப்பதற் குரிய பொறியமைவாக அரசு இருக்கிறது. சுரண்டல்காரர் கள் உழைக்கும் மக்களைத் தமக்கு அடிபணியச் செய்வதற் குரிய கருவியாகவும் அது இருக்கிறது. இது சுரண்டல்

அரசின் வர்க்க சாராம்சம் ஆகும். சுரண்டல்காரர்கள் தம்முடைய அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கு ராணுவம், நீதிமன்றங்கள், சிறைகள், தண்டிக்கின்ற அமைப்புகள் ஆகியவற்றை உபயோகிக்கிறார்கள். அவர்கள் நேரடியான ஒடுக்குமுறை அமைப்புகளை உபயோகிப்பதுடன் எல்லா சித்தாந்த ஒடுக்குமுறைச் சாதனங்களையும் (கல்வி நிலையங்கள், பத்திரிகைகள், வானொலி, திரைப்படங்கள், இதர தகவல் தொடர்புச் சாதனங்களை) உபயோகிக்கிறார்கள்.

சோஷலிசப் புரட்சி சுரண்டல் அரசை அகற்றி விட்டு சோஷலிச அரசைக் கொண்டு வருகிறது. அது கீழே தள்ளப்பட்ட சுரண்டல்காரர்கள் மீது தொழிலாளி வர்க்கத்தின், சிறுபான்மையினர் மீது பெரும்பான்மையினருடைய ஆதிக்கத்தின் அரசியல் ஸ்தாபனமாக இருக்கிறது. சோஷலிச அரசின் முக்கியமான கடமை ஒடுக்குமுறை இல்லாத அரசியல் அமைப்பை, உழைக்கும் மக்கள் மத்தியில் சமத்துவமான சமூக அமைப்பை நிர்மாணிப்பதாகும்.

அரசுக்குப் பல வடிவங்களும் ரகங்களும் உள்ளன. அரசு எந்த வர்க்கத்துக்குச் சேவை செய்கிறது என்பதைப் பொறுத்து அதன் ரகம் நிர்ணயிக்கப்படுகிறது. அது அடிமை உடைமையாளர்களுக்குச் சேவை செய்தால் அது அடிமை உடைமை அரசு ஆகும். நிலப்பிரபுத்துவ நிலக்கிழார்கள் அதிகாரத்தை வகித்தால் அது நிலப்பிரபுத்துவ அரசு ஆகும். முதலாளிகள் முதலாளித்துவ அரசை நடத்துகிறார்கள். அரசின் இம்மூன்று ரகங்களிலும் சுரண்டல்காரர்களின் ஆட்சி குணாம்சமாகும்; அவர்களது வர்க்க சாராம்சத்தை இவை வெளிப்படுத்துகின்றன.

சோஷலிசத்தின் நிர்மாணமும் அமைப்பு என்ற முறையில் அதைத் தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்தலும் அரசின் புதிய ரகத்தினால், சோஷலிச அரசினால் நிறைவேற்றப்படுகின்றன. புதிய சமூகம் முதலாளித்துவத்திலிருந்து உடனடி

யாக, நேரடியாக வெளிவருவதில்லை. ''...முதலாளித்துவ சமுதாயத்துக்கும் சோஷலிச சமுதாயத்துக்கும் இடையில் ஒன்று மற்றொன்றாய்ப் புரட்சிகர மாற்றமடையும் கட்டம் உள்ளது. இதற்கு இணையாய் அரசியல் இடைக்கால கட்டமும் ஒன்று உள்ளது; இந்த இடைக்காலத்தில் அரசு **பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரச் சர்வாதிகாரம்** என்பதைத் தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது'' என்று கார்ல் மார்க்ஸ் எழுதினார். *

சோஷலிசம் நிர்மாணிக்கப்பட்ட பிறகு பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு பொது மக்களுடைய அரசாக, தொழிலாளி வர்க்கம் தலைமையான பாத்திரத்தை வகிக்கின்ற அனைத்து மக்களின் அரசியல் ஸ்தாபனமாக மாற்றமடைகிறது.

அரசின் ரகம் அதன் வர்க்க சாராம்சத்தை எடுத்துக் காட்டுகிறது; அதன் வடிவம் அது எந்த அரசாங்க ரகம் (முடியாட்சி, குடியரசு, இதரவை) என்பதையும் அதன் அரசியல் ஆட்சி முறையையும் (மிதவாத ஜனநாயகம், ராணுவ-பாசிச சர்வாதிகாரம்) அதன் நிர்வாகக் கட்டமைப்பையும் (ஒற்றையாட்சி, கூட்டாட்சி) எடுத்துக் காட்டுகிறது.

முதலாளித்துவ அரசுகள் பல வடிவங்களைக் கொண்டிருக்கின்றன; ஆனால் அவற்றின் சாராம்சம் ஒரே மாதிரியானதே. அவை அனைத்துமே மூலதன ஆதிக்கத்தின் கருவிகளே. முதலாளித்துவ அரசின் வடிவம் எப்படியிருந்தாலும், அதன் பெயர் எப்படியிருந்தாலும் அதன் சுரண்டுகின்ற சாராம்சத்தை, ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தின் மீது ஆதிக்கம் செலுத்துகின்ற கருவி என்னும் பாத்திரத்தை அதனால் மாற்ற முடியாது. ''முதலாளித்துவ அரசுகள்

---

* மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், கம்யூனிஸ்ட் சமூகம், மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1983, பக்கங்கள் 56–57.

வடிவத்தில் பல்வேறாக இருக்கின்றன; ஆனால் அவற்றின் சாராம்சம் ஒன்றே. இந்த அரசுகள் எல்லாமே, அவற்றின் வடிவங்கள் எப்படியிருந்தாலும், கடைசிப் பகுப்பாய்வில் தவிர்க்க இயலாதபடி முதலாளி வர்க்கத்தின் சர்வாதிகார மாகவே இருக்கின்றன'' என்று லெனின் எழுதினார்.* முதலாளித்துவ அரசு உழைப்பின் மீது மூலதனம் ஆதிக்கம் செலுத்துகின்ற கருவியாகும்.

சமூக உணர்வு மற்றும் சித்தாந்தம்

சமூக உணர்வின் பாத்திரம். சமூக உணர்வு என்பது சமூகத்தில் இருக்கின்ற, மக்களுடைய வாழ்க்கையின் பொருளாயத நிலைமைகளைப் பிரதிபலிக்கின்ற கருத்துகள், தத்துவங்கள், எண்ணங்கள், கண்ணோட்டங்கள், உணர்ச்சிகள், பழக்க வழக்கங்கள் மற்றும் மரபுகளின் மொத்தம் என்று மார்க்சிய-லெனினியத் தத்துவஞானம் வரையறுக்கிறது.

வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், சமூக உணர்வு சமூக வாழ்நிலையை அல்லது மக்களுக்கு இடையிலுள்ள பொருளாயத உறவுகளைப் பிரதிபலிக்கிறது. ''சமூக வாழ் நிலை'' என்பது மக்களுடைய பொருளாயத வாழ்க்கையையும் பொருளாயதச் செல்வத்தின் உற்பத்தி நிலைமைகளையும் குறிக்கிறது என்றால் ''சமூக உணர்வு'' என்னும் கருத்தமைப்பை அவர்களுடைய அறிவு சார்ந்த நடவடிக்கைக்கும் கையாள முடியும்.

சமூக வாழ்நிலை சமூக உணர்வின் உள்ளடக்கத்தையும் அதன் வர்க்க சாராம்சத்தையும் நிர்ணயிக்கிறது. அதே

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, இரண்டாம் பாகம், பக்கம் 255.

சமயத்தில் சமூக உணர்வு செயலற்றதல்ல, அதற்கு முதலில் உயிர் கொடுத்த சமூக வாழ்நிலையின் மீது தாக்கம் செலுத்துகிறது.

இத்தாக்கம் சமூக உணர்வின் தன்மையை, அதாவது அதிலடங்கியிருக்கின்ற கருத்துகள், தத்துவங்கள், கண்ணோட்டங்களைப் பொறுத்திருக்கிறது. இந்த சமூகத் தத்துவங்களும் கருத்துகளும் உள்ளடக்கத்தில் இரண்டு பிரிவுகளைச் சேர்ந்தவை: ஒரு பக்கத்தில் பழமையானவை, பிற்போக்கானவை; மறு பக்கத்தில் புதியவை, முற்போக்கானவை. பழைய கருத்துகளும் தத்துவங்களும் மறைந்து கொண்டிருக்கின்ற வர்க்கங்களின் நலன்களைப் பிரதிபலித்து வெளியிடுகின்றன, ஆகவே அவை சமூக வாழ்க்கை மற்றும் சமூக வளர்ச்சியின் மீது பாதகமான தாக்கத்தைக் கொண்டிருக்கின்றன, ஏனென்றால் அவை இந்த வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துகின்றன. இதிலிருந்து மாறுபட்ட முறையில் புதிய, முற்போக்கான கருத்துகளும் தத்துவங்களும் முற்போக்கான வர்க்கங்கள், சமூகப் பிரிவுகளின் நலன்களைப் பிரதிபலிக்கின்றன; அதன் விளைவாக அவை சமூக முன்னேற்றத்தைத் தூண்டுகின்றன.

உணர்வு சமூக உணர்வு, தனிமனித உணர்வு என்னும் இரண்டு ரகங்களைக் கொண்டிருக்கிறது. தனிமனித உணர்வு என்பது ஒரு தனிநபருடைய ஆன்மிக உலகமாகும்: அவருடைய சிந்தனைகள், உணர்ச்சிகள், பழக்கவழக்கங்கள் மற்றும் விருப்பார்வங்கள். அது ஒரு குறிப்பிட்ட மனிதருடைய வாழ்க்கையில், அவருடைய செய்முறை நடவடிக்கையின் நிகழ்வுப் போக்கில் உருவாகி அவருடைய இருத்தலின் பொருளாயத நிலைமைகளைப் பிரதிபலிக்கிறது. தனிமனித உணர்வு என்பது ஒரு தனிநபருடைய செய்முறை அனுபவம் மற்றும் வாழ்க்கை நிலைமைகளின் வெளியீடாகும்.

மக்களுடைய பொது நலன்களை வெளியிடுகின்ற கருத்துகள், கண்ணோட்டங்கள், உணர்ச்சிகள், விருப்பார்வங்கள் சமூக உணர்வாக இருக்கின்றன. ஒரு வர்க்க சமூகத்தில் இவை ஒரு வர்க்கம், சமூகப் பிரிவின் அல்லது ஒரு மக்கள் கூட்டின் பொது நலன்களாக இருக்கின்றன.

உணர்வின் இந்த இரண்டு ரகங்களும் பின்னிப் பிணைந்திருக்கின்றன; அவை இயக்கவியல் ஒற்றுமையில் இருக்கின்றன. சமூக உணர்வு தனிமனித உணர்வின் மூலமாகவே வெளிப்படுகிறது; ஏனென்றால் எந்த ஒரு நபரும் சமூகத்தில் வாழ்கிறார், உழைக்கிறார், ஒரு குறிப்பிட்ட வர்க்கம், தேசிய இனம் மற்றும் சமூகக் கூட்டைச் சேர்ந்தவராக இருக்கிறார்.

சமூக உளவியலும் சித்தாந்தமும். சமூக உணர்வு இரண்டு துறைகளிலும் இரண்டு மட்டங்களிலும் இருக்கிறது: சமூக உளவியல் மற்றும் சித்தாந்தம் அத்துறைகளாகும்.

சமூக உளவியல் என்பது அன்றாட வாழ்க்கையின் தாக்கத்தில் சமூகப் பிரிவுகளிலும் வர்க்கங்களிலும் (தேசிய இனங்களில் கூட) தோன்றுகின்ற உணர்ச்சிகள், எண்ணங்கள், விருப்பார்வங்கள், பழக்கவழக்கங்கள், சிந்தனைகள், மனோநிலைகள் ஆகியவற்றின் மொத்தமாகும். சித்தாந்தம் என்பது ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினருக்குரிய அரசியல், சட்டவியல், தார்மிக, தத்துவஞான, சமய மற்றும் அழகியல் கருத்துகளின் மொத்தம் ஆகும்.

சமூக உளவியல் என்பது மக்கள் தம்முடைய சமூக வாழ்நிலையைப் புரிந்து கொள்வதன் ஆரம்பக் கட்டமாகும். அதற்கு மாறுபட்ட முறையில் சித்தாந்தம் சமூக உணர்வின் உயர்ந்த மட்டமாக, வாழ்க்கையின் பொருளாயத நிலைமைகளை மக்கள் இன்னும் அதிக ஆழமாகப் புரிந்து கொள்

வதாக இருக்கிறது. சித்தாந்தம் வர்க்கங்கள், தேசிய இனங்கள், சமூகப் பிரிவுகளுக்கு இடையிலான உறவுகளின் சாராம்சத்தை வெளிப்படுத்த வேண்டும், இந்த உறவுகளைத் தொடர வேண்டிய அல்லது மாற்ற வேண்டிய அவசியத்தை ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் நிலையிலிருந்து நிறுவ வேண்டும். தன்னியல்பாகத் தோன்றுகின்ற உளவியலைப் போலன்றி சித்தாந்தம், சித்தாந்திகள் என்றழைக்கப்படும் ஒரு சிறப்புக் குழுவினருடைய பணியின் விளைவாகும்.

வர்க்க சமூகத்தில் சமூக உளவியலும் சித்தாந்தமும் தனிவகையான வர்க்கத் தன்மையைக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு வர்க்கமும் அதற்குரிய உளவியலையும் சித்தாந்தத்தையும் கொண்டிருக்கிறது; அவை சமூக உற்பத்தி அமைப்பில் அதன் இடத்தைப் பிரதிபலித்து அதன் தேவைகளையும் நலன்களையும் வெளியிடுகின்றன. இதைப் பற்றி லெனின் பின்வருமாறு எழுதினார்: ''நீதி, மதம், அரசியல், சமுதாயம் சம்பந்தமான எல்லாவிதச் சொல்லடுக்குகளுக்கும் பிரகடனங்களுக்கும் வாக்குறுதிகளுக்கும் பின்னே ஏதாவதொரு வர்க்கத்தின் நலன்கள் ஒளிந்து நிற்பதைக் கண்டு கொள்ள மக்கள் தெரிந்து கொள்ளாத வரையில் அரசியலில் அவர்கள் முட்டாள்தனமான ஏமாளிகளாகவும் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்வோராகவும் இருந்தனர், எப்போதும் இருப்பார்கள்.'' *

தொழிலாளி வர்க்கத்தின் சித்தாந்தம் மார்க்சிய-லெனினியம் ஆகும். அதன் வர்க்க உள்ளடக்கமும் இலட்சியங்களும் முந்திய எல்லா சித்தாந்தங்களிலிருந்தும் முழுமையாக வேறுபட்டிருக்கிறது. முதலாவதாக, மார்க்சிய-லெனினியம் சுரண்டுகின்ற வர்க்கத்தின் நலன்களுக்குப் பாடுபடவில்லை, அது தொழிலாளி வர்க்கத்தின், எல்லா உழைக்கும் மக்

---

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, தொகுதி *1*, பக்கம் *109*.

களின் நலன்களுக்கும் பாடுபடுகிறது. இரண்டாவதாக, மார்க்சிய-லெனினியம் சுரண்டலை ஒழித்துப் புதிய சமூகத்தை நிர்மாணிக்க வேண்டிய அவசியத்தைத் தத்துவ ரீதியில் நிறுவியிருக்கிறது. மூன்றாவதாக, மார்க்சிய-லெனினியம் பெருந்திரளான மக்களின் மிகச் சிறந்த நலன்களுக்கும் விருப்பத்துக்கும் ஏற்ற முறையில் உலகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைப்பதில், நீதி, சுதந்திரம், மக்கள் மற்றும் தேசிய இனங்களின் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் உறுதிப்படுத்துவதில் சக்தி வாய்ந்த ஆயுதமாக இருக்கிறது.

வரலாற்றில் பெருந்திரளான மக்களின் பாத்திரமும் தனிநபருடைய பாத்திரமும்

உழைக்கும் மக்கள் பொருளாயதச் செல்வத்தைப் படைப்பதில் தலைமையான பாத்திரத்தை வகிக்கிறார்கள். அவர்கள் உழைப்புக் கருவிகளைச் செய்கிறார்கள், அவற்றை அபிவிருத்தி செய்கிறார்கள், தம்முடைய அனுபவத்தையும் அறிவையும் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு மாற்றிக் கொடுக்கிறார்கள். உழைக்கும் மக்கள் உலக மக்களுக்கு உணவளிக்கிறார்கள், உடையளிக்கிறார்கள், வாழ்க்கையிலுள்ள சிறந்த பொருட்கள் அனைத்தையும் படைக்கிறார்கள்.

உழைக்கும் மக்கள் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது மட்டுமன்றி வரலாற்றையும் படைக்கிறார்கள்; ஏனென்றால் அவர்கள்தான் முன்னேற்றத்தின் பிரதான இயக்கு சக்தி. அடிமை உடைமை முறையும் நிலப்பிரபுத்துவமும் தாமாகவே அழிந்து விடவில்லை, ஒடுக்குபவர்களை எதிர்த்து உழைக்கின்ற ஆண்களும் பெண்களும் நடத்திய கடுமையான புரட்சிகரப் போராட்டத்தின் விளைவாக

அவை அழிந்தன. பெருந்திரளான மக்களின் படைப்பாற்றல் ருஷ்யாவில் முதலாளித்துவத்தை ஒழித்த மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் போது குறிப்பிடத்தக்க வேகத்துடன் வெளிப்பட்டது.

மக்கள் பொருளாயதச் செல்வத்தை மட்டுமன்றி பொருளாயதம் இல்லாத, ஆன்மிக, அறிவு மதிப்புகளையும் படைக்கிறார்கள். அறிவியல், இலக்கியம், கலைகள் பெருந்திரளான மக்களுடைய முயற்சிகளினால்தான் வளர்ச்சியடைந்திருக்கின்றன.

வரலாற்றில் தனிமனிதன் வகிக்கின்ற பாத்திரம் என்ன? பெரும்பான்மையினரை ஒடுக்குவதற்கு சிறுபான்மையினரது உரிமையை நியாயப்படுத்துவதற்காக முதலாளித்துவ சித்தாந்திகள் மக்களுடைய உணர்வில் ''கட்டுப்பாடற்ற கும்பல்'' மற்றும் ''தலைவர்'' என்னும் பிற்போக்கான தத்துவத்தை விதைப்பதற்கு முயல்கிறார்கள். அரசர்கள், ராணுவத் தலைவர்கள், சட்ட கர்த்தாக்கள் ஆகியோரைப் போன்ற தலைசிறந்த மனிதர்களே வரலாற்றைப் படைக்கிறார்கள்; அவர்கள் தம்முடைய விருப்பத்துக்கேற்ப வரலாற்றுப் போக்கைத் திருப்ப முடியும் என்னும் அனுமானத்தை இத்தத்துவம் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. உழைக்கும் மக்கள் திரளினர் செயலற்றவர்கள், வரலாற்று ரீதியில் சக்தியற்றவர்கள், கட்டுப்பாடற்ற கும்பல் என்று இத்தத்துவம் காட்டுகிறது.

மனித சமூகத்திலிருக்கின்ற எல்லாமே ஒரு சிலரால் உருவாக்கப்பட்டவை என்ற தத்துவத்தை மார்க்சிய-லெனினியம் தகர்த்து விட்டது. எனினும் வரலாற்றில் தனிநபர் வகிக்கின்ற பாத்திரத்தை மார்க்சிய-லெனினியம் முற்றிலும் புறக்கணிக்கிறது என்பது இதன் பொருளல்ல. மனித சமூக வரலாற்றில் எந்த வர்க்கமும் அதன் மாபெரும் அரசியல் தலைவர்களை உருவாக்காமல், அரசியல்

இயக்கத்தை அமைத்து அதற்குத் தலைமை தாங்குகின்ற தகுதியுடைய பிரதிநிதிகள் இல்லாமல் தலைமையான நிலையை ஒருபோதும் அடைந்ததில்லை. மக்களுடைய தேவைகளையும் முன்னுரிமைகளையும் புரிந்துகொண்ட முற் போக்கான தலைவர்கள் சமூகத்திற்கு முன்புள்ள பிரச்சினை களுக்கு மிகச் சிறந்த தீர்வைக் கண்டுபிடித்து அதன் மூலம் வரலாற்று நிகழ்வுப் போக்குகளை விரைவுபடுத்துகிறார்கள். அதற்கு எதிர்மாறாகப் பிற்போக்காளர்கள் இந்த நிகழ்வுப் போக்குகளின் வேகத்தைக் குறைக்கிறார்கள், சமூக வளர்ச்சி யைத் தடுத்து நிறுத்துகிறார்கள்.

தலைசிறந்த மனிதர்கள் பெருந்திரளான மக்களுக்கு, சமூக வர்க்கங்களுக்குத் தலைவர்களாக இருக்கிறார்கள். இந்த வர்க்கங்களும் சமூகப் பிரிவுகளும் தருகின்ற ஆதர வினால் அவர்கள் வலிமை அடைகிறார்கள். இத்தலைவர் கள் எவ்வளவுதான் அறிவாளிகளாக, உண்மையாகவே எவ்வளவு சிறந்தவர்களாக இருந்தாலும் இந்த ஆதரவு மட்டும் இல்லையென்றால் அவர்கள் வரலாற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்ற சக்தியற்றவர்களாக இருப் பார்கள். பெருந்திரளான மக்களுடைய நடவடிக்கைகளி லிருந்தே தலைவர்கள் தம்முடைய பலத்தைப் பெறுகிறார் கள்.

மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தின் முக்கியத்துவம்

மார்க்சிய-லெனினியம் தத்துவஞானத்தில் மெய்யான புரட்சியை நிறைவேற்றியிருக்கிறது. அது முற்றிலும் புதிய உலகக் கண்ணோட்டத்தை, பாட்டாளி வர்க்கத்தின் உலகக் கண்ணோட்டத்தை, மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத் தைப் படைத்திருக்கிறது.

உலகம் பொருளாயதமான இயல்பைக் கொண்டது, அதில் எல்லாமே மாறிக் கொண்டும் வளர்ச்சியடைந்து கொண்டும் இருக்கின்றன, கீழ்நிலையானவற்றிலிருந்து உயர் நிலையானவற்றுக்கு, பழமையிலிருந்து புதுமையை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றன என்று நிரூபிக்க முனைந்த ஒரே விஞ்ஞானத் தத்துவம் மார்க்சிய-லெனினியத் தத்துவஞானமே. அது மற்ற எல்லா விஞ்ஞானங்களின் முடிவுகளையும் தொகுப்பதுடன் அவற்றுக்கு அறிதலைப் பற்றிய இயக்கவியல் முறையை, நிகழ்வுகளை ஆராய்வதற்குச் சரியான அணுகுமுறையைத் தருகிறது.

மார்க்சிய-லெனினியத் தத்துவஞானம் உலகத்தைப் பற்றிய சரியான சித்திரத்தைத் தருவதன் மூலம், இயற்கை மற்றும் சமூகத்தின் வளர்ச்சியின் அதிகப் பொதுவான விதிகளைக் கண்டுபிடிப்பதன் மூலம் புரட்சிகரமான நடவடிக்கைக்கு சக்தி வாய்ந்த கருவியாக, ஒடுக்குமுறை, ஏற்றத்தாழ்வின் எல்லாவிதமான வடிவங்களையும் எதிர்த்துப் போராடி நியாயமான, புதிய சமூகத்தை நிர்மாணிக்கின்ற கோடிக் கணக்கான மக்களின் உலகக் கண்ணோட்டமாக இருக்கிறது. மார்க்சிய-லெனினியத் தத்துவஞானம் மார்க்சியக் கட்சிகளின் போர்த்திட்டம் மற்றும் செயல்தந்திரத்தின் தத்துவ அடிப்படையாக இருக்கிறது.

அத்தியாயம் மூன்று

மார்க்சிய-லெனினியத்தின் பொருளாதார அடிப்படைகள்

அரசியல் பொருளாதாரம்

அரசியல் பொருளாதாரத்தின் ஆராய்ச்சிப் பொருள். அரசியல் பொருளாதாரம் — தத்துவஞானம் மற்றும் விஞ்ஞான கம்யூனிசத்துடன் — மார்க்சிய-லெனினியத்தின் உட்பிரிவாகவும் அதன் பொருளாதார அடிப்படையாகவும் இருக்கிறது.

விஞ்ஞானம் என்ற முறையில் அரசியல் பொருளாதாரம் முதலாளித்துவ உற்பத்தி முறையிலிருந்து தோன்றியது. எனினும் தொழிலாளி வர்க்கம் வர்க்கப் போராட்ட அரங்கில் தோன்றிய பிறகு, புதிய பாட்டாளி வர்க்க அரசியல் பொருளாதாரம் தோன்றிய பிறகுதான் அது உண்மையான விஞ்ஞானத் தன்மையைப் பெற்றது. கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் புதிய பாட்டாளி வர்க்க அரசியல் பொருளாதாரத்தை நிறுவினார்கள். வி. இ. லெனின் எழுதிய நூல்களில் மார்க்சிய அரசியல் பொருளாதாரம் இன்னும் உயர்ந்த வளர்ச்சி நிலையை அடைந்தது.

பொருளாயத உற்பத்தியே ஒரு சமூகத்துக்கு அடிப்படை என்ற மெய்விவரத்தை மார்க்சிய-லெனினியம் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ''ஒரு நாடு ஒரு ஆண்டுக்கு என்று நான் சொல்ல மாட்டேன் — சில வாரங்களுக்குக் கூட உழைப்பை நிறுத்தி விடுமானால் அது அழிந்து விடும்''

என்று மார்க்ஸ் எழுதினார்.* உழைப்பு மனித சமூகத்தின் இருத்தலுக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையான நிபந்தனை, அதன் செல்வத்தின் ஊற்றுக்கண் என்பது இதன் பொருளாகும்.

பொருளாயதச் செல்வத்தைத் தனிநபர்கள் உற்பத்தி செய்ய முடியாது என்பதை முந்திய அத்தியாயத்தில் எழுதியிருக்கிறோம். உற்பத்திச் செயல்முறையின் போது மக்கள் தவிர்க்க முடியாதபடி ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்கிறார்கள்; ஆகவே அவர்களுடைய பணி திட்டவட்டமான சமூகத் தன்மையை அடைகிறது.

அரசியல் பொருளாதாரம் பொருளாயத நன்மைகளின் உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர்வுச் செயல்முறையின் போது மக்களுக்கு இடையில் உருவாகின்ற சமூக உறவுகளை ஆராய்கிறது.

உற்பத்தி உறவுகள் உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமையை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அத்தகைய உறவுகள் இரண்டு வகையாகும். உழைப்புச் சாதனங்கள், உழைப்புப் பொருட்கள் மற்றும் உழைப்பின் விளைவுகளை சமூகம் தனக்குச் சொந்தமென்று கருதுமானால் நாம் அதைப் பொது உடைமை என்கிறோம். ஆனால் அவை சமூகத்தின் சிறு பகுதிக்கு அல்லது சில தனிநபர்களுக்குக் கூட சொந்தமாக இருந்தால் அது உழைப்புச் சாதனங்கள், பொருட்கள் மற்றும் விளைவுகளின் தனியுடைமை ஆகும். உற்பத்தி உறவுகளை அவற்றின் வளர்ச்சிப் போக்கில் ஆராய்கின்ற அரசியல் பொருளாதாரம், உற்பத்திச் சாதனங்களின் மீதான பொதுவுடைமையை அடிப்படையாகக் கொண்ட அமைப்பின் வெற்றி தவிர்க்க இயலாதது, வரலாற்று ரீதியில் முறையானது என்பவற்றை நிறுவுகிறது.

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 6, பக்கம் 176.

பொருளாதார விதிகள். உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை, நுகர்வு ஆகியவை திட்டவட்டமான பொருளாதார விதிகளுக்கு உட்பட்டவை ஆகும். இவ்விதிகளைக் கண்டு பிடிப்பதும் மக்கள் தம்முடைய செய்முறை நடவடிக்கைகளில், தேசியப் பொருளாதாரத்தில் அவற்றைப் பயன்படுத்துவதும் விஞ்ஞானம் என்ற முறையில் அரசியல் பொருளாதாரத்தின் இலட்சியம் ஆகும். பொருளாதார விதிகள் என்று கூறும்பொழுது பொருளாதார நிகழ்வுகளிலும் நிகழ்வுப் போக்குகளிலும் புறநிலையான, மிகவும் கணிசமான, இன்றியமையாத, நிலையான தொடர்புகளைக் குறிக்கிறோம்.

பொருளாதார விதிகள் இயற்கை விதிகளைப் போலவே புறநிலையான இயல்பைக் கொண்டிருக்கின்றன. சமூகத்தில் மனித சித்தம் மற்றும் உணர்விலிருந்து சுயேச்சையாக இருக்கின்ற இடைத்தொடர்புகளையும் உறவுகளையும் அவை தொகுத்துரைக்கின்றன. பொருளாதார விதிகள் மனித சமூகத்தின் வளர்ச்சியின் போது, சமூக உற்பத்திச் செயல்முறையில் தோன்றுகின்றன. இவற்றுக்கும் இயற்கை விதிகளுக்கும் இடையிலுள்ள முக்கியமான வேறுபாடு இதுவே. இயற்கை விதிகள் மனித சமூகத்தின் தோற்றம், வளர்ச்சிக்குச் சம்பந்தமில்லாத முறையில் செயல்படுகின்றன.

பொருளாதார விதிகள் (அவை எவ்வளவு அதிகமாகச் செயல்படுகின்றன என்பதைப் பொறுத்து) பின்வரும் பிரிவுகளாகப் பகுக்கப்படுகின்றன. முதலாவதாக, எல்லா சமூக-பொருளாதார உருவாக்கங்களுக்கும் குணாம்சமாக இருக்கின்ற பொதுவான பொருளாதார விதிகள். உற்பத்தி உறவுகள் உற்பத்திச் சக்திகளின் இயல்புக்கும் வளர்ச்சி நிலைக்கும் பொருந்தி வருவதைப் பற்றிய விதி இவற்றில் ஒன்றாகும். உற்பத்திச் சக்திகள் வளர்ச்சியடைகின்ற பொழுது பழைய உற்பத்திச் சக்திகளுக்குப் பொருத்தமாக

இருக்கின்ற பழைய உற்பத்தி உறவுகள் தகர்ந்து புதிய, அதிக முற்போக்கான உற்பத்தி உறவுகள் ஏற்படும் என்பது இதன் பொருளாகும்.

மற்றொரு பிரிவில் சில சமூக உருவாக்கங்களில் மட்டுமே (எல்லா சமூக உருவாக்கங்களிலும் அல்ல) செயல்படுகின்ற பொருளாதார விதிகள் இடம் பெறுகின்றன. உதாரணமாக, மதிப்பு விதி, பண்ட-பண உறவுகள் இருக்கின்ற சமூக உருவாக்கங்களில் மட்டுமே செயல்படுகிறது.

ஆனால் பெரும்பான்மையான பொருளாதார விதிகள் தனிவகையானவை; அவை குறிப்பிட்ட உற்பத்தி முறையில் மட்டுமே செயல்படுகின்றன; அந்த உற்பத்தி முறை முடிந்த பிறகு செயலற்றுப் போய் விடுகின்றன (உதாரணமாக, முதலாளித்துவத்தின் கீழ் மட்டுமே செயல்படுகின்ற உபரி மதிப்பு விதி).

அரசியல் பொருளாதாரம் என்றால் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சியைப் பற்றிய விஞ்ஞானம்; அது இந்த உறவுகளில் உள்ளுறையான பொருளாதார விதிகளை அதாவது மனித சமூகத்தின் வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களில் உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர்வின் தன்மையைப் பற்றிய விதிகளை ஆராய்கிறது.

கார்ல் மார்க்சின் பொருளாதாரப் போதனை

உபரி மதிப்புத் தத்துவம். மார்க்சியத்தின் முக்கிய அரசியல் பொருளாதார நூலாகிய மூலதனம் முதலாளித்துவ உற்பத்தியின் வளர்ச்சிக்குரிய மிக முக்கியமான விதிகளையும் முதலாளித்துவ அமைப்பின் உள் முரண்பாடுகளையும் விவரிக்கிறது.

மார்க்சிய அரசியல் பொருளாதாரத்தின் மிகச் சிறந்த

சாதனை உபரி மதிப்புத் தத்துவம் எனலாம். மார்க்ஸ் தன்னுடைய மூலதனம் நூலில் அதை ஆழமான முறையில் ஆராய்ந்தார். உபரி மதிப்புத் தத்துவம் கார்ல் மார்க்சின் பொருளாதாரத் தத்துவத்தின் அடிப்படை என்று லெனின் கூறினார்.

இத்தத்துவம் முதலாளித்துவச் சுரண்டலின் ரகசியங்களை அம்பலப்படுத்தியது; முதலாளிகள் பணத்தைக் குவிக்கின்ற ஊற்றுக்கண்களை மூடியிருந்த திரைகளை அகற்றியது. தன்னுடைய நூலில் உபரி மதிப்பு — அது லாபம், வட்டி, நிலக் குத்தகை, மற்ற எந்த வடிவத்தை அடைந்த போதிலும் — பற்றிய ஆராய்ச்சியே மிகவும் சிறந்த பகுதி என்று மார்க்ஸ் தன்னுடைய கடிதங்களில் ஒன்றில் எழுதினார். உபரி மதிப்புப் பிரச்சினைக்குத் தத்துவ ரீதியான தீர்வைக் கொடுத்ததன் மூலம் இப்புத்தகம் வரலாற்றுக்கு மாபெரும் சேவை செய்திருக்கிறது என்று எங்கெல்ஸ் எழுதினார்.

மார்க்ஸ் உபரி மதிப்பையும் பொதுவாக முதலாளித்துவ சமூகத்தையும் பற்றித் தன்னுடைய ஆராய்ச்சியைப் பண்டத்தின் இயல்பிலிருந்து தொடங்கினார். முதலாளித்துவ அமைப்பில் உழைப்புச் சக்தி உட்பட எல்லாமே பண்டமாகக் கருதப்படுகின்றன. உழைப்புச் சக்தியை சுதந்திரமாக விற்பனை செய்ய முடியும், வாங்க முடியும்.

உழைப்புச் சக்தி என்பது பொருளாயத நன்மைகளைப் படைப்பதற்கு மனிதனுடைய உடல் மற்றும் ஆன்மிகத் திறமையாகும். உழைப்புச் சக்தி எந்த சமூகத்திலும் உற்பத்தியின் இன்றியமையாத உறுப்பாக இருக்கிறது. ஆனால் முதலாளித்துவம் மட்டுமே அதை ஒரு பண்டமாக மாற்றியிருக்கிறது. அதற்கு வசதியாக முதலாளித்துவ அமைப்பு இரண்டு முக்கியமான நிபந்தனைகளை ஏற்படுத்தியிருக்கிறது: 1) உழைப்புச் சக்தியைக் கொண்டிருப்பவருடைய

தனிப்பட்ட சுதந்திரம்; 2) அவரிடமிருந்து உற்பத்திச் சாதனங்களை, ஆகவே வாழ்க்கைச் சாதனங்களை அகற்றி விடுதல்.

அடிமை உடைமைச் சமூகத்தில் ஒரு அடிமை தன்னுடைய உழைப்புச் சக்தியை விற்பனை செய்ய முடியாது, ஏனென்றால் அவர் மற்றொரு நபருடைய உடைமையாக இருந்தார். நிலப்பிரபுத்துவ சமூகத்திலும் விவசாயி தன்னுடைய உழைப்புச் சக்தியை உடைமையாகக் கொண்டிருக்கவில்லை; ஏனென்றால் அவர் நிலக்கிழாரைச் சார்ந்தவராக வாழ்க்கை நடத்தினார். ஆனால் முதலாளித்துவ சமூகத்தில் தொழிலாளிக்குத் தனிப்பட்ட சுதந்திரம் இருக்கிறது. ''பணத்தை வைத்திருப்பவர் தன்னுடைய பணத்தை மூலதனமாக மாற்ற வேண்டுமென்றால் சந்தையில் சுதந்திரமான தொழிலாளியைச் சந்தித்தாக வேண்டும். அந்தத் தொழிலாளி இரண்டு அர்த்தத்தில் சுதந்திரமானவராக இருக்க வேண்டும். சுதந்திர மனிதன் என்ற முறையில் அவர் தன்னுடைய உழைப்புச் சக்தியைத் தன்னுடைய சொந்தப் பண்டம் என்ற முறையில் விற்பனை செய்யக் கூடியவராக இருக்க வேண்டும்; மறு பக்கத்தில் அவர் விற்பனை செய்வதற்கு எந்தப் பண்டமும் இல்லாதவராக இருக்க வேண்டும், தன்னுடைய உழைப்புச் சக்தியைக் கைவரப் பெறுவதற்கு அவசியமான எல்லாமே இல்லாதவராக இருக்க வேண்டும்'' என்று மார்க்ஸ் எழுதினார். *

முதலாளித்துவச் சுரண்டல் ஒருவர் சுலபமாகப் பார்க்க முடியாதபடி மறைக்கப்பட்டிருக்கிறது. அடிமை உடைமை முறை அல்லது நிலப்பிரபுத்துவ முறையின் கீழிருந்ததைக் காட்டிலும் முதலாளித்துவ முறையில் அது அதிகமாக மறைக்கப்பட்டிருக்கிறது. முதலாளித்துவ அமைப்பில் இச்

---

* K. Marx, *Capital*, vol. 1, p. 166.

சுரண்டல் பொருளாதார நிர்ப்பந்தத்தின் வடிவத்தை அடைகிறது. தொழிலாளி பட்டினியாக இருக்க வேண்டும் அல்லது முதலாளியிடம் தன்னுடைய உழைப்புச் சக்தியை விற்பனை செய்ய வேண்டும் என்ற நெருக்கடியான நிலையை வாழ்க்கை அவருக்கு ஏற்படுத்துகிறது. முதலாளித்துவ உற்பத்தி முறையின் கீழ் தொழிலாளி சவுக்கு அல்லது பிரம்பினால் விரட்டப்படவில்லை; அவரை விரட்டி வேலை தேடச் செய்வது பசியே.

மார்க்ஸ் முதலாளித்துவச் சுரண்டல் முறையை வெளிப்படுத்தினார். பண்டம் என்ற முறையில் உழைப்புச் சக்தி ஒரு தனிவகையான இயல்பைக் கொண்டிருக்கிறது; அது தன்னில் உறைந்திருப்பதைக் காட்டிலும் அதிகமான மதிப்பை உற்பத்தி செய்கிறது. முதலாளி கூடுதலான மதிப்பை அல்லது உபரி மதிப்பைப் படைப்பதற்காகவே தொழிலாளர்களை வேலைக்குச் சேர்த்துக் கொள்கிறார். உபரி மதிப்பின் முக்கியமான தோற்றுவாய் தொழிலாளர்களது உழைப்பே; இந்த உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்கியிருக்கின்ற முதலாளிகள் அதில் ஒரு பகுதியைக் கூலி கொடுக்காமல் சுவீகரித்துக் கொள்கிறார்கள்.

ஆகவே உபரி மதிப்பு என்பது கூலித் தொழிலாளரால் தம்முடைய உழைப்புச் சக்தியின் மதிப்பைக் காட்டிலும் கூடுதலாகப் படைக்கப்பட்டு, முதலாளிகளால் கூலி தராமல் சுவீகரித்துக் கொள்ளப்படுகின்ற மதிப்பு ஆகும்.

தொழிலாளிகள் அதிகபட்ச உபரி மதிப்பை உற்பத்தி செய்வதும் முதலாளிகள் கூலித் தொழிலாளர்களைச் சுரண்டுவதன் மூலமாக அதை சுவீகரித்துக் கொள்வதும் **முதலாளித்துவத்தின் அடிப்படையான பொருளாதார விதி** ஆகும்.

உபரி மதிப்பின் உற்பத்தி மற்றும் சுவீகரிக்கின்ற முறையின் சாராம்சம் மொத்த உழைப்பு நேரம், சமூக ரீதியில்

அவசியமான நேரம் மற்றும் உபரி நேரம் என்று பிரிக்கப்படுகிறது. கூலித் தொழிலாளி தன்னுடைய உழைப்பு நாளின் ஒரு பகுதியில் தன்னுடைய உழைப்புச் சக்திக்குச் சமமான மதிப்பைப் படைக்கிறார். தொழிலாளி தனக்கும் தன்னுடைய குடும்பத்துக்கும் வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்வதற்கு வேலை நாளின் இப்பகுதி அவசியமாக இருக்கிறது. அது அவசியமான உழைப்பு நேரம்; இந்த அவசியமான நேரத்தில் செய்யப்படுகின்ற உழைப்பு அவசியமான உழைப்பு ஆகும். கூலித் தொழிலாளி தன்னுடைய உழைப்பு நேரத்தின் மறு பகுதியில் உபரி மதிப்பைப் படைக்கிறார். வேலை நாளின் இப்பகுதி உபரி உழைப்பு நேரம்; உபரி உழைப்பு நேரத்தில் செய்யப்படுகின்ற உழைப்பு உபரி உழைப்பு ஆகும்.

''கூலி பெறும் உழைப்பாளி நிலம், ஆலைகள், உழைப்புக் கருவிகள் ஆகியவற்றின் சொந்தக்காரர்களிடம் தனது உழைப்புச் சக்தியை விற்கிறான். தொழிலாளி வேலை நாளின் ஒரு பகுதியைத் தன்னையும் தனது குடும்பத்தையும் பராமரித்துக் கொள்வதற்கு வேண்டிய செலவுக்காக (அதாவது, கூலிக்காக) உழைப்பதில் கழிக்கிறான். மறு பகுதியில் ஊதியமின்றியே உழைத்து முதலாளிக்கு **உபரி மதிப்பை** உண்டாக்கித் தருகிறான். இந்த உபரி மதிப்புத் தான் லாபத்துக்குத் தோற்றுவாய், அதுதான் முதலாளி வர்க்கத்தின் செல்வத்துக்குத் தோற்றுவாய்'' என்று லெனின் எழுதினார். *

மூலதனத்தின் சாராம்சம். முதலாளித்துவச் சுரண்டல் முறையின் பொறியமைவை ஆழமாகப் புரிந்து கொள்வதற்கு

---

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, தொகுதி *1*, பக்கம் *106*.

''மூலதனம்'' என்னும் அரசியல்-பொருளாதாரக் கருத்தமைப்பு முக்கியமானதாகும். அப்படியானால் மூலதனம் என்றால் என்ன? அது உற்பத்திச் சாதனங்கள் (உழைப்புக் கருவிகள் மற்றும் உழைப்புப் பொருட்கள்) மட்டுமல்ல. அவை தனியுடைமையாக இருந்து தொழிலாளர்களைச் சுரண்டுவதற்குப் பயன்படுகின்ற பொழுது மட்டுமே மூலதனமாக இருக்கின்றன. உற்பத்திச் சாதனங்களை உடைமையாக வைத்திருக்கின்ற முதலாளிகளுக்கும் உற்பத்திச் சாதனங்களை இழந்து தம்முடைய உழைப்புச் சக்தியை விற்பனை செய்யும்படி, அதன் மூலம் உபரி மதிப்பைப் படைக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்ற தொழிலாளர்களுக்கும் இடையில் குறிப்பிட்ட உற்பத்தி உறவுகளின் மொத்தம் மூலதனம் எனப்படும். **மூலதனம் என்பது கூலித் தொழிலாளர்களைச் சுரண்டுவதன் விளைவாக உபரி மதிப்பைப் படைக்கின்ற மதிப்பு** ஆகும்.

மூலதனம் நிலையான மூலதனம் மற்றும் மாறும் மூலதனம் என்று பிரிக்கப்படும். உற்பத்திச் சாதனமாக இருக்கின்ற, ஆரம்பத் தொகையை மாற்றாமல் முழுமையாகவோ, பகுதியாகவோ பண்டங்களுக்கு மாற்றப்படுகின்ற மூலதனத்தின் பகுதி **நிலையான மூலதனம்** என்று சொல்லப்படுகிறது. உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்குவதில் செலவிடப்படுகின்ற மூலதனத்தின் பகுதியைப் பொறுத்த மட்டில் அதன் அளவு உற்பத்திச் செயல்முறையில் அதிகரிக்கிறது. முதலாளி கூலித் தொழிலாளியின் உழைப்புச் சக்தியை வாங்குவதற்குச் செலவிட்ட மதிப்பைக் காட்டிலும் அதிகமான மதிப்பை அந்தத் தொழிலாளி தன்னுடைய உழைப்பின் மூலம் உற்பத்தி செய்கிறார். மூலதனத்தின் இந்தப் பகுதி **மாறும் மூலதனம்** என்று சொல்லப்படுகிறது.

மூலதனத்தை நிலையான மூலதனம், மாறும் மூலதனம் என்று பிரித்து விட்டால் உபரி மதிப்பைப் படைப்பது

மாறும் மூலதனமே தவிர, மொத்த மூலதனம் அல்ல என்பது தெளிவாகும். முதலாளிகள் கூலித் தொழிலாளர் களைச் சுரண்டுவதன் மூலமாக மட்டுமே செல்வத்தைத் திரட்ட முடியும் என்பது இதன் பொருளாகும்.

உபரி மதிப்பின் விகிதமும் அளவும். தொழிலாளர்கள் சுரண்டப் படுகின்ற அளவை எப்படி நிர்ணயிப்பது? அதற்கு உபரி மதிப்பின் விகிதம், உபரி மதிப்பின் அளவு என்னும் இரண்டு குறியீட்டெண்கள் உதவுகின்றன.

உபரி மதிப்பின் விகிதம் என்பது உபரி மதிப்பின் தோற்றுவாய் ஆகிய மாறும் மூலதனத்துக்கு உபரி மதிப்பின் விகிதமாகும். உழைப்புச் சக்தியின் ஒரு நாள் மதிப்பும் ஒரு நாளில் உற்பத்தி செய்யப்படுகின்ற உபரி மதிப்பும் ஒவ் வொரு இனத்திலும் பத்து டாலர்கள் என்று வைத்துக் கொள்வோம். இந்த உதாரணத்தில் உபரி மதிப்பின் விகிதம் 100 சதவிகிதம் ஆகும்.

உபரி மதிப்பின் விகிதத்தை வேலை நாளின் ஒரு பகுதி அடுத்த பகுதியுடன் (உபரி நேரம் மற்றும் அவசியமான நேரம்) கொண்டிருக்கின்ற விகிதத்தின் மூலமாக அல்லது செலவழிக்கப்பட்ட உழைப்பின் ஒரு பகுதி அடுத்த பகுதியுடன் (உபரி உழைப்பு மற்றும் அவசியமான உழைப்பு) கொண்டிருக்கின்ற விகிதத்தின் மூலமாக எடுத்துரைக்க முடியும். எட்டு மணி நேர வேலையில் அவசியமான உழைப்பு நேரம் நான்கு மணி என்றும் உபரி உழைப்பு நேரம் நான்கு மணி என்றும் வைத்துக் கொள்ளுங்கள். இந்த உதாரணத்திலும் உபரி மதிப்பின் விகிதம் 100 சதவிகிதமாக இருக்கும்.

கூலித் தொழிலாளி அவசியமான உழைப்பின் ஒவ்வொரு அலகிலும் முதலாளிக்குச் செய்கின்ற இலவசமான, கூலி

கொடுக்கப்படாத உழைப்பின் அளவை உபரி மதிப்பின் விகிதம் எடுத்துக் காட்டுகிறது. அதனால்தான் உபரி மதிப்பின் விகிதம் சுரண்டலின் அளவு விகிதம் என்று சொல்லப்படுகிறது. ''ஆகவே உபரி மதிப்பு விகிதம் மூலதனம் உழைப்புச் சக்தியைச் சுரண்டுகின்ற அளவைத் துல்லியமாக எடுத்துரைக்கிறது....'' *

முதலாளித்துவத்தின் வளர்ச்சியுடன் உபரி மதிப்பு விகிதமும் அதிகரிக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமெரிக்காவில் பதப்படுத்தும் தொழில்துறையில் அது 130 சதவிகிதமாக இருந்தது. தற்பொழுது இந்த விகிதம் 200 மற்றும் 300 சதவிகிதத்துக்கு இடையில் இருக்கிறது, சில சமயங்களில் இன்னும் அதிகமாகக் கூட இருக்கிறது.

உபரி மதிப்பு விகிதம் கூலித் தொழிலாளி சுரண்டப்படுகின்ற அளவை எடுத்துக் காட்டிய போதிலும் சுரண்டப்படுகின்ற கூலித் தொழிலாளியிடமிருந்து முதலாளி பெற்ற லாபத்தின் தனிமுதலான அளவை வெளியிடவில்லை. இதை உபரி மதிப்பின் அளவிலிருந்து அறிய முடியும்; அது சுரண்டப்படுகின்ற தொழிலாளர்களுடைய எண்ணிக்கை மற்றும் சுரண்டல் விகிதத்தைப் பொறுத்திருக்கிறது. ஒரு தொழிற் சாலையில் உபரி மதிப்பு விகிதமும் அங்கே வேலை செய்கின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையும் எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு உபரி மதிப்பின் அளவு அதிகமாக இருக்கும், ஆகவே முதலாளியின் லாபக் கொள்ளையும் அதிகமாக இருக்கும்.

தனிமுதலான மற்றும் ஒப்பீட்டு உபரி மதிப்பு. அப்படியானால் உபரி மதிப்பின் அளவு அதிகரிப்பது எப்படி? தொழிலாளர்

---

* K. Marx, *Capital*, vol. 1, p. 603.

களின் சுரண்டல் தீவிரப்படுத்தப்படுவது எப்படி? முதலாளிகள் தொழிலாளர்களைச் சுரண்டுகின்ற விகிதத்தை உயர்த்துவதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன.

தொழிலாளியின் வேலை நேரத்தை அதிகப்படுத்துவது முதல் வழியாகும். அவசியமான உழைப்பு நேரம் நிலையாக இருக்கின்ற பொழுது, ஒரு நாளுக்கு உரிய வேலை நேரத்தை அதிகரிக்கின்ற பொழுது உபரி உழைப்பு நேரம் அதிகரிக்கிறது; அது சுரண்டல் விகிதத்தின் அதிகரிப்புக்குத் தவிர்க்க முடியாதபடி இட்டுச் செல்கிறது. உதாரணமாக, முதலாளி வேலை நேரத்தை எட்டு மணியிலிருந்து பத்து மணியாக அதிகரித்தால், அவசியமான உழைப்பு நேரம் (நான்கு மணி) மாறாமலிருக்கின்ற பொழுது, உபரி உழைப்பு நேரம் நான்கு மணியிலிருந்து ஆறு மணியாக அதிகரிக்கிறது. இங்கே உபரி மதிப்பின் விகிதம் 50 சதவிகிதம் அதிகரிக்கிறது, உபரி மதிப்பின் அளவும் அதற்கேற்றவாறு அதிகரிக்கிறது.

அவசியமான உழைப்பு நேரத்தைக் காட்டிலும் வேலை நேரத்தை அதிகரிப்பதன் மூலம் கிடைக்கின்ற உபரி மதிப்பு **தனிமுதலான உபரி மதிப்பு** எனப்படும். சுரண்டல்காரர்களுக்கு மட்டும் சக்தி இருந்தால் அவர்கள் தொழிலாளர்களை 24 மணி வேலை செய்யும்படி பலவந்தப்படுத்தியிருப்பார்கள். ஆனால் அப்படிச் செய்ய முடியாது. ஏனென்றால் மற்ற மனிதர்களைப் போல தொழிலாளர்களும் ஓய்வெடுக்க வேண்டும், உறங்க வேண்டும். ஆகவே இது உழைப்பு நேரத்துக்கு உடலியல் ரீதியாக எல்லைகளை நிர்ணயிக்கிறது. மேலும் சில சமூக வரையறைகளும் இருக்கின்றன. தொழிலாளி தன்னுடைய கலாசார, அறிவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நேரம் வேண்டும். வேலை நேரத்தைக் குறைப்பது பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தின் பிரிக்க முடியாத பகுதியாகும்.

முதலாளிகள் உழைப்பைத் தீவிரப்படுத்துவதன் மூலமாகவும் சுரண்டல் விகிதத்தை அதிகப்படுத்துகிறார்கள். உழைப்பைத் தீவிரப்படுத்துவது என்றால் தொழிலாளி அதே நேரத்தில் அதிகமான சக்தியைச் செலவிடுகிறார், கூடுதலான உபரி மதிப்பைப் படைக்கிறார் என்று அர்த்தம். வேலை நேரத்தை அதிகப்படுத்தினால் தொழிலாளி செலவிடுகின்ற சக்தியைப் போன்று சம அளவான சக்தியை அல்லது இன்னும் அதிகமான சக்தியை அவர் செலவிடுகிறார். இன்று முதலாளிகள் உழைக்கும் மக்களை உச்ச அளவில் சுரண்டுவதற்கு விஞ்ஞான, தொழில்நுட்பவியல் முன்னேற்றத்தை மிகவும் அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள்.

உபரி மதிப்பை அதிகப்படுத்துகின்ற, உழைக்கும் மக்களின் சுரண்டல் விகிதத்தை அதிகப்படுத்துகின்ற இரண்டாவது வழி மொத்த வேலை நேரத்தை அப்படியே வைத்துக் கொண்டு அவசியமான உழைப்பு நேரத்தைக் குறைப்பதாகும்; இது உபரி உழைப்பு நேரத்தின் அதிகரிப்புக்குத் தவிர்க்க முடியாதபடி இட்டுச் செல்கிறது. வேலை நேரம் எட்டு மணியாக மாறாமலிருக்கின்ற பொழுது அவசியமான உழைப்பு நேரம் நான்கு மணியிலிருந்து மூன்று மணியாகக் குறைந்து விடுகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்படியானால் உபரி உழைப்பு நேரம் ஐந்து மணியாக அதிகரிக்கிறது; இப்பொழுது உபரி மதிப்பு விகிதம் 100 சதவிகிதத்திலிருந்து 166 சதவிகிதமாக அதிகரிக்கிறது. உபரி உழைப்பு நேரத்தை அதிகரித்து — அவசியமான உழைப்பு நேரத்தைக் குறைப்பதன் மூலம் அது நடைபெறுகிறது — பெறப்படுகின்ற உபரி மதிப்பு **ஒப்பீட்டு உபரி மதிப்பு** என்று சொல்லப்படுகிறது.

முதலாளி எப்படி அவசியமான உழைப்பு நேரத்தைக் குறைக்கிறார்?

அவசியமான உழைப்பு நேரம் உழைப்புச் சக்தியின்

விலையைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது என்பதை ஏற் கெனவே எழுதியிருக்கிறோம். உழைப்புச் சக்தியின் விலை இன்றியமையாப் பொருட்களின் (உணவு, உடை, வீட்டு வாடகை முதலிவை) விலைவாசியைப் பொறுத்திருக்கிறது. இப்பொருட்களின் விலை குறைகின்ற பொழுது தொழிலாளி தனக்காக உழைக்கின்ற நேரம் குறைகிறது, முதலாளிக்காக உழைக்கின்ற நேரம் அதிகரிக்கிறது. இன்றியமையாப் பொருட்களின் விலையிறக்கம் நுகர்வுப் பொருட்களை உற் பத்தி செய்கின்ற தொழில்துறையில் உற்பத்தித் திறன் அதிகரிப்பதனால் ஏற்படுகிறது. இது உழைப்புச் சக்தியின் விலையைக் குறைக்கிறது, அவசியமான உழைப்பு நேரத் தைக் குறைக்கிறது, ஒப்பீட்டு உபரி மதிப்பை அதிகப் படுத்துகிறது.

உழைப்புச் சக்தியின் விலையைக் குறைப்பதற்காக முதலாளிகள் ஆண்களைக் காட்டிலும் குறைவான கூலி தரப்படுகின்ற பெண்கள், குழந்தைகளுடைய உழைப்பை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். தேசிய இன, வருண இன அடிப்படையில் கூலிகளில் வேறுபாடு நிலவுகிறது.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் அந்நிய நாடு களிலிருந்து வேலை தேடி வருகின்ற தொழிலாளர்களைச் சுரண்டுவதை அதிகமாகக் கடைப்பிடிக்கின்றன. மேற்கு ஐரோப்பாவில் 1980க்களில் அந்நிய நாடுகளைச் சேர்ந்த 20 மில்லியனுக்கும் அதிகமான நபர்கள் வேலை செய்கிறார் கள் என்று ஐ. நா. சபையின் புள்ளிவிவரங்கள் தெரிவிக் கின்றன. அமெரிக்காவில் இந்த எண்ணிக்கை சுமார் 12 மில் லியனாகும். அந்நிய நாட்டுத் தொழிலாளர்கள் அநேகமாக அமைப்பு ரீதியாக இல்லாதிருப்பதும் அவர்கள் முதலாளி களின் காட்டுத்தன நடவடிக்கைகளுக்கு ஈடு கொடுக்க முடியாதிருப்பதும் அவர்கள் தீவிரமாக சுரண்டப்படுவதற்கு முக்கியமான காரணங்களாகும்.

சமூகத்தில் உபரி மதிப்பு எவ்வளவு அதிகமாகப் படைக்கப் படுகிறதோ, அந்த அளவுக்கு முதலாளிகள் அதிகமாக லாபமடைகிறார்கள். சுரண்டல்காரர்களது எல்லாப் பிரிவு களும்—தொழில் முதலாளிகள், வர்த்தகர்கள், பாங்கர் கள், நிலக்கிழார்கள்—தொழிலாளர்கள் படைக்கின்ற மொத்த உபரி மதிப்பிலிருந்து தம்முடைய லாபப் பங்கைப் பெறுகின்றன என்பதை மார்க்ஸ் விஞ்ஞான ரீதியாக நிரூபித்தார். அதன் காரணமாகவே எல்லா முதலாளிகளும் பொதுவான நலனைக் கொண்டிருக்கிறார்கள், தொழிலாளி வர்க்கத்துக்கும் சுரண்டப்படுகின்ற இதர எல்லாப் பிரி வினருக்கும் எதிராக ஐக்கிய முன்னணியை அமைத்திருக் கிறார்கள். அதனால்தான் உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலான போராட்டம் சமரசப்படுத்த முடியாததாகும்.

முதலாளித்துவத் திரட்சியின் பொது விதி. கார்ல் மார்க்ஸ் முதலாளித்துவச் சுரண்டல் முறையை ஆராய்ந்து முதலாளித் துவத் திரட்சியின் பொது விதியை வகுத்தளித்தார்.

மூலதனம் உபரி மதிப்பைப் படைக்கிறது; அதனுடன் பிரிக்க முடியாதபடி இணைந்திருக்கிறது. அதே சமயத்தில் மூலதனம் உபரி மதிப்பிலிருந்து தோன்றுகிறது; உபரி மதிப்பை மூலதனமாக மாற்றுவதன் மூலம் மூலதனத் திரட்சி நடைபெறுகிறது. மூலதனத் திரட்சியின் போது உபரி மதிப்பில் ஒரு பகுதி முதலாளிக்கு லாபம் என்ற வடிவத்தில் கிடைக்கிறது, மறு பகுதி திரட்சி நிதியில் சேர்கிறது. மூலதனத் திரட்சி தன் பங்கிற்கு கூடுதல் நிலையான மூலதனமாகவும் கூடுதல் மாறும் மூலதனமாகவும் பிரிகிறது.

உபரி மதிப்பை சுவீகரிக்க வேண்டும் என்னும் பேராசை யும் முதலாளித்துவப் போட்டியும் முதலாளியை உற்பத்

தியைப் பெருக்குவதற்கும் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வதற்கும், அதாவது நிலையான மூலதனத்தை அதிகப் படுத்துவதற்கும் தூண்டுகின்றன.

மூலதனத் திரட்சி, உற்பத்திப் பெருக்கம் ஆகியவை மூலப் பொருட்கள் இருப்பு, இயந்திரங்கள், உபகரணங் களின் அளவு அதிகரிப்புக்கு இட்டுச் செல்கின்றன. நிலையான மூலதனத்தைப் பொறுத்தமட்டில் மாறும் மூலதனத்தின் பங்கு குறைகிறது. நிலையான மூலதனத் துக்கும் மாறும் மூலதனத்துக்கும் இடையிலான விகிதாச் சாரம் 1:1 என்று இருக்குமானால் திரட்சி நிதியில் பாதி உற்பத்திச் சாதனங்களிலும் மற்றொரு பாதி தொழி லாளர்களுக்கும் செலவிடப்படுகிறது என்று பொருளாகும். இன்று இந்த விகிதாச்சாரம் பெரும்பாலும் 9:1 என்ற அளவில், அதாவது நிலையான மூலதனத்துக்கு 9 அலகுகளும் மாறும் மூலதனத்துக்கு 1 அலகும் என்று இருக்கிறது. தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வது குறைந்து வருகிறது, பல தொழிலாளர்கள் தங்களுடைய உழைப்புச் சக்தியை விற்பனை செய்ய முடியாது என்பது இதன் பொருள். உழைக்கும் மக்களில் அதிகமானவர்கள் மிகையாகி விடுவதால் அவர்கள் தொழிலாளர்களின் சேமப் படையாக இருக்கிறார்கள்; அங்கே வேலையில்லாத் திண் டாட்டம் ஏற்படுகிறது.

தொழிலாளர்களின் சேமப்படை முதலாளித்துவத் திரட்சியின் இன்றியமையாத நிபந்தனைகளில் ஒன்று; அது முதலாளித்துவ உற்பத்தி முறையின் முன்நிபந்தனை. அது இல்லாமல் முதலாளித்துவம் வளர்ச்சி அடைய முடியாது, அது இருப்பதும் சாத்தியமல்ல.

வேலையில்லாத் திண்டாட்டத்தினால் உழைக்கும் மக் களின் சுரண்டல் தீவிரமடைகிறது. முதலாளிகள் தொழி லாளர்களது கூலியைக் குறைப்பதற்கும் அவர்களுடைய

உழைப்பைத் தீவிரப்படுத்துவதற்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பயன்படுத்துகிறார்கள். ஜான் ஸ்டீன்பெக் என்ற நாவலாசிரியர் **கடுஞ் சினக் கனிகள்** (''The Grapes of Wrath'') என்னும் நாவலில் இக்கருத்தைப் பின் வருமாறு தொகுத்துரைக்கிறார்: ''ஒரு வேலை காலியாக இருந்தால் அதற்குப் பத்து நபர்கள் சண்டை போட்டார்கள், குறைந்த கூலி கொடுத்தால் போதும் என்றார்கள். அவன் முப்பது சென்ட் கூலி கேட்டால் எனக்கு இருபத்தைந்து சென்ட் போதும். அவன் இருபத்தைந்து என்று சொல்லும் பொழுது நான் இருபதுக்கு வேலை செய்கிறேன். நான் பட்டினியாக இருக்கிறேன். பதினைந்து கொடுங்கள் போதும். எனக்குச் சாப்பாடு கொடுத்தால் போதும், நான் வேலை செய்கிறேன்.'' *

தொழிலாளர் சேமப்படையின் தோற்றமும் வளர்ச்சியும் முதலாளித்துவ உற்பத்தி முறைக்குரிய மக்கள்தொகையின் பிரத்யேக விதியாகும். உழைக்கும் மக்கள் மூலதனத் திரட்சியுடன் சேர்த்து தம்மைச் சார்புநிலையில் மிகையாக்குகின்ற சாதனத்தையும் மேன்மேலும் அதிகரிக்கின்ற அளவில் உற்பத்தி செய்கின்றனர் என்பது இந்த விதியாகும்.

முதலாளித்துவ உலகத்தில் வேலையில்லாமல் தவிக்கின்ற சேமப்படையின் எண்ணிக்கை பல நூறு மில்லியன்களாகும். இன்று வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் மட்டும் அதன் எண்ணிக்கை 30 மில்லியனுக்கும் அதிகம்.

வேலையில்லாமை அதிகரிப்பது முதலாளித்துவத் திரட்சியின் பொது விதியின் ஸ்தூலமான வெளிப்பாடு ஆகும். இந்த நிகழ்வுப் போக்கிற்கு இரண்டு முனைகள் இருக்கின்றன எனலாம்: ஒரு முனையில் முதலாளிகள் — அவர்களுடைய செல்வம் பெருகிக் கொண்டே இருக்கிறது; மறு

---

* John Steinbeck, *The Grapes of Wrath*, New York, Sun Dial Press, 1941, pp. 386—387.

முனையில் வேலையில்லாதவர்கள் — அவர்களுடைய எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது, அவர்களுடைய வாழ்க்கை நிலைமைகள் மேன்மேலும் நசித்துக் கொண்டிருக்கின்றன. முதலாளித்துவத் திரட்சியின் பொது விதியை மார்க்ஸ் பின்வருமாறு விளக்கினார்: ''சமூகச் செல்வம், செயல்படுகின்ற மூலதனம், அதன் வளர்ச்சியின் அளவும் சக்தியும் மற்றும் ஆகவே பாட்டாளி வர்க்கத்தின் தனிமுதலான அளவும் அதன் உழைப்பின் உற்பத்தித் திறனும் எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, அவ்வளவுக்குத் தொழில் துறை சேமப்படையும் அதிகமாக இருக்கிறது.... உழைக்கின்ற தொழிலாளர் படையுடன் ஒப்பிடுகின்ற பொழுது இந்த சேமப்படை எவ்வளவு அதிகமோ, அவ்வளவு நிர்ணயிக்கப்பட்ட மிகைமக்கள்தொகையின் அளவு அதிகமாக இருக்கிறது; அதன் வறுமை வேலைசெய்பவர்களது உழைப்பின் வேதனைக்குத் தகுந்த விகிதத்தில் இருக்கிறது. முடிவாகத் தொழிலாளி வர்க்கத்தின் அடுக்குவரிசை மற்றும் தொழில் துறை சேமப்படை எவ்வளவு பரந்திருக்கிறதோ அவ்வளவு அதிகாரபூர்வமான ஓட்டாண்டி நிலையும் அதிகமாக இருக்கிறது. **இது முதலாளித்துவத் திரட்சியின் தனிமுதலான பொது விதியாகும்.**'' *

முதலாளித்துவத் திரட்சியின் பொது விதி உழைக்கும் மக்களின் நிலைமைகளில் சார்புநிலை மற்றும் தனிமுதலான நசித்தலில் வெளிப்படுகிறது. தொழிலாளி வர்க்கத்தின் நிலைமைகளில் சார்புநிலை நசிவை தேசிய வருமானத்தில் (நாடு தழுவிய அளவில் புதிதாகப் படைக்கப்பட்டிருக்கின்ற மதிப்பு) தொழிலாளர்களுடைய பங்கு தொடர்ச்சியாகக் குறைந்து வருவதில் பார்க்க முடியும். சுரண்டல் விகிதமும் உபரி மதிப்பின் விகிதமும் அதிகரிப்பது இதற்குக் காரணம். ஒரு

---

* K. Marx, *Capital*, vol. 1, p. 603.

ஆண்டில் சமூகம் உற்பத்தி செய்கின்ற பொருளாயதச் செல்வம் மொத்த சமூக உற்பத்திப் பொருள் எனப்படும். அதில் தொழிலாளர்களுடைய பங்கும், அதாவது அவர்களுடைய மொத்தக் கூலியும் குறைந்து வருகிறது. அமெரிக்காவில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தொழிலாளர்களுக்கு தேசிய வருமானத்தில் 54 சதவிகிதம் கிடைத்தது, இன்று அவர்களுக்கு 40 சதவிகிதம் மட்டுமே கிடைக்கிறது. பிரான்சில் இரண்டாவது உலகப் போருக்கு முன்னர் உழைக்கும் மக்களின் கூலிகளும் வருமானங்களும் புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட பொருளில் 50 சதவிகிதமாக இருந்தது. ஆனால் இன்று அது 34 சதவிகிதமாகக் குறைந்து விட்டது.

உழைக்கும் மக்களின் நிலைமைகளில் தனிமுதலான நசிவு என்பது அவர்களுடைய வாழ்க்கை நிலைமைகள் கூர்ணிப்பதைக் குறிக்கிறது. அது வாழ்க்கைத் தரங்கள் கீழிறங்குவதற்கு இட்டுச் செல்கிறது: மோசமான குடியிருப்புகள், உடை, உணவு, மனைச் சாமான்கள், இதரவற்றில் அடிப்படையான தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாத நிலை. முதலாளித்துவ உலகத்தில் சுமார் 800 மில்லியன் மக்கள் பட்டினியாக இருக்கின்றனர் அல்லது ஊட்டக் குறைவினால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்று ஐ. நா. சபையின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. ஆண்டுதோறும் சுமார் 40 மில்லியன் மக்கள் பட்டினியில் மடிகிறார்கள். உழைப்பை மிகவும் தீவிரப்படுத்துகின்ற பொழுது தொழிலாளர்கள் ஊனமடைதல் அதிகரிக்கிறது; தொழில் சம்பந்தமான நோய்களும் அதிகரிக்கின்றன. ஏராளமான தொழிலாளர்கள் சேரிகளில், குடியிருப்பதற்குத் தகுதியற்ற வீடுகளில் வசிக்கிறார்கள்.

உழைக்கும் மக்களுடைய வாழ்க்கைத் தேவைகள் அதிகரிப்பதற்கும் பொருளாயதச் செல்வத்தில் அவர்

களுடைய மெய்யான நுகர்வு மட்டத்துக்கும் இடையில் மாபெரும் வேறுபாடு இருப்பது முதலாளித்துவ உலகத்தின் குறியடையாளமாகும். இந்த வேறுபாடு இன்னும் அதிகரித்து வருகிறது. பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தின் விளைவாகக் கூலி ஓரளவு உயர்ந்திருக்கிறது, நுகர்வு மட்டமும் அதிகரித்திருக்கிறது. ஆனால் உழைக்கும் மக்களில் பெரும்பான்மையானவர்களுடைய வாழ்க்கைத் தரம் அதிகாரபூர்வமான ''வறுமைக் கோட்டுக்குக்'' கீழேதான் இருக்கிறது.

முதலாளித்துவத் திரட்சியின் பொது விதியின் செயல்பாடு உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலுள்ள முரணியல்பை அதிகப்படுத்துகிறது; முதலாளித்துவ அமைப்பு புரட்சியின் மூலம் வீழ்ச்சியடைவதற்கு அது தவிர்க்க முடியாதபடி இட்டுச் செல்லும். தற்பொழுது முதலாளித்துவ உலகத்தில் இரண்டு எதிர்ப் போக்குகள் தலைமையாக இருக்கின்றன: 1) தொழிலாளி வர்க்கத்தின் நிலைமைகள் க்ஷீணமடைதலை நோக்கிய தலைமையான போக்கு — இது மூலதனத் திரட்சியின் செயல்முறையில் உள்ளுறையாக இருக்கின்ற போக்கு ஆகும்; 2) முதலாளித்துவ அமைப்புக்குள்ளே வளர்ச்சியடைகின்ற சமூக சக்திகளிடமிருந்து பிறந்த எதிர்ப் போக்கு. இரண்டாவது போக்கு தொழிலாளி வர்க்கமும் அதன் கூட்டாளிகளும் அமைப்பு ரீதியாக வளர்ச்சியடைவதிலும் அவர்களுடைய சமூக உணர்வு முதிர்ச்சியடைவதிலும் வெளிப்படுகிறது. முதலாளித்துவத்தைப் புரட்சியின் மூலமாக ஒழிப்பதே சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறையை அகற்றுவதற்கு ஒரே வழி என்ற உண்மையைத் தொழிலாளி வர்க்கம் மேன்மேலும் உணர்ந்து வருகிறது.

வி. இ. லெனின் வகுத்தளித்த ஏகாதிபத்தியத் தத்துவம். இருபதாம் நூற்றாண்டு தொடங்கிய பொழுது முதலாளித்துவம் ஏகாதிபத்தியக் கட்டத்தினுள் நுழைந்தது. லெனின் தன்னுடைய **ஏகாதிபத்தியம் — முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்** *(1916)* என்னும் புத்தகத்தில் முதலாளித்துவ வளர்ச்சியின் இக்கட்டத்தைப் பற்றிய மார்க்சியப் பகுப்பாய்வை முதல் தடவையாகச் செய்தார். அவர் ஏகாதிபத்தியத்தின் பொருளாதார, அரசியல் சாராம்சத்தை வெளியிட்டு, அதன் குணப்படுத்த முடியாத சமூக நோய்களையும் தீமைகளையும் அம்பலப்படுத்தினார்; அது தவிர்க்க முடியாதபடி வீழ்ச்சியடைவதற்குரிய நிலைமைகளை எடுத்துக் காட்டினார். ஏகாதிபத்தியத்தைப் பற்றி லெனின் எழுதிய நூல் மார்க்ஸ் எழுதிய மூலதனம் நூலின் நேரடியான தொடர்ச்சியாக இருந்தது. ஏகாதிபத்தியம் மற்றும் சோஷலிசப் புரட்சியைப் பற்றிய லெனினுடைய தத்துவம் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் பொருளாதாரத்தின் வளர்ச்சியில் புதிய கட்டத்தைக் குறித்தபடியால் லெனின் விஞ்ஞானம் என்ற முறையில் மார்க்சியத்தை வளப்படுத்தினார். ஏகாதிபத்தியத்தைப் பற்றிய லெனினுடைய தத்துவம் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆவணங்களில், சகோதர மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் வெளியீடுகளில், கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளின் சர்வதேச மாநாடுகளில் மேலும் வளர்த்துக் கூறப்பட்டிருக்கின்றது.

ஏகாதிபத்தியம் ஒரு புதிய சமூக-பொருளாதார உருவாக்கம் அல்ல என்பதை லெனின் நிரூபித்தார். இது

அதே பழைய முதலாளித்துவமே, அதே பழைய பொருளாதார விதிகளுக்குத் தகுந்தபடியே இது இயங்குகிறது; உற்பத்திச் சாதனங்களில் முதலாளித்துவ உடைமை, முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் என்னும் அதே அடிப்படையின் மீது நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் முதலாளித்துவத்தின் சாராம்சம் மாறவில்லை; ஏனென்றால் உபரி மதிப்பின் உற்பத்தியும் மூலதனம் கூலியுழைப்பைச் சுரண்டுவதன் மூலம் முதலாளிகள் அதை சுவீகரித்துக் கொள்வதும் அதன் அடிப்படை விதியாக இன்னும் இருக்கிறது. ஆகவே முதலாளித்துவத்தின் கீழ் செயல்படுகின்ற எல்லா அடிப்படை விதிகளும் அதன் எல்லா அம்சங்களும் ஏகாதிபத்திய சகாப்தத்தில் மாறாமலிருக்கின்றன.

ஆனால் ஏகாதிபத்தியத்தின் குறியடையாளமான சில அம்சங்களும் இருக்கின்றன. அவை பின்வருபவை:

1) உற்பத்தி மற்றும் மூலதனக் குவிப்பு மிகவும் அதிகரித்து ஏகபோகங்களை ஏற்படுத்தியது, அவை பொருளாதாரத்தில் தீர்மானகரமான பாத்திரத்தை வகிக்கின்றன;

2) வங்கி மூலதனம் தொழில்துறை மூலதனத்துடன் இணைவதன் அடிப்படையில் நிதி மூலதனமும் நிதித்துறைச் சிலராட்சியும்(oligarchy) உருவாகின்றன;

3) சரக்கு ஏற்றுமதியிலிருந்து வேறுபட்ட முறையில் மூலதனத்தின் ஏற்றுமதி சிறப்பான முக்கியத்துவத்தைப் பெறுகிறது;

4) உலகத்தைப் பிரித்துக் கொள்கின்ற நோக்கமுடைய முதலாளிகளின் சர்வதேச ஏகபோகக் கூட்டணிகள் உருவாகின்றன;

5) முக்கியமான முதலாளித்துவ நாடுகள் உலகத்தைப் பிரதேச ரீதியாகத் தமக்குள் பிரிவினை செய்து கொள்கின்றன.

உற்பத்தி மற்றும் மூலதனக் குவிப்பு. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் உற்பத்தியின் தொழில்நுட்ப அடிப்படையில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டன; இவற்றின் விளைவாக முதலாளித்துவம் ஒரு புதிய வளர்ச்சிக் கட்டத்திற்குள் நுழைந்தது. விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றம் தொழில்துறைப் பிரிவுகளின் வளர்ச்சியை விரைவுபடுத்தியது. எஃகை உருக்குவதில் புதிய முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டன; உள் எரி எஞ்சின்கள், நீராவி டர்பைன்கள் மற்றும் மின்சார மோட்டார்கள் முக்கியத்துவம் பெற்றன; புதிய போக்குவரத்து மற்றும் தொடர்புச் சாதனங்களுடன் சேர்ந்து புதிய தொழில்துறைகள் (பெட்ரோலியம், இரசாயனத் தொழில் மற்றும் மின் சக்திப் பொறியியல்) தோன்றின. தொழில்துறையில் முக்கியமான தொழில்நுட்ப மற்றும் கட்டமைவு மாற்றங்கள் ஏற்பட்டன; அவற்றின் விளைவாக பெரும் தொழில் நிறுவனங்களின் முக்கியத்துவம் அதிகரித்தது. முதலாளித்துவ நிறுவனங்களுக்கு இடையில் போட்டி நீடித்தது, ஆனால் அதன் நிலைமைகள் மாறி விட்டன; இப்பொழுது மாபெரும் நிறுவனங்கள் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை விழுங்கின. மிகை உற்பத்திப் பொருளாதார நெருக்கடிகள் மேன்மேலும் அதிகமாக ஏற்பட்டன; வேலையில்லாதவர் எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது. நாசகரமான போட்டி உற்பத்திக் குவிப்புப் போக்கிற்கு, அதாவது முதலாளித்துவ ஏகபோகங்களுக்குச் சொந்தமான பெரிய மற்றும் இராட்சத நிறுவனங்களில் உற்பத்திச் சாதனங்கள், தொழிலாளர்கள், சரக்குகளின் உற்பத்தி ஆகியவை ஒருமுனைப்படுவதற்குத் தவிர்க்க முடியாதபடி இட்டுச் சென்றது.

ஏகபோகம் என்பது உச்ச லாபங்களை அடைவதற்காக ஒரு பெரிய முதலாளியிடம் (அல்லது சில முதலாளிகளைக் கொண்ட கூட்டணியிடம்) ஒரு குறிப்பிட்ட ரகத்தைச்

சேர்ந்த சரக்குகளின் உற்பத்தி மற்றும் விற்பனையில் கணிசமான பகுதி குவிந்திருத்தல் ஆகும்.

ஏகபோகங்கள் பல வடிவங்களில் செயல்படுகின்றன. இவற்றில் கார்ட்டெல், சிண்டிகேட், டிரஸ்ட், கன்சொர்ன் ஆகியவை மிக முக்கியமான வடிவங்களாகும். 1970க்களின் நடுப்பகுதியில் சுமார் 350 மாபெரும் ஏகபோகக் கம்பெனிகளில் — முதலாளித்துவ உலகத்தைச் சேர்ந்த கம்பெனிகளின் மொத்த எண்ணிக்கையில் இவற்றின் பங்கு 0.002 சதவிகிதம் மட்டுமே — மொத்த தொழிலாளர்களில் மூன்றில் இரண்டு பங்கும், மூலதனம் மற்றும் லாபத்தில் சுமார் 70 சதவிகிதமும் குவிக்கப்பட்டிருந்தன.

ஏகபோகங்களின் ஆதிக்கம் பொதுவாக போட்டிக்கு முடிவு கட்டுவதில்லை; ஆனால் அதன் களத்தைக் குறுக்குகிறது; உண்மையில் இன்னும் தீவிரமான மோதல்களைத் தூண்டுகிறது. ஏகபோகங்கள் மிகை லாபங்களை அடைவதற்காக எப்பொழுதும் ஒன்றையொன்று குரல்வளையை நெறித்துக் கொள்கின்றன. ஏகபோகமல்லாத நிறுவனங்களுக்குக் கிடைக்கின்ற லாபங்களைப் போல இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிக லாபம் ஏகபோகங்களுக்கு வழக்கமாகக் கிடைக்கிறது. ஏகபோக நிறுவனங்கள் தம்மால் தயாரிக்கப்படுகின்ற சரக்குகளுக்கு அதிகமான விலைகளை நிர்ணயிப்பது இத்தகைய மிகை லாபங்களுக்கு முக்கியமான காரணியாகும்.

நிதி மூலதனமும் மூலதன ஏற்றுமதியும். தொழில்துறையில் உற்பத்திக் குவிப்பும் ஏகபோகங்களின் தோற்றமும் வங்கி ஏகபோகங்களை அல்லது நிதி மூலதனத்தைத் தவிர்க்க முடியாதபடி ஏற்படுத்துகின்றன. ஏகபோகத் தொழில்துறை மூலதனம் ஏகபோக வங்கி மூலதனத்துடன் இணைகின்ற

பொழுது நிதி மூலதனம் எனப்படும். ''உற்பத்தியின் ஒன்றுகுவிப்பு; அதிலிருந்து ஏகபோகம் எழுதல்; வங்கிகள் தொழில்துறையுடன் இணைதல் அல்லது ஒன்றுகலத்தல் — இதுதான் நிதி மூலதனத்தின் உதயத்தினுடைய வரலாறு; இதுதான் நிதி மூலதனம் என்ற கருத்தினத்தின் உள்ளடக்கம்'' என்று லெனின் எழுதினார்.* நிதி மூலதனம் நிதித்துறைச் சிலராட்சியிடம் குவிந்திருக்கிறது. பொருளாதாரத்தின் எல்லாப் பிரிவுகளிலும் ஆதிக்கம் செலுத்தி பொருளாதாரத்திலும் அரசியலிலும் முக்கியமான பாத்திரம் வகிக்கின்ற முதலாளி வர்க்கத்தின் சிறு குழு சிலராட்சி எனப்படும்.

வங்கி மூலதனம் தொழில்துறை மூலதனத்துடன் இணைந்தன் விளைவாக மாபெரும் கூட்டுக் கம்பெனிகள் ஏற்பட்டன. அவை வெகு சீக்கிரத்தில் மற்ற நாடுகளிலும் தொழில்களை அமைத்தன. அவற்றின் மூலதன வளர்ச்சிக்கும் உள்நாட்டில் முதலீடு செய்கின்ற குறுகிய வாய்ப்புகளுக்கும் இடையில் மேன்மேலும் அதிகரிக்கின்ற இடைவெளி ஏற்பட்டது. இப்பொழுது முதலாளிகள் மற்ற நாடுகளுக்கு, குறிப்பாக பொருளாதார ரீதியில் பலவீனமான நாடுகளுக்கு மூலதனத்தை ஏற்றுமதி செய்தார்கள், அங்கே தம்முடைய ஏகபோக கூட்டுக் கம்பெனிகளின் கிளைகளை அமைத்தார்கள், அந்த நாடுகளின் இயற்கை வளங்களைக் கொள்ளையடித்து மலிவான உழைப்புச் சக்தியைச் சுரண்டினார்கள். ''முதலாளித்துவம் முதலாளித்துவமாகவே இருக்கிற வரை, உபரி மூலதனமானது அந்த நாட்டின் மக்கள் பெருந்திரளினரது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகப் பயன்படுத்தப்பட மாட்டாது, ஏனென்றால் இது முதலாளிகளுடைய லாபங்களைச் சரிந்து விழச் செய்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 4, பக்கம் 102.

வதாகி விடும்; லாபங்களை அதிகமாக்கும் பொருட்டு பிற்பட்ட நாடுகளுக்கு மூலதனத்தை ஏற்றுமதி செய்வதற்கே உபரி மூலதனம் பயன்படுத்தப்படும்'' என்று லெனின் எழுதினார்.* இவ்வாறாக, மூலதன ஏற்றுமதி இரண்டு வகையில் சுரண்டுகிறது: மிகை மூலதனம் தலைமை நாட்டின் மக்களுடைய நலன்களுக்கு உபயோகிக்கப்படுவதில்லை; மற்ற நாடுகளில், குறிப்பாக பொருளாதார ரீதியில் பலவீனமான நாடுகளில் முதலீடு செய்யப்படுகின்ற பொழுது அது அவற்றைச் சுரண்டுகின்ற கருவியாகப் பயன்படுகிறது; அவற்றின் சுதந்திரமான வளர்ச்சியைத் தடுக்கிறது.

உலகம் பொருளாதார மற்றும் பிரதேச ரீதியில் பிரிக்கப்படுதல். மூலதன ஏற்றுமதி பன்னாட்டு ஏகபோகக் கூட்டணிகளை உருவாக்குகிறது. பன்னாட்டு ஏகபோகங்கள் எனப்படுபவை மாபெரும் ஏகபோகக் கூட்டுக் கம்பெனிகள்; முதலாளித்துவ உலகத்தின் பரந்த பிரதேசங்களில் அல்லது அந்த உலகம் முழுவதிலும் அவை செயல்படுகின்றன. அவை முதலாளித்துவப் போட்டியில் வெற்றி பெற்று மாபெரும் பன்னாட்டுக் கார்ப்பரேஷன்களாக வளர்ச்சியடைந்திருக்கின்றன. அவை சர்வதேச ரீதியில் உற்பத்தியின் தனித் தேர்ச்சியையும் கூட்டுறவையும் இன்னும் சிறப்பான, திறமையான முறையில் உபயோகிக்கின்றன, பேரளவான சர்வதேச நடவடிக்கைகளின் மூலம் கூடுதலான லாபங்களை அடைகின்றன, தொழில்நுட்பவியல் துறையில் புதிய கண்டுபிடிப்புகளை ஏகபோகமாக வைத்துக் கொள்கின்றன. இக்காரணங்களால் அவை முதலாளித்துவப் போட்டியில் வெற்றியடைகின்றன.

உலகத்தைப் பொருளாதார ரீதியில் பிரிப்பது ஏகபோகங்

---

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, தொகுதி 4, பக்கம் 127.

களுக்கு இடையில் சந்தைகளுக்கும் செல்வாக்கு மண்டலங்களுக்கும் மூலதன ஏற்றுமதிக்கும் நடைபெறுகின்ற போட்டியை அகற்றி விடுவதில்லை. ஏகாதிபத்திய நாடுகள் உலகத்தைப் பிரதேச ரீதியில் பிரிக்கின்ற போராட்டத்தைத் தீவிரப்படுத்துகின்றன.

ஏகாதிபத்திய சகாப்தத்தில் பொருளாதார மற்றும் பிரதேச அடிப்படையில் உலகத்தைப் பிரிவினை செய்தல் காலனியாதிக்கப் பேரரசுகள் தோன்றுவதற்கு வழிவகுத்தது; அதன் விளைவாகத் தலைமை நாடுகள் காலனி நாடுகளிலும் சார்பு நாடுகளிலும் இருந்த மக்களினங்களை ஈவிரக்கமில்லாமல் சுரண்டின. ஏகபோக முதலாளித்துவத்தின் காலனியாதிக்க அமைப்பு முன்னெப்போதும் தோன்றியிராத காலனியாதிக்க அடிமைத்தனத்தின் மாபெரும் அமைப்பாக இருந்தது; உலகத்திலுள்ள மக்களினங்களில் பெரும்பான்மையானவை அதற்கு உட்பட்டிருந்தன. இந்த அமைப்பு நேரடியான ஒடுக்குமுறையை அடிப்படையாகக் கொண்ட சுரண்டலைப் பொருளாதார ரீதியில் அடிமைப்படுத்துதலுடன் இணைத்திருந்தது.

பிற்காலத்தில் தோன்றிய தேசிய விடுதலைப் புரட்சிகள் ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க அமைப்பை — அதன் மூலச்சிறப்பான வடிவத்தில் — ஒழித்தன. 1970க்களில் காலனியாதிக்கப் பேரரசுகளுக்கு முடிவு கட்டப்பட்டது. இன்று, எஞ்சியுள்ள சில காலனிகளில் உள்ள மக்கள் உலக மக்கள் தொகையில் 0.3 சதவிகிதம் மட்டுமே, அவற்றின் பிரதேசம் சுமார் 1 மில்லியன் சதுர கிலோமீட்டர்கள் அல்லது உலகப் பிரதேசத்தில் 0.7 சதவிகிதம் மட்டுமே. ஆனால் பழைய காலனியாதிக்கத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு புதிய காலனியாதிக்கம் ஏற்பட்டிருக்கிறது. புதிதாக விடுதலை அடைந்த பல நாடுகள் பன்னாட்டு ஏகபோகங்களின் கொடுமையான பொருளாதார ஆதிக்கத்தில் சிக்கியிருக்கின்றன.

வரலாற்றில் ஏகாதிபத்தியத்தின் இடம். முதலாளித்துவத்தின் ஏகபோகக் கட்டத்தைப் பற்றி லெனினுடைய பகுப்பாய்வு அதன் அடிப்படையான பொருளாதாரக் கூறுகளைத் தவிர உலக வரலாற்றில் ஏகாதிபத்தியம் வகிக்கின்ற இடத்தைப் பற்றிய வரையறுப்பையும் தருகிறது. வரலாற்று ரீதியில் ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச, இறுதிக் கட்டம் என்று லெனின் கூறினார். வரலாற்றில் ஏகாதிபத்தியத்தின் இடத்தைப் பற்றிய லெனினுடைய தத்துவம் முதலாளித்துவம் புரட்சியின் மூலமாக ஒழிக்கப்படுவது தவிர்க்க முடியாதது என்னும் மார்க்சின் போதனையின் தொடர்ச்சியாகவும் வளர்ச்சியாகவும் இருக்கிறது.

லெனின் முதலாளித்துவ உற்பத்தி முறையின் எல்லா முரண்பாடுகளும் ஏகாதிபத்தியத்தின் கீழ் மிகவும் தீவிரமடைவதைச் சுட்டிக்காட்டி அது முதலாளித்துவத்தின் வளர்ச்சியில் ஒரு விசேஷமான வரலாற்றுக் கட்டம் என்று குறிப்பிட்டார். அதன் தனித்தன்மைக்கு மூன்று அம்சங்கள் இருக்கின்றன: ஏகாதிபத்தியம் என்பது முதலாவதாக, ஏகபோக முதலாளித்துவம்; இரண்டாவதாக, புல்லுருவித்தனமான (சுரண்டுகின்ற) அல்லது அழுகி வரும் முதலாளித்துவம்; மூன்றாவதாக, அது இறக்குந் தறுவாயிலுள்ள முதலாளித்துவம். புல்லுருவித்தனம் என்பது ஏகாதிபத்தியத்தின் சாரத்தில், ஏகபோகங்களின் ஆதிக்கத்தில், நிதித்துறைச் சிலராட்சியின் ஒடுக்குமுறையில் உள்ளுறையான முதலாளித்துவத்தின் அழுகுதலுக்கு மற்றொரு வார்த்தையே. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் ஒரு காரணியாக இருந்தது முடிந்து விட்டது; அவை சமூக முன்னேற்றத்துக்கு முன்னெப்போதுமில்லாத மாபெரும் தடையாக மாறிவிட்டன என்பது இதன் பொருளாகும்.

ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் முரண்பாடுகளை

உச்ச கட்டத்துக்குக் கொண்டு வந்து விட்டது. முதலாளித்துவ சகாப்தத்தின் குணாம்சமான பழைய முரண்பாடுகள் மிகவும் தீவிரமடைந்திருக்கின்றன. அதே சமயத்தில் புதிய முரண்பாடுகளும் தோன்றியிருக்கின்றன. முதலாளித்துவத்தின் அடிப்படையான முரண்பாடு உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் சுவீகரிப்பின் தனியார் முதலாளித்துவ வடிவத்துக்கும் இடையிலான முரண்பாடாகும். அது மிகவும் ஆழமடைகிறது.

முதலாளித்துவத்தின் அடிப்படையான முரண்பாடு ஆழமடைதல் உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலான போராட்டத்தை மிகவும் தீவிரப்படுத்தியிருக்கிறது. நிதி மூலதனம் நுகர்வுப் பொருட்களின் விலைகளை ஏகபோகமாக மிகவும் உயர்த்தி நிர்ணயிப்பதன் மூலம் தொழிலாளர்களைச் சுரண்டுவதைத் தீவிரப்படுத்துகிறது; அதன் மூலம் ஒரு பக்கத்தில் உழைப்புச் சக்தியின் விலைக்கும் மறு பக்கத்தில் கூலிக்கும் இடையிலுள்ள இடைவெளி அதிகரிக்கிறது. முதலாளித்துவச் சுரண்டல் தீவிரமடைகின்ற பொழுது பாட்டாளி வர்க்கம் தன்னுடைய புரட்சிகரமான போராட்டத்தையும் வேலைநிறுத்த நடவடிக்கைகளையும் அதிகப்படுத்துகிறது. தொழிலாளி வர்க்கத்தின் போராட்டம் பொருளாதார மற்றும் அரசியல் துறைகளிலும் தீவிரமடைகிறது.

முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலுள்ள மோதல் வெடிப்பு நிலைக்கு வந்து விட்ட முதலாளித்துவத்தின் ஒரே முரண்பாடு என்று கூற முடியாது. ஏகாதிபத்தியம் வெவ்வேறு சமூகப் பிரிவுகளை, தேசிய இனங்களை, நாடுகளைச் சேர்ந்த மக்களின் ஜீவாதாரமான நலன்களுடன் மோதுகிறது. பெருந்திரளான மக்கள், பரந்த சமூக இயக்கங்கள் மற்றும் மொத்த மக்கள் இனங்கள் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக மேன்மேலும்

அதிகமாகக் கிளர்ந்தெழுகின்றன. இது எல்லா ஜனநாயக சக்திகளையும் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் ஒரே ஏகபோக எதிர்ப்பு நீரோட்டமாக இணைப் பதற்குரிய சாதகமான நிலைமைகளை உருவாக்குகிறது.

ஏகாதிபத்திய நாடுகளுக்கும் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவில் புதிதாக விடுதலையடைந்த (முந்திய காலனி) நாடுகளுக்கும் இடையில் மேன்மேலும் தீவிரமான மோதல்கள் ஏற்படுகின்றன. புதிய காலனியாதிக்கத்துக்கு அவற்றின் எதிர்ப்பு வளர்ச்சியடைந்து வருகிறது.

முதலாளித்துவ ஏகபோகங்களின் நலன்களுக்கு இடை யிலான மோதல் ஏகாதிபத்திய அரசுகளுக்கு இடையிலான முரண்பாடுகளைத் தீவிரப்படுத்துகிறது. அவற்றுக்கு இடை யில் நடைபெறுகின்ற கடுமையான போராட்டம் ஏகாதி பத்தியத்தை பலவீனப்படுத்துகிறது, அதன் அடிப்படை களைக் குலைக்கிறது.

ஏகாதிபத்தியத்தை இறக்குந் தறுவாயிலுள்ள முதலா ளித்துவமாக மாற்றுவதற்கு முற்படுகின்ற முரண்பாடுகளில் இவை முக்கியமானவை ஆகும். ஆனால் முதலாளித்துவம் சோஷலிசப் புரட்சி இல்லாமல் தானாகவே அழிந்து விடும் என்பது இதன் அர்த்தமல்ல. ஏகபோக முதலாளித்துவ அமைப்பு முதலாளித்துவத்தின் எல்லா முரண்பாடுகளையும் அதிகமாகத் தீவிரப்படுத்தி பாட்டாளி வர்க்கத்தை சோஷலிசப் புரட்சிக்குக் கொண்டு வருகிறது; உண்மையைச் சொல்வதென்றால் அதைத் தவிர்க்க முடியாதபடிச் செய் கிறது.

சமமற்ற பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சி விதி. தனிப்பட்ட தொழில் நிறுவனங்கள், தொழில்துறைப் பிரிவு கள் மற்றும் மொத்த நாடுகளின் சமமற்ற வளர்ச்சி

முதலாளித்துவத்தின் குணாம்சமாக எப்பொழுதுமே இருந்திருக்கிறது. அத்தகைய சமமற்ற வளர்ச்சி முதலாளித்துவ உற்பத்தியில் நடைபெறுகின்ற போட்டி, அராஜகத்தின் விளைவாகும். ஆனால் ஏகபோகத்துக்கு முந்திய கட்டத்தில் முதலாளித்துவம் அதிகச் சமதளமான முறையில் பாய்ச்சல்கள் இல்லாமல் வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது. அன்று முதலாளித்துவ அரசுகளுக்கு மத்தியில் பிரிக்கப்படாத பிரதேசம் இன்னும் அதிக அளவில் இருந்தது. முதலாளித்துவம் இன்னும் விரிவாக வளர்ச்சியடைய முடிந்த காரணத்தால் பல்வேறு முதலாளித்துவ நாடுகளுடைய நலன்கள் இன்றுள்ளதைப் போல மூர்க்கமாக மோதிக் கொள்ளவில்லை. மேலும், வளர்ச்சிக் குறைவான நாடுகள் பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைந்த நாடுகளை எட்டிப் பிடிப்பதற்கு அன்று அதிகக் காலம் வேண்டியிருந்தது.

ஏகாதிபத்தியத்தின் தோற்றம் இந்த நிலைமையை மாற்றியது. சில ஏகாதிபத்திய நாடுகள் ஒப்புநோக்கில் குறைவான காலகட்டத்தில் மற்ற நாடுகளை முந்திச் செல்வதற்கு விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியும் ஏகபோகங்களின் மூலதன வளர்ச்சியும் உதவியளித்தன. முதலாளித்துவப் பாதையில் ஓரளவுக்குக் காலதாமதமாக நுழைந்து ஆனால் புதிய தொழில்நுட்பத்தையும் அதிக முற்போக்கான உற்பத்தி முறைகளையும் பயன்படுத்திய நாடுகள் சில ஆண்டுகளில் வேகமாக முன்னேற்றமடைந்தன. இத்தகைய சமமற்ற வளர்ச்சி பாய்ச்சல் தன்மையை அடைந்தது.

ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையில் போட்டி நடைபெறுகின்ற மூன்று தலைமையான கேந்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றன: அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா மற்றும் ஜப்பான். இவற்றுக்கு இடையில் சந்தைகளுக்கு, மூலதனத்தை முதலீடு செய்யக் கூடிய பிரதேசங்களுக்கு, மூலப்பொருட்களின் தோற்றுவாய்களுக்கு, விஞ்ஞான,

தொழில்நுட்ப முன்னேற்றத்தின் கேந்திரமான துறைகளில் தலைமைக்குப் போட்டி அதிகரித்து வருகிறது.

ஏகாதிபத்திய சகாப்தத்தில் முதலாளித்துவ நாடுகளில் சமமற்ற பொருளாதார வளர்ச்சியுடன் அவற்றின் அரசியல் வளர்ச்சியின் சமமற்ற தன்மை, அதாவது முதலாளித்துவ உலகத்தின் பல்வேறு நாடுகளில் அரசியல் முரண்பாடுகள் மற்றும் புரட்சிகரமான பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சிக்குரிய சமமற்ற தன்மை நெருக்கமாக இணைந்திருக்கிறது. பாட்டாளி வர்க்க சோஷலிசப் புரட்சிக்கு, உலக முதலாளித்துவ அமைப்பை அதன் பலவீனமான இடங்களில் நொறுக்குவதற்கு உரிய நிலைமைகளை ஏற்படுத்துகிறது.

ஏகாதிபத்தியத்தின் கீழ் சமமற்ற பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சி விதியின் அடிப்படையில் சோஷலிசம் முதலில் சில முதலாளித்துவ நாடுகளில் அல்லது ஒரே ஒரு நாட்டில் கூட வெற்றி பெற முடியும் என்று லெனின் முடிவு செய்தார். அந்த மகத்தான வாய்ப்பு ருஷ்யாவுக்குக் கிடைத்தது. அங்கே 1917இல் நடைபெற்ற மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி லெனினுடைய தீர்க்கதரிசனம் நிறைந்த முடிவை நிரூபித்தது.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி அதன் மொத்த அமைப்பையும், பொருளாதாரம், அரசியல், சித்தாந்தம், கலாசாரம் ஆகிய அதன் எல்லா அம்சங்களையும் பாதிக்கிறது. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி ஒரு நீண்ட வரலாற்றுப் பாதையில் செல்கிறது; அது மொத்த முதலாளித்துவ அமைப்பின் வீழ்ச்சி மற்றும் சோஷலிச சமூகத்தின் பிறப்பு*

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 7, பக்கம் 270 பார்க்க.

என்னும் தடுக்க முடியாத நிகழ்வுப் போக்கைத் தொடங்கியது.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி இரண்டு கட்டங்களைக் கடந்த பிறகு இப்பொழுது மூன்றாவது கட்டத்திற்குள் நுழைந்திருக்கிறது.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் முதல் கட்டம் முதல் உலகப் போர் *(1914—1918)* மற்றும் ருஷ்யாவில் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் *(1917)* வெற்றியுடன் பொருந்துகிறது. இக்கட்டத்தில் ருஷ்யாவின் உழைக்கும் மக்கள் லெனினால் தலைமை தாங்கப் பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் உலகத்தின் ஆறிலொரு பகுதியுள்ள பிரதேசத்தில் முதலாளித்துவத்தை ஒழித்து தம்முடைய சொந்த ஆட்சியதிகாரத்தை நிறுவி சோஷலிச சமூகத்தை நிர்மாணிக்க ஆரம்பித்தார்கள். அந்த மகத்தான சம்பவங்கள் மனிதகுலத்தின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற சகாப்தத்தைத் தொடங்கின.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இரண்டாவது கட்டத்தை இரண்டாவது உலகப் போரும் *(1939—1945)* அதற்குப் பிறகு ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் சில நாடுகளில் ஏற்பட்ட சோஷலிச மாற்றங்களும் தூண்டின. அந்த நாடுகள் பின்னர் உலக சோஷலிச அமைப்பை உருவாக்கின. காலனியாதிக்க அமைப்பில் ஏற்பட்ட நெருக்கடி ஆழமடைந்ததும் அதன் வீழ்ச்சி தொடங்கியதும் இக்கட்டத்தின் குறியடையாளமாகும்.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியில் மூன்றாவது கட்டம் *1950*க்களின் நடுப்பகுதியில் ஏற்பட்டு இன்றுவரை நீடிக்கிறது. இது உலகப் போருடன் சம்பந்தப்பட்டிராமல் முதலாளித்துவத்துக்கும் சோஷலிசத்துக்கும் இடையில் உள்ள சமாதான ரீதியான போட்டியின் நிலைமைகளில்

நடைபெறுவது இக்கட்டத்தின் குணாம்சமாகும்.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் பிரதான அம்சங்கள் பின்வருபவை:

— உலகம் சோஷலிசம், முதலாளித்துவம் என்னும் இரண்டு நேரெதிரான சமூக-பொருளாதார அமைப்பு களாகப் பிரிக்கப்பட்டிருப்பதும் அவற்றுக்கு இடையில் நடை பெறுகின்ற போராட்டமும்;

— ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க அமைப்பில் ஏற் பட்டிருக்கின்ற நெருக்கடியும், அந்த அமைப்பின் சீர்குலை வும் வீழ்ச்சியும்;

— முதலாளித்துவத்தின் உள்முரண்பாடுகள், ஏகாதிபத் திய நாடுகளுக்கு இடையிலான முரண்பாடுகள் தீவிரமடைத லும், அதன் பொருளாதார ஸ்திரமற்ற நிலை அதிகரிப்பதும் அழுகுதலும்;

— முதலாளி வர்க்க அரசியல், சித்தாந்த நெருக்கடி ஆழமடைதல், ஏகாதிபத்தியம் முன்னர் மனித சமூகத்தின் பெரும்பான்மை மீது கொண்டிருந்த வரம்பில்லாத ஆதிக்கத் தின் அழிவு, முதலாளித்துவச் சுரண்டல் களம் மேன் மேலும் சுருங்குதல்.

இன்று முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் அடிப் படையான அம்சங்கள் பல்விதமான வழிகளில் வெளிப்படு கின்றன. முதலாவதாக, உலக சோஷலிச அமைப்பு மனித சமூகத்தின் வளர்ச்சியில் கேந்திரமான காரணியாக மாறி யிருக்கிறது; இன்றுள்ள சோஷலிசத்தின் செல்வாக்கு மேன் மேலும் அதிகரித்து வருகிறது. சோஷலிசத்தின் பொரு ளாதார சாதனைகள் இந்த செல்வாக்கின் முக்கிய காரணி யாகவும் முக்கிய அம்சமாகவும் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். சோஷலிசத்துக்கும் முதலாளித் துவத்துக்கும் இடையில் போட்டி நடைபெறுகின்ற முக் கியமான துறை பொருளாதாரம் ஆகும்.

இரண்டாவதாக, ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க அமைப்பின் வீழ்ச்சி முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியை மேலும் ஆழப்படுத்துவதில் கணிசமான தாக்கம் செலுத்துகிறது. முந்திய காலனிகளையும் அரைக் காலனிகளையும் ஏகாதிபத்தியம் சுரண்டுதல் முடிவடைந்து விட்டது என்பது இதன் அர்த்தமல்ல. புதிதாக விடுதலையடைந்த பல அரசுகளில் புதிய காலனியாதிக்கவாதிகளின் பொருளாதாரச் சுரண்டலும் அரசியல் நிர்ப்பந்தமும் இன்னும் நடைபெறுகின்றன. புதிதாக விடுதலையடைந்த நாடுகளை எதிர்நோக்கியுள்ள கடமைகள் சிக்கலானவை, பல்விதமானவை. தமது சுதந்திரத்தை வலுப்படுத்துவதும் அரசுரிமை கொண்ட தேசியப் பொருளாதாரத்தை உருவாக்குவதும் கடந்த காலப் பாரம்பரியத்தை ஒழிப்பதும் அத்தகைய கடமைகளாகும். சோஷலிச நாடுகளுடனும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்துடனும் ஒத்துழைப்பதன் மூலம் இவை எல்லாவற்றையும் நிறைவேற்ற முடியும்.

மூன்றாவதாக, அரசு-ஏகபோக முதலாளித்துவம் மிகவும் அதிகமான வேகத்தில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது; அது ஏகாதிபத்தியத்தின் பழைய முரண்பாடுகளைத் தீவிரப்படுத்தியிருப்பதுடன் புதிய முரண்பாடுகளையும் தோற்றுவித்திருக்கிறது.

முதலாளித்துவ அரசின் அதிகாரத்துடன் ஏகபோகக் கூட்டுக் கம்பெனிகளின் அதிகாரம் இணைவது அரசு-ஏகபோக முதலாளித்துவம் எனப்படும். ஏகபோக மிகை லாபங்களை ஈட்டுதல், தொழிலாளி வர்க்க இயக்கத்தையும் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் ஒடுக்குதல், ஆக்கிரமிப்பு வெளிநாட்டுக் கொள்கைகளை நிறைவேற்றுதல் ஆகியவை அதன் நோக்கமாகும்.

இன்றைய சமூக-பொருளாதார மற்றும் சமூக-அரசியல் அமைப்பின் சுற்றுவட்டத்திற்குள் முதலாளித்துவத்தின்

முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு, அதாவது அழுகிக் கொண்டிருக்கின்ற முதலாளித்துவ அமைப்பை அழிவிலிருந்து பாதுகாப்பதற்கு அரசு-ஏகபோக முதலாளித்துவம் உபயோகிக்கப்படுகிறது என்பது அதன் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்த நோக்கத்துக்காக:

— அரசு குறிப்பாக தொழில்துறையின் சில பிரிவுகளிலும் போக்குவரத்துத் துறையிலும் உற்பத்திச் சாதனங்களில் ஒரு பகுதியை அரசுடைமையாக்குகிறது;

— அரசுடைமையும் தனியுடைமையும் சேர்ந்திருக்கின்ற புதிய நிறுவனங்கள் அமைக்கப்படுகின்றன;

— அரசு உற்பத்தி மற்றும் ஆராய்ச்சியின் பல பிரிவுகளிலும் அதிகமான தொகையை முதலீடு செய்து பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்த முயல்கிறது. அது ஏகபோகங்களின் நலன்களுக்குச் சாதகமான முறையில் தேசிய வருமானத்தையும் நிதி வளங்களையும் மறு வினியோகம் செய்கிறது;

— அரசு வர்க்கப் போராட்டத்தின் தீவிரத்தைத் தணிப்பதற்கு ''நெருக்கடி எதிர்ப்பு நடவடிக்கைகளை'' நிறைவேற்றுகிறது, உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலான உறவுகளை ஒழுங்குபடுத்துவதற்கு முயல்கிறது.

ஏகபோகங்களின் அதிகாரமும் அரசின் அதிகாரமும் சேர்ந்த இக்கூட்டணியில் மிகப் பெரிய நிதிக் குழுவினரும் ஏகபோகவாதிகளின் வர்க்க ஸ்தாபனங்கள் சிலவும் தலைமையான பாத்திரத்தை வகிக்கின்றன. உதாரணமாக, அமெரிக்காவில் 18,000 கார்ப்பரேஷன்களைக் கொண்ட தயாரிப்பாளர்களின் தேசிய சங்கம் (N.A.M.) — பில்லியன் கணக்கில் மூலதனத்தைக் கொண்ட மிகப் பெரிய முதலாளிகள் சிலர் அதற்குத் தலைமை தாங்குகிறார்கள் — அந்த நாட்டின் பொருளாதார, அரசியல் வளர்ச்சியில் பேரளவான தாக்கத்தைச் செலுத்துகிறது.

பொருளாதாரத்தை இராணுவமயமாக்குவதும் இராணுவ-தொழில்துறை இணையத்தை உருவாக்குவதும் அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் குணாம்சங்களில் ஒன்று ஆகும். இராணுவ-தொழில்துறை இணையம் என்பது இராணுவ-தொழில்துறை ஏகபோகங்கள் மற்றும் அரசுப் பொறியமைவின் இராணுவ வெறி வட்டங்களின் நெருக்கமான கூட்டணி ஆகும். இதில் ஆயுத தளவாடத் தயாரிப்பாளர்களில் முக்கியமானவர்களும் தலைமையான இராணுவ, அரசாங்க அதிகாரிகளும் இருக்கிறார்கள். ஆயுதப் போட்டி மிகப்பெரிய ஏகபோகக் கம்பெனிகள் மீது தங்கத்தைக் கொட்டுகிறது. ஏகபோக முதலாளிகளுக்கு நுகர்வுப் பொருட்கள் சம்பந்தமான ஒப்பந்தங்களைக் காட்டிலும் இராணுவ ஒப்பந்தங்களில் பன்மடங்கு அதிகமான லாபம் கிடைக்கிறது. இராணுவ-தொழில்துறை இணையம் எல்லாவற்றையும் இராணுவமயமாக்குகின்ற கொள்கையை, ஆயுதப் போட்டியை ஆதரிக்கிறது, சர்வதேசப் பதட்ட நிலையைத் தணிக்கின்ற முயற்சிகளை எதிர்க்கிறது.

அரசு-ஏகபோக முதலாளித்துவத்தில் ஏராளமான முரண்பாடுகள் இருக்கின்றன. இன்றுள்ள பிரம்மாண்டமான சமூக உற்பத்திச் சக்திகள் உற்பத்தியை சமூக ரீதியில் ஒழுங்குபடுத்துவதையும் நிர்வகிப்பதையும் உழைப்பின் உற்பத்திப் பொருட்களை சமூக ரீதியில் சுவீகரித்து வினியோகம் செய்கின்ற புதிய வடிவங்களையும் கோருகின்றன. அரசு-ஏகபோக முதலாளித்துவம் உற்பத்தி சமூகமயமாக்கப்படுகின்ற செயல்முறையையும் மூலதனம் மற்றும் உற்பத்திக் குவிப்பையும் தீவிரப்படுத்துகிறது. முதலாளித்துவ நாடுகளில் முதலாளித்துவ ஏகபோகமயமாக்கலின் அளவு மிகவும் அதிகமாக இருக்கிறது. அமெரிக்காவிலும் மேற்கு ஜெர்மனியிலும் சில தொழில்துறைகளில் அது 60—100 சதவிகிதத்தை எட்டி

விட்டது. ஏகாதிபத்திய நாடுகளில் உள்ள சில நிதித்துறைக் குழுக்கள் அரசு-ஏகபோக முதலாளித்துவ அமைப்பின் மூல மாக அநேகமாக நாட்டின் மொத்த செல்வத்தின் மீதும் தம்முடைய ஆதிக்கத்தை நிறுவியிருக்கின்றன.

அரசு-ஏகபோக முதலாளித்துவம் தேசியப் பொருளா தாரத்தை மத்தியப்படுத்தி ஒழுங்குபடுத்துகின்ற, நிர்வகிக் கின்ற சில கூறுகளைப் படைக்கிறது. ஆனால் அது உற் பத்திச் சாதனங்களின் மீது தனியுடைமையை நிரந்தரப் படுத்த முற்படுகிறது. எனவே முதலாளித்துவ சமூக அமைப்பு உற்பத்தி, திரட்டல், செலாவணி மற்றும் வினியோகச் செயல்முறைகளை மொத்த சமூகத்தின் நலனுக்காக இல் லாமல் முதலாளி வர்க்க உயர்ந்தோர் குழாமின் (elite) நலனுக்காக ஒழுங்குபடுத்துகிறது, நிர்வகிக்கிறது.

தேசிய வருமானத்தில் மேன்மேலும் அதிகரிக்கின்ற பங்கு அரசுமயமாக்கப்பட்டு மத்தியப்படுத்தப்பட்டு உபயோகிக்கப் படுதல், முதலாளித்துவப் புனருற்பத்தியில் அரசின் பொரு ளாதாரத் தலையீடு, பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்தி நிர்வகிப்பதற்கென்று மாபெரும் பொறியமைவு உருவாக்கப் படுதல் ஆகிய அனைத்தும் உற்பத்தி இன்னும் பேரளவில் சமூகமயமாக்கப்படுவதைச் சுட்டிக்காட்டுகின்றன.

முதலாளித்துவத்தின் கீழ் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உற்பத்தி சமூகமயமாக்கப்படுதல் மற்றும் பொரு ளாதாரத் திட்டமிடுதலின் சில கூறுகள் உருவாக்கப்படுதலின் விளைவாக சோஷலிசம் மற்றும் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளுக்குப் பதிலாக சோஷலிச உற்பத்தி உறவுகளை ஏற்படுத்துவதற்குரிய பொருளாயத முன்நிபந்தனைகள் முத லாளித்துவத்தின் கருப்பையில் ஏற்கெனவே தோன்றி விட்டன என்பதை மேற்கூறியவை எடுத்துக் காட்டுகின்றன.

சோஷலிச அரசியல் பொருளாதாரம் எதை ஆராய்கிறது?
சோஷலிச அரசியல் பொருளாதாரம் சோஷலிச உற்பத்தி முறையின் உற்பத்தி உறவுகள், பொருளாதார விதிகள் மற்றும் கருத்தினங்களை ஆராய்கிறது. உற்பத்தியின் தன்னியல்பான வளர்ச்சி முதலாளித்துவத்தின் குணாம்சம்; ஆனால் உற்பத்தியை உணர்வு பூர்வமாக இயக்குதல், பொருளாதாரத்தை சமூக ரீதியில் ஒழுங்குபடுத்தி நிர்வகித்தல் சோஷலிச அமைப்பின் குணாம்சம். சோஷலிச அரசியல் பொருளாதாரம் மனிதனை மனிதன் சுரண்டுதல் இல்லாத புதிய ரகத்தைச் சேர்ந்த பொருளாதார உறவுகளை ஆராய்கிறது.

மார்க்சும் எங்கெல்சும் முதலாளித்துவத்தையும் அதன் முரண்பாடுகளையும் முடிவில் அது அழியப் போவதற்குரிய காரணங்களையும் விரிவான முறையில் ஆராய்ச்சி செய்து முதலில் சோஷலிச சமூகத்தையும் பின்னர் கம்யூனிச சமூகத்தையும் உருவாக்குகின்ற அடிப்படையான தத்துவக் கோட்பாடுகளை வகுத்தளித்தார்கள். லெனின் புதிய வரலாற்று நிலைமைகளில் சோஷலிச அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைகளை உருவாக்கி இந்த விஞ்ஞானத்துக்கு உறுதியான தத்துவ அடிப்படையை அமைத்துக் கொடுத்தார். முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற பொழுது இரண்டு அடுக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார். முதலாளித்துவத்தைப் பொதுவாக முறியடிப்பதற்கு சுரண்டல்காரர்களை முறியடித்து சுரண்டப்பட்டவர்களின் அரசியல் அதிகாரத்தைத் தற்காத்து (புரட்சிகரமான சக்திகளைக் கொண்டு சுரண்டல்காரர்களை முறியடித்தல்) அதன்

பிறகு புதிய பொருளாதார உறவுகளைப் படைக்க வேண்டும் (இது பிரச்சினையின் படைப்பு ரீதியான அம்சம்).

லெனின் சோஷலிசப் புரட்சியின் பொருளாதாரச் செயல் திட்டத்தை உருவாக்கியது மார்க்சியத்துக்கு முக்கியமான பங்களிப்பாக இருந்தது. அவர் சோஷலிச நிர்மாணக் கட்டத்தில் பாட்டாளி வர்க்க அரசின் பொருளாதாரக் கொள்கையின் பிரதான திசை வழிகளை உருவரையாக எடுத்துக் கூறி நிரூபித்தார். லெனின் சோஷலிசத்தின் பொருளாதாரப் பிரச்சினைகளான உற்பத்திச் சாதனங்களில் சோஷலிச உடைமையின் வடிவங்கள், உழைப்பின் சோஷலிச ஒழுங்கமைப்பின் குணாம்சங்கள், தனிப்பட்ட தொழிற்சாலைகளிலும் சமூக முழுமையிலும் சோஷலிசப் பொருளாதார நிர்வாகத்தின் கோட்பாடுகளும் வழிமுறைகளும், உழைக்கும் மக்கள் மத்தியில் பொருளாயதச் செல்வத்தை வினியோகித்தல், இதரவற்றை ஆழமாகவும் அகல் விரிவாகவும் ஆராய்ந்தார்.

சோஷலிச உற்பத்தி உறவுகளின் அடிப்படையான கூறுகள் பொருளாதார விதிகளில் தொகுத்துரைக்கப்படுகின்றன. சோஷலிச அமைப்பில் உற்பத்திச் சாதனங்களில் பொது உடைமை ஆதிக்கம் செலுத்துகிறது. எனினும் இது பொருளாதார விதிகளின் புறவயத் தன்மையைச் சிறிதும் குறைக்க வில்லை, அதாவது அவை மக்களுடைய உணர்வையும் சித்தத்தையும் முன்னைக் காட்டிலும் கூடுதலாகச் சார்ந்திருக்கும்படி செய்வதில்லை; ஆனால் இவ்விதிகள் செயல் படுகின்ற தன்மையை மாற்றுகிறது.

எல்லா சமூக-பொருளாதார உருவாக்கங்களுக்கும் பொதுவான சில விதிகள் இருக்கின்றன. இவை சோஷலிச அமைப்பிலும் இயங்குகின்றன. உற்பத்திச் சக்திகளின் இயல்பு மற்றும் வளர்ச்சி நிலையுடன் உற்பத்தி உறவுகள் பொருந்தி வருவதைப் பற்றிய விதி அத்தகைய விதிகளில் ஒன்றாகும்.

சோஷலிசத்தின் வெற்றி புதிய பொருளாதார விதிகளை யும் உருவாக்கியிருக்கிறது. சோஷலிசத்தின் அடிப்படை யான பொருளாதார விதி, தேசியப் பொருளாதாரத்தின் திட்டமிடப்பட்ட, விகிதாச்சார வளர்ச்சி விதி அத்தகைய விதிகளாகும்.

சோஷலிச அமைப்பில் பொருளாதார விதிகள் தன் னியல்பான தன்மையை இழந்து விடுகின்றன. உற்பத்திச் சாதனங்களின் மீதான பொது உடைமை ஆதிக்கம் செலுத்து கின்ற பொழுது இவ்விதிகள் ஆழமான விஞ்ஞான அறிவின் அடிப்படையில் உணர்வு பூர்வமாக, திட்டமிடப்பட்ட, முறைப்படியான வழியில் பயன்படுத்தப்படுகின்றன.

சோஷலிச அமைப்பில் பொருளாதார விதிகளை உணர்வு பூர்வமாகப் பயன்படுத்துதல் விஞ்ஞான ரீதியான பொரு ளாதாரக் கொள்கையை அமுலாக்குவதை, பொருளாதார நிர்மாணத்தில், சமூக உழைப்பை அமைப்பு ரீதியாக்குவதில், பொருளாதார நிர்வாகத்தில் அரசு ஒழுங்குபடுத்தலையும் கண்காணிப்பையும் ஏற்படுத்துவதை சாத்தியமாக்குகிறது.

உற்பத்திச் சாதனங்களில் சமூக உடைமை. ஒரு அமைப்பு என்ற முறையில் சோஷலிசப் பொருளாதாரத்தின் தோற்ற மும் உருவாக்கமும் தேசியப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் உற்பத்திச் சாதனங்களின் சோஷலிச உடை மையை வலுப்படுத்துவதில், சோஷலிச உற்பத்தி உறவுகளை நிறுவுவதில் முடிவடைகின்றன. உற்பத்திச் சாதனங்களில் பொது உடைமை முதலாளித்துவத்தின் கருப்பையில் தோன்ற முடியாது; அதை சோஷலிசப் புரட்சி வெற்றியடைந்த பிறகே உருவாக்க முடியும். இத்தகைய பொது உடைமை ''ஒரு சமூகப் புரட்சிக்குப் பிறகே, அதாவது உற்பத்திச் சாதனங்களில் தனியுடைமை ஒழிக்கப்பட்டு அவை பொது

உடைமையாக மாற்றப்பட்ட பிறகே...'' * தோன்றுகிறது என்று லெனின் எழுதினார்.

நாம் பொது உடைமையைப் பற்றிப் பேசுகின்ற பொழுது அங்கே உற்பத்திச் சாதனங்கள் எல்லா சமூக உறுப்பினர் களுக்கும் பொதுவாக இருக்கின்றன என்பதை வலியுறுத்து கிறோம். பொது உடைமை உறவுகளின் தலைமையான அம்சம் எந்த நபரும் தனி உடைமையாளர் என்ற முறையில் அடுத்த நபரை எதிரிடவில்லை என்பதாகும். சமூகத்தின் எல்லா உறுப்பினர்களும் உற்பத்திச் சாதனங்களில் கூட்டு உடைமையாளர்களாகச் செயல்படுகிறார்கள். பொருளா யதச் செல்வத்தின் படைப்பாளிகள், கூட்டு உடைமையாளர் கள் என்ற முறையில் அவர்களுடைய பாத்திரம் பின்னிப் பிணைந்திருக்கிறது. இந்த அம்சத்தின் காரணமாக சோஷ லிசத்தில் மனிதனை மனிதன் சுரண்டுதல் இல்லை; அங்கே மக்கள் தோழமை மிக்க ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி, கூட்டாண்மை (collectivism) உறவுகளை வளர்த்துக் கொள்கிறார்கள்.

சோவியத் யூனியனிலும் மற்ற சோஷலிச நாடுகளிலும் உற்பத்திச் சாதனங்களில் சோஷலிச உடைமை தலை மையான உடைமை வடிவமாக இருக்கிறது. ''அரசு உடைமை (எல்லா மக்களுக்கும் சொந்தமானது), கூட்டுப் பண்ணை மற்றும் கூட்டுறவு உடைமை ஆகிய வடிவங்களில் உற்பத்திச் சாதனங்களில் சோஷலிச உடைமை சோவியத் யூனியனுடைய பொருளாதார அமைப்பின் அடிப்படை யாகும்'' என்று சோவியத் யூனியனுடைய அரசியலமைப்புச் சட்டத்தின் 10வது ஷரத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இந்த இரண்டு உடைமை வடிவங்களும் புறவயமான தேவையின் காரணமாக, வரலாற்று ரீதியில் மற்றும் பொரு

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 6, p. 26.

ளாதார ரீதியில் செல்தகைமையுடன் உருவாகியிருக்கின்றன. சோஷலிசப் புரட்சி நடைபெறுகின்ற சமயத்தில் பெரும் பாலான முதலாளித்துவ நாடுகளில் உற்பத்திச் சாதனங் களில் தனியுடைமையின் இரண்டு வடிவங்கள் இருக்கின்றன: 1) பெரிய அளவு தனியார் முதலாளித்துவ உடைமை; இது உழைப்பைச் சுரண்டுதலை அடிப்படையாகக் கொண்டது; 2) குட்டி முதலாளித்துவத் தனியுடைமை; இது உடை மையாளர்களின் சொந்த உழைப்பை அடிப்படையாகக் கொண்டது. ருஷ்யாவில் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு அதுவரை தனியார் வசமிருந்த தொழில்துறை நிறுவனங் கள், வங்கிகள், போக்குவரத்து, தகவல் தொடர்புச் சாதனங் கள், இதர உடைமை அரசு உடைமையின் முக்கியமான ஊற்றுக்கண்களாக இருந்தன. கிராமங்களில் சிறு விவசாய நிலங்கள் பெரிய அளவு கூட்டுப்பண்ணைகளாக விருப்பபூர்வ மாக இணைந்த பொழுதும் கைவினைஞர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றுசேர்ந்த பொழுதும் கூட்டுப்பண்ணை மற்றும் கூட்டுறவு உடைமை தோன்றியது.

சோஷலிச உடைமையின் இரண்டு வடிவங்களும் சமூகம் தொழிலாளி வர்க்கம் (சமூகத்தின் தலைமையான வர்க்கம்) மற்றும் விவசாயிகள் என்னும் இரண்டு நட்புறவுடைய வர்க்கங்களாகப் பிரிந்திருப்பதை முன்னனுமானித்தன.

சோஷலிச நிர்மாணத்துக்கு வி. இ. லெனினுடைய திட்டம். சோஷலிச சமூகத்தை நிர்மாணிப்பதற்கு லெனினுடைய திட்டம் தொழில்மயமாக்குதலின் மூலம் சோஷலிசத்தின் பொருள்வகை-தொழில்நுட்ப அடித்தளம் அமைத்தலையும் விவசாயத்தை சோஷலிச ரீதியில் மாற்றியமைத்தலையும் கலாசாரப் புரட்சியை நிறைவேற்றுதலையும் உள்ளடக்கி யிருந்தது.

சோவியத் யூனியனில் சோஷலிசத்தின் பொருள்வகை-தொழில்நுட்ப அடித்தளத்தை அமைக்கின்ற பிரதான முறையாக சோஷலிசத் தொழில்மயமாக்குதல் இருந்தது. இது பிரதானமாகப் பெரிய அளவு தொழில்துறை கட்டமைப்பின் வளர்ச்சி, வளர்ச்சியடைந்த இயந்திரத் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் மொத்த தேசியப் பொருளாதாரத்தையும் திருத்தியமைத்தல் என்ற முறைகளில் நடைபெற்றது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், சோஷலிசத் தொழில் மயமாக்கல் என்பது ஒரு விவசாய நாட்டை (ருஷ்யா அன்று; விவசாய நாடாக இருந்தது) தொழில் துறை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதைக் குறித்தது; இயந்திர நிர்மாணத் தொழில்களைக் கருவாகக் கொண்ட பெரிய அளவு தொழில்துறை ஆதிக்கம் வகிக்கின்ற முறையில் சமூக உற்பத்தியின் கட்டமைப்பை மாற்றுவதை முன்னனுமானித்தது.

சோவியத் யூனியனில் தொழில்மயமாக்கல் நாட்டின் பொருளாதார சுதந்திரத்தை வலுப்படுத்துவதற்கு, தேசியப் பொருளாதாரத்தின் எல்லாப் பிரிவுகளையும் தொழில்நுட்ப ரீதியில் திருத்தியமைப்பதற்கு, விவசாயத்தை சோஷலிசக் கோட்பாடுகளை ஒட்டிய முறையில் அமைப்பதற்கு அவசியமான பொருளாயத அடிப்படையை ஏற்படுத்தியது. சோஷலிசத் தொழில்மயமாக்கல் பொருளாதார அடிப்படைத் தொழில்துறைகளில் சோஷலிச உடைமையை வலுப்படுத்தியது. அது நகரங்களில் முதலாளித்துவ சக்திகளை அகற்றுவதற்கு உதவி செய்தது, தொழில்துறையில் சோஷலிச உற்பத்தி முறையின் வெற்றியை உறுதிப்படுத்தியது, தொழிலாளி வர்க்கத்தின் வளர்ச்சியையும் சமூகத்தில் அதன் தலைமையான பாத்திரத்தையும் ஊக்குவித்தது, நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தியது. சோவியத் யூனியன் வரலாற்று ரீதியில் மிகவும் குறுகிய காலத்தில், வெளி

யிலிருந்து எத்தகைய உதவியும் இல்லாமல் மாபெரும் நவீனத் தொழில்துறையை நிர்மாணித்தது; முதலாளித்துவ நாடுகளிலிருந்து முழுமையான பொருளாதார சுதந்திரத்தை அடைந்தது.

சோஷலிச சமூக நிர்மாணத்தில் விவசாயத்தை மாற்றியமைத்தல் மிகவும் முக்கியமான கூறு ஆகும். லெனின் தன்னுடைய கூட்டுறவு குறித்து (1923) மற்றும் இதர நூல்களில் விவசாயத்தை சோஷலிச ரீதியில் மாற்றியமைப்பதற்கு மிகவும் தெளிவான செயல்திட்டத்தை வெளியிட்டார். சிறு அளவு தனியார் நிலவுடைமைகளைப் பெரிய அளவு சோஷலிச விவசாயமாக மாற்றுவதற்கு விவசாயிகளின் உற்பத்திக் கூட்டுறவு அவசியம் என்று அவர் வலியுறுத்தினார். லெனின் அளித்த திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

சோவியத் யூனியனில் விவசாயம் நூறு சதவிகிதம் கூட்டுப்பண்ணையாக்கப்பட்டது கிராமப் பகுதிகளில் பழைய சமூக அமைப்பு அடிப்படையாகவும் தீவிரமாகவும் மாற்றியமைக்கப்பட்டதை, பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வந்த தனியார் விவசாய உற்பத்தி மாற்றியமைக்கப்பட்டதை, ருஷ்யாவின் கிராமப் பகுதிகளில் முதலாளித்துவ வேர்கள் அழிக்கப்பட்டதைக் குறித்தது. கூட்டுப்பண்ணையாக்கம் ருஷ்யாவின் கிராமப் பகுதிகளில் நிலவிய குட்டி முதலாளி வர்க்க உற்பத்தி உறவுகளை ஒழித்து புதிய, சோஷலிச உற்பத்தி உறவுகளை ஏற்படுத்தியது. கூட்டுப் பண்ணையாக்கம் சோவியத் யூனியனில் சோஷலிச நிர்மாணத்தில் மூன்று அடிப்படையான கடமைகளை நிறைவேற்றியது. முதலாவதாக, அது நாட்டில் மிகப் பெரிய சுரண்டல் வர்க்கத்தை, பணக்கார விவசாயிகள் அல்லது குலாக்குகளின் வர்க்கத்தை ஒழித்தது. இரண்டாவதாக, அது விவசாயி வர்க்கத்தைச் சிறிய அளவுத் தனியார்

விவசாயத்திலிருந்து சோஷலிச விவசாயத்துக்குத் திருப்பியது. மூன்றாவதாக, அது சோவியத் ஆட்சிக்கு, பொருளாதாரத்தில் மிகவும் பெரிய, மிகவும் ஜீவாதாரமான — அதே சமயத்தில் மிகவும் பின்தங்கிய — துறையான விவசாயத் துறையில் சோஷலிச அடிப்படையை ஏற்படுத்தியது.

சோஷலிச சமூக நிர்மாணத்துக்குப் பெருந்திரளான மக்களுடைய கலாசார நிலையை உயர்த்துவது, அதாவது ஒரு கலாசாரப் புரட்சியை வெற்றிகரமாக நிறைவேற்றுவது அவசியம். அதற்கு முதலில் ஜாராட்சிக் காலத்திலிருந்து மரபுரிமையாக வந்திருக்கின்ற முழுமையான அல்லது அரை குறையான கல்லாமையை ஒழித்தாக வேண்டும்; தொழிலாளர்களுக்குப் பேரளவில் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்க வேண்டும்; பல்வேறு துறைகளில் தேர்ச்சியுள்ள புதிய சோஷலிச அறிவுத்துறையினரை உருவாக்க வேண்டும்; விஞ்ஞானத்தை வளர்த்து உற்பத்தியுடன் அதன் பிணைப்புகளை வலுப்படுத்த வேண்டும்; உழைக்கும் மக்கள் மத்தியில் சித்தாந்த, அரசியல், அறவியல் கல்வியைப் பரப்ப வேண்டும்.

ஜாரிஸ்ட் ருஷ்யாவின் மக்கள்தொகையில் முக்கால் பகுதியினர் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருந்தார்கள். நாட்டின் எல்லைப் பிரதேசங்களில் வசித்த ருஷ்யர் அல்லாத பல மக்களினங்களுக்கு எழுதவோ, படிக்கவோ தெரியாது. ''இந்த அளவுக்குக் காட்டுத் தன்மையுள்ள நாடு, பெருந்திரளான மக்களிடமிருந்து இந்த அளவுக்குக் கல்வியும் ஒளியும் அறிவும் களவாடப்பட்டிருக்கின்ற இத்தகைய நாடு ஐரோப்பாவில் எதுவுமில்லை. ருஷ்யாதான் விதிவிலக்காக இருக்கிறது'' என்று லெனின் கூறினார்.* கலாசாரப் புரட்சி சோவியத் அரசை அடையாளம் காண

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 19, p. 139.

முடியாத அளவுக்கு மாற்றியது; அது உழைக்கின்ற பெருந் திரளான மக்களை ஆன்மீக அடிமைத்தனத்திலிருந்தும் அறியாமை இருளிலிருந்தும் வெளியே கொண்டு வந்தது; உலகத்தின் கலாசார செல்வங்களை அவர்களுக்கு அறிமுகப் படுத்தியது. சோவியத் யூனியன் விஞ்ஞானம், தொழில் நுட்பவியல் மற்றும் கலாசாரத்தின் சிகரங்களை நோக்கி மாபெரும் பாய்ச்சலைச் செய்தது.

சோஷலிச சமூகத்தை நிர்மாணிப்பதற்கு லெனினுடைய தத்துவம் அதன் எல்லா அம்சங்களிலும் அமுலாக்கப்பட்டது. பொதுவாகப் பார்க்கும் பொழுது, சோவியத் யூனியனில் 1930க்களின் கடைசியிலேயே சோஷலிச சமூகம் நிறுவப்பட்டு விட்டது. சோஷலிசம் நடைமுறையாயிற்று; அதன் கோட் பாடுகள் வெற்றியடைந்தன.

சோஷலிசத்தின் கீழ் எந்தத் தனிநபரும் சமூகப் பிரிவும் அடுத்த தனிநபரை அல்லது சமூகப் பிரிவைச் சுரண்டக் கூடாது; மற்றவர்களுடைய உழைப்பை நம்பி ஒருவர் வாழ்க்கை நடத்தக் கூடாது; ஒவ்வொரு நபரும் கட்டாய மாக உழைக்க வேண்டும். உழைப்பதற்கு உரிமையும் அந்த உரிமை செய்முறையில் நிறைவேற்றப்படுதலும் சோஷலிச சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் கிடைத்துள்ள தனிச்சிறப்பாகும். சோஷலிசத்தின் பொருளாதார இயல்பு ஆரோக்கியமான உடலுடைய ஒவ்வொரு நபரும் அவசிய மாகவும் கட்டாயமாகவும் உழைப்பதைக் கோருகிறது. அது மட்டுமல்ல, உழைப்பு கௌரவமானது, அது ஒவ்வொரு நபருக்கும் சமூகத்தில் அந்தஸ்தைக் கொடுக்கிறது. ''சமூக ரீதியில் பயனுள்ள உழைப்பும் அதன் பலன்களும் சமூகத்தில் ஒரு நபருடைய அந்தஸ்தை நிர்ணயிக்கின்றன'' என்று சோவியத் அரசியலமைப்புச் சட்டத்தில் எழுதப்பட்டிருக் கிறது.

சோஷலிசத்தின் அடிப்படையான பொருளாதார விதி. இன்

றைய சோஷலிசத்தின் நிலைமைகளின் கீழ் சோஷலிசத்தின் அடிப்படையான பொருளாதார விதி செயல்படுகிறது. அது சமூக உற்பத்தியின் தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியின் மூலம் சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுடைய இயன்ற அளவுக்கு ஆக முழுமையான நலத்தையும் சுதந்திரமான, அகல்விரிவான வளர்ச்சியையும் உறுதிப்படுத்துகிறது. ''சமூக உற்பத்தியும் வினியோகமும் விஞ்ஞான பூர்வமான வழிகளில் பரவலாக விஸ்தரிக்கப்படுவதையும், அவை உழைக்கும் மக்களின் வாழ்க்கையை எளிதாக்கி, கூடுமானவரை அவர்களது நல்வாழ்வை மேம்படுத்தும் நோக்கத்துக்கு உண்மையில் கீழடங்கியதாக இருக்கும்படி செய்வதும் சோஷலிசத்தால் மட்டுமே சாத்தியம், சோஷலிசத்தால் மட்டுமே இதை அடைய முடியும். இதை அது நிச்சயம் அடைய வேண்டும் என்பதை நாம் அறிவோம். இந்த உண்மையைப் புரிந்து கொள்வதில்தான் மார்க்சியத்தின் முழுமையான பன்முகத்தன்மையும் அதன் முழுமையான வலிமையும் காணக்கிடக்கின்றன'' என்று லெனின் எழுதினார். *

மக்களுடைய பொருளாயத மற்றும் கலாசாரத் தேவைகளை மேன்மேலும் அதிகமான அளவுக்குப் பூர்த்தி செய்வதை சோஷலிசம் வலியுறுத்துகிறது. மேலும், முதலாவதாக, இங்கே சுட்டப்படுகின்ற தேவைகள் ஏற்கெனவே சாதிக்கப்பட்டுள்ள உழைப்பின் உற்பத்தித் திறன் வளர்ச்சியுடன் பொருந்துகின்றன; இரண்டாவதாக, அவற்றைப் பூர்த்திச் செய்வது மனிதனைப் பாதிக்கவில்லை, ஆனால் அது அவனுடைய ஆளுமையின் ஒத்திசைவான வளர்ச்சிக்கு உதவுகிறது. எல்லோருக்கும் வேலை, பொருளாயத நலம், கூட்டு வாழ்க்கை உணர்ச்சி, தோழமை மிக்க பரஸ்பர

---

* மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், கம்யூனிஸ்ட் சமூகம், பக்கம் 187.

உதவி, இந்த நாட்டின் முக்கியமான குடிமகன் நான் என்று ஒவ்வொருவரும் உணர்தல் ஆகியவை இந்தத் தேவைகளிலும் அவசியங்களிலும் அடங்கும்.

பொருளாயதத் தேவைகள் மற்றும் அவசியங்களை (உணவு, உடை, இருப்பிடம் ஆகிய தேவைகள்) பூர்த்தி செய்தல் அவற்றின் மேற்கொண்ட வளர்ச்சியை ஊக்குவித்தலும் அதனுடன் சேர்ந்து கலாசார மற்றும் சமூக அவசியங்கள் பன்மடங்காக அதிகரிப்பதும் சோஷலிசத்தின் கீழ் குறிப்பிட்ட வன்மையுடன் செயல்படுகின்ற போக்கு ஆகும். அறிவு சார்ந்த தேவைகள் உயர்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரிக் கல்வி வாய்ப்புகள், உலகக் கலாசாரம், கலையின் சாதனைகளை சாதாரண மக்களுக்கு அறிமுகப் படுத்துதல், சமூக ரீதியில் பயனுள்ள படைப்பு முயற்சிகளில் அவர்கள் தீவிரமாகப் பங்கெடுத்தல் ஆகியவற்றுடன் பிணைக்கப்பட்டிருக்கின்றன.

சோவியத் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை அபிவிருத்தி செய்வதில் சமூக நுகர்வு நிதிகள் மேன்மேலும் அதிகரிக்கின்ற பாத்திரத்தை வகிக்கின்றன. உழைப்புக்குத் தகுந்த ஊதியத்தைத் தவிர, இந்த நிதிகளும் சோவியத் குடிமக்களின் தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்குப் பயன்படுகின்றன. மக்களுக்கு இலவசக் கல்வி, இலவச மருத்துவ வசதி மற்றும் முழு ஊதியத்துடன் வருடாந்தர விடுமுறை அளிக்கின்ற செலவைச் சரிக்கட்டுவதற்கும் இந்த நிதிகள் உபயோகிக்கப்படுகின்றன. மேலும், குடிமக்களுக்கு ஏராளமான பொதுச் சேவைகளைச் செய்வதற்கும் இந்த நிதிகள் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக, மழலையர் பராமரிப்பு நிலையங்களுக்கான செலவுகளில் 80 சதவிகிதம். குடியிருப்புகளின் பராமரிப்புச் செலவில் பெரும்பகுதி, ஓய்வுக் கால விடுதிச் செலவுகளில் குறிப்பிட்ட பகுதி ஆகியவற்றுக்கு சமூக நுகர்வு நிதிகள் பயன்படுகின்றன.

சோவியத் யூனியன் முழுவதிலும் ஒரே சீரான ஓய்வூதிய முறை அமுலாக்கப்பட்டிருக்கிறது. ஓய்வூதியங்கள் சமூக நுகர்வு நிதிகளிலிருந்து, அதாவது சோவியத் அரசு மற்றும் கூட்டுப்பண்ணை வருமானங்களிலிருந்து வழங்கப்படுகின்றன. சோவியத் யூனியனில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் முறையே 60,55 வயதில் ஓய்வூதியம் கொடுக்கப்படுகிறது; மேற்கூறிய வயது வரம்பு பெரும்பாலான நாடுகளைக் காட்டிலும் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது. மருத்துவ உதவியும் தாய்-சேய் காப்புதவியும் இலவசமாக அளிக்கப்படு கின்றன.

சோஷலிசத்தின் அடிப்படையான பொருளாதார விதி சமூக உற்பத்தியின் முன்னேற்றத்தின் விதி ஆகும். சோஷ லிசத்தின் இயக்கு சக்தி மேன்மேலும் அதிகரிக்கின்ற பொது நுகர்வு, நாடு முழுவதும் திட்டமிட்ட, முறைப் படியான வழியில் நடைபெறுகின்ற உற்பத்தி வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி மூலம் அது நிறைவேற்றப்படுகிறது.

பொருளாதாரத்தின் திட்டமிட்ட, விகிதாச்சார வளர்ச்சி விதி, திட்டமிடுதல். உற்பத்திச் சாதனங்களில் சமூக உடைமை வடிவத்தின் ஆதிக்கம், எண்ணற்ற தொழிற்சாலைகள் மற்றும் மொத்த தொழில்துறைகள் ஒரே பொறியமைவாக இணைந்திருப்பது ஆகியவை சோஷலிசத்தின் கீழ் உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சியைக் கண்காணிப்பதையும் முறையாகச் செலுத்துவதையும் சாத் தியமாக்குகின்றன, புறவய ரீதியில் அவசியமாக்குகின்றன. தேசியப் பொருளாதாரத்தின் திட்டமிடப்பட்ட, விகிதாச் சார வளர்ச்சி சோஷலிசத்தின் பொருளாதார விதி. அதற்கு சமூக முழுமையிலும் உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர்வை திட்டமிட்ட, விகிதாச்சார முறையில்

ஒழுங்குபடுத்துவதும் அவற்றின் மீது சமூக ரீதியான கட்டுப் பாடும் அவசியம்.

சோஷலிச அமைப்பில் பொருளாதாரத் திட்டமிடுதல் சர்வப்பொதுவான தன்மையைக் கொண்டிருக்கிறது. சோஷலிச அரசு மற்றும் பெருந்திரளான மக்கள் பொரு ளாதாரத்தின் திட்டமிடப்பட்ட, விகிதாச்சார வளர்ச்சியை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஸ்தூலமான நடவடிக்கையாக அது இருக்கிறது; பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சி குறித்த அரசுத் திட்டத்தின்படி அது நிறைவேற்றப்படுகிறது. ஒவ்வொரு தொழில்துறை மற்றும் ஒவ்வொரு பிரதேச வாய்ப்பு வளத்தின் பிரத்யேகமான கூறுகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு அரசுத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இத்திட்டங்கள் மத்தியப்படுத்தப் பட்ட ஒழுங்குபடுத்தல், பொருளாதார சுதந்திரம், தனிப் பட்ட பாக்டரிகள் மற்றும் ஆலைகளின் முன்முயற்சி ஆகிய வற்றை ஒன்றுசேர்க்கின்றன. திட்டம் என்பது சமூகத்தின் எதிர்கால நிலையின் மாதிரிப் படிவமாகும். அது பொரு ளாதார, சமூக வளர்ச்சியைப் பற்றி அடிப்படையான தகவலைக் கொண்டிருக்கின்ற ஆவணம். திட்டம் பொரு ளாதாரத்தின் அளவு விகிதங்களையும் அதன் வளர்ச்சியின் திசையையும் வேகத்தையும் முன்னுரைக்கிறது. ஒவ்வொரு துறையிலும் நிறைவேற்றப்பட வேண்டிய ஸ்தூலமான பணி களும் அதிலடங்கியிருக்கின்றன.

பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சித் திட்டம் மொத்த சமூக உற்பத்தி மற்றும் தனித்துறைகள் அனைத்தின் வளர்ச்சிக்குமான குறியீட்டெண்களையும் நடவடிக்கைகளை யும் கொண்டிருக்கிறது. விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட திட்டமிடுதல் சமூகத்தின் ஒன்றிணைந்த பொரு ளாதார நடவடிக்கையை சோஷலிச நிர்மாணத்தின் கடமை களுக்கேற்ப அமைக்கிறது, ஒருங்கிணைக்கிறது; குறிப்பிடப்

பட்ட திட்ட காலத்துக்கு சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான நடவடிக்கைகளைத் தயாரிக்கிறது; எடுத்துக் கொள்ளப்பட்ட முடிவுகளை நிறைவேற்றுவதைக் கண் காணிக்கிறது.

தேசியப் பொருளாதாரத்தின் திட்டமிட்ட, விகிதாச்சார வளர்ச்சி விதியை சமூகம் உணர்வு பூர்வமாக உபயோகித்தல் பொருளாதாரத்தில் சோஷலிச அரசு வகிக்கின்ற சுறுசுறுப் பான பாத்திரத்தைச் சுட்டிக்காட்டுகிறது. கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்டு சோவியத் அரசு நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டங்களைத் தயாரிக்கிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் பொருளாதாரக் கொள்கை. அதன் செயல்திட்டமும் செயல்தந்திரமும். சோ வியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் பொருளாதாரக் கொள்கை பொருளாதாரத்தில் வர்க்கங்கள், சமூகப் பிரிவு கள் மற்றும் தேசிய இனங்களுக்கு இடையிலுள்ள உறவுகளை ஒழுங்குபடுத்துகிறது. கட்சியின் பொருளாதாரக் கொள்கை ''தலையாய முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது'', பொருளாதார நிர்மாணம் ''நம்முடைய முக்கியமான கொள்கை'', ''இப்பொழுது நாம் அதிகமான அக்கறை கொள்கின்ற அரசியல் இதுதான்'' என்று லெனின் அடிக்கடி சுட்டிக்காட்டினார். *

முதிர்ச்சியடைந்த சோஷலிசத்தை அபிவிருத்தி செய் கின்ற கட்டத்தில், பொருளாயத உற்பத்தியை மேலும் பெருக்குவதில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் பொருளாதாரக் கொள்கையின் பாத்திரம் பேரளவில்

* V. I. Lenin, *Collected Works*, vol. 32, p. 437, vol. 31, p. 371, vol. 32, p. 430.

வளர்ச்சியடைந்திருக்கிறது. பொருளாதார வளர்ச்சி செயல்திட்டம் மற்றும் செயல்தந்திரம் இங்கே குறிப்பிடத் தக்க முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன.

செயல்திட்டம் என்பது கணிசமான வரலாற்றுக் காலத் துக்கு கட்சியின் அரசியல் நடவடிக்கைகளின் அடிப்படை யான நோக்கங்களையும் ஆதாரத் திசைவழிகளையும் கொண்டிருக்கிறது. நெடுங்காலத்துக்கு முக்கியமான முடிவு களை அடைவதை நோக்கமாகக் கொண்டிருப்பது பொரு ளாதார செயல்திட்டம். உதாரணமாக, இப்பொழுது சோ வியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கியிருக்கின்ற நீண்டகால செயல்திட்டம் நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தி மக்கள் இன்னும் சிறப்பான முறையில் வாழ்கின்ற, அவர்களுடைய எல்லாத் தேவைகளும் முழுமையாகப் பூர்த்தியடைகின்ற வகையில் சோஷலிசம் தன்னுடைய சாதகங்களை, அதன் படைப்பாற்றலை முழு மையாக வெளிப்படுத்துவதை உறுதியாக்குவதை நோக்க மாகக் கொண்டிருக்கிறது.

கட்சி பொருளாதார செயல்திட்டத்தினால் வழிகாட்டப் பட்டு பகுத்தறிவுக்கு மிகவும் பொருத்தமான செயல் தந்திரத்தைக் கடைப்பிடிக்கிறது, அதாவது ''மிகவும் குறைந்த அளவிலான முயற்சியைச் செலவிட்டு மிகவும் கணிசமான, நிரந்தரமான விளைவுகளைப் பெறுகின்ற சாதனங்களையும் வழிமுறைகளையும் போராட்ட முறை களையும்'' * உணர்வு பூர்வமாகத் தேர்ந்தெடுக்கின்ற செயல்தந்திரத்தைப் பின்பற்றுகிறது. ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலத்திற்குள், குறிப்பிட்ட கட்டத்தில் கட்சி யின் நடவடிக்கைகள், செயல்களின் மொத்தம் செயல் தந்திரம் எனப்படும். அது செயல்திட்டத்திலிருந்து

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 8, p. 104.

பிறக்கிறது, அதன் நிறைவேற்றத்துக்குச் செயல்படுகிறது, சம்பந்தப்பட்ட காலகட்டத்தின் பிரத்யேக நிலைமைகளைக் கணக்கிலெடுத்துக் கொள்கிறது. பொருளாதாரத் துறையில் கட்சியின் செயல்தந்திரக் கடமைகள் இன்னும் சிறப்பான பொருளாதார நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு முக்கியத்துவமளித்து அது மேன்மேலும் சிறப்பாக இயங்குவதை உறுதிப்படுத்துதல், விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றத்தை விரைவுபடுத்துதல், தேசியப் பொருளாதாரம் முழுவதையும் தீவிரப்படுத்துதல் ஆகியவையாகும்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் பொருளாதாரக் கொள்கையின் செயல்திட்டமும் செயல்தந்திரமும் ஒன்றுக்கொன்று செழுமைப்படுத்திக் குறை நிரப்புவதால் அவை ஒற்றுமையாகச் செயல்படுகின்றன. கட்சி சமூகத்திலுள்ள பொருளாதார உறவுகளின் செயல்முறைகளை அகல்விரிவாகவும் ஆழமாகவும் ஆராய்ந்து முதிர்ச்சியடைந்த சோஷலிசத்தை அபிவிருத்தி செய்கின்ற வழிகளையும் முறைகளையும் உருவாக்கியிருக்கிறது, விஞ்ஞான ரீதியான குறிக்கோள்களையும் நிதானமான மதிப்புகளையும் வரையறுக்கிறது. அவை பொருளாதாரக் கொள்கை, அதன் செயல்திட்டம் மற்றும் செயல்தந்திரத்தின் அடிப்படையாக இருக்கின்றன. ''மிகவும் வேகமாகப் போய் விடாதே, பின்னால் தங்கி விடாதே'' என்னும் முக்கியமான விதியைக் கடைப்பிடிக்கிறது. சரியான இலக்குகளை நிர்ணயித்துக் கொள்வது மட்டுமே முக்கியமல்ல; எத்தகைய இடர்ப்பாடுகள் ஏற்பட்டாலும் அந்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு உறுதியாகப் பாடுபடுவதும் முக்கியமே. இப்படிப்பட்ட அணுகுமுறையே கொள்கையில் தவறுகள் ஏற்படுவதை, மனதுக்கேற்றபடி செயலாற்றுவதைத் தடுக்கும்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் பொருளாதாரக் கொள்கையை வகுப்பதில் சோஷலிச அரசியல்

பொருளாதாரம் கேந்திரமான பாத்திரத்தை வகிக்கிறது. சோஷலிச அரசியல் பொருளாதார விதிகள் நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சிக் கருத்தமைப்புகளுக்கு அடிப்படையாக இருக்கின்றன; கட்சியின் பொருளாதாரக் கொள்கையில் வெளியிடப்பட்டுள்ள இலக்குகளை நிறைவேற்றுவதற்குரிய பிரத்யேகமான எல்லா நடவடிக்கைகளிலும் அவை உபயோகிக்கப்படுகின்றன. அரசியல் பொருளாதாரம் மார்க்சிய-லெனினியப் பொருளாதாரக் கொள்கையின் தத்துவார்த்த அடிப்படை ஆகும்.

அத்தியாயம் நான்கு

விஞ்ஞான கம்யூனிசத்தின் தத்துவம்

விஞ்ஞான கம்யூனிசம் என்பது அதன் விரிவான அர்த்தத்தில் முழுமையான மார்க்சிய-லெனினியமாக, பொதுவான சமூக-அரசியல் விதிகளைப் பற்றிய விஞ்ஞானமாக, சமூகத்தைக் கம்யூனிச முறையில் மாற்றியமைக்கின்ற வழிகள், வடிவங்கள், முறைகளை எடுத்துக் காட்டுகின்ற விஞ்ஞானமாக, முதலாளித்துவத்தின் வீழ்ச்சியையும் கம்யூனிசத்தின் வெற்றியையும் நிறுவுகின்ற விஞ்ஞானமாகக் கருதப்படுகிறது.

விஞ்ஞான கம்யூனிசம் சற்றுக் குறுகிய அர்த்தத்தில் மார்க்சிய-லெனினியத்தின் மூன்று பகுதிகளில் ஒன்று; அது தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம் என்னும் அடுத்த இரண்டு பகுதிகளுடன் பிரிக்க முடியாதபடி இணைந்திருக்கிறது.

விஞ்ஞான கம்யூனிசத்தின் தோற்றமும் சாரப்பொருளும்

விஞ்ஞான கம்யூனிசத்தின் மூலவர்கள். கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் விஞ்ஞான கம்யூனிசத்தை வர்க்கப்

போராட்டத்தின் தத்துவார்த்த நிரூபணமாக, முதலாளி வர்க்கத்தைப் புரட்சிகரமான முறையில் அகற்றி விட்டுப் பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை வென்றெடுக் கின்ற முரணில்லாத தத்துவமாக உருவாக்கினார்கள். சோஷலிசம் என்பது சிந்தனையாளர்களுடைய கற்பனை அல்ல, அது மூலதனத்தின் ஆதிக்கத்தை எதிர்த்து தொழி லாளர்களுடைய போராட்டத்தின் தவிர்க்க முடியாத விளைவு என்பதை மார்க்சியத்தின் மூலவர்கள் நிரூபித்தார் கள். விஞ்ஞானம் என்ற முறையில் விஞ்ஞான கம்யூனிசம் இந்தப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் நிலையின் தத்துவ வெளியீடாக, பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக் குரிய நிலைமைகளின் வகுத்துரைத்தலாக இருக்கிறது.

மார்க்சும் எங்கெல்சும் சோஷலிசத்தை வெறும் கனவு என்ற நிலையிலிருந்து பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தின் பொது விதிகள், வழிமுறைகள், வடிவங் களைக் கொண்ட, சோஷலிசப் புரட்சியை, சோஷலிசத்தை யும் கம்யூனிசத்தையும் நிர்மாணித்தலைப் பற்றிய மெய் யான விஞ்ஞானமாக முதன்முறையாக மாற்றினார்கள். 1840க்களில் பிறந்த விஞ்ஞான கம்யூனிசத் தத்துவம் இரண்டு மாபெரும் கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண் டிருக்கிறது. வரலாற்றுப் பொருள்முதல்வாதமும் முதலாளித் துவச் சுரண்டலின் மர்மங்களை வெளிப்படுத்திய உபரி மதிப்புத் தத்துவமும் மேற்கூறிய கண்டுபிடிப்புகளாகும். விஞ்ஞான கம்யூனிசம் என்பது மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகி யோருடைய தத்துவஞான மற்றும் பொருளாதாரத் தத்துவத்தின் விதிவழிப்பட்ட மற்றும் அவசியமான விரிவாக்க மாகவும் வளர்ச்சியாகவும் இருக்கிறது.

மார்க்சும் எங்கெல்சும் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத் தத்துவத்தை வளர்த்துச் செல்கின்ற பொழுது முதலாளித்துவத்தின் சமரசப்படுத்த முடியாத முரண்பாடு

களை முதலாளி வர்க்கத்தின் ஆதிக்கத்தை ஒழிக்கின்ற சோஷலிசப் புரட்சியின் மூலமாக மட்டுமே தீர்க்க முடியும் என்பதை நிரூபித்தார்கள். முதலாளித்துவத்தை ஒழித்து சோஷலிச அமைப்பை நிறுவும்படி விதிக்கப்பட்டிருக்கின்ற சமூக சக்தி தொழிலாளி வர்க்கமே. பாட்டாளி வர்க்கம் தன்னுடைய சொந்த அரசியல் கட்சியை, கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்க வேண்டிய அவசியத்தை மார்க்சும் எங்கெல்சும் நிறுவியது அவர்களுடைய மாபெரும் சாதனை யாகும். அக்கட்சி தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக இருக்கும், சோஷலிசத்துக்கும் கம்யூனிசத்துக்கும் நடைபெறுகின்ற போராட்டத்தில் உழைக்கும் மக்களுக்கு வழிகாட்டும்.

மார்க்சும் எங்கெல்சும் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதி காரத்தைப் பற்றிய கோட்பாட்டை நிறுவினார்கள்; அது சோஷலிசப் புரட்சியின் நிகழ்வுப் போக்கின் போது நிறுவப் படும் என்று அவர்கள் கூறினார்கள். முதலாளித்துவத்தி லிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற பொழுது புரட்சிகர மான தற்காலிகக் கட்டம் தவிர்க்க முடியாமல் ஏற்படும் என்பதை அவர்கள் விளக்கினார்கள்; எதிர்காலக் கம்யூனிச சமூகத்தைப் பற்றிய விஞ்ஞானக் கருதுகோளை வழங்கினார் கள்.

விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தின் வளர்ச்சியில் ஒரு புதிய கட்டத்துடன் லெனினுடைய பெயர் இணைக்கப்பட் டிருக்கிறது. ஏகாதிபத்திய சகாப்தத்தில் புரட்சிகரமான பெருந்திரளினருடைய வளமான அனுபவத்தைப் பயன் படுத்தி லெனின் மார்க்சியத்தைப் புதிய வரலாற்று நிலை மைகளுக்குக் கையாண்டு வளர்த்தார். ஏகாதிபத்திய சகாப் தத்தில் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் பிரதான அம்சங்களும் அதன் இயக்கு சக்திகளும் அது சோஷலிசப் புரட்சியாக வளர்ச்சியடைவதற்குரிய வாய்ப்புகள், முத

லாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற இடைக்கால கட்டத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், விவசாயப் பிரச்சினை, தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய வழிமுறைகள், புதிய ரகத்தைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கக் கட்சியின் தலைமையான பாத்திரம் ஆகியவை பற்றி லெனினுடைய கருத்துகள் விஞ்ஞான கம்யூனிசத்தின் வளர்ச்சிக்கு மிகச் சிறந்த பங்களிப்பாக இருக்கின்றன.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இதர மார்க்சிய-லெனினிய கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் தத்துவார்த்தப் பணிகளில் விஞ்ஞான கம்யூனிசத்தின் வளர்ச்சி தொடர்கிறது.

விஞ்ஞான கம்யூனிசத்தின் ஆராய்ச்சிப் பொருள். விஞ்ஞான கம்யூனிசம் என்பது பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டம் மற்றும் சோஷலிசப் புரட்சியைப் பற்றிய, சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நிர்மாணிக்கின்ற சமூக-அரசியல் நியதிகளைப் பற்றிய, மொத்தத்தில் உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கைப் பற்றிய விஞ்ஞானம் ஆகும்.

ஆகவே விஞ்ஞான கம்யூனிசத் தத்துவம் பின்வருவன வற்றை ஆராய்ந்து நிறுவுகிறது:

— முதலாளித்துவத்தின் வீழ்ச்சியின் மற்றும் கம்யூனிசத்தின் வெற்றியின் வரலாற்று ரீதியில் தவிர்க்க முடியாத தன்மை;

— முதலாளித்துவ சமூகம் சோஷலிச சமூகமாகப் புரட்சிகர மாற்றமடைவதற்குரிய முன்நிபந்தனைகள் மற்றும் நிலைமைகள்;

— தொழிலாளி வர்க்கத்தின் உலக வரலாற்றுக் கடமை,

புரட்சிகரப் போராட்டத்தில் அதன் தலைமையின் கீழ் பாட்டாளி வர்க்கம் அல்லாத பெருந்திரளான மக்களுடைய இடமும் பாத்திரமும்;

— பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தின் விதிகள், வழிகள் மற்றும் வடிவங்கள்;

— பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அவசியம் மற்றும் கடமைகள்;

— சோஷலிசம் வளர்ச்சியடைகின்ற வழிகளும் அந்த வளர்ச்சியை ஆள்கின்ற விதிகளும்;

— இன்றைய புரட்சிகர நிகழ்வுப் போக்கில் தேசிய விடுதலைப் புரட்சிகள் மற்றும் ஜனநாயக இயக்கங்களின் பாத்திரம்;

— மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் செயல்திட்டம் மற்றும் செயல்தந்திரத்தின் பிரதான திசைவழிகள் மற்றும் கோட்பாடுகள்.

வரலாற்றுப் பொருள்முதல்வாதம் எல்லா சமூக-பொருளாதார உருவாக்கங்களின் வளர்ச்சியை ஆள்கின்ற விதிகளையும் ஆராய்கிறது; ஆனால் விஞ்ஞான கம்யூனிசம் கம்யூனிச சமூக-பொருளாதார உருவாக்கத்தின் வளர்ச்சி விதிகளை மட்டுமே ஆராய்கிறது.

விஞ்ஞான கம்யூனிசம் ஒரு சர்வதேசியத் தத்துவம்; ஏனென்றால் அது பிரதானமாகத் தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேசியத் தன்மையிலிருந்து தோன்றுகிறது. விஞ்ஞான கம்யூனிசம் அதன் நலன்களையும் இலட்சியங்களையும் வெளியிடுவதுடன் அவற்றைப் பாதுகாக்கிறது. விஞ்ஞான கம்யூனிசம் ஒரு தனிநாட்டின் அனுபவத்தை அல்ல, எல்லா நாடுகள் மற்றும் தேசிய இனங்களின் மொத்த உலகப் புரட்சிகர இயக்கத்தின் அனுபவத்தைத் தொகுத்துரைக்கிறது. உலக கம்யூனிச இயக்கம் நூறு ஆண்டுகளுக்கு மேலாக விஞ்ஞான கம்யூனிசத்தின் அடிப்படையான கருது

கோள்கள் மற்றும் முடிவுகளினால் வழிகாட்டப்பட்டு வருகிறது; அது அவற்றை அடிப்படையாகக் கொண்டு தன்னுடைய செயல்திட்டத்தையும் செயல்தந்திரத்தையும் அமைக்கிறது. விஞ்ஞான கம்யூனிசம் புரட்சிகர இயக்கத்துடன் சேர்ந்து வளர்ச்சியடைந்து அதன் அனுபவத்தைத் தொகுத்துரைக்கிறது.

விஞ்ஞான கம்யூனிச ஆய்வுக்கு அடிப்படையாக சமூக வாழ்க்கையைப் பற்றிய பொருள்முதல்வாத அறிதல் தத்துவமும் இயக்கவியல் முறையும் இருக்கின்றன. சோஷலிசப் புரட்சியின் பொழுது, தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை நிறுவுகின்ற பொழுது, சோஷலிச மற்றும் கம்யூனிச சமூகங்களை நிர்மாணிக்கின்ற பிரதான இலட்சியங்களை நிறைவேற்றுகின்ற பொழுது இருக்கின்ற முரண்பாடுகளையும் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய முரண்பாடுகளையும் தீர்ப்பதற்கு விஞ்ஞான ரீதியான வழிகளை எடுத்துக் கூறுவதை இது சாத்தியமாக்குகிறது.

பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டத்தின் அனுபவத்தை, சோஷலிச மற்றும் கம்யூனிச சமூகத்தை நிர்மாணிக்கின்ற அனுபவத்தைத் தர்க்க ரீதியாகப் பொதுமைப்படுத்துகின்ற முறையைக் கையாள்கின்ற அதே சமயத்தில் விஞ்ஞான கம்யூனிசம் வரலாற்று எதார்த்தத்தின் நிலைகளை உறுதியாகக் கடைப்பிடிக்கிறது. ''சமூக வஞ்ஞானம் பற்றிய பிரச்சினையில் மிகமிக நம்பகமான தொன்று... என்னவென்றால் அடிப்படையான வரலாற்றுத் தொடர்பை மறவாதிருப்பதும், ஒவ்வொரு பிரச்சினையையும் ஆராயும் போது, குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சி வரலாற்றில் எவ்வாறு தோன்றியது, அது தன் வளர்ச்சிப் போக்கில் என்னென்ன முக்கியமான கட்டங்களைக் கடந்து சென்றது என்ற நிலைகளினின்று ஆராய்வதும், இந்த வளர்ச்சி நிலையிலிருந்து குறிப்பிட்ட பொருள் இன்று

என்னவாக ஆகியிருக்கிறது என்பதை ஆராய்வதுமாகும்'' என்று லெனின் எழுதினார். *

விஞ்ஞான கம்யூனிசம் என்பது படைப்புச் சக்தி மிக்க போதனை ஆகும். எதார்த்தத்துடன் தொடர்பை, சமூகத்தைக் கம்யூனிச ரீதியில் மாற்றியமைப்பதற்குத் தொழிலாளி வர்க்கம் மற்றும் எல்லா உழைக்கும் மக்களுடைய போராட்டத்தின் நடைமுறையுடன் தொடர்பை இழந்து விடாமல் இருப்பது அதன் கேந்திரமான கோட்பாடு ஆகும். வாழ்க்கை ஒரே இடத்தில் நிற்பதில்லை; அது எப்பொழுதும் இயக்கத்தில் இருக்கிறது; அது முன்னே செல்கின்ற பொழுது, வளர்ச்சியடைகின்ற பொழுது, விஞ்ஞான கம்யூனிசத் தத்துவமும் வளர்ச்சி அடைகிறது.

தொழிலாளி வர்க்கத்தின் உலக வரலாற்று முக்கியத்துவமுடைய பணி

முதலாளி வர்க்கத்தை ஒழிக்கும் சக்தியான பாட்டாளி வர்க்கம். மார்க்சும் எங்கெல்சும் முதலாளித்துவத்தின் வீழ்ச்சியும் கம்யூனிசத்தின் வெற்றியும் முன்னரே முடிவு செய்யப்பட்டவை என்பதை ஏராளமான ஆதாரங்களைக் கொண்டு தெளிவாக நிரூபித்தார்கள். அவர்கள் சமூகத்தின் புரட்சிகர மாற்றத்தை நிறைவேற்றக் கூடிய சமூக சக்தியாகப் பாட்டாளி வர்க்கத்தைக் கண்டார்கள். இந்த மாபெரும் விஞ்ஞான ரீதியான கண்டுபிடிப்பு மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் மையமாக இருக்கிறது. ''சோஷலிசச் சமுதாயத்தின் சிற்பியாய்ப் பாட்டாளி வர்க்கம் ஆற்றும் வரலாற்றுப்

---

* வி. இ. லெனின், அரசு, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1984, பக்கங்கள் 7–8.

பணியை மார்க்சின் தத்துவம் தெளிவுபடுத்துகிறது'' என்று லெனின் எழுதினார். *

முதலாளித்துவத்தின் அழிவின் விதைகள் அதற்குள் ளாகவே இருக்கின்றன என்று மார்க்சிய நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. முதலாளி வர்க்கம் தனக்குச் சவக்குழி தோண்டுவோனை, அதாவது, பாட்டாளி வர்க்கத்தை உற்பத்தி செய்திருக்கிறது என்று கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை கூறுகிறது. **

முதலாளித்துவத்தை ஒழித்து சவக்குழியில் புதைக்கும்படி பாட்டாளி வர்க்கம் விதிக்கப்பட்டிருக்கிறது என்று ஏன் கூறப்படுகிறது? முதலாவதாக, தொழிலாளி வர்க்கம்தான் மிகவும் அதிகமாக ஒடுக்கப்பட்ட வர்க்கம். பாட்டாளி வர்க்கம் என்று நாம் கூறுகின்ற பொழுது சொந்த உற்பத்திச் சாதனங்களை இழந்து பிழைத்திருப்பதற்காகத் தம்முடைய உழைப்புச் சக்தியை விற்பனை செய்யுமாறு நிர்ப்பந்திக்கப் படுகின்ற நவீன கூலித் தொழிலாளர் வர்க்கத்தை நாம் குறிப்பிடுகிறோம். சுரண்டப்படுகின்ற வர்க்கம் என்ற முறையில் பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ அமைப்பின் மீது தீவிரமான அதிருப்தி கொண்டிருக்கிறது; இருக்கின்ற அமைப்பை மாற்ற வேண்டும், புரட்சியின் மூலமாக முத லாளித்துவத்தை ஒழிக்க வேண்டும் என்று பாட்டாளி வர்க்கத்தின் நிலை அதைத் தூண்டுகிறது. பாட்டாளி வர்க்கத்திடம் முதலாளித்துவ அடிமைச் சங்கிலிகளைத் தவிர வேறு எதுவுமில்லை. முதலாளி தொழிலாளியைச் சுரண்டுவதற்கு உற்பத்திச் சாதனங்களில் தனியுடைமை அடிப்படையாக இருப்பதால் இந்த அடிப்படையை ஒழிப்

---

* வி. இ. லெனின், **மார்க்சியத்தின் வரலாற்று வளர்ச்சியின் சில சிறப் பியல்புகள்**, பக்கம் *14*.

** கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்**, தொகுதி *1*, பக்கம் *212* பார்க்க.

பதும் அதற்குப் பதிலாகப் பொதுவுடைமையை ஏற்படுத்து வதும் தொழிலாளி வர்க்கம் விடுதலை அடைவதற்கு ஒரே வழியாக இருக்கிறது.

முதலாளித்துவ சமூகத்தில் பாட்டாளி வர்க்கமே எண் ணிக்கையில் மிகப் பெரிய வர்க்கமாக, மேன்மேலும் வளர்ச்சி யடைகின்ற வர்க்கமாக இருக்கிறது. பெரிய தொழிற்சாலை களில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் குவிக்கப்பட் டிருக்கிறார்கள். அவர்கள் ஒன்றுசேர்ந்து வேலை செய்கின்ற பொழுது கட்டுப்பாடு, பரஸ்பர உதவி ஆகியவற்றில் பயிற்று விக்கப்படுகிறார்கள். ஒரு கூட்டுச் சக்தி என்ற முறையில் அமைப்பு ரீதியாக வேலை செய்வது தொழிலாளர்களுக்குச் சுலபமாகும். ஒடுக்கப்பட்ட மற்ற வர்க்கங்களையும் சமூகப் பிரிவுகளையும் காட்டிலும் தொழிலாளர்கள் தம்முடைய உணர்வையும் சமூக உணர்ச்சியையும் சீக்கிரமாக வளர்த்துக் கொள்கிறார்கள்.

அதனால்தான் சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் எதிர்த்து எல்லா உழைக்கும் மக்களின் போராட்டத்துக்குத் தொழிலாளி வர்க்கம் தலைமை தாங்க முடியும். தொழி லாளி வர்க்கம் முதலாவதாக, முதலாளித்துவத்துக்கு எதிரான முதன்மைப் போராளியாக இருக்கிறது. தொழி லாளி வர்க்கம் தன்னை விடுவித்துக் கொள்வதன் மூலம் விவசாயி வர்க்கம், அறிவுப் பகுதியினர் உட்பட எல்லா உழைக்கும் வர்க்கங்களையும் சமூகப் பிரிவினரையும் ஒடுக்கு முறையிலிருந்து விடுதலை செய்கிறது.

தொழிலாளி வர்க்கம் அதே சமயத்தில் தேசிய இன ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடுகிறது. பெரிய மற்றும் சிறிய தேசிய இனங்கள், மக்களினங்கள் மத்தியில் முழு சமத்துவம் மற்றும் நட்புறவுக்காகத் தொழிலாளி வர்க்கம் நிற்கிறது. அதனால்தான் காலனி மற்றும் சார்பு நாடு களின் மக்கள் அந்நிய சுரண்டல்காரர்களுக்கு எதிரான

போராட்டத்தில் தலைமை நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தின் ஆதரவைப் பெறுகிறார்கள். அதே சமயத்தில் விடுதலைக்கும் தேசிய சுதந்திரத்துக்கும் அவர்கள் நடத்துகின்ற போராட்டம் ஏகாதிபத்தியவாதிகளைப் பலவீனப்படுத்தி முதலாளித்துவத்துக்கு எதிராகத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்துக்கு உதவி செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முதலாளித்துவ சமூகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைப்பதில் தொழிலாளி வர்க்கத்தின் பாத்திரத்தைப் பற்றி மார்க்சிய-லெனினிய மூல நூல்களின் முடிவுகளைக் காலம் நிரூபித்திருக்கிறது. இன்று தொழிலாளி வர்க்கம் கோடிக்கணக்கான மக்களைக் கொண்ட மாபெரும், சுறுசுறுப்பான சமூக சக்தியாக இருக்கிறது. தொழிலாளி வர்க்கத்தின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. அதன் உழைப்பு உலக உற்பத்திப் பொருளில் முக்கால் பங்கைப் படைக்கிறது. இன்று தொழிலாளி வர்க்கம் — முன்னர் ஒருபோதும் இல்லாத அளவில் — உழைக்கும் மக்களின் மிகவும் அதிகப் பெரும்பான்மையினருடைய நலன்களின் பிரதிநிதியாக இருக்கிறது.

தொழிலாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டம். அடிமை உடைமைச் சமூகத்திலிருந்து இதுவரை இருந்திருக்கின்ற எல்லாச் சமூகங்களின் வரலாறும் சமூக வர்க்கங்களுக்கு இடையில், சுரண்டப்படுபவர்களுக்கும் சுரண்டுபவர்களுக்கும், ஒடுக்கப்படுபவர்களுக்கும், ஒடுக்குபவர்களுக்கும் இடையில் போராட்டத்தின் வரலாறாகவே இருந்திருக்கிறது. முதலாளித்துவத்தின் கீழ் பாட்டாளி வர்க்கம் வரலாற்றுக் களத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது. அது சுரண்டுகின்ற வர்க்கத்திடமிருந்து தன்னை விடுதலை செய்து கொள்வதன்

மூலம் இறுதியில் மொத்த சமூகத்தையும் சுரண்டலிலிருந்து விடுதலை செய்கிறது.

வர்க்கங்கள் மற்றும் வர்க்கப் போராட்டத்தைப் பற்றிய தத்துவத்துக்கு கார்ல் மார்க்ஸ் மாபெரும் பங்களிப்பைச் செய்தார். ''...என்னைப் பொறுத்தவரை நவீன சமுதாயத்தில் வர்க்கங்கள் இருப்பதையோ அல்லது அவற்றின் இடையே போராட்டம் நடைபெறுவதையோ கண்டுபிடித்த பெருமை எதுவும் எனக்கு உரியது அல்ல. எனக்கு நீண்ட காலத்துக்கு முன்பே, முதலாளித்துவ வரலாற்றாசிரியர்கள் இந்த வர்க்கப் போராட்டத்தின் வரலாற்று வளர்ச்சியை வருணித்திருக்கிறார்கள், மற்றும் முதலாளித்துவப் பொருளியலாளர்கள் வர்க்கங்களின் பொருளாதார அமைப்பியலை விரித்துரைத்திருந்தார்கள். நான் புதிதாகச் செய்தது என்ன வென்றால்: 1) வர்க்கங்களின் இருத்தல் என்பது பொருளுற்பத்தியின் வளர்ச்சியிலான குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டங்களுடன் மட்டுமே கட்டுண்டவை என்பதையும், 2) வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாத வகையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு இட்டுச் செல்கிறது என்பதையும், 3) இந்த சர்வாதிகாரம்தான் சகலவித வர்க்கங்களின் ஒழிப்பு மற்றும் வர்க்கங்களற்ற சமுதாயத்திற்கான மாறுதல் கட்டமாக அமைகிறது'' என்று மார்க்ஸ் எழுதினார். *

பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டம் மொத்த முதலாளித்துவ சமூகத்தைப் பொருளாதாரம், அரசியல், சித்தாந்தம் ஆகிய மூன்று பிரதான திசைவழிகளில் தாக்குகிறது.

பாட்டாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டம் என்பது கூலி உயர்வுக்கு, வேலை நேரக் குறைப்புக்கு,

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 4, பக்கம் 232.

சிறப்பான உழைப்பு நிலைமைகளுக்கு, சமூக இன்ஷூரன்சுக்கு, ஓய்வூதியத்துக்கு, தொழிற்சாலையின் நிர்வாகத்தில் பங்கு பெறுவதற்கு நடைபெறுகின்ற போராட்டமாகும். இவையனைத்தும் சாராம்சத்தில் ஏகபோகங்களின் ஆதிக்கத்துக்கு எதிரான கோரிக்கைகளாகும் என்பதைக் குறிப்பிடுவது அவசியமல்ல. இவை வெற்றியடைவதற்கு நடைபெறுகின்ற போராட்டம் முதலாளித்துவ அமைப்பின் அடிப்படைகளைத் தகர்த்து அதை மேன்மேலும் நிலையற்றதாகச் செய்கிறது. அது சமூகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைத்தல் என்னும் தொழிலாளி வர்க்கத்தின் முக்கியமான இலட்சியத்துக்கு அடித்தளம் அமைக்கிறது.

இன்றைய நிலைமைகளில் உழைக்கும் மக்களின் வர்க்கப் போராட்டம் ஒரு புதிய கட்டத்திற்குள் நுழைந்திருக்கிறது. அது பின்வரும் காரணிகளுடன் இணைந்திருக்கிறது:

— தேசியப் பொருளாதாரத்தின் இராணுவமயமாக்கல் தீங்கான விளைவுகளை ஏற்படுத்தி இணைந்திருக்கிறது. இவை கூர்மையான பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளின், பிரதானமாக, வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம், சமூகப் பாதுகாப்பின் குறைப்பு ஆகியவற்றின் தீர்வைத் தடை செய்கிறது;

— உழைக்கும் மக்களின் பொருளாதார வெற்றிகள் மற்றும் ஜனநாயக உரிமைகள் மீது ஆளும் வட்டாரங்களின் விரிவான தாக்குதலைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது;

— பொருளாதாரப் போராட்டத்தின் தன்மை மாறி வருகிறது; அது தனிப்பட்ட பாக்டரிகள் மற்றும் தொழிற் சாலைகள், கம்பெனிகள் மற்றும் மொத்தத் தொழில்துறைகளின் எல்லைகளைத் தாண்டி மொத்த அரசு-ஏகபோக அமைப்புடனும் மோதலாக வளர்ச்சியடைகிறது;

— பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க உணர்வு மேன்மேலும் வளர்ச்சியடைகிறது.

அரசியல் போராட்டம் என்பது முதலாளி வர்க்கத்தின் அதிகாரம் மற்றும் அதன் ஜனநாயக விரோதக் கொள்கைகளை எதிர்த்து, ஜனநாயக உரிமைகளையும் சுதந்திரங்களையும் சுரண்டலை முழுமையாக ஒழிப்பதை ஆதரித்து நடைபெறுகின்ற போராட்டம். வர்க்கப் போராட்டத்தின் போது தொழிலாளி வர்க்கத்தின் கோரிக்கைகள் மேன்மேலும் அதிகமான அரசியல் பரிமாணங்களை அடைகின்றன. அரசியல் போராட்டத்தின் நோக்கம் முதலாளி வர்க்கத்தின் வர்க்க ஆதிக்கத்தை ஒழிப்பதும் ஏதாவதொரு வடிவத்தில் பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சியதிகாரத்தை நிறுவுவதும் ஆகும்.

அரசியல் போராட்டங்களில் பல ரகங்கள் இருக்கின்றன: அரசியல் ஆர்ப்பாட்டங்கள், தொழில்துறை வேலைநிறுத்தங்கள், அரசு அமைப்புகளுக்கு நடைபெறுகின்ற தேர்தல்களில் பங்கெடுத்தல் அல்லது அவற்றைப் பகிஷ்கரித்தல், போராட்டத்தின் நாடாளுமன்ற வடிவங்கள், இறுதியாக நாட்டின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு நடைபெறுகின்ற புரட்சிகரப் போராட்டம். இந்த அரசியல் போராட்டங்களுக்கு மார்க்சிய-லெனினியக் கட்சிகள் தலைமை தாங்குகின்றன. அவை பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டங்களை முழு நிறைவாக்கி தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை நிறுவுகின்றன.

சித்தாந்தப் போராட்டம் என்பது முதலாளி வர்க்கத்தின் ஆன்மீக மற்றும் அறிவு சார்ந்த ஒடுக்குமுறைக்கு எதிராக, உழைக்கும் மக்களின் உணர்வில் அவர்களுடைய நலன்களைத் தத்துவ ரீதியில் வெளியிடுகின்ற சித்தாந்தமாகிய மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தைப் பரப்புவதற்கு நடைபெறுகின்ற போராட்டம். தன்னியல்பான தொழிலாளி

வர்க்க இயக்கம் முற்போக்கான சோஷலிச சித்தாந்தத்தைத் தயாரிக்க முடியாது. ஒரு மார்க்சிய-லெனினியக் கட்சிதான் அதைச் செய்ய முடியும். இக்கட்சி விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தை தொழிலாளி வர்க்க இயக்கத்துடன் இணைக் கிறது; இம்முறையில் பாட்டாளி வர்க்கத்தின் தன்னியல் பான போராட்டத்தை உணர்வு பூர்வமான வெற்றிப் போராட்டமாக மாற்றுகிறது.

இன்றைய உலகத்தில் ஒன்றுக்கொன்று நேரெதிரான சோஷலிச மற்றும் முதலாளி வர்க்க சித்தாந்தங்களுக்கு இடையில் உக்கிரமான போராட்டம் நடைபெற்றுக் கொண் டிருக்கிறது. இந்தப் போராட்டம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற வரலாற்று நிகழ்வுப் போக்கை சமூகத்தின் அறிவு சார்ந்த வாழ்க்கையில் பிரதிபலிக்கிறது.

தொழிலாளி வர்க்கக் கட்சி — புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சி. பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ சமூகத்தைப் புரட்சிகர மான முறையில் சோஷலிச சமூகமாக மாற்றுவதற்கு ஒரு சுயேச்சையான அரசியல் கட்சி அதற்கு அவசியம். இந்தக் கட்சிதான் மார்க்சிய-லெனினிய கம்யூனிஸ்ட் கட்சி. அது தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படை, அதாவது அதன் வளர்ச்சியடைந்த, அரசியல் உணர்வுடைய பகுதி. இக்கட்சி பாட்டாளி வர்க்கத்தின் நலன்களை உறுதியாக ஆதரிக்கிறது; அதன் விருப்பார்வங்களை அதிக முழுமை யாகவும் முரணில்லாமலும் வெளியிடுகிறது.

''பாட்டாளி வர்க்கம் அந்தத் தீர்மானகரமான தினத் தன்று வெற்றியடைவதற்குப் போதிய வலிமையைக் கொண் டிருக்க வேண்டுமென்றால் அது மற்ற எல்லாவற்றிலிருந்தும் தனித்திருக்கின்ற, அவற்றுக்கு எதிரான தனிக் கட்சியை, வர்க்க உணர்வைக் கொண்ட கட்சியை அமைத்துக் கொள்ள

வேண்டும்; மார்க்சும் நானும் 1847ஆம் ஆண்டிலிருந்தே இதை வலியுறுத்தி வந்திருக்கிறோம்'' என்று எங்கெல்ஸ் எழுதினார். பாட்டாளி வர்க்கக் கட்சியின் வர்க்க ரீதியான கொள்கை என்பது என்ன? ''கட்சியின் பாட்டாளி வர்க்கத் தன்மையைப் பாதிக்காத'' * எந்த அரசியல் நடவடிக்கையையும் செய்யலாம் என்பதே அக்கொள்கை. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், வர்க்கச் சார்பினை உணர்ந்து கொண்ட, எல்லா முதலாளி வர்க்கக் கட்சிகளுக்கும் எதிராக இருக்கின்ற பாட்டாளி வர்க்கக் கட்சி இல்லாமல் வெற்றிகரமான புரட்சி, சோஷலிசம் ஏற்படாது.

புரட்சிகரமான தத்துவத்தைக் கொண்டிருக்கின்ற தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படை என்ற முறையில் கம்யூனிஸ்ட் கட்சி தொழிலாளி வர்க்கத்தின் மற்ற எல்லா ஸ்தாபனங்களையும் பொறுத்தமட்டில் தலைமையான பாத்திரத்தை வகிக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி தொழிலாளி வர்க்கம் மற்றும் அதன் கூட்டாளிகளின் சக்திகளை ஒன்று படுத்துகிறது; பழைய சுரண்டல் சமூக அமைப்பை ஒழித்துப் புதிய சமூகத்தை நிர்மாணிக்கின்ற முடிவான இலட்சியத்தை நோக்கி அவற்றை இயக்குகிறது.

தொழிலாளி வர்க்கத்தின் மெய்யான முதல் புரட்சிகரக் கட்சி, புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சி ருஷ்யாவில் நிறுவப் பட்டது. இந்த லெனினியக் கட்சி சோஷலிசப் புரட்சியிலும் புதிய சமூகத்தை நிர்மாணிப்பதிலும் நாட்டுக்குத் தலைமை தாங்கியது.

புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சி மற்ற கட்சிகளிலிருந்து பின்வரும் அம்சங்களில் வேறுபடுகிறது:

— அது மார்க்சிய-லெனினியத் தத்துவத்தினால் வழி காட்டப்படுகிறது, அதைப் படைப்பாற்றலுடன் வளர்க்கிறது,

---

* K. Marx, F. Engels, *Selected Correspondence*, pp. 386, 387.

புரட்சிகரமான தத்துவம் புரட்சிகர நடைமுறையுடன் அங்கக ரீதியில் ஒன்றுசேர்வதை உறுதிப்படுத்துகிறது;

— அது தொழிலாளி வர்க்கத்தின் கூட்டு அரசியல் தலைவனாக, அதன் ஸ்தாபனத்தின் ஆக உயர்ந்த வடிவ மாக, எல்லா உழைக்கும் மக்களின் முன்னணிப் படையாக இருக்கிறது; பெருந்திரளான மக்களுடன் கட்சியின் நெருக்க மான இணைப்பு அதன் எல்லையற்ற வலிமையின் தோற்று வாயாக இருக்கிறது;

— இது ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டின் அடிப் படையில் செயல்படுகிறது, தன்னுடைய அணிகளின் சித் தாந்த மற்றும் ஸ்தாபன ஒற்றுமையையும் உணர்வு பூர் வமான கட்டுப்பாட்டையும் வலுப்படுத்துவதற்கு இடை விடாமல் பாடுபடுகிறது; தன்னுடைய உறுப்பினர்களின் செயல் முனைப்பை ஊக்குவிக்கிறது;

— இது எவ்விதமான கோஷ்டிவாதம், குறுங்குழு வாதம், திருத்தல்வாதம், அரசியல் சந்தர்ப்பவாதம் மற்றும் வறட்டுக் கோட்பாட்டுவாதத்தையும் தீவிரமாக எதிர்க் கிறது;

— இது புரட்சிகரமான முறையில் சமூகத்தை மாற்றி யமைப்பதற்குத் தன்னுடைய நடவடிக்கைகளை, தன் னுடைய கொள்கையின் விளைவுகளை விமர்சன ரீதியில் பகுப்பாய்வு செய்கிறது; சர்வதேச கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் அனுபவத்தை ஆராய் கிறது, மதிப்பிடுகிறது, கடைப்பிடிக்கிறது;

— இது பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதக் கோட்பாடு களை முரணில்லாமல் அமுலாக்குகிறது.

ஒரு புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சியைப் பற்றிய கோட்பாடு கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டு நடைமுறையில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சோவியத் யூனி யனிலும் ஐரோப்பா, ஆசியா மற்றும் லத்தீன் அமெரிக்

காவில் பல நாடுகளிலும் சோஷலிச சமூகம் நிர்மாணிக்கப் பட்டதில் அது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

சோஷலிசப் புரட்சித் தத்துவம்

சோஷலிசப் புரட்சி தவிர்க்க முடியாதது. சோஷலிசப் புரட்சி வர்க்க சமூகத்தின் வரலாற்றில் மிகவும் ஆழமான சமூகக் கொந்தளிப்பு, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற சாதனம் ஆகும். உழைக்கும் மக்கள் முதலாளித்து வத்தை எதிர்த்து சோஷலிச அமைப்பை நிறுவுவதற்கு நடத்துகின்ற வர்க்கப் போராட்டத்தில் மிக முக்கியமான கட்டம் இது. சோஷலிசப் புரட்சி முதலாளித்துவ சமூகத்தின் வளர்ச்சியை ஆள்கின்ற புறநிலையான விதிகளிலிருந்து தோன்றுகிறது; அது மார்க்சிய-லெனினியக் கட்சியின் தலை மையில் உள்ள தொழிலாளி வர்க்கத்தினால் தலைமை தாங்கப்படுகின்ற புரட்சிகரமான மக்களால் நிறைவேற்றப் படுகிறது. எனவே அது தவிர்க்க முடியாதது.

சோஷலிசப் புரட்சி தவிர்க்க முடியாதது, தடுக்கப்பட முடியாதது என்ற உண்மை பல புறநிலையான காரணங் களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. முதலாவதாக, உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் உடைமையின் முத லாளித்துவ அமைப்புக்கும் இடையிலான மோதலைக் குறிப்பிட வேண்டும். சமூகத்தின் உற்பத்திச் சக்திகளின் பிரம்மாண்டமான வளர்ச்சி முதலாளித்துவ உற்பத்தி உறவு களுடன் மேன்மேலும் மோதுகிறது. இந்த முரண்பாட்டுக்கு சோஷலிசப் புரட்சி ஒரே தீர்வாக இருக்கிறது.

தொழிலாளி வர்க்கமும் அதன் கூட்டாளிகளும் அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பதில், முதலாளி வர்க்க அரசு இயந்திரம் நொறுக்கப்படுவதில் (அது முதலாளி வர்க்கத்தின்

அரசியல் ஆதிக்கத்தின் முக்கியமான கருவியாகும்), பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்படுவதில் சோஷலிசப் புரட்சி ஆரம்பமாகிறது. தொழிலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பதற்குப் புரட்சிகரமான நிலைமை அவசியம் என்பதை வரலாற்று அனுபவம் எடுத்துக் காட்டுகிறது. புரட்சிகர நிலைமை என்னும் கோட்பாடு சோஷலிசப் புரட்சியைப் பற்றி லெனினுடைய தத்துவத்தின் முக்கியமான பகுதியாகும்.

லெனின் ஏகாதிபத்தியம் சோஷலிசப் புரட்சியின் முற்பொழுது என்ற தன்னுடைய தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இப்புரட்சியை சாத்தியமாகவும் அவசியமாகவும் செய்கின்ற புறவய நிலைமைகளை ஆராய்ந்து விவரித்தார். புரட்சிகள் தாமாகத் தோன்றுவதில்லை, அவற்றை செயற்கையாகத் தயாரிக்க முடியாது, அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவும் முடியாது என்று லெனின் முடிவு செய்தார். சில புரட்சிகர கோஷ்டிகள் விரும்புவதற்காக, புரட்சியை ''எந்த இடத்திலும்'', ''எந்த நேரத்திலும்'' உருவாக்கி விட முடியாது. புரட்சி முதலில் சமூகத்தின் கருப்பையில் முதிர்ச்சி அடைய வேண்டும். தனிப்பட்ட அரசியல் தலைவர்கள் அல்லது கட்சிகளின் சித்தத்திலிருந்து சுயேச்சையான முறையில் முதிர்ச்சியடைகின்ற அத்தகைய புறவய நிலைமைகளை லெனின் புரட்சிகர நிலைமை என்று குறிப்பிட்டார்.

புரட்சிகர நிலைமையின் குறியடையாளங்கள் எவை? லெனின் மூன்று முக்கியமான அடையாளங்களைக் குறிப்பிட்டார்: 1) ஆளும் வர்க்கங்கள் தமது ஆட்சியை எந்த மாற்றமுமின்றித் தொடர்ந்து நடத்திச் செல்வது சாத்திய மற்றதாகுதல்; ''மேல் வர்க்கங்களிடையில்'' ஏதேனும் ஒரு வடிவத்தில் நெருக்கடி ஏற்பட்டு, ஆளும் வர்க்கத்தின் கொள்கை நெருக்கடிக்கு உள்ளாகி, இதன் விளைவாக

வெடிப்பு உண்டாகி, ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடைய அதிருப்தியும் ஆத்திரமும் இவ்வெடிப்பின் வழியாகப் பீறிட்டு வருதல். புரட்சி நடைபெற வேண்டுமென்றால் பழைய முறையில் வாழ்வதற்குக் ''கீழ்மட்ட வர்க்கங்கள்'' விரும்பாதது மட்டும் சாதாரணமாகப் போதாது; பழைய வழியில் வாழ ''மேல் வர்க்கங்களுக்கு'' இயலாமற்போவதும் அவசியமாகும். *2)* ஒடுக்கப்படும் வர்க்கங்களுடைய துன்பதுயரமும் தேவையும் வழக்கமாக இருப்பதைக் காட்டிலும் அதிகமாகக் கடுமையடைதல். *3)* மேற்கண்ட காரணங்களின் விளைவாக பெருந்திரளான மக்களுடைய நடவடிக்கை கணிசமாக அதிகரித்தல்; பொருந்திரளான மக்கள் ''சமாதான காலத்தில்'' தாம் கொள்ளையடிக்கப்படுவதை ஆட்சேபிக்காமல் அனுமதிப்பவர்களே என்ற போதிலும், கொந்தளிப்பான காலங்களில் வரலாறு படைக்கக் கூடிய சுயேச்சையான நடவடிக்கையில் இறங்கும்படி நெருக்கடி நிலைமைகள் எல்லாவற்றாலும் மற்றும் ''மேல் வர்க்கங்களாலும்'' கூட இழுக்கப்படுகிறார்கள். *

ஆனால் இப்புறவய நிலைமைகளும் தாமாகவே புரட்சியை ஏற்படுத்தப் போவதில்லை. அதற்கு வெகுஜனப் புரட்சிகர நடவடிக்கைக்குத் தகுதியுடையதாகப் புரட்சிகரமான வர்க்கம் இருக்க வேண்டும், கட்சி உழைக்கின்ற பெருந்திரளான மக்களைத் திரட்ட வேண்டும், புரட்சிகர எழுச்சி தொடங்க வேண்டிய துல்லியமான சமயத்தைச் சரியானபடி தேர்ந்தெடுக்க வேண்டும், அந்தப் புரட்சிகர எழுச்சியை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டும் ஆகியவை அவசியமாக இருக்கின்றன. புரட்சி என்பது விஞ்ஞானம் மட்டுமல்ல, அது ஒரு கலை. புரட்சியை வெற்றிகரமாக நிறை

---

* வி. இ. லெனின், **இரண்டாவது அகிலத்தின் தகர்வு**, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், *1976*, பக்கங்கள் *14—15* பார்க்க.

வேற்ற வேண்டுமென்றால் புறவய நிலைமைகளையும் அகவய நிலைமைகளையும் சரியாக இணைப்பது அவசியம்; அப் பொழுதுதான் இந்த நிபந்தனைகளின் ஒருமை தேசிய நெருக்கடியில் முடிவடையும். இதுதான் புரட்சியின் பிரதான விதி.

ஏகாதிபத்தியச் சங்கிலியில் பலவீனமான கண்ணியை, ஏகாதிபத்திய அமைப்பில் அதன் முரண்பாடுகள் மிகவும் கூர்மையாக இருக்கின்ற துல்லியமான இடத்தை, பாட்டாளி வர்க்கம் மற்றும் அதன் கூட்டாளிகளின் படைகள் மிகவும் பலமாக இருப்பதைப் பற்றிய கருதுகோளை லெனின் வகுத்தளித்தார். புரட்சி மற்ற நாடுகளைக் காட்டிலும் அத்தகைய நாடுகளில் வேகமாக முதிர்ச்சி அடைகிறது.

புரட்சியின் இயக்கு சக்திகள். சோஷலிசப் புரட்சியின் பிரதான இயக்கு சக்தியாகவும் தலைவனாகவும் தொழிலாளி வர்க்கம் இருக்கிறது. முதலாளித்துவம் அதற்குப் படுமோசமான வாழ்க்கை மற்றும் உழைப்பு நிலைமைகளை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த நிலைமைகள் தொழிலாளி வர்க்கத்திடம் மனவுறுதி, துணிச்சல், ஒற்றுமை, ஸ்தாபனத் திறமை ஆகியவற்றை, அதாவது ஒரு சோஷலிசப் புரட்சியை நிறைவேற்றுவதற்கு அவசியமான புரட்சிகர குணாம்சங்களை உருவாக்குகின்றன. நாட்டின் மொத்த மக்கள் தொகையில் பாட்டாளி வர்க்கத்தின் எண்ணிக்கையைக் காட்டிலும் அதன் புரட்சிகரமான பாத்திரம் மிகப் பெரியதாக இருக்கிறது. முதலாளித்துவத்தின் கீழ் பாட்டாளி வர்க்கம் பிரதான உற்பத்திச் சக்தியாக இருப்பதும் உழைக்கும் மக்களின் அதிகப் பெரும்பான்மையினருடைய பொருளாதார, அரசியல் நலன்களை அது வெளியிடுவதும் இதற்குக் காரணமாகும்.

தொழிலாளி வர்க்கம் சோஷலிசத்துக்காகத் தனியே போராடவில்லை. புதிய சமூக அமைப்பை உருவாக்குவதில் உழைக்கும் மக்களின் இதர சமூகப் பிரிவுகளும் (விவசாயிகள், அறிவுத்துறைப் பகுதியினர், ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள்) பங்கெடுக்கின்றன.

தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாயி வர்க்கத்தின் கூட்டணி என்னும் லெனினியத் தத்துவம் சரியானது என்பதை இருபதாம் நூற்றாண்டில் நடைபெற்றிருக்கின்ற எல்லாப் புரட்சிகளின் அனுபவமும் நிரூபித்திருக்கிறது. தொழிலாளி வர்க்கத்துடன் சேர்ந்து விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்ட நாடுகளில் புரட்சி வெற்றி பெற்றது. அந்த நாடுகளில் பாட்டாளி வர்க்கம் தலைமையான பாத்திரத்தை வகித்த தொழிலாளி வர்க்க, விவசாயிகள் கூட்டணி புரட்சி ஆரம்பமான தருணத்திலிருந்து மற்றும் அதன் வளர்ச்சியின் போது மேன்மேலும் பலமடைந்தது. இது மிகவும் முக்கியமாகும்; ஏனென்றால், விவசாயிகள் பெரும்பான்மையாக இருக்கின்ற நாடுகளில் எண்ணிக்கையில் குறைவாக இருக்கின்ற, கூட்டாளிகள் இல்லாத தொழிலாளி வர்க்கம் வெற்றி அடைய முடியாது. உதாரணமாக, கம்யூனிஸ்டுகளின் தலைமையிலிருந்த ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் விவசாயிகளை முதலாளி வர்க்கத்தின் ஆதிக்கத்திலிருந்து படிப்படியாகப் பிரித்து அவர்களைத் தன்னுடைய கூட்டாளிகளாக மாற்றியது. விவசாயிகளும் தொழிலாளி வர்க்கத்துடன் கூட்டணி வகுத்தால்தான் தாங்கள் வெற்றி அடைய முடியும் என்று உறுதியாக நம்பினார்கள்.

ஒரு சோஷலிசப் புரட்சி சமாதான முறையில் நடைபெறுவதும் அதற்கு மாறான வழிமுறையைப் பின்பற்றுவதும் வரலாற்று நிலைமைகளையும் முதலாளி வர்க்கத்தின் ஆயுதம் தாங்கிய எதிர்ப்பையும் பொறுத்திருக்கின்றன. சோஷலிசப் புரட்சி சமாதான முறையில் நடைபெறுவது சிறப்பான

விஷயமே. ஆனால் போராட்டம் இல்லையென்றால் முதலாளிகள் தம்முடைய அதிகாரத்தைக் கைவிடப் போவ தில்லை என்பது உண்மையாகும். அதனால்தான் பாட்டாளி வர்க்கம் புரட்சியில் வெற்றி பெறுவதற்கு நிர்ப்பந்தவசமாக வன்முறையை உபயோகிக்கிறது, ஆயுதமேந்திப் போராடு கிறது.

முதலாளி வர்க்கத்தின் அரசியல் அதிகாரத்தை எதிர்த்து சில வர்க்கங்களும் சமூகப் பிரிவுகளும் பகிரங்கமான முறை யில் ஆயுதம் தாங்கிய புரட்சிகர எழுச்சியை நடத்துவதற்கு மார்க்சிய-லெனினியத்தின் மூலச் சிறப்புடைய நூல்கள் அதிக மான முக்கியத்துவத்தை அளித்திருக்கின்றன. அந்த நூல்கள் அதை பின்வரும் விதிகளுக்கு உட்பட்ட கலையாகக் கருது கின்றன:

— புரட்சிகர எழுச்சி புறவயமான முறையில் முதிர்ச்சி அடைகின்ற வரை அதனுடன் ஒருபோதும் விளையாடக் கூடாது;

— தீர்மானகரமான இடத்தில், தீர்மானகரமான தருணத்தில் அதிகமான சக்தியைத் திரட்டிக் கொண்டு எழுச்சியில் ஈடுபட வேண்டும்; இல்லையென்றால் பயிற்சி, ஸ்தாபனம் ஆகிய சாதகங்களைப் பெற்றிருக்கின்ற எதிர்ச் சக்திகள் எழுச்சியை நசுக்கி விடக் கூடும்;

— எழுச்சி தொடங்கியதும் மிகவும் அதிகமான உறுதி யுடன் செயலாற்ற வேண்டும், முன்னேறித் தாக்க வேண்டும். தற்காப்பு நிலையெடுத்தால் ஆயுதம் தாங்கிய எழுச்சி அழிக்கப்படும்;

— நாள்தோறும் அற்பமாக இருந்தாலும் புதிய வெற்றி களைக் குவிக்க வேண்டும்; உணர்வு மட்டத்தை ஏறுமுகத்தில் வைத்திருக்க வேண்டும். *

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்**, தொகுதி 3, பக்கங் கள் 158—159 பார்க்க.

சாதகமான நிலைமைகள் இருக்கின்ற பொழுது, தொழிலாளி வர்க்கம் பாட்டாளி வர்க்கம் அல்லாத பகுதிகளுடன் கூட்டணியில் சமாதான முறையில் வெகுஜனப் போராட்டத்தின் மூலம் சோஷலிசப் புரட்சியை நிறைவேற்ற முடியும். தொழிலாளி வர்க்கத்தையும் அதன் கூட்டாளிகளையும் ஸ்தாபன ரீதியாக அமைப்பதற்கும் திரட்டுவதற்கும் வாய்ப்பளிக்கின்ற குறைந்தபட்ச ஜனநாயக உரிமைகள் அத்தகைய சாதகமான நிலைமைகளில் அடங்கும்.

சோஷலிசப் புரட்சிக்கும் மற்ற புரட்சிகளுக்கும் உள்ள வேறுபாடு. சோஷலிசப் புரட்சி அதற்கு முன்னர் நடைபெற்ற எல்லாப் புரட்சிகளிலிருந்தும் அடிப்படையில் வேறுபடுகிறது. முதலாவதாக, கடந்த காலத்தில் நடைபெற்ற புரட்சிகள் சுரண்டலின் ஒரு வடிவத்துக்குப் பதிலாக மற்றொரு வடிவத்தை ஏற்படுத்துவதை மட்டுமே செய்தன; ஆனால் சோஷலிசப் புரட்சி சுரண்டலுக்கு முடிவு கட்டுகிறது, மக்களுக்கு மத்தியில் உண்மையான சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் ஏற்படுத்துகிறது.

உழைக்கும் மக்கள் முதலாளித்துவப் புரட்சிகளிலும் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிகளிலும் சுறுசுறுப்பாகப் பங்கெடுத்தாலும் அவர்கள் அவற்றில் தலைமையான பங்கு வகிக்கவில்லை. அவர்கள் புரட்சியின் முடிவுகளினால் உண்மையாகவே ஏமாற்றப்பட்டார்கள்; ஏனென்றால் அப்புரட்சிகள் நிலப்பிரபுத்துவச் சுரண்டல் வடிவங்களுக்குப் பதிலாக முதலாளித்துவச் சுரண்டல் வடிவங்களை ஏற்படுத்தியதுடன் நின்று விட்டன. சோஷலிசப் புரட்சியில் தொழிலாளி வர்க்கம் புரட்சியின் தலைவனாக, அமைப்பாளனாகச் செயல்படுகிறது. பாட்டாளி வர்க்கப் புரட்சி என்பது உழைக்கின்ற பெருந்திரளான மக்களின் புரட்சி ஆகும்.

அவர்கள் தங்களுடைய சொந்த ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்காக அதை நிறைவேற்றுகிறார்கள்.

முதலாளித்துவப் புரட்சிகள் மற்றும் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிகளின் இறுதி இலட்சியம் முதலாளித்துவ வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்ற நிலப்பிரபுத்துவத்தை ஒழிப்பதே. ஆனால் நிலப்பிரபுத்துவ அமைப்பின் சுற்றுவட்டத்திற்குள்ளாகவே முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் தோன்றி வளர்ச்சியடைந்தன. உடைமையின் முதலாளித்துவ வடிவமும் நிலப்பிரபுத்துவ வடிவமும் தனியுடைமையின் இரண்டு வடிவங்களாக மட்டுமே இருந்தன; எனவே இது சாத்தியமாயிற்று.

முதலாளித்துவ அமைப்புக்குள் சோஷலிச உற்பத்தி உறவுகள் தோன்ற முடியாது. தொழிலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை வென்றெடுத்த பிறகு, முதலாளிகளின் உடைமையாக இருந்த பாக்டரிகள், ஆலைகள், போக்குவரத்துச் சாதனங்கள், வங்கிகள், இதரவை தேசியமயமாக்கப்பட்டு சோஷலிச உடைமையாக மாற்றப்பட்ட பிறகுதான் சோஷலிச உற்பத்தி உறவுகள் தோன்றி வளர முடியும். அது மட்டுமல்ல. சோஷலிசத்துக்கு மாறுவதற்கு மக்களுடைய பொருளாதார வாழ்க்கையை மாற்றியமைப்பது இன்றியமையாததாகும். சமூக மற்றும் அரசியல் உறவுகளை சோஷலிச முறையில் திருத்தியமைப்பதும் பொருளாதாரம், அரசியல் துறைகளில் மட்டுமன்றி, கலாசாரம், கல்வி மற்றும் இதர துறைகளிலும் சிக்கலான கடமைகளை நிறைவேற்றுவதும் இன்றியமையாததாக இருக்கின்றன.

அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவது புரட்சியின் கேந்திரமான பிரச்சினையாகும். கடந்த காலத்தில் நடைபெற்ற புரட்சிகளில் புதிய வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு பழைய அரசு இயந்திரத்தைத் தன்னுடைய சொந்தத் தேவைகளுக்குத் தகுந்த முறையில் திருத்தியமைத்தது. சோ

ஷலிச புரட்சியில் தொழிலாளி வர்க்கம் இந்தப் பாதையைப் பின்பற்றி, முதலாளி வர்க்க அரசு இயந்திரத்தைப் பயன் படுத்த முடியாது; ஏனென்றால் அந்த இயந்திரத்தின் முக்கியமான செயல் உழைக்கும் மக்களை முதலாளிகளுக்கு அடிமைப்படுத்துவதே. அதனால்தான் சோஷலிசப் புரட்சி யில் பழைய அரசு இயந்திரம் நொறுக்கப்பட்டு அதற்கு பதிலாகப் புதிய சோஷலிச அரசு அமைப்புகள் ஏற்பட வேண்டும்.

சோஷலிசப் புரட்சிக்கும் முதலாளித்துவ மற்றும் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்கும் இடையில் பின் வரும் அடிப்படையான வேறுபாடுகள் இருக்கின்றன:

முதலாவதாக, சோஷலிசப் புரட்சியின் முக்கியமான நோக்கம் உற்பத்திச் சாதனங்களில் தனியுடைமையை சமூக உடைமையாக மாற்றி, மனிதனை மனிதன் சுரண்டல் முறையை ஒழிப்பதாகும்; ஆனால் முதலாளித்துவப் புரட்சி நிலப்பிரபுத்துவத் தனியுடைமை, நிலப்பிரபுத்துவச் சுரண் டலுக்குப் பதிலாக முதலாளித்துவத் தனியுடைமை, முதலாளித்துவச் சுரண்டலை ஏற்படுத்துகிறது.

இரண்டாவதாக, சோஷலிச உற்பத்தி உறவுகள் முத லாளித்துவ அமைப்புக்குள்ளாகத் தோன்ற முடியாது; ஆனால் முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் நிலப்பிரபுத்துவ அமைப்புக்குள்ளே இருந்து தோன்றித் தன்னியல்பாக வளர்ச்சியடைகின்றன.

மூன்றாவதாக, சோஷலிசப் புரட்சி அரசியல் அதிகாரத் தைக் கைப்பற்றுவதிலிருந்து ஆரம்பமாகிறது; ஆனால் முதலாளித்துவப் புரட்சி அரசியல் அதிகாரத்தைக் கைப் பற்றுவதுடன் முடிந்து விடுகிறது.

வெவ்வேறு நாடுகள் சோஷலிசத்துக்கு மாறுதலைப் பற்றிய பொது விதிகளும் அந்த மாற்றத்தின் பல்வேறு வடிவங்களும்

மாறும் காலகட்டத்தின் சாராம்சம். முதலாளித்துவம் தனக்குச் சவக்குழி தோண்டுகின்ற பாட்டாளி வர்க்கத்தை ஆ புதிய அமைப்பின் சில கூறுகளையும் படைக்கிறது என்பதை நாம் ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருக்கிறோம். எனினும் பாட்டாளி வர்க்கப் புரட்சி இல்லாமல் இத்தனிக் கூறுகள் முதலாளித்துவ அமைப்பின் நிலைமையை மாற்றுவதில்லை, மூலதனத்தின் ஆதிக்கத்தை பாதிப்பதும் இல்லை. சோஷலிசப் புரட்சி வெற்றியடைந்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்பட்ட பிறகுதான் பொருளாதார, சமூக-அரசியல் மற்றும் அறிவுத் துறைகளில் சோஷலிச மாற்றங்களுக்கு வழி திறக்கப்படுகிறது.

ஒவ்வொரு நாட்டிலும் சோஷலிச மாற்றத்துக்கு ஒரு விசேஷமான மாறும் காலகட்டம் அவசியமாக இருப்பது இன்றைய எதார்த்த நிலையாகும். சோஷலிசத்தின் பொருளாயத முன்நிபந்தனைகள் எல்லாமே இருந்தாலும் கூட இக்காலகட்டத்தைத் தவிர்க்க முடியாது அல்லது தாவிக் கடக்க முடியாது.

முதலாளித்துவ சமுதாயத்துக்கும் கம்யூனிச சமுதாயத்துக்கும் இடையில் ஒன்று மற்றொன்றாய்ப் புரட்சிகர மாற்றமடையும் கட்டம் உள்ளது. இதற்கு இணையாய் அரசியல் இடைக்கால கட்டமும் ஒன்று உள்ளது; இந்த இடைக்காலத்தில் அரசு பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர சர்வாதிகாரம் என்பதைத் தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது என்று மார்க்ஸ் எழுதினார்.* முதலாளித்து

* மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், கம்யூனிஸ்ட் சமூகம், பக்கங்கள் 56—57 பார்க்க.

வத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறுகின்ற பொழுது மூன்று புறவயமான, வரலாற்று ரீதியில் முறைப்படியான கட்டங்கள் இருக்கின்றன என்று மார்க்சிய-லெனினியத் தத்துவம் கூறுகிறது: 1) மாறும் காலகட்டம், 2) சோஷலிசக் கட்டம், 3) கம்யூனிசக் கட்டம்.

முதலாளித்துவ அமைப்புக்குள்ளே இருந்து சோஷலிச உற்பத்தி உறவுகளின் முன்னரே தயாரிக்கப்பட்ட வடிவங்கள் தோன்ற முடியாது என்பதனால் மாறும் காலகட்டம் அவசியமாக இருக்கிறது. அத்தகைய உறவுகள் தோன்றுவதற்கு மொத்த வரலாற்று சகாப்தம் அவசியமாக இருக்கிறது (மாறும் காலகட்டத்தின் கால அளவு நாட்டுக்கு நாடு வேறுபடும்); அக்காலகட்டத்தில் புதிய சமூக உறவுகள் உருவாக்கப்படுகின்றன, இறுதியாக மிச்சமிருக்கின்ற சுரண்டல் வர்க்கத்தினரும் மனிதனை மனிதன் சுரண்டலின் சுவடும் ஒழிக்கப்படுகின்றன, புதிய சோஷலிசப் பொருளாதாரம் நிறுவப்படுகிறது. இவை எல்லாவற்றையும் உடனே செய்ய முடியாது; ஏனென்றால் மாறும் நிகழ்வுப் போக்கு ஒரு நீண்ட வரலாற்றுக் காலகட்டத்தை உள்ளடக்கியிருக்கிறது.

சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையில் உக்கிரமான வர்க்கப் போராட்டம் நடைபெறுகின்ற நிலைமைகளில் மாறும் காலகட்டத்தின் சிக்கலான கடமைகள் நிறைவேற்றப்படுகின்றன. சோவியத் ஆட்சியதிகாரத்தின் இரண்டு ஆண்டுக் கால அனுபவத்தை லெனின் பின்வருமாறு தொகுத்துரைத்தார்: ''இந்த மாறுதல் காலகட்டம், மடிந்து வரும் முதலாளித்துவத்திற்கும் இளம் பருவத்திலுள்ள கம்யூனிசத்திற்கும் இடையிலான போராட்டக் காலகட்டமாகும் — அல்லது வேறு சொற்களில் கூறினால், தோற்கடிக்கப்பட்ட, ஆனால் இன்னும் அழிக்கப்படாத முதலாளித்துவத்துக்கும் பிறந்துள்ள, ஆனால்

இன்னும் மிகவும் வலுக்குறைந்த கம்யூனிசத்திற்கும் இடையிலான போராட்டக் காலகட்டம் எனலாம்.'' *

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் காலகட்டம் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் ஆதிக்கம் நிறுவப்படுதலிலிருந்து ஆரம்பமாகி சோஷலிசப் பொருளாதாரம் அமைக்கப்படுவதுடன், நகரத்திலும் கிராமப் பகுதிகளிலும் முதலாளித்துவ சக்திகள் இறுதியாகவும் முழுமையாகவும் ஒழிக்கப்படுதலுடன் முடிவடைகிறது. சோவியத் யூனியனில் மாறும் காலகட்டம் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி நடைபெற்ற 1917ஆம் ஆண்டிலிருந்து 1930க்களின் பிற்பகுதி வரை நீடித்தது. புரட்சிக்கு முந்திய ருஷ்யாவின் பொருளாதார, தொழில் நுட்ப மற்றும் கலாசாரப் பின்தங்கிய நிலை, பொருளாதாரத்தில் சிறு பண்ட உற்பத்தி மேலோங்கியிருந்தது, அந்த சமயத்தில் சோவியத் யூனியன் உலகத்தின் ஒரே சோஷலிச நாடு என்ற உண்மை ஆகியவை இதற்குக் காரணங்களாகும்.

ஐரோப்பாவைச் சேர்ந்த மற்ற சோஷலிச நாடுகள் சிலவற்றில் மாறும் காலகட்டம் இதைக் காட்டிலும் குறுகியதாக இருந்தது. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி நிலை, உற்பத்திச் சாதனங்கள் சமூகமயமாக்கப்பட்டிருக்கின்ற அளவு, வர்க்க சக்திகளின் அணிச்சேர்க்கை, தேசிய மற்றும் வரலாற்று மரபுகள், உலக சோஷலிச அமைப்பு வலுப்பட்டிருக்கின்ற நிலை, சர்வதேச நிலைமை மற்றும் இதரவை இதற்குக் காரணங்களாகும்.

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற எந்த நாட்டிலும் மாறும் காலகட்டத்துக்குரிய விதிகளும் பிரத்யேகமான கூறுகளும் செயல்படுகின்றன. சோஷலிச

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 10, பக்கங்கள் 67–68.

சமூகத்தின் வளர்ச்சியை ஆள்கின்ற பொதுவான நியதிகளில் பின்வருபவை அடங்கும்: அரசியல் அதிகாரம் உழைக்கும் மக்களிடம் இருக்கிறது, அதில் தொழிலாளி வர்க்கம் தலைமையான பாத்திரத்தை வகிக்கிறது; விஞ்ஞான சோஷலிசத்தின் சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்டுள்ள கம்யூனிஸ்ட் கட்சி சமூக வளர்ச்சிக்குத் தலைமை தாங்குகிறது; அடிப்படையான உற்பத்திச் சாதனங்களில் பொது உடைமை தேசியப் பொருளாதாரம் மக்களுடைய நலன்களுக்கு ஏற்ற முறையில் திட்டமிடப்பட்ட, முறைப்படியான வழியில் வளர்ச்சியடைவதை உறுதிப்படுத்துகிறது; ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய திறமைக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய உழைப்புக்கு ஏற்ப'' என்னும் கோட்பாடு நிறைவேற்றப்படுகிறது; சோஷலிச ஜனநாயகத்தின் வளர்ச்சி; எல்லா தேசிய இனங்கள் மற்றும் மக்களினங்களுக்கும் இடையில் சமத்துவமும் நட்புறவும்; வர்க்க எதிரிகளின் அடாச் செயல்களை எதிர்த்துப் புரட்சியின் சாதனைகளைப் பாதுகாத்தல்.

மக்களுடைய கலாசார மற்றும் அறிவு சார்ந்த வாழ்க்கைத் துறையில் வயது வந்த எல்லோருக்கும் பொதுக் கல்வியை அமுலாக்குதல், சோஷலிச இலட்சியத்துக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்ற அறிவுப் பகுதியினரை உருவாக்குதல், சோஷலிச சித்தாந்தத்தை நிறுவுதல் ஆகிய அம்சங்களைக் கொண்ட கலாசாரப் புரட்சியை நிறைவேற்றுதல் சோஷலிசத்துக்கு மாறுகின்ற காலகட்டத்தில் பொது விதியாகும்.

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற பொது விதிகள் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு முறையில் வெளிப்படுகின்றன. வெவ்வேறு நாடுகளின் பிரத்யேக நிலைமைகள் சோஷலிச நிர்மாணத்தின் பொது விதிகளின் செயல்பாட்டின் மீது தாக்கம் செலுத்துகின்றன; சோஷலிச

மாற்றத்தின் உள்ளடக்கம், வடிவங்கள் மற்றும் வேகத்தை பாதிக்கின்றன. ''எல்லா நாடுகளும் சோஷலிசத்துக்கு வந்து சேரும். இது தவிர்க்க முடியாதது. ஆனால் எல்லா நாடுகளும் துல்லியமாக ஒரே முறையில் வரப் போவதில்லை. ஒவ்வொரு நாடும் ஜனநாயகத்தின் ஏதாவதொரு வடிவத்துக்கு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஏதாவதொரு ரகத்துக்கு சமூக வாழ்க்கையின் வெவ்வேறு அம்சங்களில் சோஷலிச மாற்றங்களின் வேகத்துக்கு தனக்கே உரிய ஒரு பங்கை வழங்கும்'' என்று லெனின் எழுதினார். *

மார்க்சிய-லெனினியத்தினால் கண்டுபிடிக்கப்பட்டு சோவியத் யூனியன் மற்றும் சோஷலிசக் குடும்பத்தைச் சேர்ந்த இதர நாடுகளுடைய அனுபவத்தினால், புரட்சிகரப் போராட்டம் மற்றும் சோஷலிச நிர்மாணத்தின் சர்வதேசிய நடைமுறையினால் நிரூபிக்கப்பட்டிருக்கின்ற இந்தப் பொது விதிகளுக்கு வெளியே சோஷலிசத்தை அடைவதற்கு வேறு பாதை கிடையாது. இந்தப் பாதையைப் பின்பற்றுகின்ற பொழுது கூட ஒவ்வொரு நாட்டின் பிரத்யேகமான தேசிய அம்சங்களைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாவிட்டால் எவ்விதமான முன்னேற்றமும் சாத்தியமல்ல.

பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம். சோஷலிசப் புரட்சியின் பிரதான சாராம்சம் பழைய அரசுப் பொறியமைவை அழித்து அதனிடத்தில் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் ஆதிக்கத்தை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்படுத்துவதாகும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தின் கேந்திரமான அம்சங்களில் ஒன்று; ஏனென்றால் அத்தகைய சர்வாதிகாரம்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 23, pp. 69—70.

இல்லாமல் சோஷலிசத்தை நிர்மாணிக்க முடியாது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற கருவியின் மூல மாகவே ''வெற்றியடைந்த பாட்டாளி வர்க்கம் தான் புதிதாக வென்றெடுத்த அதிகாரத்தைச் செயல்படுத்த முடி யும், தன்னுடைய முதலாளித்துவ எதிரிகளைக் கீழே வைத்திருக்க முடியும், சமூகத்தில் பொருளாதாரப் புரட் சியை நிறைவேற்ற முடியும்; அந்த பொருளாதாரப் புரட்சி இல்லையென்றால் மொத்த வெற்றியும் பாரிஸ் கம்யூனுக்குப் பிறகு தொழிலாளி வர்க்கத்துக்கு ஏற்பட்டதைப் போன்ற தோல்வி மற்றும் படுகொலையில் முடிவடையும்'' என்று எங்கெல்ஸ் எழுதினார். *

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது தொழிலாளி வர்க்கத்தின் அரசு அதிகாரம்; உழைக்கின்ற பெருந்திரளான மக்களுடன் கூட்டணி வகுத்திருக்கின்ற தொழிலாளி வர்க்கம் சுரண்டல்காரர்களின் எதிர்ப்பை நசுக்குவதற்கும் சோஷலிச சமூகத்தை நிர்மாணிப்பதற்கும் அதை உபயோகிக்கிறது.

மாறும் காலகட்டத்தில் அதன் முக்கியமான கடமைகள் பின்வருவன:

— தூக்கியெறியப்பட்ட சுரண்டும் வர்க்கத்தினருடைய எதிர்ப்பை ஒழித்தல்;

— நாட்டின் பொருளாதார, சமூக-அரசியல் மற்றும் கலாசாரத் துறைகளில் சோஷலிச மாற்றங்களை நிறை வேற்றுதல், உழைக்கின்ற பெருந்திரளான மக்களின் பொரு ளாயத நிலைமையை அபிவிருத்தி செய்தல்;

— விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களின் இதர பகுதிகளை சோஷலிச நிர்மாணத்தில் ஈடுபடுத்துதல், பாட் டாளி வர்க்கம் விவசாயிகளுடன் கொண்டிருக்கின்ற கூட் டணியை வலுப்படுத்துதல்;

---

* K. Marx, F. Engels, *Selected Correspondence*, p. 341.

— அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராக தாய்நாட்டைப் பாதுகாத்தல், மற்ற நாடுகளைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கத்துடன் சர்வதேசியவாத இணைப்புகளைப் பலப் படுத்துதல், உலக சமாதானம் மற்றும் சர்வதேச ஒத்து ழைப்புக்குப் போராடுதல், தேசிய விடுதலை இயக்கங்களுக்கு உதவி செய்தல்.

தொழிலாளி வர்க்கம் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு, கீழே இறக்கப்பட்ட சுரண்டும் வர்க்கத்தினருடைய எதிர்ப்பை மீறி, நாட்டின் உழைக்கும் மக்களுடன் ஒன்று சேர்ந்து புதிய சமூகத்தை நிர்மாணிக்கத் தொடங்கியது. அதனால்தான் சுரண்டும் வர்க்கத்தினரை நசுக்குவது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கேந்திரமான கடமை களில் ஒன்றாகவும் அதன் குறியடையாளங்களில் ஒன்றாக வும் இருக்கிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது புதிய நிலைமைகளில், புதிய வடிவங்களில் வர்க்கப் போராட் டத்தைத் தொடர்வதாகும்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது வன்முறை யான அரசியல் அமைப்பு என்னும் கருத்தை மார்க்சிய-லெனினியம் நிராகரிக்கிறது. ''புரட்சிகர வன்முறை என்பது புரட்சியின் வளர்ச்சியின் திட்டவட்டமான கட்டங்களில் மட்டுமே, திட்டவட்டமான மற்றும் விசேஷமான நிலைமை களில் மட்டுமே அவசியமான, முறையான ஆயுதம்'' என்று லெனின் விளக்கினார்.* சுரண்டுபவர்களின் எதிர்ப்பை நசுக்குகின்ற அதே சமயத்தில் ''...மற்றொரு பணியும் அதே போல தவிர்க்க முடியாமலும், காலம் செல்லச் செல்ல மேன்மேலும் அத்தியாவசியமாகவும் முன்னிலைக்கு வருகிறது. நேரடியாய்க் கம்யூனிசத்தை நிர்மாணம் செய்யும், புதிய பொருளாதார உறவுகளை, ஒரு புதிய சமுதாயத்தைத்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 29, p. 89.

தோற்றுவிக்கும் மிகவும் முக்கியத்துவமுள்ள பணி அது.'' *

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது ஜனநாயகத்தின் புதிய ரகம். சோஷலிசப் புரட்சி சிறுபான்மையினரிடம் அதுவரை இருந்த அரசு அதிகாரத்தை மக்களின் அதிகப் பெரும்பான்மையினரிடம் ஒப்படைக்கிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் உழைக்கும் மக்களுக்கு எல்லா அரசியல், சமூக உரிமைகளையும் கொடுக்கிறது என்பது இதன் பொருளாகும்.

சோஷலிசத்தின் எதிரிகள் சர்வாதிகாரமும் ஜனநாயகமும் ஒன்றுக்கொன்று முரணானது என்று கருதுகிறார்கள். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது ஜனநாயகத்தின் நிலைமறுப்பு, மக்கள் மீது வன்முறையைப் பயன்படுத்துதல் என்று அவர்கள் கூறுகிறார்கள். பாட்டாளி வர்க்க அரசு சுரண்டல்காரர்களின் ஜனநாயக உரிமைகளைக் கட்டுப்படுத்துவதை ஜனநாயகம் இல்லாத நிலைமை என்று சோஷலிச எதிரிகள் முடிவு செய்கிறார்கள். அதே சமயத்தில் அவர்கள் முதலாளித்துவ அமைப்பை ஆதரிக்கிறார்கள், ''முழுமையான'', ''பரிசுத்தமான'' ஜனநாயகத்தை, எல்லோருக்கும் ஜனநாயகத்தை ஆதரிப்பதாகத் தங்களைக் காட்டிக் கொள்கிறார்கள். ஆனால் நேரெதிரான நலன்களைக் கொண்ட வர்க்கங்களாகப் பிரிந்திருக்கின்ற சமூகத்தில் ''வர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட'', ''முழுமையான'', ''பரிசுத்தமான'' ஜனநாயகம் என்பது இருக்க முடியாது. சுரண்டுபவர்களுக்கும் சுரண்டப்படுபவர்களுக்கும் இடையில் சமத்துவம் இருக்க முடியாது என்பதைப் போன்றதே இதுவும். எந்த வர்க்கத்துக்காக ஜனநாயகம் இருக்கிறது, எந்த வர்க்கம் எந்த வர்க்கத்தின் மீது சர்வாதிகாரம் செலுத்துகிறது, அதாவது அரசியல் மற்றும் அரசு அதிகாரம்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 9, பக்கம் 309.

யாரிடம் இருக்கிறது, யாருடைய நலன்களுக்காக அது உபயோகிக்கப்படுகிறது என்ற கேள்வியை எழுப்பினால் எல்லாம் தெளிவாகி விடும்.

சோஷலிச சமூகத்தை நிர்மாணிக்கின்ற பொழுது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அரசியல் உறுப்புகள் மற்றும் வெகுஜன ஸ்தாபனங்களின் (கம்யூனிஸ்ட் கட்சி, சோவியத்துகள், தொழிற்சங்கங்கள், இளம் கம்யூனிஸ்டுகள் கழகம், இதரவை) உதவியுடன் நிறைவேற்றப்படுகிறது. இவை அனைத்தும் சேர்ந்ததே பாட்டாளி வர்க்க சர்வாதிகார அமைப்பு.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் பிரதான சக்தியாக கம்யூனிஸ்ட் கட்சி இருக்கிறது. அக்கட்சி உழைக்கும் மக்களுடைய எல்லா ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளுக்கும் வழிகாட்டுகிறது; அவற்றை சோஷலிச நிர்மாணப் பாதையில் இயக்குகிறது. ''கம்யூனிஸ்ட் கட்சியின் மூலமாக இல்லையென்றால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் செயலாற்றாது'' என்று லெனின் எழுதினார்.* கட்சி சிறந்த தலைவனாக இருப்பதற்கு மார்க்சியத் தத்துவத்தை நன்றாக அறிந்திருக்க வேண்டும், மக்களுடன் பின்னிப் பிணைந்திருக்க வேண்டும். கட்சி மக்களுக்குக் கற்பிக்க வேண்டும், மக்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்; சித்தாந்த ரீதியில் எப்பொழுதுமே சிறப்பாக, பரிசுத்தமாக இருக்க வேண்டும்; ஒற்றுமையை எப்பொழுதும் பாதுகாக்க வேண்டும். சோஷலிச நிர்மாணத்தின் போது மார்க்சிய-லெனினியக் கட்சியின் பாத்திரம் மேன்மேலும் அதிகரிக்கிறது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு வடிவங்களை அடைகிறது. சோவியத் யூனியனில் அது சோவியத்துகளின் வடிவத்தை மேற்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 32, p. 199.

கொண்டது; மற்ற சோஷலிச நாடுகளில் மக்கள் ஜனநாயக வடிவத்தை மேற்கொண்டது. சோவியத்துகளும் மக்கள் ஜனநாயக உறுப்புகளும் தம்முடைய வர்க்க இயல்பு, கடமைகள் மற்றும் செயல்களில் மிகவும் ஒத்த முறையில் இருக்கின்றன. சமூகத்தின் அரசியல் அமைப்பு வடிவங்கள் மற்றும் அரசு அமைப்பு வடிவங்களில்தான் அவற்றுக்கு இடையில் வேறுபாடுகளைக் காண்கிறோம். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வடிவங்கள் என்ற முறையில் மக்கள் ஜனநாயக நாடுகளில் பின்வரும் பிரத்யேகமான கூறுகள் இருக்கின்றன. இந்த நாடுகளில் சிலவற்றில் சோஷலிச நலனுக்காக நாட்டு நிர்வாகத்தில் கம்யூனிஸ்ட் கட்சியைத் தவிர இன்னும் சில கட்சிகள் பங்கெடுக்கின்றன. மக்கள் ஜனநாயக நாடுகள் சிலவற்றில் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயகக் கட்சிகள், தொழிற்சங்கங்கள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் இளைஞர் கழகங்களைக் கொண்ட மக்கள் முன்னணி இயங்குகிறது.

சோவியத்துகளின் அனுபவமும் மக்கள் ஜனநாயகத்தின் அனுபவமும் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கும் தேசிய விடுதலை இயக்கங்களுக்கும் தலைமையான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. எதிர்காலப் புரட்சிகள் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுவதற்கு இன்னும் புதிய அரசியல் வடிவங்களை உருவாக்க முடியும். இந்த வடிவங்கள் வெவ்வேறாக இருந்தாலும் மார்க்சிய-லெனினியக் கட்சியின் தலைமையிலுள்ள தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் அதிகாரம் சோஷலிச சமூகத்தை நிர்மாணிப்பதற்கு இன்றியமையாத நிபந்தனையாக இருக்கும். சோஷலிச மாற்றங்களும் புதிய சமூக நிர்மாணமும் மிகவும் சிக்கலான, நீண்ட செயல்முறை; ஆகவே அரசுப் பொறுப்பைப் பெற்றிருக்கின்ற கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளும் சோஷலிச வளர்ச்சியின்

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவற்றின் திறமையும், புதிய சமூக-அரசியல் அமைப்பு தோற்றுவித்திருக்கின்ற பிரம் மாண்டமான வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கு முழுப் பொறுப்பைக் கொண்டிருக்கின்றன என்று 1969ஆம் ஆண்டில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மாநாட்டின் இறுதி ஆவணம் சுட்டிக் காட்டு கிறது.

அத்தியாயம் ஐந்து

மார்க்சிய-லெனினியம் — உலகத்தைப் புரட்சிகரமாகப் புத்தாக்கம் செய்கின்ற வலிமைமிக்க சக்தி

மார்க்சிய-லெனினியம் எல்லாவற்றையும் தழுவிய தத்துவம் என்ற முறையில் முதலாளித்துவத்தின் தற்காலிகமான தன்மையையும் சோஷலிசமும் அதன் பிறகு கம்யூனிசமும் தடுக்க முடியாதபடி முடிவில் வெற்றியடையும் என்பதையும் நிறுவியிருக்கிறது. நவீன உலகத்தில் மார்க்சிய-லெனினியப் பதாகையின் கீழ் முக்கியமான புரட்சிகர மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் கோடிக்கணக்கான உழைக்கும் மக்களின் அறிவிலும் இதயங்களிலும் உறுதியாக இடம் பெற்றுள்ள மார்க்சிய-லெனினியக் கருத்துகள் உலக முழுவதையும் மாற்றியமைக்கின்ற தகுதியுடைய மாபெரும் பொருளாயத சக்தியாக வளர்ந்துள்ளன.

சோஷலிச முகாமைச் சேர்ந்த நாடுகளில் புதிய சமூகத்தை நிர்மாணிக்கின்ற பெருந்திரளான மக்களுடைய படைப்பு நடவடிக்கைகளுக்கு மார்க்சிய-லெனினியம் வழிகாட்டுகிறது. ''எல்லாமே மனிதனுடைய நன்மைக்காக, எல்லாமே மனிதனுக்காக'' என்ற குறிக்கோளுடன் அவர்கள் பாடுபடுகிறார்கள்.

முதலாளித்துவ நாடுகளில் முதலாளி வர்க்க ஆதிக்கத்தை, மனிதனை மனிதன் சுரண்டலை, சமூகக் கொடுமை

களை எதிர்த்துப் போராடுகின்ற தொழிலாளி வர்க்கம் மற்றும் எல்லா உழைக்கும் மக்களின் கரங்களில் மார்க்சிய-லெனினியம் ஒரு ஆயுதமாகப் பயன்படுகிறது.

வளர்முக நாடுகளின் மக்களினங்களுக்கு மார்க்சிய-லெனினியம் நம்பகமான திசை காட்டும் கருவியாக இருக்கிறது; காலனியாதிக்க எச்சங்களை அகற்றுவதற்கு, வறுமையையும் பின்தங்கிய நிலையையும் ஒழிப்பதற்கு, தலைமையான முதலாளித்துவ அரசுகளின் ஒடுக்குமுறைக் கொள்கைகளை எதிர்ப்பதற்கு, முற்போக்கான சமூக மாற்றங்களை நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கு வழிகாட்டுகிறது.

லெனின் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி வெற்றி அடைவதற்குச் சிறிது காலத்துக்கு முன்னர் 19ஆம் நூற்றாண்டில் மார்க்சியத்தின் வெற்றிகளைத் தொகுத்துரைத்தார், ''பாட்டாளி வர்க்கத்தின் தத்துவம் என்ற முறையில் மார்க்சியத்துக்கு, வரலாற்றின் வருகிற காலக் கூறினில் இன்னும் பெரிய வெற்றி கிட்டப் போகிறது''* என்று தன்னுடைய உறுதியான நம்பிக்கையை வெளியிட்டார். இன்று மனித சமூகம் அனைத்தும் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு முன்னேறிக் கொண்டிருப்பதும் உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் வளர்ச்சியும் மார்க்சிய-லெனினியம் மெய்யானது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. லெனினுடைய தீர்க்கதரிசனத்தை வாழ்க்கை நிரூபித்து விட்டது.

மார்க்சிய-லெனினியம் சமூக வளர்ச்சியைப் பற்றிய மெய்யான விஞ்ஞான ரீதியான தத்துவம். அது உழைக்கும் மக்களின் அடிப்படையான நலன்களை, சமூக நீதி இலட்சியங்களைப் வெளியிடுகிறது. அதன் ஜீவசக்தி அதன் மாறாத இளமையில், தன்னை வளர்த்துக் கொள்வதற்கு,

---

* வி. இ. லெனின், மார்க்சியத்தின் வரலாற்று வளர்ச்சியின் சில சிறப்பியல்புகள், பக்கம் 19.

புதிய விவரங்களையும் நிகழ்வுகளையும் படைப்பு ரீதியில் முறைப்படுத்தி உபயோகிப்பதற்கு, புரட்சிகரப் போராட்டம் மற்றும் சமூக மாற்றத்தின் அனுபவத்தைத் தொகுத்து ரைப்பதற்கு அதன் முடிவில்லாத திறமையில் அடங்கியிருக் கிறது.

மாபெரும் அக்டோபர் புரட்சியும் மெய்யான சோஷலிசமும்

வரலாற்றில் மாபெரும் புரட்சி. *1917* அக்டோபர் *25* (புதிய காலக் கணித முறைப்படி நவம்பர் *7*) இரவில் ருஷ்ய முதலாளித்துவ அரசாங்கத்தின் இருப்பிடமாக இருந்த குளிர் கால அரண்மனையின் மீது தாக்குதலை வெற்றிகரமாகத் தொடங்குகின்ற சமிக்கையாக ''அரோரா'' போர்க்கப்பலி லிருந்து பீரங்கி சுட்டது. அதே சமயத்தில் பெட்ரோகி ராட் சோவியத்தின் அவசரக் கூட்டம் தொடங்கியது. அக்கூட்டத்தில் லெனின் சம்பவங்களைச் சிறப்பான தெளிவுடனும் துல்லியத்துடனும் தொகுத்துக் கூறினார்: ''...தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் புரட்சி நிறை வேற்றப்பட்டு விட்டது'' * .

ஆல்பர்ட் ரைஸ் வில்லியம்ஸ் என்ற அமெரிக்கப் பத்திரி கையாளர் அந்த மறக்க முடியாத சம்பவங்களைப் பின் வருமாறு வர்ணிக்கிறார்: ''புரட்சி வெற்றியடைந்து விட்ட பெருமித உணர்ச்சியுடன் தொழிலாளர்கள் கூட்டம் பாட்டுப் பாடிக் கொண்டும் பெரும் சத்தத்துடனும் ஸ்மோல்னியின் அகன்ற அரங்கத்திற்குள் நெருக்கிக் கொண்டிருந்த பொழுது, ''அரோராவின்'' பீரங்கிகள் பழைய அமைப்பு ஒழிக்கப்பட்டு

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 26, p. 239.

விட்டது, புதிய அமைப்பு பிறந்து விட்டது என்பதை அறிவித்துக் கொண்டிருந்த பொழுது லெனின் அமைதியாக மேடையின் மீது ஏறினார். 'தோழர் லெனின் இப்பொழுது சொற்பொழிவாற்றுவார்' என்று கூட்டத் தலைவர் அறிவித்தார்.

''அவரைப் பற்றி நாங்கள் கற்பனை செய்த மாதிரி இருக்கிறாரா என்று பார்ப்பதற்காக நாங்கள் கழுத்தை நீட்டினோம். நிருபர்கள் வரிசையில் எங்களுடைய இடத்திலிருந்து பார்த்த பொழுது முதலில் அவருடைய உருவம் தெரியவில்லை. பலத்த சத்தம், வரவேற்பு முழக்கங்கள் ஆகியவற்றுக்கு நடுவில் அவர் மேடையில் ஏறினார். அவர் பேச்சாளரது இடத்துக்கு வந்த பொழுது அங்கே இருந்தவர்களின் உற்சாகம் கரை புரண்டோடியது. அவர் எங்களிடமிருந்து முப்பது அடி தூரத்துக்கு அப்பால் நின்று கொண்டிருந்தார். நாங்கள் அவரைத் தெளிவாகப் பார்த்தோம்.

''நாங்கள் அவரைக் கற்பனை செய்திருந்த உருவத்துக்கு அவர் எதிரிடையாக இருந்தார் என்றுதான் கூற வேண்டும். உருவம் கம்பீரமாக இல்லை; அவர் குட்டையாக இருந்தார்.

''அவர் இடி முழக்கத்தைப் போன்ற கர ஒலியை அடக்கிய பிறகு 'தோழர்களே, நாம் இப்பொழுது சோஷலிச அரசை அமைக்கப் போகிறோம்' என்று கூறினார்.'' *

மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி சமூக வளர்ச்சியின், ஏகபோக முதலாளித்துவ நிலைமைகளில் வர்க்கப் போராட்டத்தின் முறைப்படியான விளைவு ஆகும். அதன் வெற்றி உலகத்தின் முதல் சோஷலிச அரசைத் தோற்றுவித்தது.

அக்டோபர் புரட்சி வெற்றியடைவதற்கு முன்பு லெனினும் அவர் நிறுவிய போல்ஷிவிக் கட்சியும் பாட்டாளி

---

* Albert R. Williams, *Through the Russian Revolution*, Moscow, Progress Publishers, 1973, p. 24.

வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டங்களின் தத்துவம் மற்றும் செய்முறைத் துறையில் மாபெரும் பணியை நிறை வேற்றினார்கள். லெனின் பாரிஸ் கம்யூனுடைய (1871) அனுபவத்தை ஆராய்ந்த பிறகு வர்க்கப் போராட்டத்தைப் பற்றி மார்க்ஸ், எங்கெல்சினுடைய போதனையைப் புதிய வரலாற்று நிலைமைகளுக்குத் தொடர்ந்தார், விரிவுபடுத்தினார். 1905—1907ஆம் ஆண்டுகளில் ருஷ்யாவில் நடைபெற்ற முதல் மக்கள் புரட்சியை அவர் நேரடியாக இயக்கினார். முதல் புரட்சி முறியடிக்கப்பட்டது என்ற போதிலும் அது மார்க்சிய-லெனினியத் தத்துவத்தையும் நடைமுறையையும் வளப்படுத்தியது; மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்கு ஒத்திகையாக உதவியது. அந்தப் புரட்சி பெருந் திரளான மக்களுக்கு மகத்தான அரசியல் அனுபவத்தைக் கொடுத்தது; அவர்களை வரலாற்றைப் படைப்பவர்கள் என்னும் நிலைக்கு உயர்த்தியது. வர்க்கப் போராட்டத்தின் புதிய வடிவங்களும் வழிமுறைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. உழைக்கும் மக்கள் முதல் தடவையாகப் பெருந்திரளான அரசியல் வேலைநிறுத்தம் என்னும் சக்திமிக்க ஆயுதத்தைப் பயன்படுத்தினார்கள். அவர்கள் 1905 டிசம்பரில் ஆயுதம் தாங்கிய எழுச்சியைத் தொடங்கினார்கள். அவர்கள் நெருப்பில் ஞானஸ்நானம் செய்யப்பட்டார்கள் என்று லெனின் எழுதினார். அந்த எழுச்சியில் பயிற்சி பெற்ற போராளிகள் 1917இல் வெற்றி பெற்றார்கள்.

மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி பின்வரும் முக்கியமான சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன் மாதிரி என்று உலகம் கண்டது: சுரண்டல்காரர்களுடைய ஆட்சியை ஒழித்து பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை நிறுவுதல்; முதலாளிகள் மற்றும் நிலக்கிழார்களுடைய தனியுடைமையை மக்கள் உடைமையாக, சோஷலிச உடைமையாக மாற்றுதல்; விவசாயிகளின் நலன்

களுக்கு ஏற்ற முறையில் விவசாயப் பிரச்சினையை நியாய மாகத் தீர்த்தல்; காலனி நாடுகளைக் காலனி மற்றும் தேசிய ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை செய்தல்; சோஷலிச சமூகத்தை நிர்மாணிப்பதற்கு அவசியமான அரசியல் மற்றும் பொருளாதார முன்நிபந்தனைகளைப் படைத்தல்.

அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றி உலக வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை, முதலாளித்துவத்தின் வீழ்ச்சி மற்றும் கம்யூனிச சமூக நிர்மாணத்தின் சகாப் தத்தைத் தொடக்கியது. அது உலக வரலாற்றில் மிகவும் முக்கியமான புரட்சிகரப் பாய்ச்சல் ஆகும். உலகத்தின் பரந்த நிலப்பரப்பில் சுரண்டல் அமைப்பு முதல் தடவையாக ஒழிக்கப்பட்டது. ''உலகத்தை ரத்தத்தில் குளிப்பாட்டியிருக் கின்ற, மனித சமூகத்தைப் பட்டினிக்கும் மனமுறிவுக்கும் ஆளாக்கியிருக்கின்ற முதலாளித்துவம் என்னும் காட்டு மிருகத்தை உலகத்தின் ஒரு பகுதியில் முதல் தடவையாக ஒழிக்கின்ற வாய்ப்பு நமக்குக் கிடைத்ததைப் பற்றி நாம் பெருமைப்படுவதற்கும் அதிர்ஷ்டசாலிகள் என்று நம்மைக் கருதுவதற்கும் நமக்கு உரிமையுண்டு'' என்று லெனின் எழுதினார். *

அக்டோபர் சோஷலிசப் புரட்சி பெருந்திரளான மக் களுக்கு உண்மையான சுதந்திரத்தைக் கொடுத்தது, மனிதனை மனிதன் சுரண்டலை ஒழித்தது என்பது மட்டு மன்றி அது உழைக்கும் மக்களுக்குப் பொருளாயதச் செல்வத் தைக் கொடுத்தது, அவர்களுக்குக் கல்வி, வேலை, ஓய்வு, இதரவற்றுக்கு உரிமை அளித்தது. எனவே அது உலக ரீதியான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. அக் டோபர் புரட்சியின் பதாகையின் கீழ் ருஷ்யா பூர்விகமான தீப்பந்தம் மற்றும் மண்ணெண்ணெய் விளக்கிலிருந்து பிரம் மாண்டமான நீர் மின்சக்தி நிலையங்களுக்கும் அணுமின்

* V. I. Lenin, *Collected Works*, vol. 27, p. 499.

சக்தி நிலையங்களுக்கும், மரக் கலப்பை மற்றும் சம்மட்டியிலிருந்து எலெக்ட்ரானிக்ஸ், தானியங்கி அமைப்புகளுக்கும் மாபெரும் காலடி வைத்தது. அன்று வறுமையும் கல்வியின்மையும் நிறைந்திருந்த ருஷ்யா வலிமையான தொழில் துறையும் கூட்டுப்பண்ணை விவசாயமும் உள்ள நாடாக, விண்கோள்களும் விண்வெளிப் பயணங்களும் நடத்திய முதல் நாடாக இன்று வளர்ச்சியடைந்திருக்கிறது.

மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி உலக முழுவதிலும் புரட்சிகரப் போராட்டத்துக்கு சக்தி வாய்ந்த தூண்டுதலை அளித்தது. அக்டோபர் புரட்சி பல நாடுகளின் எதிர்காலப் பாதையில் ஒளியைப் பாய்ச்சியது. இப்பொழுது வரலாறு விரைந்து முன்னேறிக் கொண்டிருக்கிறது. 1917ஆம் ஆண்டில் தொடங்கிய, உலகத்தைப் புரட்சிகரமான முறையில் புதுப்பிக்கின்ற செயல்முறை மனிதகுலத்தின் வாழ்க்கையில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தியது; அது உலகத்தின் மொத்த சமூக-அரசியல் தோற்றத்தை மாற்றியிருக்கிறது என்பது மெய்யே.

அக்டோபர் புரட்சி சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தைத் தூண்டியது; அவர்கள் தங்களுடைய நோக்கத்தை அடைவதற்கு அதிகத் தீவிரமாகவும் தொடர்ச்சியாகவும் பாடுபட்டார்கள். அவர்களுடைய அரசியல் உணர்வும் அமைப்புத் திறமையும் முதிர்ச்சி அடைந்தன. பாட்டாளி வர்க்கம் நவீன சமூகத்தின் வாழ்க்கையில் மேன்மேலும் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற முக்கியமான சக்தியாக மாறியது. கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமையின் கீழ் பாட்டாளி வர்க்கம் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, ஜனநாயகம், சோஷலிசத்துக்கு ஆதரவாக முக்கியமான போராளி ஆயிற்று.

ருஷ்யாவில் சோஷலிசப் புரட்சியின் வெற்றி பல காலனி நாடுகளிலும் சார்பு நாடுகளிலும் புரட்சிகர நடவடிக்கை

களை ஊக்குவித்தது. தேசிய விடுதலை இயக்கத்தின் எழுச்சி முதலாளித்துவ அமைப்பு முழுவதையும் பலவீனப்படுத்தியது, தலைமையான முதலாளித்துவ நாடுகளில் பாட்டாளி வர்க்கம் தன்னுடைய உரிமைகளுக்குப் போராடுவதற்கு உதவியது.

மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் சர்வ தேச முக்கியத்துவம் பிரதானமாக அனைத்து மனித குலத்துக்கும் சோஷலிசத்தை அடைகின்ற பாதையைக் காட்டியதில் அடங்கியிருக்கிறது. இந்தப் பாதையைப் பின் பற்றிய ஒவ்வொரு நாடும் தன்னுடைய பிரச்சினைகளைத் தனக்குரிய வழியில் தீர்த்தது. எனினும் சோஷலிச மாற்றங் களில் எல்லா நாடுகளுக்கும் பொதுவான அம்சங்கள் சில இருக்கின்றன:

— அரசு அதிகாரத்தைப் பற்றிய பிரச்சினையே புரட் சியைப் பற்றிய பிரதான பிரச்சினை ஆகும். மொத்த உழைக்கும் மக்களுடன் கூட்டணி அமைத்திருக்கின்ற தொழி லாளி வர்க்கத்திடம் அரசு அதிகாரம் இருத்தல் அல்லது முதலாளி வர்க்கத்திடம் அரசு அதிகாரம் இருத்தல். இதைத் தவிர மூன்றாவது வழி கிடையாது;

— தொழிலாளி வர்க்கமும் அதன் கூட்டாளிகளும் தாங் கள் வென்றெடுத்திருக்கின்ற அரசியல் அதிகாரத்தை முதலாளிகள் மற்றும் இதர சுரண்டல்காரர்களின் சமூக-பொருளாதார ஆதிக்கத்தை ஒழிப்பதற்குப் பயன்படுத்தி னால் மட்டுமே சோஷலிச மாற்றம் சாத்தியம்;

— தொழிலாளி வர்க்கமும் அதன் முன்னணிப் படை யாகிய கம்யூனிஸ்டுகளும் ஒரு புதிய சமூகத்தை நிர்மாணிக் கின்ற தம்முடைய முயற்சியில், பொருளாதாரத்தையும் எல்லா சமூக உறவுகளையும் சோஷலிசக் கோட்பாடுகளின் அடிப்படையில் மாற்றுகின்ற முயற்சியில் உழைக்கின்ற பெருந்திரளான மக்களுக்கு உத்வேகமளிப்பதிலும் அவர்

களை ஒன்றுபடுத்துவதிலும் வெற்றியடைந்தால்தான் சோஷலிசத்தை நிறுவ முடியும்;

— உழைக்கும் மக்களின் அரசு அதிகாரம் எந்த வர்க்க எதிரியின் தாக்குதல்களையும் எதிர்த்துப் புரட்சியைக் காப்பதில் வெற்றியடைந்தால் மட்டுமே சோஷலிசம் வேரூன்ற முடியும்.

அக்டோபர் புரட்சியின் சர்வதேச முக்கியத்துவத்தை நிரூபிக்கின்ற சில படிப்பினைகளே இவை. ருஷ்ய அனுபவம் எல்லா நாடுகளுக்கும் மிகவும் கணிசமான ஒன்றை அளித்திருக்கிறது, அவை சீக்கிரத்திலேயே புரட்சியைக் காணும் என்று லெனின் கொடுத்த முன்னறிவிப்பை இந்த முடிவுகள் நிரூபிக்கின்றன.

மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி இயல்பாகவே ஆழமான சர்வதேசியத் தன்மையைக் கொண்டிருக்கிறது; அது அனைத்து மனிதகுலத்தினுடைய வாழ்க்கையின் மீது மகத்தான தாக்கத்தைக் கொண்டிருக்கிறது. அக்டோபர் புரட்சியின் மகத்தான சாதனைகளை உலகத்தில் எந்த சக்தியும் — அது கோடிக்கணக்கான மக்களுக்கு எத்தகைய பேராபத்துகளையும் துன்பங்களையும் ஏற்படுத்திய போதிலும் — ஒருபோதும் அகற்ற முடியாது. அந்தப் புரட்சியின் கருத்துகளை, விடுதலை, மக்களுடைய மகிழ்ச்சி ஆகியவற்றுக்குரிய போராட்டக் கருத்துகளைக் கோடிக் கணக்கில் புதியவர்கள் மேன்மேலும் ஏற்றுக் கொள்கிறார்கள்; தங்களை ஒடுக்குபவர்களை எதிர்த்துப் போராடும்படி அவை அவர்களுக்கு விழிப்பூட்டுகின்றன, உத்வேகமூட்டுகின்றன.

லெனினியத்தின் தாயகத்தில் மெய்யான சோஷலிசம். மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றியின்

விளைவாக ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கம் அதி காரத்தைக் கைப்பற்றி தன்னுடைய அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்தியது. தொழிலாளர்கள் சோவியத் ஆட்சியதி காரத்தை முதலாவதாக, பழைய பொருளாதாரத்தைத் திருத்தியமைப்பதற்கும் புதிய, சோஷலிசப் பொரு ளாதாரத்தை நிர்மாணிப்பதற்கும் உபயோகித்தார்கள். அவர்கள் முதலாளி வர்க்கம் திரட்டிய செல்வத்தை — பாக்டரிகள், தொழிற்சாலைகள், சுரங்கங்கள், இதரவை — பறிமுதல் செய்து சோஷலிச தேசியமயமாக்குதலை நிறை வேற்றினார்கள். வங்கிகள், ரயில்வே போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புச் சாதனங்கள் தேசியமயமாக்கப்பட்டு மக்களுடைய உடைமையாக மாறின; உற்பத்திச் சாதனங் களில் தனியுடைமை ஒழிக்கப்பட்டது.

ருஷ்யாவில் சோஷலிச சமூக நிர்மாணத்தின் முக்கிய மான நிபந்தனையாகத் தீவிரமான விவசாய சீர்திருத்தங் கள் அமுலாக்கப்பட்டன. சோஷலிச அரசு நிலக்கிழார் களிடமிருந்து நிலம், கால்நடை மற்றும் உழைப்புக் கருவி களை நஷ்ட ஈடு கொடுக்காமல் எடுத்துக் கொண்டு இலவச மாக விவசாயிகளிடம் ஒப்படைத்தது. சோவியத் அரசு மற்றும் கட்சிப் பிரமுகரும் வி. இ. லெனினுடைய மனைவியு மான நதேஷ்தா குரூப்ஸ்கயா நிலத்தைப் பற்றிய அர சாணையை நிறைவேற்றிய சோவியத்துகளின் இரண்டாவது காங்கிரசை (1917, அக்டோபர் 26) பின்வருமாறு வர்ணிக் கிறார்: ''இலீச் நிலத்தைப் பற்றிய அரசாணையின் விவரங் களை நிதானமாக விளக்கிச் சொற்பொழிவாற்றியது எனக்கு நினைவிருக்கிறது. அங்கே இருந்தவர்கள் உணர்ச்சிகரமான நிலையில் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அரசாணையின் வாசகத்தை அவர் படித்த பொழுது நான் சுற்றியிருந்தவர் களை கவனித்தேன். அங்கேயிருந்த பிரதிநிதிகளில் ஒருவரு டைய முகம் என் கவனத்தை ஈர்த்தது. அவருக்கு நடுவயது

இருக்கும்; விவசாயியின் உடைகளை அணிந்திருந்தார். அந்த சந்தர்ப்பத்தின் உணர்ச்சிப் பிரவாகம் அவருடைய முகத்தில் தெளிவாகப் புலப்பட்டது. அவருடைய கண்களில் புதிய ஒளி தென்பட்டது'' *.

விவசாயிகள் பல யுகங்களாக நிலத்தைப் பற்றிக் கண்டிருந்த கனவு முடிவில் நிறைவேறி விட்டது. இந்த உண்மை தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் ஏற்பட்டிருந்த கூட்டணியைப் பலப்படுத்தியது.

சோவியத் ருஷ்யாவின் உழைக்கும் மக்கள் பிரம்மாண்டமான சோதனைகளை எதிர்த்துப் புதிய வாழ்க்கையை நிர்மாணிப்பதற்குத் தொடங்கினார்கள். ஜாராட்சிகளின் மரபுரிமையான பின்தங்கிய நிலை அதை மிகவும் சிக்கலாக்கி இருந்தது. முதல் உலகப் போர் (1914—1918) ருஷ்யாவின் தேசியப் பொருளாதாரத்தை இன்னும் பின்னால் தள்ளியது. நாட்டின் பொருளாதாரச் சீர்குலைவு நெருக்கடியான நிலைமையை ஏற்படுத்தியது. நாடு முற்றிலுமாக அழிந்து விடுதல் அல்லது உயர்ந்த உற்பத்தி முறையை நோக்கி வேகமாகவும் தீவிரமாகவும் மாறுவதற்காக ஆகப் புரட்சிகரமான வர்க்கத்திடம் நாட்டின் எதிர்காலத்தை ஒப்படைத்தல் என்னும் இரண்டு வழிகளே இருந்தன.

இளம் சோவியத் அரசு பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலை, அந்நிய நாடுகளின் இராணுவத் தலையீடு, உள்நாட்டுப் போர், பொருளாதார முற்றுகை மற்றும் பல கடுமையான சோதனைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. தொழிலாளி வர்க்கத்துக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அறிவார்ந்த, தொலை நோக்குடைய கொள்கை, உறுதி, பொறுமை, அமைப்புத் திறன் மற்றும் தங்களுடைய சொந்த பலத்தில் உறுதியான நம்பிக்கை அவசியமாக

---

* ந. குரூப்ஸ்கயா, வி. இ. லெனினைப் பற்றிய நினைவுக் குறிப்புகள், மாஸ்கோ, 1972, பக்கம் 338 (ருஷ்ய மொழியில்).

இருந்தன. இந்த வரலாற்றுச் சிறப்புடைய கடமைக்குத் தக்க முறையில் சோவியத் மக்கள் வீறுகொண்டெழுந்தார் கள்.

லெனின் புதிய வாழ்க்கையை நிர்மாணிப்பதை மிகவும் உயரமான, செங்குத்தான, இதுவரை எவரும் ஏறாத மலையின் மீது ஏறுவதுடன் ஒரு சந்தர்ப்பத்தில் ஒப்பிட்டார். சோவியத் அரசு தன்னுடைய பாதையில் சந்தித்த இடையூறு களை எதிர்த்து உறுதியாகப் போராடியதைப் பற்றி, இளம் சோவியத் குடியரசு சீக்கிரத்தில் செங்குத்தான பாறையில் விழுந்து மடிந்து விடும் என்று எதிர்பார்த்த எதிரிகளைப் பற்றி அவர் பின்வருமாறு எழுதினார்: ''அவர்கள் அதை மறைப்பதில்லை. அவர்கள் சிரித்துக் கொண்டு ஆனந்தமாகச் சத்தம் போடுகிறார்கள்: 'இன்னும் ஒரு நிமிடத்தில் அவன் கீழே விழுந்து விடுவான்! அவனுக்கு வேண்டும். பைத்தியக் காரன்!' மற்றவர்கள்... முனகிக் கொண்டு 'எங்களுடைய அச்சம் நிரூபிக்கப்படுவதைப் பற்றி நாங்கள் மிகவும் வேத னைப்படுகிறோம்! ஆனால் இந்த மலையின் மீது ஏறுவதற்கு முறையான திட்டத்தைத் தயாரிப்பதில் வாழ்க்கை முழு வதையுமே செலவிட்டிருக்கின்ற நாங்கள் முழுமையான திட்டம் தயாரிக்கின்ற வரை மலையேற்றத்தை ஒத்தி வைக்க வேண்டும் என்று கோரவில்லையா?' என்று சொல் வதைப் போல துயரத்துடன் ஆகாயத்தை நோக்கிக் கண் களை உயர்த்துகிறார்கள்.'' *

ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி பழைய ஆட்சி முறையை எதிர்த்து நடைபெற்ற தாக்குதலில் மக்களுக்குத் தலைமை தாங்கியது. சோவியத் யூனியனில் சோஷலிசத்தை நிர் மாணிப்பதற்கு லெனின் தயாரித்த திட்டம் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வழிகாட்டியது. இத்திட்டம்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 33, p. 205.

கைவிளக்கைப் போல சோஷலிசப் பாதையில் ஒளி பாய்ச்சியது. கட்சியின் மாபெரும் இலட்சியத்தில் உழைக்கும் மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தியது.

1923 ஜனவரி — பிப்ரவரி மாதங்களில் மிகவும் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்த லெனினுடைய உடல் நிலை சிறி தளவு அபிவிருத்தி அடைந்தது. அவர் உடனே பின்வரும் கட்டுரைகளைச் சொல்ல செயலாளர் அவற்றை எழுதினார்: **நாட்குறிப்பிலிருந்து சில பக்கங்கள்; கூட்டுறவு குறித்து; நமது புரட்சி; தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பை நாம் எப்படிப் புனரமைக்க வேண்டும்?;** சொற்ப மாயினும் சிறந்ததே நன்று. சோஷலிச சமூகத்தை நிர் மாணிப்பதற்கு ருஷ்யா போதுமான ஆற்றலைக் கொண் டிருக்கிறது என்று லெனின் கருதினார். பெரிய அளவு இயந்திரத் தொழில்துறையின் அடிப்படையில்தான் சோஷ லிசத்தை நிர்மாணிக்க முடியும் என்று அவர் கூறினார். நாட்டின் சோஷலிசத் தொழில்மயமாக்கல், கனரகத் தொழில்துறையின் தொடர்ச்சியான வளர்ச்சி, நாட்டை மின்சாரமயமாக்குதல் ஆகியவை ருஷ்யாவைப் புத்தாக்கம் செய்து அதை மாபெரும் சோஷலிச அரசாகச் செய்யும் என்று அவர் நம்பினார். ருஷ்யாவில் சோஷலிச நிர் மாணத்துக்கு லெனினுடைய திட்டத்தில் 1920இல் நிறை வேற்றப்பட்ட நாட்டை மின்சாரமயமாக்குகின்ற கொயெல் ரோ (GOELRO) என்னும் திட்டத்துக்கு சிறப்பான முக்கி யத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது. ''கம்யூனிசம் என்பது சோவியத் ஆட்சி அதிகாரமும் நாடு முழுவதும் மின்சார மயமாக்கப்படுவதும்'' * என்னும் லெனினுடைய சூத்திரம் புதிய சோஷலிச அரசின் வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்தது.

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 11, பக்கம் 181.

விவசாயத்தை சோஷலிச முறையில் மாற்றியமைத்தலும் கலாசாரப் புரட்சியும் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன.

சோவியத் மக்களின் வீரமிக்க உழைப்பும் கம்யூனிஸ்ட் கட்சியின் மாபெரும் முயற்சிகளும் நாட்டின் வாழ்க்கையில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தின. ஆயிரக்கணக்கான தொழில் நிறுவனங்கள், ஜார் காலத்திய ருஷ்யாவில் இல்லாத மொத்தத் தொழில்துறைகள் நாடு முழுவதிலும் தோன்றின. நாட்டின் பூகோளப் படத்தில் புதிய நகரங்களும் தொழில் கேந்திரங்களும் தோன்றின. சோவியத் யூனியன் முழுவதிலும் ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் நீளத்துக்கு ரயில் பாதைகள் அமைக்கப்பட்டன. சோவியத் மக்கள் புதிய நிலக்கரி மற்றும் தாதுச் சுரங்கங்களைத் தோண்டினார்கள்; வெப்பக் காற்று உலைகளையும் திறந்த அடுப்பு உலைகளையும் அமைத்து இரும்பையும் மற்ற உலோகங்களையும் உருக்கினார்கள்.

''அன்னை ருஷ்யாவே! நீ ஏழை, நீயே வளம் நிறைந்த நாடு; நீ பலம் மிக்க நாடு, நீ ஒரு பலவீனமான நாடு'' என்று ருஷ்யக் கவிஞர் நிக்கலாய் நெக்ராஸவ் (1821—1877) வர்ணித்த ருஷ்யா உலகத்தின் மிகவும் வலிமையான நாடுகளில் ஒன்றாக மாறியது. மிகவும் வளர்ச்சியடைந்த தொழில்துறையும் சோஷலிச விவசாயமும் சோவியத் யூனியனில் அமைக்கப்பட்டன. நாட்டில் சோஷலிசப் பொருளாதாரத்துக்கு உறுதியான அடிப்படை அமைக்கப்பட்டது. ஆகவே 1932இல் நடைபெற்ற 17வது கட்சி மாநாடு பின்வருமாறு பதிவு செய்தது: ''சோவியத் யூனியனில் சோஷலிசத்தின் அடிப்படைகளை நிர்மாணிக்கின்ற பணி முழுமையடைந்திருப்பது. 'வெற்றி பெறப் போவது யார்?' என்று லெனின் எழுப்பிய கேள்வி நகரத்திலும் கிராமப் பகுதியிலும் முதலாளித்துவத்துக்கு எதிராக, சோஷலிசத்துக்குச் சாதக

மாக முழுமையாகவும் மறுக்க முடியாத விதத்திலும் தீர்க்கப்பட்டு விட்டது.''

சோவியத் யூனியனில் சோஷலிச மாற்றங்களின் விளைவாக சோஷலிச உற்பத்தி உறவுகள் தலைமையான நிலையை அடைந்தன. முதலாளிகளும் வர்த்தகர்களும் குலாக்குகளும் சுரண்டல் வர்க்கத்தினர் என்ற முறையில் அகற்றப்பட்டனர். 1928ஆம் ஆண்டிற்குள் சமூகத்தில் முதலாளித்துவ சக்திகளின் அளவு விகிதம் 4.6 சதவிகிதமாகக் குறைந்து விட்டது; 1937ஆம் ஆண்டில் அவை முற்றிலும் அகற்றப்பட்டு விட்டன. ஆகவே சுரண்டல் வர்க்கங்கள் அனைத்தும் ஒழிக்கப்பட்டு விட்டன; மனிதனை மனிதன் சுரண்டல் முடிவடைந்தது.

சோவியத் யூனியனில் தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாயி வர்க்கம் என்னும் இரண்டு நேச வர்க்கங்களே எஞ்சின. இந்த இரண்டு வர்க்கங்களும் முன்னர் இருந்ததைப் போல இருக்கவில்லை. சோஷலிச சமூக நிர்மாணத்தின் போது தொழிலாளர்களும் கூட்டுப்பண்ணை விவசாயிகளும் நெருங்கி வந்தார்கள். அவர்களுடைய கூட்டணி வலுப் பெற்றது; அவர்களுடைய நட்பு உறுதியடைந்தது. மக்களைச் சேர்ந்த புதிய அறிவுத்துறையினர் பகுதி பிறந்தது. உழைக்கும் மக்கள் அனைவரும் பொருளாதார முன்னேற்றத்தில், சோஷலிச அமைப்பை வலுப்படுத்துவதில், ஜனநாயகம் மற்றும் கலாசாரத்தின் வளர்ச்சியில் சம அளவுக்கு அக்கறை எடுத்துக் கொண்டார்கள். தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் அறிவுப் பகுதியினருடைய பொதுவான நலன்கள் சோவியத் மக்களின் அசைக்க முடியாத சமூக-அரசியல் மற்றும் சித்தாந்த ஒற்றுமைக்கு அடிப்படையாக அமைந்தன.

1930க்களின் பிற்பகுதியைச் சேர்ந்த கட்சி ஆவணங்களில் சோவியத் யூனியனில் சோஷலிச சமூகத்தை நிர்மாணித்தல்

பிரதானமாக முடிந்து விட்டது என்ற முடிவு வெளியிடப்பட்டிருக்கிறது. சோவியத் யூனியனில் 1936ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தில் இந்த உண்மை பதிவு செய்யப்பட்டது.

சோஷலிசம் என்றால் என்ன? சோஷலிசம் என்பது கம்யூனிச சமூக-பொருளாதார உருவாக்கத்தின் முதல் கட்டம் என்று மார்க்சிய-லெனினியம் கூறுகிறது. சோஷலிசம் என்று பொதுவாகச் சொல்லப்படுவது கம்யூனிச சமூகத்தின் ''முதல்'' கட்டம் அல்லது கீழ்நிலைக் கட்டம் என்று மார்க்ஸ் விளக்கியிருப்பதை லெனின் சுட்டிக்காட்டினார். இரண்டு சொற்களுமே உற்பத்திச் சாதனங்களின் பொது உடைமையைக் குறிப்பதால் ''கம்யூனிசம்'' என்ற சொல்லை இங்கே பயன்படுத்தலாம்; ஆனால் அது இன்னும் முழுமையான கம்யூனிசம் அல்ல என்பதை வாசகர் மனதிலிறுத்த வேண்டும். *

சோஷலிசத்தின் பொருளாதார அடிப்படை அரசு உடைமை, கூட்டுறவு உடைமை என்னும் இரண்டு வடிவங்களில் உற்பத்திச் சாதனங்களில் பொது உடைமை ஆகும். சோஷலிச சமூகத்தில் ''எல்லாமே மனிதனுடைய நன்மைக்காக, எல்லாமே மனிதனுக்காக'' என்னும் இலட்சியம் கடைப்பிடிக்கப்படுகிறது. அந்த சமூகத்தில்:

— உற்பத்திச் சாதனங்கள் மக்களிடம் இருக்கின்றன; மனிதனை மனிதன் சுரண்டலுக்கு, சமூக ஒடுக்குமுறைக்கு, விசேஷமான சலுகைகளை அனுபவிக்கின்ற சிறுபான்மையினருடைய அதிகாரத்துக்கு, கோடிக்கணக்கான மக்களுடைய வறுமைக்கும் கல்வியின்மைக்கும் முடிவு கட்டப்பட்டு விட்டது;

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, இரண்டாம் பாகம், பக்கம் 341 பார்க்க.

— உற்பத்திச் சக்திகளின் சுறுசுறுப்பான, திட்டமிடப் பட்ட, முறைப்படியான வளர்ச்சிக்கு விரிவான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன; விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றம் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஏற்படுத்து வதில்லை, மாறாக மக்களின் நலத்தைப் பெருக்குகிறது;

— ''ஒவ்வொருவருக்கும் அவருடைய திறமைக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய உழைப்புக்கு ஏற்ப'' என்னும் கோட்பாட்டின்படி வேலைக்கு உரிமையும் உழைப் புக்கு ஏற்ப ஊதியம் என்னும் உரிமையும் அமுலாக்கப்பட் டிருக்கின்றன; இலவச மருத்துவ வசதி, கல்வி, குறைந்த வாடகையில் வீடு ஆகிய முக்கியமான சமூக நல வசதிகளை மக்கள் அனுபவிக்கிறார்கள்;

— தொழிலாளி வர்க்கம், கூட்டுப்பண்ணை விவசாயிகள் மற்றும் அறிவுப் பகுதியினர் பிரிக்க முடியாத கூட்டணியை உருவாக்கி வலுப்படுத்தியிருக்கிறார்கள்; ஆண்களும் பெண் களும் சம உரிமைகளையும் அவற்றை உபயோகிக்கின்ற உத்தரவாதங்களையும் பெற்றிருக்கிறார்கள்; இளம் தலை முறை எதிர்காலத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறது; மூப்ப டைந்த உழைப்பாளிகளுக்கு சமூகப் பாதுகாப்பு உத்தர வாதமளிக்கப்பட்டிருக்கிறது;

— தேசிய இனப் பாரபட்சம் அகற்றப்பட்டு விட்டது; எல்லா தேசிய இனங்களும் மக்களினங்களும் சட்ட ரீதியாக வும் நடைமுறையிலும் சமத்துவத்தைப் பெற்றிருக்கின்றன;

— உண்மையான ஜனநாயகம் நிறுவப்பட்டு, வளர்க்கப் பட்டு வருகிறது; மக்களுடைய அரசாங்கம் மக்களால் நடத்தப்படுகிறது; குடிமக்கள் உற்பத்தி நிர்வாகத்தில், பொது அமைப்புகளையும் அரசு அமைப்புகளையும் நிர்வகிப்பதில் பங்கெடுப்பதில் பரந்த, சமத்துவமான உரிமைகள் வழங்கப் பட்டிருக்கின்றன;

— சுதந்திரம், மனித உரிமைகள், கௌரவம் ஆகிய

கருத்துகள் உண்மையான உள்ளடக்கத்தைப் பெற்றிருக்கின்றன; உரிமைகளும் கடமைகளும் ஒன்றிணைந்திருக்கின்றன; ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரே விதமான சட்டங்கள், தார்மிக விதிகள், கட்டுப்பாட்டு விதிகள் அமுலாக்கப்படுகின்றன; தனிநபருடைய அகல்விரிவான வளர்ச்சிக்கு மேன் மேலும் சாதகமான நிலைமைகள் உருவாக்கப்படுகின்றன;

— உண்மையிலேயே மனிதாபிமானமிக்க மார்க்சிய-லெனினிய சித்தாந்தம் மேலோங்கியிருக்கிறது; அறிவின் எல்லாத் தோற்றுவாய்களும் பெருந்திரளான மக்களுக்குக் கிடைக்கின்றன; உலகக் கலாசாரத்தின் மிகச் சிறந்த கூறுகளை சுவீகரித்திருக்கின்ற முற்போக்கான சோஷலிசக் கலாசாரம் படைக்கப்பட்டிருக்கிறது;

— சமூக நீதி, கூட்டுப்பண்புவாதம், தோழமை மிக்க பரஸ்பர உதவி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சோஷலிச வாழ்க்கை முறை உருவாகியிருக்கிறது; அது ஒவ்வொரு தனிநபருக்கும் தன்னுடைய எதிர்காலத்தில் நம்பிக்கையைத் தருகிறது, புதிய சமூக உறவுகள் மற்றும் தன்னுடைய சொந்த வாழ்க்கையின் நிர்மாணி என்ற முறையில் தனிநபருக்குத் தார்மிக மற்றும் ஆன்மிக மேம்பாட்டைத் தருகிறது;

— வெளிநாட்டுக் கொள்கை, வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட அரசுகளுக்கு இடையிலான சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது; இது சமாதானத்துக்காகப் போராடுகின்ற கொள்கையாகும்.

சோஷலிச சமூகத்தை முன்னேற்றுதல். லெனின் சோஷலிசத் தத்துவம் மற்றும் நடைமுறையை வளர்த்தார். சோஷலிசம் என்பது முன்னரே தயாரிக்கப்பட்ட அமைப்பு அல்ல, அது

சில கட்டங்களைக் கடந்து வந்த பிறகே முதிர்ச்சி அடையும் என்பதை அவர் தொலைநோக்குடன் கூறினார்.

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் கட்டம் முடிந்ததும் சோஷலிசக் கட்டம் ஆரம்பமாயிற்று.

நாடு வளர்ச்சியடைந்த சோஷலிச சமூகத்தை நிர்மாணிப்பதற்குத் தொடங்கியது. இந்தக் கட்டம் மாறும் கட்டத்தைக் காட்டிலும் நீண்டிருந்தது (இது 1930க்களின் நடுப்பகுதியிலிருந்து சுமார் நாற்பதாண்டுகளாகத் தொடர்ந்தது). அதன் தொடக்க நிலையில் மாபெரும் தேசபக்தப் போர் (1941—1945) வளர்ச்சியடைந்த சோஷலிச சமூகத்தின் நிர்மாணத்தில் குறுக்கிட்டது. போர் முடிவடைந்ததும் யுத்த பிற்கால புனரமைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டது; அதன் பிறகே சோவியத் சமூகம் சோஷலிச நிர்மாணத்தில் முழு வேகத்துடன் ஈடுபட்டது. சமீபக் காலத்தில் நாடு வளர்ச்சியடைந்த சோஷலிசக் கட்டத்துக்குள் நுழைந்தது.

முதலாவதாக, வளர்ச்சியடைந்த சோஷலிச சமூகத்தை நிர்மாணித்தலும் அதை மேலும் முழுநிறைவாக்குதலும் அதன் சொந்த அடிப்படையின் மீது, அதாவது சோஷலிச உற்பத்தி உறவுகளின் அடிப்படையில், அவற்றின் உள்ளுறையாக இருக்கின்ற பொது முறைமைகள் மற்றும் கோட்பாடுகளுக்கு ஏற்ப நிறைவேற்றப்படுகின்றன. இரண்டாவதாக, வளர்ச்சியடைந்த சோஷலிசம் வரலாற்று ரீதியில் நீண்ட காலகட்டத்தைக் கொண்டிருக்கிறது; அது தனக்குரிய காலப் பகுதிகளையும் வளர்ச்சிக் கட்டங்களையும் கொண்டிருக்கிறது.

வளர்ச்சியடைந்த சோஷலிசம் மற்றும் அதன் சாராம்சத்தைப் பற்றி விரிவான வர்ணனை 1977ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சோவியத் அரசியலமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றிருக்கிறது. வளர்ச்சியடைந்த சோஷலிச

சமூகத்தை நிர்மாணித்தல் கம்யூனிசத்தை நோக்கிச் செல்கின்ற பாதையில் முறைப்படியான கட்டம் என்று அது சுட்டிக் காட்டுகிறது. இந்தக் கட்டத்தில் சோஷலிசம் தன்னுடைய சொந்த அடிப்படையில் வளர்ச்சியடைகிறது; புதிய அமைப்பின் படைப்புச் சக்திகளை, சோஷலிச வாழ்க்கை முறையின் சாதகங்களை முழுமையாகக் கட்டவிழ்த்து விடுகிறது; உழைக்கும் மக்கள் தங்களுடைய புரட்சிகரச் சாதனைகளை இன்னும் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு உதவுகிறது.

சோஷலிசம் பிரம்மாண்டமான உற்பத்திச் சக்திகளையும் வளர்ச்சியடைந்த விஞ்ஞானத்தையும் கலாசாரத்தையும் படைத்திருக்கின்ற சமூகம், மக்களுடைய வாழ்க்கைத் தரத்தைத் தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்து கொண்டு மனித ஆளுமையின் பல்துறையான வளர்ச்சிக்கு மேன்மேலும் சாதகமான நிலைமைகளைப் படைக்கின்ற சமூகம்.

சோஷலிசம் முதிர்ச்சியடைந்த சோஷலிச சமூக உறவுகளைக் கொண்ட சமூகம்; எல்லா வர்க்கங்கள் மற்றும் சமூகப் பிரிவுகளின் நெருக்கம், சகலவித தேசிய இனங்கள் மற்றும் மக்கள் இனங்களின் சட்ட ரீதியான, நடைமுறை ரீதியான சமத்துவம், இவற்றின் சகோதர ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் சோவியத் மக்கள் என்னும் புதிய வரலாற்று மக்கள் தொகுதி உருவாகியுள்ள சமூகம்.

சோஷலிசம் உழைக்கும் மக்களின் ஸ்தாபனத்தில், சித்தாந்தத்தில் மற்றும் சமூக உணர்வில் உயர்வான தரங்களை கொண்ட சமூகம். இவர்கள் தேசபக்தர்களாகவும் சர்வதேசியவாதிகளாகவும் இருக்கிறார்கள்.

சோஷலிசம் ''ஒவ்வொருவருடைய நலனிலும் எல்லோரும் அக்கறை காட்டுதல், எல்லோருடைய நலனில் ஒவ்வொருவரும் அக்கறை காட்டுதல்'' என்னும் கோட்பாட்டை வாழ்க்கை விதியாகக் கொண்டிருக்கின்ற சமூகம்.

சோஷலிசம் உண்மையான ஜனநாயகம் நிலவுகின்ற சமூகம்; அதன் அரசியல் அமைப்பு எல்லா சமூக விவகாரங்களையும் பயனுள்ள முறையில் நிர்வகிப்பதை உத்தரவாதம் செய்கிறது, அரசின் விவகாரங்களில் உழைக்கும் மக்கள் மேன்மேலும் பங்கெடுப்பதைத் தூண்டுகிறது; அந்த அமைப்பு குடிமக்களின் மெய்யான உரிமைகளையும் சுதந்திரங்களையும் சமூகத்துக்கு அவர்களுடைய கடமைகள் மற்றும் பொறுப்புகளுடன் இணைக்கிறது.

நாட்டு மக்கள் அனைவருடைய வாழ்க்கையின் பொருளாயத மற்றும் கலாசாரத் தரங்கள் தொடர்ச்சியாக வளர்ச்சியடைவது கம்யூனிஸ்ட் கட்சியின் பொருளாதார செயல்திட்டத்தின் முக்கியமான நோக்கமாகும். வரவிருக்கின்ற காலத்தில் இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு சமூக-பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த வேண்டும்; எல்லாத் துறைகளிலும் உற்பத்தியைத் தீவிரப்படுத்த வேண்டும்; விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றத்தின் அடிப்படையில் அதை இன்னும் சிறப்புடையதாகச் செய்ய வேண்டும். உற்பத்திச் சக்திகளையும் உற்பத்தி உறவுகளையும் முறையில் புதிய மட்டத்துக்கு உயர்த்துவதற்கு, விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் தீவிரப்படுத்துவதற்கு, பொருளாதார வளர்ச்சியின் செயல்திட்டத் திசை வழிகளில் வேகமான முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதற்கு, சோவியத் ஆட்சியதிகாரத்தின் முந்திய ஆண்டுகள் அனைத்திலும் படைக்கப்பட்ட உற்பத்தி ஆற்றலுக்குச் சமமான அளவைப் புதிதாகப் படைப்பதற்குத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

சோஷலிசம் சமூக உறவுகளின் மொத்த அமைப்பின் முதிர்ச்சியின் உயர்ந்த அளவைக் குறிக்கிறது; அவை படிப்படியாக கம்யூனிச உறவுகளாக மாறும். இன்று சோவியத் சமூகம் மிகவும் வளர்ச்சியடைந்த பொருளாதாரத்தைக்

கொண்டிருக்கிறது. சோவியத் யூனியனுடைய தேசிய வருமானம் இரண்டாவது உலக யுத்தத்துக்கு முந்திய மட்டத்திலிருந்து 16 மடங்குக்கும் அதிகமாக வளர்ச்சியடைந்திருக்கிறது. அதன் தொழில்துறை உற்பத்தி இதே காலகட்டத்தில் 24 மடங்குக்கும் அதிகமாக வளர்ச்சியடைந்திருக்கிறது. சோவியத் யூனியன் தொழில்துறையில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளைக் காட்டிலும் இரண்டு மடங்கு வேகத்துடன் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. இன்று சோவியத் யூனியன் உலகத்தில் வேறு எந்த நாட்டையும் காட்டிலும் அதிகமாக வார்ப்பிரும்பு, எஃகு, எண்ணெய், எரிவாயு, சிமெண்ட், கனிய உரம், இயந்திரக் கருவிகள், டிராக்டர்கள், அறுவடை இயந்திரங்கள், இதர உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்கிறது. அணு சக்தித் தொழில்துறை, விண்வெளி ஏவுகணைப் பொறியியல், மின்னணுத் தொழில்துறை, நுண் உயிரியல் மற்றும் இதர புதிய தொழில்துறைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. மாபெரும் உற்பத்தி இணையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன; மின் சக்திக் கம்பிகள், எண்ணெய்க் குழாய்கள் மற்றும் எரிவாயுக் குழாய்களைக் கொண்ட மாபெரும் வலைப்பின்னல் நாடு முழுவதிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் நீளமான நீர்ப்பாசனக் கால்வாய்களில் தண்ணீர் கொண்டு வரப்பட்டு வறட்சிப் பிரதேசங்களில் விவசாயம் செய்யப்படுகிறது. மாபெரும் நிலச் சீரமைப்புத் திட்டங்களின் விளைவாக ஏராளமான தரிசு நிலம் விவசாய நிலமாக மாற்றப்பட்டிருக்கிறது. சோவியத் விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் மாபெரும் முன்னேற்றத்தை அடைந்திருக்கின்றன. சோவியத் யூனியன் உலகத்தின் முதல் அணு சக்தி மின்சார நிலையத்தையும் அணு சக்தியைக் கொண்டு பனிப் பாறைகளை உடைக்கின்ற கப்பலையும் அமைத்திருக்கிறது; விண்வெளிக் கோளை வானத்தில்

செலுத்திய முதல் நாடு சோவியத் யூனியன். விண்வெளியிலிருந்து பூமியைப் பார்த்த முதல் மனிதர் சோவியத் குடிமகனாகிய யூரி ககாரின்.

சோவியத் யூனியனில் வேகமான பொருளாதார வளர்ச்சி குடிமக்களுடைய தேவைகளை அதிக முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு உதவியது. இன்று சோவியத் மக்களுடைய தனி நபர் நிகர வருமானம் யுத்தத்துக்கு முன்பிருந்த மட்டத்தைக் காட்டிலும் ஆறு மடங்கு அதிகரித்திருக்கிறது. நாடு முழுவதிலும் மக்கள் வசிப்பதற்குப் பல மாடிக் கட்டிடங்கள் கட்டுதல் மெய்யாகவே பிரம்மாண்டமான அளவுகளை அடைந்திருக்கிறது. மருத்துவ நிலையங்கள், பாலிகிளினிக்குகள், கிண்டர்கார்டன்கள் மற்றும் மழலையர் பள்ளிகள் பேரளவில் அதிகரித்திருக்கின்றன.

இன்று சோவியத் சமூகத்தில் பொதுக் கல்வியும் கலாசாரமும் உயர்ந்த தரத்தை அடைந்திருக்கின்றன. யுத்தத்துக்கு முன்னர் (பிரதானமாக உடல் உழைப்பில் ஈடுபடுபவர்களில்) நூற்றுக்கு ஐந்து நபர்கள்தான் உயர்நிலைப் பள்ளி அல்லது பல்கலைக்கழகக் கல்வி கற்றிருந்தார்கள்; ஆனால் இன்று அவர்களுடைய எண்ணிக்கை நூற்றுக்கு 82ஆக அதிகரித்திருக்கிறது.

சோவியத் யூனியன் மிக முக்கியமான சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்து விட்டது. தொழிலாளி வர்க்கம், விவசாயி வர்க்கம் மற்றும் அறிவுப் பகுதியினருடைய கூட்டணி மேலும் பலமடைந்திருக்கிறது. நகரத்துக்கும் கிராமப் பகுதிக்கும், உடலுழைப்புக்கும் அறிவு உழைப்புக்கும் இடையிலான கணிசமான வேறுபாடுகள் அகற்றப்பட்டு வருகின்றன. சோவியத் யூனியனில் உள்ள பெரிய மற்றும் சிறிய தேசிய இனங்கள் சிறப்பான வாழ்க்கையைப் பெறுகின்ற பொழுது அவை பொருளாதார ரீதியிலும்

கலாசார ரீதியிலும் ஒன்றுக்கொன்று நெருங்கி வருகின்றன.

இன்றைய சோவியத் சமூகம் உண்மையான ஜனநாயகம் நிலவுகின்ற சமூகம்; அங்கே மனிதனுடைய கௌரவம் மதிக்கப்படுகிறது, குடிமக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. உழைக்கும் மக்கள் நாட்டின், தாங்கள் வேலை செய்கின்ற தொழிற்சாலை, கூட்டுப்பண்ணை, அலுவலகங்களின் விவகாரங்களில் மேன்மேலும் சுறுசுறுப்பாகப் பங்கெடுக்கிறார்கள். சோஷலிச சுய நிர்வாக அமைப்பு மேன்மேலும் வளர்ச்சியடைந்து வருகிறது.

சோஷலிசத்தை எல்லாத் துறைகளிலும் அபிவிருத்தி செய்தல் மற்றும் சோஷலிச சமூகத்தின் சமூக-பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கு சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 27வது காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட செயல்திட்டத்தை அமுலாக்குவதன் மூலம் கம்யூனிசத்தை அடைய முடியும் என்பதை இவை அனைத்தும் எடுத்துக் காட்டுகின்றன.

சோவியத் அரசு கடந்து வந்திருக்கின்ற பாதை, அதன் பொருளாதார, சமூக மற்றும் கலாசார சாதனைகள் மார்க்சிய-லெனினியத்தின் ஜீவசக்தியை நிரூபிக்கின்றன, சோஷலிசத்தின் மாபெரும் உள்ளாற்றலை எடுத்துக் காட்டுகின்றன.

கம்யூனிச சமூக நிர்மாணத்தின் வாய்ப்புகள். ''...சோஷலிசம் தவிர்க்க முடியாத வகையில் படிப்படியாக கம்யூனிசமாகப் பரிணமிக்கும்'' என்று லெனின் சுட்டிக்காட்டினார்.* ஆனால் வளர்ச்சியடைந்த சோஷலிசத்தை விரிவான முறையில் அபிவிருத்தி செய்வதன் மூலம் கம்யூனிசம் படிப்படியாக சோஷலிசத்திலிருந்து வளர்ச்சியடைகிறது. சமூக வாழ்க்கை

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 5, பக்கம் 89.

யின் எல்லாத் துறைகளையும் வளர்த்து மேம்படுத்துவதன் மூலம் பண்பு ரீதியான மாற்றங்கள் தொடர்ச்சியாக நடை பெறுகின்றன – அந்த மாற்றங்கள் நினைத்த உடனே ஒரு நொடியில் நடப்பதில்லை – என்னும் அர்த்தத்தில் ''படிப் படியாக'' என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

சோஷலிசம் மற்றும் கம்யூனிசத்தின் கீழிருக்கின்ற உற் புத்திச் சாதனங்களில் சமூக உடைமையின் தலைமையான நிலை அவை இரண்டுக்கும் பொதுவான பொருளாதார விதிகள் செயல்படுவதை முன்னுரிக்கிறது, அதாவது சோஷலிசத்தின் அடிப்படையான பொருளாதார விதி, தேசியப் பொருளாதாரத்தின் திட்டமிடப்பட்ட மற்றும் விகிதாச்சார வளர்ச்சி விதி, உழைப்பின் உற்பத்தித் திறன் தொடர்ச்சியாக அதிகரிப்பதைப் பற்றிய விதி, இதரவை இரண்டு சமூகங்களிலும் செயல்படும். திட்டமிடப்பட்ட மற்றும் விகிதாச்சார வளர்ச்சி விதி சமூக உற்பத்தியின் திட்டமிடப்பட்ட முறையின் ஆக உயர்ந்த, கம்யூனிசக் கட்டத்துக்கு முழுமையாகப் பொருந்துவதாகும். சோஷ லிசம் மேன்மேலும் வளர்ச்சியடைகின்ற பொழுது, செய்யப் பட்ட உழைப்புக்குத் தகுந்த முறையில் வினியோகத்தைப் பற்றிய பொருளாதார விதியின் செயல்பாடு சமூக நுகர்வு நிதிகளிலிருந்து மக்களுடைய அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் மேன்மேலும் அதிகமாக இணைந் திருக்கிறது. கம்யூனிசத்தின் கீழ் இந்த விதி மக்களுடைய தேவைகளுக்குத் தக்க முறையில் வினியோகம் செய்கின்ற விதிக்கு இடமளிக்கும்.

மார்க்சிய-லெனினியத் தத்துவத்தைப் படைப்பு ரீதியில் வளர்த்தலின் மூலம், இப்பொழுது சோவியத் யூனியன் வளர்ச்சியடைந்த சோஷலிசத்தின் தொடக்கக் கட்டத்தில் இருக்கிறது, அதன் வரலாற்று ரீதியான எல்லைகளை நடைமுறை அனுபவம்தான் வரையறுக்க முடியும் என்ற

முடிவுக்கு சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி வந்திருக்கிறது. லெனினுடைய வர்ணனைப்படி புதிய சமூகம் நீண்ட காலத்தைக் கடந்த பிறகுதான், ''முழு வளர்ச்சி பெற்று, முழு வலுவுடையதாய் நிறுவப்பெற்று, முழு வீச்சுடைய முதிர்ச்சி பெற்ற கம்யூனிசமாக...'' * வளர்ச்சியடையும்.

கம்யூனிசம் என்பது வர்க்கங்கள் இல்லாத சமூக அமைப்பு; அங்கே உற்பத்திச் சாதனங்கள் மக்கள் சமூகத்தின் உடைமை; அங்கே எல்லா மக்களும் சமூக ரீதியில் சமமான வர்கள்; அங்கே மக்களின் ஒத்திசைவான வளர்ச்சியுடன், தொடர்ச்சியாக முன்னேற்றமடைகின்ற விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் உற்பத்திச் சக்திகளும் வளர்ச்சியடையும். இது சமூக செல்வத்தைப் பெருக்குவதற்கு மாபெரும் வாய்ப்பை உருவாக்கும்; அது ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய திறமைக்கேற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைகளுக்கேற்ப'' என்னும் கம்யூனிசத்தின் பிரதான கோட்பாட்டை சமூகம் நிறைவேற்றுவதற்கு உதவும்.

கம்யூனிசம் என்பது சுதந்திரமான, சமூக உணர்ச்சியுடைய உழைக்கும் மக்களின் மிகவும் அமைப்பு ரீதியான சமூகம்; அந்த சமூகத்தில் மக்களுடைய சுய நிர்வாகம் நிலவும். ஒவ்வொருவரும் சமூக நன்மைக்காக உழைக்க வேண்டும் என்பது அந்த சமூகத்தின் இன்றியமையாத அவசியமாகும். அந்த அவசியம் ஒவ்வொருவராலும் எல்லோராலும் அங்கீகரிக்கப்படுகிறது; ஒவ்வொரு நபருடைய திறமையும் மக்களுக்கு மிகவும் அதிகமான நன்மைக்காக உபயோகிக்கப்படுகிறது.

கம்யூனிசம் வரலாற்று வளர்ச்சியின் முறைப்படியான முடிவும் விளைவும் ஆகும். மனிதகுலத்தின் சமூக

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 10, பக்கம் 232.

வாழ்க்கை, பல நூற்றாண்டுகளாகப் பல தலைமுறைகளைச் சேர்ந்த மக்கள் படைத்த மிகவும் சிறந்த, மிகவும் விலைமதிப் பற்றவற்றைச் சுவீகரித்துக் கொண்டு சூன ரீதியில் மனிதனுடைய முன்னேற்றத்தின் இன்னும் உயர்ந்த நிலைக்கு வளர்ச்சியடையும்.

கம்யூனிசம் வரலாற்று வளர்ச்சியின் நீரோட்டத்தில் இருப்பதால் அது தவிர்க்க முடியாதது என்பதை இவை அனைத்தும் நிரூபிக்கின்றன. மார்க்சிய-லெனினியம் உண்மையான விஞ்ஞானமாக, மக்களின் புரட்சிகர படைப்பு நடவடிக்கைகளின் அரசியல் தலைமையின் ஒப்புவமையில் லாத கலையாக எப்பொழுதும் இருந்திருக்கிறது; அப்படியே இருக்கும்.

முதலாளித்துவ சமூக-பொருளாதார உருவாக்கம் கம்யூனிச சமூக-பொருளாதார உருவாக்கத்தினால் தவிர்க்க முடியாதபடி அகற்றப்படுதல் உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் மூலம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிகழ்வுப் போக்கு சோஷலிசக் குடும்பத்தைச் சேர்ந்த நாடுகள், சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கம், தேசிய விடுதலை இயக்கம் என்னும் மூன்று சக்தி வாய்ந்த புரட்சிகர நீரோட்டங்கள் இணைவதன் அடிப்படையில் தோன்றி இன்று வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது.

உலக சோஷலிச அமைப்பு — உலகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைக்கின்ற தீர்மானகரமான சக்தி

உலக சோஷலிச அமைப்பின் சாராம்சம், வளர்ச்சிக் கட்டங்கள் மற்றும் பிரதான அம்சங்கள். மார்க்சிய-லெனினியம் சமூக முன்னேற்றத்தின் மகத்தான சக்திகளுக்கு விழிப்பூட்டி

அவற்றைச் செலுத்தியிருக்கிறது. இது உலகம் புரட்சிகர மான முறையில் புத்தாக்கம் செய்யப்படுவதைக் குறிக்கிறது. மார்க்சிய-லெனினியத் தத்துவம் உலக சோஷலிச அமைப்பில் உருப்பெற்றிருக்கிறது; அதன் தோற்றம் விதிவழிப்பட்ட வரலாற்று நிகழ்வுப் போக்கு ஆகும்.

1919 பிப்ரவரியில் லெனின் பிரெஞ்சுப் பத்திரிகை யாளரான லுடோவிக் நாடோவுக்குப் பேட்டியளித்தார். உலகத்தின் எதிர்காலம் இனிமேல் யாருக்குச் சொந்தம் என்ற கேள்விக்குப் பதிலளிக்கின்ற பொழுது லெனின் பின்வருமாறு கூறினார்: ''உலகத்தின் எதிர்காலமா? நான் தீர்க்கதரிசி அல்ல. ஆனால் பழைய உலகம் முடிந்து விட்டது என்று நான் நம்பிக்கையுடன் கூற முடியும். மனிதகுலம் தடுக்க முடியாத வகையில் சோஷலிசத்தை நோக்கி முன் னேறிக் கொண்டிருக்கிறது.'' *

ஐரோப்பா, ஆசியா மற்றும் லத்தீன் அமெரிக்காவில் பல நாடுகளில் நடைபெற்ற வெற்றிகரமான சோஷலிசப் புரட்சிகள் ருஷ்யாவில் நடைபெற்ற அக்டோபர் புரட்சியுடன் மட்டுமே ஒப்பிடப்படுகின்ற உலக வரலாற்றின் ஆக முக்கிய மான நிகழ்ச்சிப் போக்கு ஆகும். சோஷலிசம் ஒரு நாட்டின் எல்லைகளைக் கடந்து உலக சமூக-பொருளாதார அமைப் பாக வளர்ச்சியடைந்தது. உலகத்தில் பல நாடுகள் சோஷலிச நாடுகளாக மேன்மேலும் மாறுகின்ற பொழுது முதலாளித் துவ உலகம் படிப்படியாகச் சுருங்கிக் கொண்டிருக்கிறது.

உலக சோஷலிச அமைப்பு அல்பேனியா, பல்கேரியா, ஹங்கேரி, வியட்நாம், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, சீன மக்கள் குடியரசு, கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு, கியூபா, லாவோஸ், மங்கோலியா, போலந்து,

---

* வி. இ. லெனின், **வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்கள்**, மாஸ்கோ, 1925, தொகுதி 6, பக்கம் 498 (ருஷ்ய மொழியில்).

ருமேனியா, சோவியத் யூனியன், செக்கோஸ்லோவாக்கியா, யுகோஸ்லாவியா ஆகிய நாடுகளைக் கொண்டது. அது 35.2 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பை அல்லது உலகத்தின் பரப்பில் சுமார் 30 சதவிகிதத்தைக் கொண்டிருக்கிறது. அதன் மொத்த மக்கள்தொகை சுமார் 1.5 பில்லியன் ஆகும். அது உலகத்தின் மக்கள்தொகையில் சுமார் 33.7 சதவிகிதத்துக்கும் அதிகமாகும். உலக சோஷலிச அமைப்பு உலகத்தின் தொழில்துறை உற்பத்தியில் 40 சதவிகிதத்துக்கும் அதிகமாக உற்பத்தி செய்கிறது; அது வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் தொழில் துறை உற்பத்தியில் 70 சதவிகிதம் ஆகும்.

''உலக சோஷலிசம் என்பது மிகவும் வளர்ச்சியடைந்த பொருளாதாரத்தையும் கணிசமான விஞ்ஞான வளங்களையும் நம்பக் கூடிய அரசியல்-இராணுவ உள்ளாற்றலையும் கொண்ட பலமிக்க சர்வதேச அமைப்பாகும். அது மனித குலத்தின் மூன்றில் ஒரு பகுதிக்கும் அதிகமானவர்களைக் கொண்டிருக்கிறது, மனிதன் மற்றும் சமூகத்தின் அறிவு மற்றும் கலாசார செல்வத்தை ஒவ்வொரு வழியிலும் வெளிப்படுத்துகின்ற டஜன் கணக்கான நாடுகளையும் மக்களினங்களையும் கொண்டிருக்கிறது. சோஷலிச நீதியை அடிப்படையாகக் கொண்ட, ஒடுக்குபவர்களும் ஒடுக்கப் படுபவர்களும் இல்லாத, சுரண்டல்காரர்களும் சுரண்டப் படுபவர்களும் இல்லாத, அதிகாரம் மக்களுக்குச் சொந்தமாக இருக்கின்ற ஒரு புதிய வாழ்க்கை முறை உருவாகியிருக்கிறது. கூட்டுணர்ச்சி, தோழமை மிக்க பரஸ்பர உதவி, சுதந்திரக் கருத்துகளின் வெற்றி, சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினருடைய உரிமைகளும் கடமைகளும் பின்னிப் பிணைந்திருத்தல், தனிமனிதருடைய கௌரவம் மற்றும் உண்மையான மனிதாபிமானம் அதன் குறியடையாளமான கூறுகள்'' என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின்

27வது காங்கிரஸ் ஆவணங்கள் கூறுகின்றன.

உலக சோஷலிச அமைப்பு மூன்று கட்டங்களைக் கடந்து வந்திருக்கிறது. முதல் கட்டத்தில் (1945—1949) சோஷலிச நாடுகளுக்கு இடையில் பொருளாதார, அரசியல், சித்தாந்த மற்றும் கலாசார ஒத்துழைப்புக்கு அடிப்படை அமைக்கப் பட்டது. சோவியத் யூனியனும் மக்கள் ஜனநாயக நாடுகளும் நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டன. மக்கள் ஜனநாயக நாடுகள் தமக்கிடையிலும் இத்தகைய ஒப்பந்தங்களைச் செய்து கொண்டன. இந்த உடன்படிக்கைகளும் ஒப்பந்தங்களும் பெரும்பாலும் இரண்டு நாடுகளுக்கு இடையில் நடைபெற்றன.

இரண்டாவது கட்டத்தில் (1949—1959) சோஷலிச சமூக நிர்மாணத்தின் முக்கியமான வெற்றிகளைக் காண்கிறோம்; சோஷலிச நாடுகளுக்கு இடையில் உறுதியான பொருளாதார, அரசியல் மற்றும் கலாசாரப் பிணைப்புகள் ஏற்பட்டு இரு தரப்பு ஒத்துழைப்பிலிருந்து பல தரப்பு ஒத்துழைப்புக்கு மாறுதல் சாத்தியமாயிற்று. இந்தக் கட்டம் முழுவதிலும் சோஷலிச நாடுகள் அரசியல் துறையில் தம்முடைய உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொண்டன. அதன் விளைவாக 1955 மே 14ந் தேதியன்று நட்புறவு, ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி உடன்படிக்கை (வார்ஸா உடன்படிக்கை) கையெழுத்திடப்பட்டது. பல்கேரியா, ஹங்கேரி, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, போலந்து, ருமேனியா, சோவியத் யூனியன், செக்கோஸ்லோவாக்கியா மற்றும் அல்பேனியா இந்த உடன்படிக்கையில் சேர்ந்திருந்தன (அல்பேனியா 1968இல் வார்ஸா உடன்படிக்கை ஸ்தாபனத்திலிருந்து விலகிக் கொண்டது). இத்தற்காப்பு உடன்படிக்கை ஆக்கிரமிப்பு நோக்கத்தைக் கொண்ட நேட்டோ கூட்டணிக்கு எதிராக இருந்தது. பிந்திய ஆண்டுகளில் வார்ஸா உடன்படிக்கை ஸ்தாபனத்தின் அரசியல்

ஆலோசனைக் கமிட்டி அமைக்கப்பட்டது. அது உடன் படிக்கை ஸ்தாபனத்தின் உறுப்பினர் நாடுகளின் கம் யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் தலைவர்கள், அரசாங்கத் தலைவர்கள், வெளிநாட்டிலாகா அமைச்சர்கள் மற்றும் பாதுகாப்பு அமைச்சர்களைக் கொண்ட கூட்டு சர்வதேச அமைப்பாக இருக்கிறது.

மூன்றாவது கட்டத்தில் (1960இலிருந்து இன்று வரை) சோஷலிசத்தை வளர்ப்பதிலும் வலுப்படுத்துவதிலும் முக்கிய மான சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. இப்பொழுது சோவியத் யூனியனில் வளர்ச்சியடைந்த சோஷலிச சமூகம் நிர்மாணிக்கப்படுகிறது; ஐரோப்பிய சோஷலிச நாடுகளிலும் சில வளர்ச்சியடைந்த சோஷலிசத்தை நிர்மாணிப்பதற்குத் தொடங்கியிருக்கின்றன; சில நாடுகளில் சோஷலிச அமைப் பின் அடிப்படை அமைக்கப்பட்டு வருகிறது. எல்லா சோஷலிச நாடுகளும் விரிவான உதவிகரமான ஒத்துழைப்பு உறவுகளை வலுப்படுத்தி வருகின்றன.

கியூபா குடியரசு சோஷலிசப் பாதையில் அடியெடுத்து வைத்தது. மக்கள் ஜனநாயக சக்திகளின் வெற்றியின் விளைவாக வடக்கு வியட்நாமும் தெற்கு வியட்நாமும் சோஷலிச அடிப்படையில் ஒன்றுசேர்ந்தன. லாவோசின் மக்கள் ஜனநாயகக் குடியரசும் சோஷலிசக் குடும்பத்தில் சேர்ந்தது.

உலக சோஷலிச அமைப்பின் அடிப்படையான அம்சங் கள் பின்வருவன: முதலாவதாக, அது ஒரே விதமான பொருளாதார அடிப்படையை, அதாவது அரசு (அனைத்து மக்களுக்கும் சொந்தமான) உடைமை, கூட்டுறவு உடைமை என்னும் இரண்டு வடிவங்களில் உற்பத்திச் சாதனங்களில் சமூக உடைமையின் ஆதிக்கத்தைக் கொண்டிருக்கிறது; சமூக உடைமை சோஷலிச நிர்வாக அமைப்புக்கு அடிப்படை யாக இருக்கிறது. அதில் சோஷலிசத்தில் உள்ளுறையாக

இருக்கின்ற பொருளாதார விதிகள் செயல்படுகின்றன. சோஷலிச அரசுகளுக்குள் சோஷலிச உற்பத்தி உறவுகள் உருவெடுக்கின்றன; உற்பத்தி, வினியோகம் மற்றும் பரிவர்த்தனைத் துறைகளில் சர்வதேசப் பொருளாதார உறவுகள் வளர்ச்சியடைகின்றன. இப்பொருளாதார ஒற்றுமையில் சில பொதுவான பொருளாதார நியதிகள் தோன்றியிருக்கின்றன. அவற்றில் சில பின்வருமாறு: சோஷலிச நாடுகளின் பொருளாதார வளர்ச்சி நிலை இன்னும் சமமாகி இருக்கிறது, குறைவாக வளர்ச்சியடைந்த நாடுகள் அதிகமாக வளர்ச்சியடைந்த நாடுகளின் நிலைக்கு உயர்ந்திருக்கின்றன; தனிப்பட்ட நாடுகளின் பொருளாதாரங்கள் ஒற்றை உலக சோஷலிசப் பொருளாதாரத்தை நோக்கி, சோஷலிசப் பொருளாதார ஒருங்கிணைப்பை நோக்கி வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றன.

இரண்டாவதாக, ஒரே விதமான அரசியல் ஆட்சியதிகாரமும் பொதுவான சித்தாந்தமும் உலக சோஷலிச அமைப்பின் குறியடையாளம் ஆகும். உலக சோஷலிச அமைப்பின் தலைமையான, வழிகாட்டும் சக்தி என்று எல்லா உழைக்கும் மக்களையும் ஒன்றுபடுத்தி, பயிற்சி தந்து, அமைப்பு ரீதியாகத் திரட்டி, தொழிலாளி வர்க்கத்தைச் சுற்றி அணிதிரட்டுகின்ற மார்க்சிய-லெனினியக் கட்சிகளைக் கூற வேண்டும். மார்க்சிய-லெனினியக் கட்சிகள் பெருந்திரளான மக்களுடைய நடவடிக்கையை, சோஷலிச நிர்மாணக் கடமைகளை நிறைவேற்றும்படி இயக்குகின்றன.

நம்முடைய சகாப்தத்தில் உலகத்தின் புரட்சிகர மாற்றத்தின் அனுபவம் பின்வரும் முக்கியமான படிப்பினையைத் தருகிறது. சோஷலிச நாடுகளில் கம்யூனிஸ்டுகளின் வெற்றிகள் நடைமுறையில் மார்க்சிய-லெனினியத்தைக் கொள்கையுறுதியுடனும் படைப்புத் திறனுடனும் கையாள்வதுடன் பின்னிப் பிணைந்திருக்கிறது. சில சோஷலிச நாடுகளின்

வளர்ச்சியில் தவறுகள், தப்புக்கணக்குகள், தோல்விகள், இடைநிறுத்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்கு மார்க்சிய-லெனினியத்தை அரைகுறையாகப்புரிந்துகொண்டது அல்லது சந்தர்ப்பவாதத்தினால் அல்லது தேசியவாதத் தவறுகளின் தாக்கத்தினால் அதன் கொள்கைகளைக் கடைப்பிடிக்கத் தவறியது காரணமாகும். லெனினுடைய கருதுகோள்களை வறட்டுச் சூத்திரமாகக் கடைப்பிடித்தது அல்லது மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படையான கருத்துகளையும் கோட்பாடுகளையும் கவனமில்லாமல், உறுதியில்லாமல் கடைப்பிடித்தலும் காரணமாக இருக்கலாம்.

மூன்றாவதாக, உலக சோஷலிச அமைப்பு புரட்சிகர சாதனைகளை, சோஷலிச நாடுகளைச் சேர்ந்த உழைக்கும் மக்களின் பொதுவான இலட்சியத்தைப் பாதுகாப்பதற்கு காட்டுகின்ற அக்கறை அந்த அமைப்பு முழுமைக்கும் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். ஒவ்வொரு தனிப்பட்ட நாட்டிலும் கம்யூனிச சமூகத்தை நிர்மாணித்தல், உலக சோஷலிச அமைப்பை மொத்தமாக வலுப்படுத்துதல், கம்யூனிசத்தின் உலக ரீதியான வெற்றிக்குப் போராடுதல் ஆகியவை அந்தப் பொதுவான இலட்சியத்தில் அடங்கும்.

உலக சோஷலிச அமைப்பு முதலாளித்துவத்தைக் காட்டிலும் பிரம்மாண்டமான சாதகங்களைக் கொண்டிருப்பதை இவை அனைத்தும் எடுத்துக் காட்டும். சோஷலிச அமைப்பில் மனிதகுல வளர்ச்சியின் முழு முன்னேற்றம் ஒரு முனைப்படுத்தப்படுகிறது. அழுகிக் கொண்டிருக்கின்ற முதலாளித்துவ அமைப்பை அகற்றி உலக முழுவதிலும் எதிர்காலத்தில் சோஷலிச அமைப்பு நிறுவப்படும்.

உலக சோஷலிசத்தின் பொது முறைமைகள் சோஷலிச நாடுகளுக்கு இடையிலான உறவுத் துறைகள் அனைத்திலும் (பொருளாதார, விஞ்ஞான, அரசியல், சித்தாந்த மற்றும் கலாசாரத் துறைகள்) செயல்படுகின்றன.

அதே சமயத்தில் உலக சோஷலிச அமைப்பின் வளர்ச்சியில் சிக்கல்கள், தவறுகள் கூட ஏற்படுகின்றன. உலக சோஷலிச அமைப்பின் உருவாக்கம் பன்முகப்பட்ட செயல் முறை ஆகும்; அதில் புறநிலையான மற்றும் அகநிலையான பெரிய பிரச்சினைகளையும் சிறிய பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டும்.

உறவுகளையும் ஒத்துழைப்பையும் வளர்க்கின்ற நாடுகள் பெரும்பாலும் வெவ்வேறு பொருளாதார வளர்ச்சி நிலைகளையும் வரலாற்று, கலாசார மரபுகளையும் சமூகக் கட்டமைப்புகளையும் கொண்டிருக்கின்றன. ஆனால் உலக சோஷலிச அமைப்பில் ஒரு நாடு மற்றொரு நாட்டை ஒடுக்குவதற்கு இடமில்லை; ஏனென்றால் சோஷலிச நாடுகளுக்கு இடையிலுள்ள உறவுகளில் பகையியல் முரண்பாடுகள் நிலவவில்லை. ''மக்களினங்கள் மெய்யாகவே ஒன்று சேருவதற்கு அவை பொதுவான நலன்களைக் கொண்டிருக்க வேண்டும். அவற்றின் நலன்கள் பொதுவாக இருக்க வேண்டும் என்றால் இன்றுள்ள உடைமை உறவுகள் ஒழிக்கப்பட வேண்டும்; ஏனென்றால் இந்த உடைமை உறவுகள் சில நாடுகள் மற்ற நாடுகளைச் சுரண்டுவதை உள்ளடக்கியிருக்கின்றன.... முதலாளி வர்க்கத்தின் மீது பாட்டாளி வர்க்கத்தின் வெற்றி அதே சமயத்தில், இன்று பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்களினங்களை ஒன்றுக்கொன்று பகைமையிலும் விரோதத்திலும் வைத்திருக்கின்ற தேசிய மற்றும் தொழில்துறை மோதல்களின் மீதும் வெற்றியாக இருக்கும்'' என்று மார்க்ஸ் நெடுங்காலத்துக்கு முன்பே எழுதினார். *

சோஷலிச நாடுகளுக்கு இடையில் உள்ள உறவுகளுக்கு அடிப்படையாக இருப்பது சோஷலிச சர்வதேசியவாதம்.

---

* K. Marx, F. Engels, *Collected Works*, vol. 28, p. 348.

ஒவ்வொரு நாட்டின் நலன்களையும் மொத்தக் குடும்பத்தின் நலன்களுடன் ஒன்றிணைத்தல், தேசியத்தை சர்வதேசியத்துடன் ஒன்றுசேர்த்தல், பொருளாதாரம், அரசியல், சித்தாந்தம் ஆகிய எல்லாத் துறைகளிலும் ஒத்துழைப்பும் பரஸ்பர உதவியும் சோஷலிச சர்வதேசியவாதம் ஆகும். எல்லா சோஷலிச நாடுகளுக்கு இடையிலும் அவற்றின் பரஸ்பர நன்மை, சமத்துவக் கோட்பாடுகளை முரணில்லாமல் கடைப்பிடித்தல், அரசுரிமை மற்றும் சுதந்திரக் கோட்பாடுகள், ஒரு நாடு மற்றொரு நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடாதிருத்தல் ஆகியவற்றை சோஷலிச சர்வதேசியவாதம் வலியுறுத்துகிறது. இவற்றுடன் தோழமை மிக்க பரஸ்பர உதவி, பாட்டாளி வர்க்க ஒருமைப்பாடு, சோஷலிசம் மற்றும் கம்யூனிசத்துக்காகக் கூட்டுப் போராட்டம் ஆகிய கோட்பாடுகளும் துணையாக இருக்கின்றன.

சகோதர சோஷலிசக் குடும்பம் சகோதர சோஷலிச அரசுகளின் குடும்பம் உலக சோஷலிச அமைப்பின் வளர்ச்சியில் கேந்திரமான பாத்திரத்தை வகிக்கிறது. இக்குடும்பம் எல்லா சோஷலிச நாடுகளின் தேசிய நலன்களும் ஒரே தன்மை உடையவை என்பதைச் சுட்டிக் காட்டுவதுடன், கட்சி மற்றும் அரசாங்க மட்டத்தில் அவை நெருக்கமான, நட்புறவுப் பிணைப்புகளை வளர்த்திருக்கின்றன; சர்வதேச அரங்கத்தில் ஒருமைப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கின்றன; அரசியல், பொருளாதாரம், கலாசாரம் ஆகிய எல்லாத் துறைகளிலும் அவை ஒத்துழைப்பை ஊக்குவிக்கின்றன என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. சோஷலிசத் தன்மை கொண்ட சர்வதேச உறவுகள் சோஷலிசக் குடும்பத்தில் அதிக அளவில் தென்படுகின்றன. அரசுரிமை

கொண்ட, சம அந்தஸ்துடைய நாடுகளுக்கு இடையில் புதிய, சோஷலிச ரகத்தைச் சேர்ந்த சர்வதேச உறவுகள் உருவாக்கப்பட்டிருப்பதை சோஷலிச குடும்பத்தில் காண்கிறோம். அதைச் சேர்ந்த நாடுகள் நலன்கள் மற்றும் இலட்சியங்களின் முற்றொருமையினால், மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தினால், தோழமை மிக்க ஒருமைப்பாடு, பரஸ்பர உதவி மற்றும் சர்வாம்ச ஒத்துழைப்பினால் ஒன்றுபடுத்தப் பட்டிருக்கின்றன.

இன்று சோஷலிசக் குடும்பத்தில் 1949இல் நிறுவப்பட்ட பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சிலில் (CMEA) (சி.எம்.இ.ஏ.) உறுப்பினராகவுள்ள அரசுகள் உள்ளன. பல்கேரியா, ஹங்கேரி, வியட்நாம், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, கியூபா, மங்கோலியா, போலந்து, ருமேனியா, சோவியத் யூனியன், செக்கோஸ்லோவாக்கியா ஆகியவை அதிலடங்கும். கவுன்சிலில் எல்லா அரசுகளுக்கும் சமமான பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது; பிரதேசம், மக்கள்தொகை ஆகியவை எப்படியிருந்தாலும் அரசுகள் விவாதிக்கப்படுகின்ற எல்லாப் பிரச்சினைகளிலும் கருத்துத் தெரிவிக்க முடியும். அது பகிரங்கமான முறையில் நடைபெறுகின்ற ஸ்தாபனம். சி.எம்.இ.ஏ. யுகோஸ்லாவியாவுடன் நட்பான உறவுகளைக் கொண்டிருக்கிறது; கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு, அங்கோலா மற்றும் எத்தியோப்பியாவுடன் தொடர்புகளை அதிகரித்திருக்கிறது. சி.எம்.இ.ஏ. நாடுகள் 92க்கும் அதிகமான வளர்முக நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருக்கின்றன; 60 சர்வதேச ஸ்தாபனங்களுடன் உறவுகளைக் கொண்டிருக்கின்றன.

சி.எம்.இ.ஏ. நாடுகளின் முயற்சிகளைத் திரட்டி ஒருங்கிணைப்பதன் மூலம் தேசியப் பொருளாதாரத்தின் திட்டமிட்ட வளர்ச்சியை ஊக்குவித்தல், பொருளாதார

மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்துக்கு உதவுதல், தொழில்துறை முன்னேற்றத்தைத் தீவிரப்படுத்துதல், உழைப்பின் உற்பத்தித் திறன் தொடர்ச்சியாக வளர்ச்சியடைவதை உறுதிப்படுத்துதல், மக்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துதல் ஆகியவை இந்த சர்வதேச ஸ்தாபனத்தின் முக்கியமான நோக்கங்களாகும் என்று அதன் சாசனம் தெரிவிக்கிறது.

சி.எம்.இ.ஏ. ஸ்தாபனம் அமைக்கப்பட்ட பொழுது முதலாளி வர்க்க அரசியல்வாதிகளும் பொருளியலாளர்களும் அது சீக்கிரத்திலேயே அழியும் அல்லது குறைந்த பட்சம் உருப்படியாக இருக்காது, எதிர்காலத்தில் சீர்குலைந்து போகும் என்று ஆரூடம் கூறினார்கள். காலம் அவர்களுடைய ஆரூடத்தைப் பொய்ப்பித்து விட்டது.

இன்று சி.எம்.இ.ஏ. நாடுகளின் மொத்த மக்கள்தொகை 455 மில்லியன், அதாவது உலகத்தின் மக்கள்தொகையில் சுமார் பத்தில் ஒரு பகுதியாகும். அவற்றின் பொருளாதார உற்பத்தி உலகத்தின் தேசிய வருமானத்தில் சுமார் 25 சத விகிதம். உலகத்தின் தொழில்துறை உற்பத்தியில் இந்த நாடுகள் 33 சதவிகிதத்தை உற்பத்தி செய்கின்றன. உலகத்தின் விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் மூன்றிலொரு பங்கு சி.எம்.இ.ஏ. நாடுகளில் இருக்கிறது. 1984இல் சி.எம்.இ.ஏ. நாடுகளின் தேசிய வருமானம் 1950ஐக் காட்டிலும் 8.6 மடங்கு அதிகமாக இருந்தது; அவற்றின் தொழில்துறை உற்பத்தி 14 மடங்கு அதிகமாக இருந்தது.

சோஷலிசக் குடும்பம் புதிய ரகத்தைச் சேர்ந்த கூட்டணியாகும். சில அரசுகளின் தேசிய நலன்கள் ஒரே மாதிரியாக இருப்பது மட்டும் அதன் அடிப்படை அல்ல; அது மார்க்சிய-லெனினியக் கட்சிகளால் வழிகாட்டப்பட்ட, பொதுவான உலகக் கண்ணோட்டத்தினால், பொதுவான உயர் இலட்சியங்களாலும் நோக்கங்களாலும், தோழ

மையான ஒருமைப்பாடு மற்றும் பரஸ்பர உதவி உறவு களினால் ஒன்றுசேர்க்கப்பட்ட நாடுகளின் சகோதரக் குடும்பம். அந்த நாடுகளின் கொள்கைகள் மற்றும் செயல் களின் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்ட கூட்டணி இது. அக்கூட்டணி ஒவ்வொரு உறுப்பினர் நாடும் தன் னுடைய தேசியக் கடமைகளைத் தீர்ப்பதற்குக் கூடுதலான பலத்தைக் கொடுக்கிறது, அவற்றின் கூட்டு பலத்தையும் உலக விவகாரங்களில் அவற்றின் செல்வாக்கையும் பன்மடங்கு பெருக்குகிறது.

சி.எம்.இ.ஏ. ஸ்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு இடை யில் பொருளாதார ஒத்துழைப்பு எப்படி அமைக்கப்படு கிறது? முதலாவதாக, அது சர்வதேச சோஷலிச உழைப்புப் பிரிவினைக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண் டிருக்கிறது; அது உற்பத்திச் சாதனங்களில் பொது உடை மையிலிருந்தும் இந்த நாடுகள் மற்றும் உலக சோஷலிச அமைப்பு முழுவதிலும் செயல்படுகின்ற சோஷலிசத்தின் பொருளாதார விதிகளிலிருந்தும் பிறக்கிறது. சி.எம்.இ.ஏ.வின் பொருளாதார வளர்ச்சி திட்டமிடப்பட்ட முறையில் நடை பெறுகிறது; அதன் விளைவாக ஒவ்வொரு சோஷலிச நாட்டுக்கும் அதன் தயாரிப்புகளுக்கு உத்தரவாதமான சந்தை இருக்கிறது; அந்த நாட்டுக்கு அவசியமான இயந்திரங் கள், மூலப்பொருட்கள் மற்றும் இதர உற்பத்திச் சாதனங் களை மற்ற சோஷலிச நாடுகள் உத்தரவாதமான முறை யில் தாமதமின்றி அளிக்கின்றன. சோஷலிச சர்வதேச உழைப்புப் பிரிவினை தேசிய ஆட்பலத்தையும் பொருளாயத வளங்களையும் இன்னும் சிறப்பான முறையில் பயன்படுத்து வதற்கு உதவுகிறது; ஒவ்வொரு நாட்டிலும் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும் தயாரிப்புச் செலவுகளைக் குறைப் பதற்கும் உழைப்பின் தரத்தையும் செய்திறனையும் உயர்த்து வதற்கும் உதவுகிறது. இது உலக சோஷலிசப் பொரு

ளாதாரத்தில் உற்பத்திச் சக்திகளை உசிதமான மற்றும் அறிவு பூர்வமான முறையில் உபயோகப்படுத்துவதையும் ஊக்குவிக்கிறது; மிகவும் சிறந்த, அறிவு பூர்வமான பொருளாதார அளவு விகிதங்களை நிறுவுவதற்கு உதவுகிறது.

சி.எம்.இ.ஏ. உறுப்பினர் நாடுகளின் பொருளாதார ஒருங்கிணைப்புக்கு சர்வதேச சோஷலிச உழைப்புப் பிரிவினை அடிப்படையாக இருக்கிறது. சோஷலிச நாடுகளை இன்னும் நெருக்கமாகக் கொண்டு வருவதற்குரிய பொருளாயத அடிப்படை என்ற முறையில் சோஷலிச பொருளாதார ஒருங்கிணைப்பை மேலும் ஆழப்படுத்துவதற்கு சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி விரும்புகிறது. உற்பத்தியைத் தீவிரப்படுத்துதல், விஞ்ஞான, தொழில்நுட்ப வியல் முன்னேற்றத்தை விரைவுபடுத்துதல் ஆகியவற்றின் முக்கியமான திசைவழிகளில் சகோதர நாடுகள் தம்முடைய முயற்சிகளைத் தொடர்ந்து ஒன்றுபடுத்துதல் மிகவும் முக்கியம் என்று அது கருதுகிறது. அப்பொழுதுதான் மக்களினங்களின் நலத்தை மேலும் அபிவிருத்தி செய்தல், பாதுகாப்பைப் பலப்படுத்துதல் ஆகிய நோக்கங்களுக்கு விஞ்ஞான, தொழில்நுட்பவியலின் முன்னணிக்கு வளர்ச்சியடைதல் என்னும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடமையைக் கூட்டாக நிறைவேற்ற வேண்டும்.

சோஷலிசப் பொருளாதார ஒருங்கிணைப்பு என்பது சி.எம்.இ.ஏ. உறுப்பினர் நாடுகளின் பொருளாதாரங்களை நெருக்கமாகக் கொண்டு வருகின்ற செயல்முறையாகும். அது சி.எம்.இ.ஏ. நாடுகளின் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளாலும் அரசாங்கங்களாலும் உணர்வு பூர்வமாக, திட்டமிடப்பட்ட முறையில் ஒழுங்குபடுத்தப்படுகிறது. அது தேசியப் பொருளாதாரங்களின் நவீன, அதிக பயனுள்ள கட்டமைப்பைத் தோற்றுவிப்பதையும் அவற்றின் வளர்ச்சி மட்டத்தை சமப்படுத்துவதையும் சுட்டுகிறது. பொரு

ளாதாரத்தின் முக்கியமான துறைகளில், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியலில் உறுதியான மற்றும் நிலையான இணைப்புகளின் உருவாக்கம், இந்த நாடுகளின் சர்வதேசச் சந்தை விரிவடைதல், அவற்றின் பண்ட-பண உறவுகள் அபிவிருத்தியடைதல் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த ஒருங்கிணைப்பு நிறைவேற்றப்படுகிறது.

பொருளாதார வாழ்க்கையை சர்வதேசமயமாக்குதல் சோஷலிசப் பொருளாதார ஒருங்கிணைப்புக்குப் பொருளாயத அடிப்படையை அமைத்துத் தருகிறது. அது உற்பத்தியை மேலும் சமூகமயமாக்குவதன் மூலம் இந்த நாடுகளின் பொருளாதார இடைச்சார்பை ஊக்குவிக்கின்ற, விரிவுபடுத்துகின்ற, உறுதிப்படுத்துகின்ற புறநிலையான நிகழ்வுப் போக்கு. சோஷலிசப் பொருளாதார ஒருங்கிணைப்பு ஒரு நீண்ட, சிக்கலான நிகழ்வுப் போக்கு. ஒரு குறிப்பிட்ட நாட்டுக்கு மட்டுமன்றி, சோஷலிசக் குடும்பத்தைச் சேர்ந்த எல்லா நாடுகளின் நலன்களுக்கும் உதவுகின்ற மிகவும் விவேகமான தீர்வுகளைக் கண்டுபிடிப்பதை அது கோருகிறது. சோஷலிசப் பொருளாதார ஒருங்கிணைப்பு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியலின் மிகவும் சமீபத்திய சாதனைகளை சாத்தியமான எல்லா இடங்களிலும் பயன்படுத்துகிறது.

சோஷலிசப் பொருளாதார ஒருங்கிணைப்பு அகலத்திலும் ஆழத்திலும் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. இன்று சி.எம்.இ.ஏ. நாடுகள் மின்சக்தித் தொழில்துறையின் வளர்ச்சி, எரிபொருள் மற்றும் மூலப்பொருள் வளங்கள், அவற்றை உசிதமான முறையில் உபயோகித்தல், இயந்திரப் பொறியியலில் தொழில்நுட்பவியல் முன்னேற்றம், உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்துதல், இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் புதிய மாதிரிகளைத் தயாரிப்பதில் ஒத்துழைப்பை அதிகரித்தல், நல்ல தரமுடைய நுகர்வுப் பொருட்களைத்

தயாரித்தல் ஆகியவை பற்றி அதிகமான கவனம் செலுத்து கின்றன. இவை அனைத்தையும் நிறைவேற்றுவதற்காக சி.எம்.இ.ஏ. நாடுகள் விரிவான, நீண்டகால ஒத்துழைப்புத் திட்டங்களைத் தயாரித்திருக்கின்றன.

சி.எம்.இ.ஏ. நாடுகள் கடந்த சில ஆண்டுகளாக பல அடுக்கு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்திசைவான திட்டம், 1981–1990 ஆண்டுகளில் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி மற்றும் கூட்டுறவுக்கு நீண்ட கால செயல்திட்டம் ஆகியவற்றையும் 2000ஆவது ஆண்டு வரை சி.எம்.இ.ஏ. நாடுகளின் விஞ்ஞான, தொழில்நுட்பவியல் முன்னேற்றத் துக்கு விரிவான கூட்டுச் செயல்திட்டத்தையும் தயாரித்துக் கொண்டிருக்கின்றன. சி.எம்.இ.ஏ. நாடுகளின் பொரு ளாதாரக் கட்டமைப்புகளின் இணைதல், இந்த ஒத்துழைப் பில் ஈடுபடுகின்ற அரசாங்க அமைச்சரகங்கள், தொழில் துறை இணையங்கள் மற்றும் தனிப்பட்ட தொழில் நிறுவனங் கள் ஆகியவற்றுக்கு இடையில் நேரடியான இணைப்பு களின் கூடுதலான வளர்ச்சி, கூட்டுக் கம்பெனிகளை அமைத்தல், முயற்சிகளையும் வளங்களையும் ஒன்றுபடுத்து கின்ற வேறு சில வடிவங்களைத் தேடுதல் ஆகிய பிரச்சினை கள் தீர்க்கப்படுகின்றன.

சோஷலிசப் பொருளாதார ஒருங்கிணைப்பு சி.எம்.இ.ஏ. நாடுகள் தம்முடைய சொந்த பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும் பொருளாதார ஒத்துழைப்பின் எல்லா வடிவங்களையும் ஊக்குவிப்பதற்கும் உதவுகிறது. பொருளாதார முன்னேற்றத்தைத் தீவிரப் படுத்துதல் மற்றும் செயல் திறனுடையதாக்கல், சோஷலிச சமூகத்தின் பொருளாயத-தொழில்நுட்ப அடிப்படையை வலுப்படுத்துவதற்கும் வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்த்துவதற்கும் அடிப்படை என்ற முறையில் சமூக உற்பத்தியின் மேற்கொண்ட வளர்ச்சியை உத்தரவாதம்

செய்தல், உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்துதல், ஏற்றுமதிக்குரிய பொருட்களின் உற்பத்தியை அதிகப் படுத்துதல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை கொடுக்கப்படு கின்றது. உற்பத்திச் சக்திகளை இன்னும் சிறப்பான முறை யில் வினியோகிப்பதற்கு அதிகமான முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது.

சோஷலிச நாடுகளின் ஒத்துழைப்பு பல்துறையானது. பொருளாதாரத் துறையில் இது சோஷலிசப் பொருளாதார ஒருங்கிணைப்பின் வளர்ச்சி ஆகும். சமூக-அரசியல் துறையில் இது சோஷலிச அமைப்பை வளர்த்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆகும். வெளிநாட்டுக் கொள்கையில் இது உலக சமாதானம், நாடுகளுக்கு இடையில் நட்புறவு மற்றும் பதட்டத் தணிவை ஊக்குவிக்கின்ற நடவடிக்கை ஆகும். சித்தாந்தத் துறையில் இது மார்க்சிய-லெனினிய உலகக் கண்ணோட்டத்தை மேலும் வலுப்படுத்தல் ஆகும். இந்நிகழ்வுப் போக்கின் எல்லா அம்சங்களும் ஒன்றுக்கொன்று பிணைக்கப்பட்டிருக்கின்றன.

சோஷலிச நாடுகளுக்கு இடையிலுள்ள உறவுகளில் ஒன்றின்மீதொன்று செயல்படுகின்ற இரண்டு போக்குகள் இருக்கின்றன. ஒரு பக்கத்தில் இந்த நாடுகள் தம்முடைய பொருளாதார மற்றும் அரசியல் சுதந்திரத்தை வலுப்படுத்து வதற்கு முயல்கின்றன; தம்முடைய சொந்த தேசியப் பொருளாதாரத்தையும் கலாசாரத்தையும் வளர்ப்பதற்கு முயல்கின்றன. மறு பக்கத்தில், இன்றுள்ள நிலை அவை விரிவான ஒத்துழைப்பை அமைத்துக் கொண்டு ஒன்றுக் கொன்று நெருங்கி வருமாறு தூண்டுகிறது. இந்த இரு போக்குகளும் ஒத்திசைவான முறையில் இணைதல், தேசிய மற்றும் சர்வதேசிய நோக்கங்கள் ஒருங்கிணைதல் ஆகியவை தனிப்பட்ட நாடுகள் மற்றும் மொத்த சோஷலிசக் குடும்பத் தின் நலன்களுக்கும் பொருந்துகின்றன.

சகோதர நாடுகள் மத்தியில் பன்முகமான ஒத்துழைப்பும் அவை நெருங்கி வருவதும் சோஷலிச அமைப்பின் வளர்ச்சியின் புறநிலையான அவசியங்களினால் ஏற்படுகிறது. ஆட்சியிலிருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சிகள் உலக சோஷலிசத்தின் பொது விதிகளைப் பற்றிய விஞ்ஞான அறிவின் அடிப்படையில் இந்த ஒத்துழைப்பை நெறிப்படுத்தி வழிகாட்டுகின்றன. உலக சோஷலிச அமைப்பு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் தீர்மானகரமான சக்தியாக, உலக சமாதானம், ஜனநாயகம், சமூக முன்னேற்றத்தின் அரணாக இருக்கிறது.

சர்வதேச கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளி வர்க்க இயக்கம்

தொழிலாளி வர்க்கப் புரட்சிகர இயக்கம். மார்க்சிய-லெனினியத் தத்துவத்தைப் பெற்றிருக்கின்ற தொழிலாளி வர்க்கம் வரலாற்று நிகழ்வுப் போக்கின் மீது தீர்மானமான தாக்கத்தைச் செலுத்துகிறது, அதை விரைவுபடுத்துகிறது. தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்தைப் பற்றி மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் லெனின் செய்த முடிவுகள் நிரூபிக்கப்பட்டு விட்டன. தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவ சமூக அமைப்பை எதிர்த்துப் போராடுவதற்கு, சுதந்திரத்துக்கும் சமத்துவத்துக்கும் மக்களுடைய போராட்டத்துக்குத் தலைமை தாங்குவதற்கு, வர்க்கப் போராட்டங்களில் பெற்றுள்ள வரலாற்று அனுபவத்தைப் பயன்படுத்தி சோஷலிசத்தின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்குத் தன்னுடைய தகுதியை நடைமுறையில் எடுத்துக் காட்டி விட்டது.

தொழிலாளி வர்க்க இயக்கம் சுயேச்சையான அரசியல்

சக்தி என்ற முறையில் 1830க்களின் கடைசியிலும் 1840க்களின் ஆரம்பத்திலும் தோன்றியது; அக்காலத்தில் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலான வர்க்கப் போராட்டம் மிகவும் உக்கிரமடைந்திருந்தது. தொழிலாளி வர்க்கம் புரட்சிகரப் போராட்டத்தில் மாபெரும் வெற்றி அடைந்தது; அதன் விளைவாக உலக சோஷலிச அமைப்பு தோன்றி வலுப்பெற்றது. தொழிலாளி வர்க்கம், சமூகத்தை ஆட்சி செய்கின்ற வர்க்கம், சமூக முன்னேற்றத்தின் வலிமையான சக்தியாக மாறியது.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கம் முக்கியமான புரட்சிகர சக்தியாக இருக்கிறது. தொழில்துறை வளர்ச்சியடைந்த நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தைப் பற்றி லெனின் மிகவும் உயர்வாகப் பேசினார், அது ''...நம்முடைய முக்கியமான நம்பிக்கை, நம்முடைய முக்கியமான ஆதரவு'' என்று அவர் சுட்டிக்காட்டினார்.* அதனால்தான் இன்றைய உலகு தழுவிய புரட்சிகர நிகழ்வுப் போக்கில் முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கத்தினர் தங்களுடைய பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார நலன்களுக்கு, ஜனநாயக உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கு, முதலாளித்துவத்தை ஒழிப்பதற்கு மற்றும் சோஷலிசத்தை நிர்மாணிப்பதற்கு நடத்துகின்ற போராட்டம் அதிகமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது.

ஏகாதிபத்திய சகாப்தத்தில் தொழிலாளி வர்க்கம் எண்ணிக்கையில் வளர்ச்சியடைதலும் அலுவலர்கள் மற்றும் மொத்த மக்கள் தொகையினரும் பாட்டாளி வர்க்கத் தன்மை பெறுதலும் தொடர்கின்றன. 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தொழிலாளி வர்க்கத்தின் மொத்த எண்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 28, p. 348.

ணிக்கை 9 மில்லியனாக இருந்தது என்றால், 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அது 30 மில்லியனாக அதிகரித்திருந்தது; 1980க்களின் ஆரம்பத்தில் அது 600 மில்லியனுக்கும் அதிகமாக அதிகரித்திருந்தது. தொழில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் வேலை செய்கின்ற மக்களில் மூன்றில் இரண்டு பகுதி தொழிலாளி வர்க்கம் ஆகும். ஆனால் மார்க்ஸ் ஒரு முறை சுட்டிக்காட்டியதைப் போல ''எண்ணிக்கை — ஸ்தாபனத்தால் ஒன்றுசேர்ந்து, அறிவால் வழி நடத்தப்படுமானால் — தராசில் மட்டுமே தூக்கிக் காட்டும்'' *.

உலகத்தை சோஷலிச முறையில் புத்தாக்கம் செய்வதற்குத் தொழிலாளி வர்க்கப் போராட்டம் மேன்மேலும் வளர்ச்சியடைவதற்குப் பின்னுள்ள புறநிலையான உண்மைகள் எவை?

முதலாவதாக, முதலாளித்துவத்தின் கீழ் உழைப்பும் உற்பத்தியும் மேன்மேலும் சமூகமயமாக்கப்பட்டு வருகின்றன, ஆனால் இந்த சமூகமயமாக்கப்பட்ட உழைப்பின் பலன் தனியார் உடைமையாக இருப்பது நீடிக்கிறது. ''முதலாளித்துவம் அதன் ஏகபோகக் கட்டத்தில் உற்பத்தியானது மிக விரிவான அளவில் சமூகமயமாக்கப்படுவதற்கு இட்டுச் செல்கிறது; முதலாளிகளை, அவர்களது விருப்பத்துக்கும் உணர்வுக்கும் மாறாக, ஒரு வகைப் புதிய சமுதாய முறையினுள், அறவே தடையில்லாப் போட்டியிலிருந்து முற்றும் சமூகமயமாக்கப்படுதலுக்கு மாறிச்செல்வதற்கான இடைநிலையாகிய ஒன்றினுள் இழுத்துச் செல்கிறது எனலாம்'' என்று லெனின் எழுதினார்.** முதலாளித்துவம் மாறிக் கொண்டிருக்கின்ற நிலைமைகளுக்குத்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 5, பக்கம் 23.

** வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 4, பக்கம் 67.

தன்னைத் தகவமைத்துக் கொள்வதற்கு முயல்கிறது, ஆதிக்கம் செலுத்துவதற்குப் புதிய வடிவங்களைத் தேடுகிறது, தன்னுடைய தொனியை மாற்றி வருகிறது. ஆனால் முதலாளித்துவம் எவ்வளவுதான் பாடுபட்டாலும் தன்னுடைய தலைமையானமுரண்பாட்டை அகற்ற முடியாது.

இரண்டாவதாக, உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலான முரணியல்பு வளர்ந்து வருகிறது. தொழிலாளி வர்க்கம் சுரண்டப்படுகின்ற வேகம் அதிகரிக்கிறது; கூலிகளுக்கும் ஏகபோக லாபத்துக்கும் இடையிலுள்ள இடைவெளி அதிகரித்து வருகிறது. தொழிலாளி வர்க்கத்தினர் நீண்ட, துன்பம் நிறைந்த போராட்டத்துக்குப் பிறகு பெற்ற வெற்றிகளை ஏகபோக முதலாளி வர்க்கம் அவர்களிடமிருந்து பறிப்பதற்கு முயல்கிறது.

மூன்றாவதாக, முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் உழைக்கும் மக்களுடைய வர்க்க உணர்வு, அவர்களுடைய முதலாளித்துவ எதிர்ப்பு உணர்ச்சி வளர்ச்சியடைவதைத் தூண்டுகின்றன. அவை முடிவில் பெருந்திரளான மக்களின், குறிப்பாகத் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் நடவடிக்கையைத் தூண்டுகின்றன.

முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கம் மற்றும் எல்லா உழைக்கும் மக்களின் போராட்டம் மேன்மேலும் வளர்ச்சியடைந்து வருவதைத் தொழிற்சாலைகளில் வேலைநிறுத்தங்கள் ஓங்கி வருவதைக் கொண்டு முடிவு செய்ய முடியும். இன்று அவை உச்ச கட்டத்தில் இருக்கின்றன. 1980க்களின் வர்க்கச் சண்டைகளின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் தொழிலாளி வர்க்கம் தன்னுடைய அரசியல் கோரிக்கைகளைக் கணிசமாக விரிவுபடுத்தியிருப்பதாகும். பொருளாதாரக் கோரிக்கைகளை ஆதரித்து வேலைநிறுத்தம் செய்பவர்களைக் காட்டிலும் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை

அதிகமாக இருக்கிறது. 1975—1979ஆம் ஆண்டுகளில் 31 மில்லியனுக்கு சற்று அதிகமான மக்கள் அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டார்கள்; 1980—1984ஆம் ஆண்டுகளில் அந்த எண்ணிக்கை சுமார் 44 மில்லியனாக அதிகரித்திருக்கிறது. இதைப் போலவே வேலைநிறுத்தம் செய்திருப்பவர்களின் மொத்த எண்ணிக்கையில் முதலாளி வர்க்கத்தை எதிர்த்து அரசியல் போராட்டங்களில் பங்கெடுப்பவர்களின் சதவிகிதம் அதிகரித்திருக்கிறது: 1975 — 1979ஆம் ஆண்டுகளில் அதன் பங்கு 55 சதவிகிதமாக இருந்தது, 1980 — 1984ஆம் ஆண்டுகளில் 70 சதவிகிதத்தைக் காட்டிலும் சிறிதளவு கூடுதலாக அதிகரித்திருக்கிறது.

பாட்டாளி வர்க்கத்தின் அதிகத் தீவிரமான போராட்டம் கம்யூனிஸ்ட் கட்சிகள் தங்களுடைய நிலைகளை வலுப்படுத்திக் கொள்வதற்கு உதவியிருக்கிறது.

கம்யூனிஸ்ட் இயக்கம். தொழிலாளி வர்க்கத்தின், அனைத்து உழைக்கும் மக்களின் ஜீவாதாரமான நலன்களின் உண்மையான பிரதிநிதி கம்யூனிஸ்ட் இயக்கம் ஆகும்; அந்த அரசியல் சக்தியின் நடவடிக்கைகள் மார்க்சிய-லெனினியத்துடனும் சமூக முன்னேற்றத்தின் புறநிலையான பொது விதிகளுடனும் கறாராகப் பொருந்துகின்றன. கம்யூனிஸ்ட் கட்சிகள் மட்டுமே சமூக மாற்றத்தின் திசைவழிகளை அறிவிக்க முடியும், பெருந்திரளான மக்களைப் புரட்சிகரப் பணிக்கு நெறிப்படுத்த முடியும் என்பதை வரலாறு நிரூபித்திருக்கிறது.

கம்யூனிஸ்ட் இயக்கம் மிகவும் முற்போக்கான கருத்துகளை வெளியிடுகிறது, மனிதகுலம் பல நூற்றாண்டுகளாகக் கண்டு வந்திருக்கின்ற கம்யூனிசக் கனவை நிறைவேற்றுகின்ற போராட்டத்தை இயக்குகிறது.

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாறு மார்க்சும் எங்கெல்சும் முதல் கம்யூனிஸ்ட் ஸ்தாபனமாகிய கம்யூனிஸ்ட் சங்கத்தை அமைத்து (1847) அதன் முதல் கொள்கை ஆவணமாகிய கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையை 1848ஆம் ஆண்டில் எழுதியதிலிருந்து தொடங்குகிறது. மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றி உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தை மேலும் பலப்படுத்தியது. 1918இல் உலகத்தில் மொத்தம் 10 கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளே இருந்தன; ஆனால் 1928இல் அந்த எண்ணிக்கை 46ஆக அதிகரித்தது; இன்று 95 நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் இருக்கின்றன. 1917 முதல் 1982 வரையுள்ள 65 ஆண்டுகளில் கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கை — பாசிசத்தையும் பிற்போக்குவாதத்தையும் எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தில் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளுக்குப் பேரளவான இழப்புகள் ஏற்பட்டிருந்த போதிலும் — 200 மடங்குக்கும் கூடுதலாக அதிகரித்தது: மூன்று லட்சம் 780 லட்சமாக அதிகரித்தது.

உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முக்கியத்துவம் மேன்மேலும் வளர்ச்சியடைவது இன்றைய சமூக வளர்ச்சியின் புறநிலையான பொது விதி ஆகும். இது ஏன்? முதலாவதாக, கம்யூனிஸ்டுகள் சுரண்டல் இல்லாத சமூகத்தைப் பற்றி மனித குலத்தின் நெடுங்காலக் கனவை நிறைவேற்றியதன் மூலம் விஞ்ஞான சோஷலிசத் தத்துவத்தை சோஷலிசம் மற்றும் கம்யூனிசத்தை நிர்மாணிக்கின்ற அன்றாட நடைமுறையாக மாற்றினார்கள். இரண்டாவதாக, உலக முழுவதிலுமுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒன்றுபட்ட அரசியல் சக்தியாக இயங்குகின்றன; ஏனென்றால் அவை அனைத்துமே ஒரே இலட்சியங்களுக்குப் பாடுபடுகின்றன. மூன்றாவதாக, உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் சர்வதேசியவாதமும் உலக சமாதானத்துக்காக முரணில்லாத போராட்டமும் தொழிலாளி

வர்க்க இயக்கத்தில், ஜனநாயக மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களில் அதற்கு முன்னணிப் பாத்திரத்தை உறுதிப் படுத்துகின்றன; அதன் மூலம் அந்த இயக்கம் சமாதானத்தை விரும்புகின்ற அனைத்து சக்திகளின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற்றிருக்கிறது. கம்யூனிஸ்ட் மற்றும் தொழி லாளர் கட்சிகள் அனைத்து உழைக்கும் மக்களின் உரிமை களுக்காக, உலக சமாதானத்துக்காக, நாடுகளின் பாது காப்புக்காகச் சுறுசுறுப்பாகப் போராடுகின்றன.

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பலத்துக்கும் ஜீவசக்திக்கும் மார்க்சிய-லெனினியம் கேந்திரமான தோற்றுவாயாக இருக் கிறது. மார்க்சிய-லெனினியத் தத்துவம் ஒன்றே சமூக முன்னேற்றத்தின் திசைவழிகளை அறிவிப்பதற்கும் அதன் இயக்கு சக்திகளை நெறிப்படுத்துவதற்கும் தகுதி உடையது என்பதை அதன் நூற்றாண்டுக் கால வரலாறு மிகவும் சிறப்பாக நிரூபித்திருக்கிறது. கம்யூனிஸ்டுகள் சமூக வளர்ச்சி யின் பொது விதிகளையும் நியதிகளையும் பற்றிய தத்துவப் பகுப்பாய்வை எந்தப் ஸ்தூலமான நிலைமைகளிலும் தொழிலாளி வர்க்கத்துக்கு வழிகாட்டுவதற்கு உபயோகிக் கிறார்கள். மிகவும் சிக்கலான நிலைமைகளில் வாழ்க்கை எழுப்புகின்ற கேள்விகளுக்குச் சரியான பதில்களைக் காண் பதற்கு இது கம்யூனிஸ்டுகளுக்கு உதவுகிறது. உலகத்தில் புரட்சிகரப் போராட்டத்துக்கும் சோஷலிசம் மற்றும் கம் யூனிசத்தின் வெற்றிக்கும் விஞ்ஞான ரீதியான போர்த்திட்டத் தையும் செயல்தந்திரத்தையும் பெற்றிருக்கின்ற ஒரே சக்தி கம்யூனிஸ்ட் கட்சிகளே.

கம்யூனிஸ்ட் இயக்கம் சர்வதேசியவாதத் தன்மையைக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு கம்யூனிஸ்ட் கட்சியும் வர்க்க உறவுப் பிணைப்புகளினால், சித்தாந்தக் கோட்பாடுகளின் முற்றொருமையினால், இறுதி லட்சியங்களுக்குப் போராடு வதனால் உலக கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் பிணைக்கப்பட்

டிருக்கிறது. அதே சமயத்தில் அவை ஒவ்வொன்றும் பிரத்யேகமான நிலைமையில் செயல்படுகின்றன.

கம்யூனிஸ்டுகள் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சர்வதேசியவாதக் கோட்பாட்டை ஒருபோதும் கைவிடக் கூடாது என்று மார்க்சிய-லெனினியத்தின் மூலவர்கள் திரும்பத்திரும்ப சுட்டிக் காட்டினார்கள். புரட்சிகரத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் கொள்கை, போர்த்திட்டம் மற்றும் செயல்முறையின் அடிப்படைகள், புரட்சியின் வளர்ச்சி மற்றும் சோஷலிச நிர்மாணத்தின் பொது விதிகளிலிருந்து தோன்றுகின்ற கோட்பாடுகள் பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்திலிருந்து பிரிக்க முடியாதவை என்று அவர்கள் கருதினார்கள். ஆக்வேதான் கம்யூனிஸ்டுகள் மனித சமூக வளர்ச்சியின் புறநிலையான பொது விதிகளைச் சார்ந்திருக்கின்ற பொழுதே இந்தத் தெளிவை ஒவ்வொரு தனிப்பட்ட நாட்டிலும் உள்ள ஸ்தூலமான நிலைமைகளையும் மரபுகளையும் பற்றித் தங்களுடைய அறிவுடன் இணைத்துக் கொள்கிறார்கள். ஸ்தல தேசியச் சிறப்பியல்புகளை மிகைப்படுத்துவதையோ, குறைத்து மதிப்பிடுவதையோ அவர்கள் அனுமதிப்பதில்லை. அவர்கள் தங்களுடைய ஒவ்வொரு காலடியையும் மொத்தமாக உலக நிலைமையின் எதார்த்தங்களுடன் பொருத்திப் பார்த்து உலக விடுதலை இயக்கத்துக்குத் தங்களுடைய பொறுப்பைப் பற்றிய முழு உணர்வுடன் செயல்படுகிறார்கள்.

எல்லா நாடுகள் மற்றும் தேசிய இனங்களின் உழைக்கும் மக்களின் சகோதர ஒற்றுமையை வலியுறுத்தியதன் மூலம் மார்க்சிய-லெனினியத்தின் மூலவர்கள் ஒரு மக்களினம் (அல்லது மக்களினங்களின் குழு) மற்ற மக்களினத்தின் மீது (அல்லது மக்களினங்களின் குழு மீது) எவ்விதமான பாகுபாடு காட்டுவதையும் எதிர்த்தார்கள். ''ஒரு மக்களினத்தை அடிமைப்படுத்துகின்ற மக்களினம் தனக்கு அடிமைச் சங்கிலி

களைத் தயாரித்துக் கொள்கிறது'' என்று மார்க்ஸ் கூறினார். *

சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கம் என்பது மார்க்சிய-லெனினியம் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்தின் கோட்பாடுகளுக்கு உடன்பாடான முறையில் உலகத்தைப் புரட்சிகரமாகப் புத்தாக்கம் செய்வதற்கு, உழைக்கும் மக்களின் ஜீவாதாரமான நலன்களைப் பாதுகாப்பதற்குப் போராடுகின்ற சுயேச்சையான கம்யூனிஸ்ட் கட்சிகளின் சகோதர, போர்க்குணமிக்க கூட்டணியாகும்.

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முக்கிய படைப்பிரிவுகள். உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தை போராட்ட நிலைமைகளை மற்றும் கட்சிகளை எதிரிடுகின்ற கடமைகளின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு சில தனிப்பகுதிகளாகப் பிரிக்க முடியும். உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மிகவும் சக்திவாய்ந்த பிரிவு சோஷலிச நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் ஆகும்.

இங்கே சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி — சமத்துவமான கட்சிகளுக்கு இடையில் முதன்மையானது — தலைமையான பாத்திரத்தை வகிக்கிறது. அது மிகவும் அனுபவமுடைய, பெருந்திரளான மார்க்சிய-லெனினியக் கட்சி. அது சோவியத் யூனியனில் வளர்ச்சியடைந்த சோஷலிசத்தை அபிவிருத்தி செய்கின்ற முயற்சிகளுக்குத் தலைமை தாங்குகிறது, உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் முன்னணிப் படையாக இருக்கிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியில் 190 லட்சத்திற்கும் அதிகமான உறுப்பினர்கள் இருக்கிறார்கள். சோவியத்

---

* K. Marx, F. Engels, *Werke*, Band 16, S. 389.

சமூகத்தின் வளர்ச்சிக்கு நீண்ட காலத் திட்டங்களைத் தயாரித்தல், சோவியத் யூனியனுடைய உள்நாட்டு, வெளி நாட்டுக் கொள்கைகளை வகுத்தளித்தல், இந்தக் கொள்கை களை அமுலாக்குவதற்கு உழைக்கும் மக்களைத் திரட்டுதல் ஆகியவை சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியமான நடவடிக்கைகள் ஆகும். கட்சி சமூக வளர்ச்சி யின் புறநிலையான விதிகளைக் கணக்கிலெடுத்துக் கொள் கிறது, சமூகத்தின் பொருளாயத மற்றும் அறிவு சார்ந்த வளத்தை ஆதாரமாகக் கொள்கிறது; வளர்ச்சியடைந்த சோஷலிசத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்குத் தன் னுடைய பிரம்மாண்டமான சக்தியை நெறிப்படுத்துகிறது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் சமூகத்தின் தலைமையான, வழிகாட்டுகின்ற சக்தி, அதன் அரசியல் அமைப்பின், அரசு மற்றும் சமூக அமைப்புகளின் மூலக்கரு என்று சோவியத் யூனியன் அரசியலமைப்புச் சட்டத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

சோஷலிச நாடுகளின் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளில் பல இலட்சக்கணக்கான உறுப்பினர்கள் இருக்கி றார்கள்; அவை உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மிகவும் பெரிய, செல்வாக்குடைய பிரிவாக இருக்கின்றன. இக்கட்சி கள் தம்முடைய சொந்த நாடுகளில் சோஷலிசத்தை மற்றும் கம்யூனிசத்தை நிர்மாணிக்கின்ற போராட்டத்தில் வழிகாட்டுகின்ற சக்தியாக இருக்கின்றன. பொருளாதார முன்னேற்றத்தை உறுதிப்படுத்துதல், புதிய சமூக உறவுகளை அபிவிருத்தி செய்தல், சோஷலிச வாழ்க்கை முறையை வளர்த்தல், பெருந்திரளான மக்களின் கம்யூனிச பயிற்சியை தீவிரப்படுத்துதல், சோஷலிசத்தின் சாதனைகளைப் பாதுகாத்தல் ஆகிய மிகவும் சிக்கலான, பொறுப்புமிக்க கடமைகளை அவை எடுத்துக் கொள்கின்றன.

முதலாளித்துவ நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள்

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மற்றொரு முக்கியமான சக்தி ஆகும். அவை வர்க்கப் போராட்டத்தில் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றன; இன்று அந்த நாடுகளின் அரசியல் வாழ்க்கையில் கணிசமான செல்வாக்கைக் கொண்டிருக்கின்றன. புரட்சிகரப் போராட்டத்தில் இயக்குகின்ற, மக்களைத் திரட்டுகின்ற முக்கியமான சக்தி தொழிலாளி வர்க்கம் என்னும் கருத்தை ஆதாரமாகக் கொண்டு அவை ஏகாதிபத்தியத்தின் கோட்டைகளிலிருந்து செயல்படுகின்றன. ஏகபோக மூலதனத்தின் ஆதிக்கத்தை ஒழிப்பதில் (பாட்டாளி வர்க்கத்தைத் தவிர) விவசாயிகள், ஜனநாயக அறிவுப் பகுதியினர், அலுவலகங்களில் பணி செய்பவர்கள், நகரங்களில் வசிக்கின்ற குட்டி முதலாளி வர்க்கப் பகுதியினர், அதாவது முதலாளித்துவ நாடுகளின் மக்களில் அதிகப் பெரும்பான்மையினர் ஜீவனுள்ள அக்கறையைக் கொண்டிருக்கிறார்கள்.

முதலாளித்துவ நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் முன்வைக்கின்ற தீவிர ஜனநாயக மாற்றங்கள் பின்வரும் கடமைகளை முன்வைக்கின்றன:

— உலக சமாதானம் மற்றும் வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்டிருக்கின்ற நாடுகளுடன் சமாதான சகவாழ்க்கைக் கொள்கையைக் கடைப்பிடித்தல்; ஆயுதப் போட்டியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு, படைக் கலைப்புக்குப் பாடுபடுதல்; நாடுகள் மற்றும் மக்களினங்கள் மத்தியில் பரஸ்பரம் பயனுள்ள ஒத்துழைப்பையும் பரஸ்பரப் புரிவையும் வளர்த்தல்;

— அந்நிய ஏகாதிபத்தியத்தின், குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தாக்குதல்களிலிருந்து தேசிய அரசுரிமையையும் தேசிய நலன்களையும் பாதுகாத்தல்; பன்னாட்டு ஏகபோகங்கள் மற்றும் அரசு-ஏகபோக இணையங்கள் தேசிய உள்விவகாரங்களில் தலையிடுவதை எதிர்த்தல்;

— பொருளாதாரத்தின் பிரதான துறைகளைத் தேசிய மயமாக்கல், பெருந்திரளான மக்களும் உழைக்கும் மக்களின் வெகுஜன அமைப்புகளும் தேசியமயமாக்கப்பட்ட மற்றும் இதர நிறுவனங்களை ஜனநாயக ரீதியில் கண்காணிப்பதை உறுதிப்படுத்துதல்;

— விவசாயிகளின் நன்மைக்காக விவசாயத் துறையில் சீர்திருத்தங்களை நிறைவேற்றுதல்;

— இன்றுள்ள பொதுச் சுகாதாரத் துறை, பொதுக் கல்வி, சமூகப் பாதுகாப்பு மற்றும் இதர சமூக நலத் துறைகளை உழைக்கும் மக்களுடைய நன்மைக்காகத் திருத்தியமைத்தல்;

— தேசிய கலாசாரத்தை அந்நிய சீரழிவிலிருந்து பாதுகாத்தல், உழைக்கும் மக்களுக்குக் கிடைக்கும்படி செய்தல்;

— உழைக்கும் மக்களும் அவர்களுடைய வெகுஜன ஸ்தாபனங்களும் ஸ்தல அமைப்பிலிருந்து தேசிய அமைப்பு வரை எல்லா மட்டங்களிலும் சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் பங்கெடுப்பதை விரிவுபடுத்துதல்;

— தனிநபர் மற்றும் கூட்டு ஜனநாயக உரிமைகளையும் சுதந்திரங்களையும் விரிவுபடுத்துதல்; தொழிலாளி வர்க்க மற்றும் ஜனநாயக இயக்கத்துக்கு எதிரான ஒடுக்குமுறைச் சட்டங்களை ரத்துச் செய்தல்; அரசியல் பயங்கரவாதத்தை ஒழித்தல், இதரவை.

கம்யூனிஸ்ட் கட்சிகள் மேற்கண்ட கோரிக்கைகளுக்கு ஆதரவாக நடத்துகின்ற போராட்டம் உழைக்கின்ற பெருந்திரளான மக்கள் மத்தியில் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கை உயர்த்துகிறது; தொழிலாளி வர்க்கத்திடம் கட்சியின் செல்வாக்கை உயர்த்துகிறது. பிரான்ஸ், இத்தாலி, போர்த்துகல், ஸ்பெயின், ஜப்பான் மற்றும் பல முதலாளித்துவ நாடுகளில் ஆட்சி செய்கின்ற முதலாளி வர்க்க வட்டாரங்கள் கம்யூனிஸ்ட் கட்சிகளின் நிலையைக்

கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் முக்கியமான அரசியல் முடிவுகளை இனிமேல் செய்ய முடியாது. கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து அரசாங்கம் அமைப்பதை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள பிற்போக்காளர்கள் தீவிரமாக எதிர்ப்பது இந்த நாடுகளின் அரசியல் வாழ்க்கையில் கம்யூனிஸ்ட் கட்சிகளின் செல்வாக்கு மேன்மேலும் அதிகரித்து வருவதையும் பெருந்திரளான மக்களிடம் அவர்களுக்கு ஆதரவு பெருகி வருவதையும் நிரூபிக்கிறது. டென்மார்க், ஆஸ்திரியா, மேற்கு ஜெர்மனி, பெல்ஜியம், நார்வே மற்றும் மேற்கு ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் சேர்ந்த மற்ற சில நாடுகளில் கம்யூனிஸ்டுகள் மக்களிடம் தங்களுடைய செல்வாக்கைப் பலப்படுத்தி வருகிறார்கள்.

இத்தாலியில் அடிக்கடி ஏற்படுகின்ற அரசியல் நெருக்கடிகளின் நிலைமையில், வலதுசாரித் தீவிரவாதிகளும் புதிய பாசிஸ்டுகளும் சுறுசுறுப்படைந்த போதிலும் இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய சமூக-அரசியல் நிலைகளைக் கணிசமாகப் பலப்படுத்தி விரிவுபடுத்தியிருக்கிறது. இன்று அக்கட்சியில் 18 லட்சம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள்; அது ஸ்தல நிர்வாக அமைப்புகளில் பரவலான பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருக்கிறது. கம்யூனிஸ்டுகளும் அவர்களுடைய கூட்டாளிகளும் நிர்வாக அமைப்புகளில் அதிகப் பெரும்பான்மையினராக இருக்கின்ற பிரதேசங்களில் இத்தாலியின் மக்கள்தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் வசிக்கிறார்கள்.

பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி அந்த நாட்டில் முக்கியமான அரசியல் சக்தியாக இருக்கிறது. அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை சுமார் 7 லட்சம். இவர்கள் அநேகமாக ஒவ்வொரு நகரத்திலும் தொழிற்சாலையிலும், பல கிராமங்களிலும் இருக்கின்ற கட்சிக் கிளைகளில் செயல்படுகிறார்

கள். அக்கிளைகளின் எண்ணிக்கை 28,000 ஆகும். பிரெஞ்சு கம்யூனிஸ்டுகள் தொழிற்சங்க இயக்கத்திலும் பல்வேறு வெகுஜன ஸ்தாபனங்களிலும் கணிசமான செல்வாக்குப் பெற்றிருக்கிறார்கள்.

நம் காலத்தின் அதிகச் செல்வாக்குள்ள அரசியல் சக்தி என்ற முறையில் கம்யூனிஸ்ட் இயக்கம் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் புரட்சிகர சக்திகளையும் மொத்த நாடுகளையும் திரட்டுகிறது.

ஆசியா, ஆப்பிரிக்காக் கண்டங்களைச் சேர்ந்த வளர்முக நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் மற்றொரு முக்கியமான பகுதியாகும். அவை முழு தேசிய விடுதலைக்கு உறுதியான போராளிகளாகத் தம்மை நிரூபித்திருக்கின்றன. இக்கம்யூனிஸ்ட் கட்சிகள் காலனியாதிக்கத்தை முடிவாக ஒழிப்பதற்கும் அதன் விளைவுகளை அகற்றுவதற்கும், பரந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு முன்னணியை உருவாக்குவதற்கும் வலுப்படுத்துவதற்கும், தீவிரமான சமூக மாற்றங்களுக்கும் கடுமையாகப் பாடுபட்டு வருகின்றன.

லத்தீன் அமெரிக்கா மற்றும் கரிபியன் பிரதேசத்தின் உள்ள கம்யூனிஸ்டுகளின் போர்க்குணமிக்க பிரிவுகள் வகிக்கின்ற பாத்திரம் மேன்மேலும் முக்கியத்துவம் பெற்று வருகிறது. லத்தீன் அமெரிக்காவில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் முக்கியமான அரசியல் சக்தியாக வளர்ச்சியடைந்திருக்கின்றன. கம்யூனிஸ்டுகள் உள்நாட்டு மற்றும் வெளி நாட்டுப் பிற்போக்குவாதத்தை எதிர்த்து உக்கிரமான போராட்டங்களில் தம்முடைய பலத்தைப் பெருக்கிக் கொண்டு ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் புரட்சிகளுக்குரிய முன்நிபந்தனைகளை உருவாக்கி வருகிறார்கள்.

லத்தீன் அமெரிக்காவில் மக்கள் போராட்டம் மேன்

மேலும் சிக்கலானதாகி வருகிறது; ஏனென்றால் பல நாடுகளில் மக்கள் உள்நாட்டிலுள்ள பிற்போக்கு இராணுவ ஆட்சி முறைகளை எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது. சில நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் தடை செய்யப்பட்டு அதன் உறுப்பினர்கள் வேட்டையாடப்பட்டு வருகிறார்கள். ஆகவே கம்யூனிஸ்ட் கட்சியுடன் எத்தகைய சிறு தொடர்பு வைத்திருப்பது கூட உயிருக்கு ஆபத்தை விளைவிப்பதாக இருக்கிறது. ஆர்ஜென்டீனா, பனாமா, வெனிஸுலா, கோஸ்ட்டா ரிக்கா, கொலம்பியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகள் பலமடைந்து வருகின்றன. சிலி, உருகுவே ஆகிய நாடுகளில் கம்யூனிஸ்டுகள் இராணுவ சர்வாதிகாரத்தை எதிர்த்துப் பெருந்திரளான மக்களைத் திரட்டி வருகிறார்கள். பராகுவே, இலத்தீன் அமெரிக்காவில் உள்ள மற்ற சில நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் தலைமறைவான நிலைமைகளில் தங்களுடைய போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கம்யூனிஸ்டுகளின் செயல்திட்டம் மற்றும் செயல்தந்திரக் கோட்பாடுகள். கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் நடவடிக்கைகளுக்கு மார்க்சிய-லெனினியம் சித்தாந்த, முறையியல் மற்றும் செய்முறை அடிப்படையைக் கொடுக்கிறது. சமூக வாழ்க்கை மற்றும் நம் காலத்திய வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையான அம்சங்களைப் புறக்கணிக்காமல் இந்த நடவடிக்கைகளுடன் இணைந்த மிகவும் முக்கியமான பிரச்சினைகளைத் தேர்ந்தெடுப்பதற்கு அது உதவுகிறது. மார்க்சிய-லெனினியம் குறைந்த கால, உடனடி நோக்கங்களுக்கான போராட்டத்தை இறுதி இலட்சியங்களுக்கான போராட்டத்துடன் இணைப்பதை, பிரதான தாக்குதலின் திசைவழியை சரியான முறையிலும் உரிய நேரத்திலும்

தேர்ந்தெடுப்பதை, ஸ்தூலமான நிலைமை மற்றும் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கின்ற நோக்கங்களைப் பொறுத்து போராட்டத்தின் வெவ்வேறு வழிகளையும் சாதனங்களை யும் கையாள்வதை, வர்க்க எதிரிகளின் அணிகளில் ஏற் பட்டிருக்கின்ற முரண்பாடுகளையும் பிளவுகளையும் பயன் படுத்திக் கொள்வதை, முக்கியமான கோட்பாடுகளை விட்டுக் கொடுக்காமல் அவசியம் ஏற்படுகின்ற பொழுது தற்காலிகமாக சமரசம் செய்து கொள்வதை சாத்தியமாக்கி இருக்கிறது.

கம்யூனிஸ்ட் இயக்கத்தை வளர்ப்பதற்கும் உறுதிப்படுத்து வதற்கும் சர்வதேச மாநாடுகளில் மற்றும் பிரதேச மாநாடு களில் முக்கியமான ஆவணங்கள் கூட்டாகத் தயாரிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன; இம்மாநாடுகள் அதிகமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன.

சோஷலிச நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் 1957 நவம்பர் 14—16ந் தேதிகளில் கூட்டம் நடத்தி ஒரு பிரகடனத்தை நிறைவேற்றின. 1957 நவம்பர் 16—19ந் தேதிகளில் 64 நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதி களின் மாநாடு சமாதான அறிக்கையை நிறைவேற்றியது. அந்த அறிக்கை இந்த சகாப்தத்தைத் தொகுத்துரைத்து, உலக அரங்கத்தில் தோன்றியிருக்கின்ற சக்திகளின் புதிய அணிச்சேர்க்கையைப் பகுப்பாய்வு செய்து, யுத்தமா சமா தானமா என்ற பிரச்சினையை எடுத்துக் கொண்டது. அது எல்லா நாடுகளுக்கும் பொதுவான, சோஷலிசப் புரட்சி மற்றும் சோஷலிச நிர்மாணத்தின் தலைமையான விதிகளை வகுத்தளித்தது.

கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் 1960 நவம்பரில் மற்றொரு மாநாட்டை நடத்தின. அதில் 81 கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு அறிக்கை மற்றும்

உலகத்தின் மக்களினங்களுக்கு வேண்டுகோளை நிறைவேற்றினார்கள். கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் அந்த அறிக்கையில் உலக வளர்ச்சியின் காரணி என்ற முறையில் உலக சோஷலிச அமைப்பின் அதிகரிக்கின்ற பாத்திரத்தைப் பற்றி, உலகத்தில் மற்றொரு உலக யுத்தம் ஏற்படுவதைத் தடுப்பதற்கும் வெவ்வேறு சமூக அமைப்பு களைக் கொண்ட அரசுகள் சமாதான ரீதியான சகவாழ்க்கை நடத்துவதற்கும் நம் காலத்தின் முற்போக்கு சக்திகள் அனைத்திற்கு முன்புள்ள போராட்ட வாய்ப்புகளைப் பற்றி முக்கியமான முடிவுகளை வெளியிட்டன. அறிக்கை காலனி யாதிக்கத்தின் தகர்வுக்குப் பிறகு தேசிய விடுதலைப் புரட்சி களின் வாய்ப்புகளை பற்றி, சமாதானம், தேசிய விடுதலை, ஜனநாயகம் மற்றும் சோஷலிசத்துக்குப் போராடுவதில் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளுக்கு முன் னாலுள்ள வாய்ப்புகளையும் புதிய கடமைகளையும் பற்றி முடிவுகளை வெளியிட்டது.

1969 ஜூன் மாதத்தில் *75* கம்யூனிஸ்ட் மற்றும் தொழி லாளர் கட்சிகளின் பிரதிநிதிகள் கூடிய பொழுது, ஏகாதிபத்தி யத்துக்கு எதிரான போராட்டத்தில் இன்றைய கட்டத்தின் கடமைகளும் கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகள் மற்றும் எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளின் ஒன்றுபட்ட நட வடிக்கைகளும் என்னும் ஆவணத்தையும் விளதீமிர் இலியீச் லெனினுடைய நூற்றாண்டு விழா என்னும் அறிக்கையையும் நிறைவேற்றினார்கள். இம்மாநாடு வியட்நாமுக்கு சுதந்திரம், விடுதலை, மற்றும் சமாதானம்; சமாதானத்தைக் காப்போம் ஆகிய வேண்டுகோள்களையும் வெளியிட்டது.

இந்த ஆவணங்களில் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு இடையி லுள்ள உறவுகளைப் பற்றிய கோட்பாடுகள் வகுத்தளிக்கப் பட்டிருக்கின்றன. அவற்றில் முக்கியமானவை பின்வருவன:

— மார்க்சிய-லெனினியத்துக்கு விசுவாசம்; கம்யூனிஸ்ட்

இயக்கத்தை வலுப்படுத்துவதற்கு அடிப்படை என்ற முறையில் மார்க்சிய-லெனினியத்தை ஆதாரமாகக் கொண்ட சித்தாந்த ஒற்றுமை;

— பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம்; கம்யூனிஸ்ட் இயக்கத்தின் இயன்ற அளவுக்கு உச்ச ஒற்றுமையின் மீது அக்கறை; பொது இலட்சியங்களுக்கான போராட்டத்தில் முயற்சிகளை ஒருங்கிணைத்தல்; ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, சமாதானம், ஜனநாயகம், தேசிய சுதந்திரம் மற்றும் சோஷலிசத்துக்கு ஆதரவாக நடைபெறும் போராட்டத்தில் பொது இலட்சியங்கள் சம்பந்தமாக மாநாடு செய்திருக்கின்ற மதிப்பீடுகளையும் முடிவுகளையும் ஒவ்வொரு கம்யூனிஸ்ட் கட்சியும் விருப்ப பூர்வமான முறையில் கடைப்பிடித்தல்; மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் சுதந்திரமும் சமத்துவமும்; ஒவ்வொரு கட்சியும் மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் அடிப்படையில் தன்னுடைய நாட்டின் ஸ்தூலமான நிலைமைகளுக்கு ஏற்ற முறையில் தன்னுடைய கொள்கையை உருவாக்கிக் கொள்கின்ற உரிமை; ஒவ்வொரு கட்சியும் தன்னுடைய நாட்டின் தொழிலாளி வர்க்கத்துக்கு, உழைக்கும் மக்களுக்கு, சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கு, கம்யூனிஸ்ட் இயக்கத்துக்குப் பொறுப்பைக் கொண்டிருத்தல்;

— கட்சியைக் கட்டுதல் மற்றும் கட்சியின் வாழ்க்கையைப் பற்றிய லெனினிய வரையளவுகளைக் கண்டிப்பாகப் பின் பற்றுதல்;

— கம்யூனிஸ்ட் இயக்கத்திற்குள் எவ்விதமான கோஷ்டி வாத நடவடிக்கையையும் முற்றிலும் நிராகரித்தல்;

— வலதுசாரி மற்றும் ''இடதுசாரி'' சந்தர்ப்பவாதத்துக்கு எதிராக, திருத்தல்வாதம், வறட்டுக் கோட்பாட்டு வாதம் மற்றும் தேசியவாதத்துக்கு எதிராக சமரசத்துக்கு இடமில்லாத முறையில் போராடுதல்;

— கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு இடையில் எவ்விதமான தகராறுகளையும் தோழமையான கலந்துரையாடல், விவாதத்தின் மூலமாகவே தீர்த்துக் கொள்ளுதல்.

ஐரோப்பாவிலுள்ள கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் மாநாடு 1976 ஜூனில் பெர்லின் நகரத்தில் நடைபெற்றது. அம்மாநாடு கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் ஒற்றுமைக்கும் ஒருங்கிணைப்புக்கும் முக்கியமான பங்காற்றியது.

''மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் லெனினுடைய மகத்தான கருத்துகளின் அடிப்படையில் தங்களுடைய சர்வதேசிய வாதத் தோழமை நிறைந்த, விருப்ப பூர்வமான ஒத்துழைப்பு மற்றும் ஒருமைப்பாட்டை வளர்த்துக் கொள்வதென்றும், ஒவ்வொரு கட்சியின் சமத்துவம், முழு உரிமையான சுதந்திரம், உள் விவகாரங்களில் தலையிடாமை ஆகிய கோட்பாடுகளைக் கண்டிப்பான முறையில் பின்பற்றுவ தென்றும், முற்போக்கான தன்மையைக் கொண்ட சமூக மாற்றத்துக்கும் சோஷலிசத்துக்குமான போராட்டத்தில் தம்முடைய பாதையைச் சுதந்திரமான முறையில் தேர்ந் தெடுத்துக் கொள்வதை மதிப்பதென்றும்'' மாநாட்டில் பங்கெடுத்தவர்கள் அறிவித்தார்கள். ''ஒவ்வொரு கட்சியும் தன்னுடைய சொந்த நாட்டில் சோஷலிசத்துக்காக நடத்து கின்ற போராட்டமும் அந்த நாட்டு தொழிலாளி வர்க்கத் துக்கும் மக்களுக்கும் அதனுடைய பொறுப்பும் விடுதலைக் கும் சுதந்திரத்துக்கும், ஜனநாயகம், சோஷலிசம் மற்றும் உலக சமாதானத்திற்காகவும் நடைபெற்ற போராட்டத்தில் எல்லா நாடுகளையும் சேர்ந்த உழைக்கும் மக்களின், எல்லா முற்போக்கு இயக்கங்கள் மற்றும் மக்களினங்களின் பரஸ்பர ஒருமைப்பாட்டுடனும் பிணைக்கப்பட்டிருக்கின்றன'' என்று மாநாடு அறிவித்தது. *

---

* *For Peace, Security, Co-operation and Social Progress in Europe,*

1980இல் பாரிஸ் நகரத்தில் நடைபெற்ற ஐரோப்பிய கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் மாநாடு யுத்த ஆபத்துக்கு எதிரான போராட்டத்துக்குப் புதிய வேகத்தைக் கொடுத்தது; அமெரிக்காவின் புதிய அணு ஆயுதங்களை மேற்கு ஐரோப்பாவில் வைத்திருப்பதென்ற நேட்டோ கூட்டணியின் முடிவினால் ஐரோப்பாவுக்கு ஏற்பட்ட பேராபத்தை எதிர்த்து ஐரோப்பாவில் பெருந் திரளான மக்களின் போராட்டத்தை ஊக்குவித்தது.

சகோதரக் கட்சிகளின் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதிலும் அவற்றின் முயற்சிகளை ஒருங்கிணைப்பதிலும் லத்தீன் அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் மாநாடு (1975), மத்திய அமெரிக்க மற்றும் மெக்சிகோ கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிராந்திய மாநாடுகள் (1974 மற்றும் 1980), அராபியப் பிரதேசக் கட்சிகளின் மாநாடுகள் (1976, 1978 மற்றும் 1981) அதிகமான முக்கியத்துவத்தைக் கொண் டிருந்தன. 1981 செப்டெம்பரில் கிழக்கு மத்தியதரைக் கடல் பிரதேசம், மத்திய கிழக்கு மற்றும் செங்கடல் பிரதேசத்தில் உள்ள கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளின் கூட்டம் நடை பெற்றது. 1978இல் ஆப்பிரிக்காவின் வரலாற்றில் முதல் தடவையாக வெப்ப மண்டல மற்றும் தெற்கு ஆப் பிரிக்கப் பிரதேசக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டம் நடை பெற்றது.

ஒவ்வொரு ஆண்டும் கம்யூனிஸ்ட் கட்சிகள் நூற்றுக்கணக் கான அதிகார பூர்வமான இருதரப்புக் கூட்டங்களை நடத்துகின்றன. சகோதரக் கட்சிகளுக்கு இடையிலான உறவு மற்றும் ஒத்துழைப்பின் இத்தகைய வடிவங்களும் இதர வடிவங்களும் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின்

Berlin, June 29—30, 1976, Moscow, Novosti Press Agency Publishing House, 1976, pp. 40—41.

பலத்தையும் செல்வாக்கையும் அதிகப்படுத்துவதற்கு உதவுகின்றன.

கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு இடையிலுள்ள சுறுசுறுப்பான ஒத்துழைப்பு இருதரப்புத் தொடர்புகளின் விஸ்தரிப்பில் வெளிப்படுகிறது. பல உதாரணங்களில் இத்தொடர்புகள் ஸ்தலத்திலிருந்து கட்சியின் மத்திய உறுப்புகள்வரை, எல்லா மட்டங்களிலும் நடைபெறுகின்றன. கட்சித் தலைவர்களுக்கு இடையில் நடைபெறுகின்ற கூட்டங்கள் மிகவும் முக்கியத்துவம் உடையவை. வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளுக்கு இடையில் சர்வதேசியவாதத் தொடர்புகள் கட்சி காங்கிரசுகளில் பரஸ்பரம் பங்கெடுப்பதன் மூலம் தூண்டப்படுகின்றன.

சகோதரக் கட்சிகள் கூட்டாக நடத்துகின்ற தத்துவார்த்த மற்றும் செய்தி இதழான *World Marxist Review* (''உலக மார்க்சிஸ்ட் சஞ்சிகை'') பிரபலமானதாகும். அதன் ஆசிரியர் குழுவில் சுமார் 60 கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகள் பணியாற்றுகிறார்கள். இச்சஞ்சிகை 34 மொழிகளில் பிரசுரிக்கப்பட்டு 140க்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த வாசகர்களால் படிக்கப்படுகிறது.

கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஒற்றுமையும் அவற்றின் ஒருமைப்பாட்டு நடவடிக்கைகளும் கடந்த சில ஆண்டுகளில் சமாதானம், ஜனநாயகம் மற்றும் சோஷலிசத்துக்கான போராட்டத்தில் அவற்றுக்குப் பல வெற்றிகளைத் தேடிக் கொடுத்திருக்கின்றன. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் மற்ற சகோதரக் கட்சிகளும் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் போர்க்குணமிக்க சர்வதேசியவாத ஒற்றுமையை வலுப்படுத்துவதில் தீவிரமான அக்கறையைக் கொண்டிருக்கின்றன.

கம்யூனிஸ்டுகள் மற்ற அரசியல் சக்திகளுடன் — சோஷலிஸ்டுகள், சமூக-ஜனநாயகவாதிகள், மதப் பற்றுடைய மக்கள், இதரர்களுடன் — கொண்டிருக்கின்ற ஒத்துழைப்பு

இரண்டு சமூக அமைப்புகள் போட்டியிடுகின்ற நம்முடைய சகாப்தத்தில் முக்கியமான பங்காற்றுகிறது. மார்க்சிய-லெனினிய சித்தாந்த நிலைகளை உறுதியாகப் பின்பற்று கின்ற கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் உக்கிர மான சர்வதேசப் பிரச்சினைகளை சமாதான மற்றும் ஆக்கபூர்வமான முறையில் தீர்ப்பதற்குப் பாடுபடுகின்ற எந்த அரசியல் சக்தியுடனும் ஒத்துழைப்பதற்குத் தயாராக இருப்பதை அறிவித்திருக்கின்றன.

கம்யூனிஸ்டுகள் மார்க்சிய-லெனினியம் என்ற ஒரே சித்தாந்தத்தினால் ஒன்றுசேர்ந்திருக்கிறார்கள்; அவர்களு டைய பொது எதிரி — ஏகாதிபத்தியம்; அவர்களுடைய பொது இலட்சியம் — சோஷலிசமும் கம்யூனிசமும். உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஒற்றுமைக்கான போராட்டத்தில் அவர்கள் வெற்றியடைவது மேற்கூறிய புறவய நிலைமை களினால்தான்.

மார்க்சிய-லெனினியத்துக்கு, பாட்டாளி வர்க்க சர்வ தேசியவாதத்துக்கு விசுவாசம், மக்களுடைய நலன் களுக்கும் பொது இலட்சியமான சோஷலிசத்துக்கும் தன் னலமற்ற அர்ப்பணிப்பு உணர்ச்சியுடன் சேவை செய்தல் ஆகியவை கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் செயல்திறனுடைய, சரியான, ஒன்றுபட்ட நடவடிக்கை களுக்கு இன்றியமையாத நிபந்தனைகள்; அவை தம்முடைய வரலாற்று இலட்சியங்களை நிறைவேற்றுவதில் வெற்றி யடைவதற்கு உத்தரவாதம்.

தேசிய விடுதலை இயக்கம்

ஏகாதிபத்தியக் காலனியாதிக்க அமைப்பின் நெருக்கடியும் தகர் வும். உலகத்தின் பரந்த பகுதிகளில் வேகமாக வளர்ச்சி

யடைந்திருக்கின்ற தேசிய விடுதலை இயக்கம் உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் பிரிக்க முடியாத பகுதியாகும். ஏகாதிபத்தியம் உலக மக்கள்தொகையில் கணிசமான பகுதி யின் மீது காலனியாதிக்க ஆட்சியை — ஏதாவதொரு வடிவத் தில் — திணித்திருக்கிறது. அது உருவாக்கிய காலனியாதிக்க அமைப்பு 19ஆம் நூற்றாண்டின் கடைசியிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் முடிவாக உருவெடுத்தது. 1940க்குள் அது 660 மில்லியன் மக்கள்தொகையைக் கொண்ட நாடுகளை, அதாவது உலகத்தின் மக்கள்தொகை யில் 30.6 சதவிகிதத்தை அடிமைப்படுத்தி விட்டது.

காலனியாதிக்க ஒடுக்குமுறை என்பது ஏகாதிபத்தியச் சுரண்டலின் மிகவும் கடுமையான ரகம் ஆகும். அடிமைப் படுத்தப்பட்ட மக்களின் கௌரவம் காலின் கீழ் மிதித்து நசுக்கப்படுகிறது; அவர்கள் ''தாழ்ந்த'', ''கீழான'' தேசிய இனங்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த நாடுகளின் செல்வம் தீவிரமாகக் கொள்ளையடிக்கப்படுகிறது, மக் களினங்கள் ஈவிரக்கமின்றி ஒடுக்கப்படுகின்றன. காலனி மற்றும் சார்பு நாடுகள் பலவற்றின் தலைவிதியைக் காலனியாதிக்கவாதிகள் லண்டன், பாரிஸ், பிரஸ்ஸல்ஸ், ரோம், வாஷிங்டன், லிஸ்பன் ஆகிய நகரங்களில் முடிவு செய்தார்கள்.

அடிமைப்பட்ட மக்களினங்கள் தம்முடைய கதியைப் பணிவுடன் ஒருபோதும் ஒத்துக் கொள்ளவில்லை; அவர்கள் காலனியாதிக்க அடிமைத்தனத்தை எதிர்த்துத் துணிவுடன் போராடினார்கள். இக்காரணத்தால்தான் தேசிய விடுதலை இயக்கம் தேசிய ஒடுக்குமுறைக்குப் பலமிக்க எதிர்செயலா கும், அது ஒடுக்குமுறையை ஒழிப்பதை இறுதி நோக்கமாக கொள்கிறது என்கிறோம்.

காலனியாதிக்க அமைப்பின் நெருக்கடி ஒரு பக்கத்தில் தலைமை நாடுகளைச் சேர்ந்த ஏகாதிபத்திய முதலாளி

வர்க்கத்துக்கும் மறு பக்கத்தில் காலனி மற்றும் சார்புநிலை நாடுகளின் மக்களினங்களுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகள் தீவிரமடைந்ததனால் தூண்டி விடப்பட்டது. அது மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியிலிருந்து ஆரம்பமாயிற்று. ''சோவியத் புரட்சி ஒரு மாபெரும் பாய்ச்சலில் மனித சமூகத்தை முன்னே கொண்டு சென்றது; அது ஏற்றிவைத்த பிரகாசமான தீபத்தை அணைக்க முடியாது.... மனிதகுலம் முன்னேறிச் செல்லக் கூடிய புதிய நாகரிகத்துக்கு அது அடிப்படைகளை அமைத்தது'' என்று ஜவகர்லால் நேரு எழுதினார். *

தேசிய விடுதலை இயக்கத்தில் பங்கெடுப்பவர்கள் யார்?

காலனியாதிக்க ஒடுக்குமுறையின் மிகவும் உறுதியான, மிகவும் முரணில்லாத எதிரியாக, தேசிய விடுதலைக்கு உறுதியான போராளியாகப் பாட்டாளி வர்க்கம் இருக்கிறது. பாட்டாளி வர்க்கம் சொந்த லாப நோக்கங்களுக்காகப் பாடுபடவில்லை; அதற்கு மாறாக அது வேறு எந்த வர்க்கம் அல்லது சமூகப் பிரிவையும் காட்டிலும் முரணில்லாத முறையில், அடிமைப்படுத்தப்பட்ட நாட்டின் மக்கள் அனைவருடைய நலன்களை வெளியிடுகிறது. மேலும் தொழிலாளி வர்க்கம் அந்நிய முதலாளிகளின் சுரண்டல் மற்றும் இன ஒடுக்குமுறையினால் அதிகமான துன்பத்துக்கு ஆளாகியிருக்கிறது.

சில நாடுகளில், குறிப்பாக ஆப்பிரிக்காவில் தொழிலாளி வர்க்கத்தின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவாக இருக்கிறது. ஆப்பிரிக்காவின் மொத்த மக்கள்தொகை 250 மில்லியனாகும்; ஆனால் தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 4 மில்லியன்தான். எனினும் தொழிலாளி வர்க்கம் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமையைப்

---

* Jawaharlal Nehru, *The Discovery of India*, London, Meridian, 1951, p. 14.

பெறுவதில் சில சமயங்களில் வெற்றியடைந்தது. ஆசியாவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் பல நாடுகளில் பாட்டாளி வர்க்கம் பல பத்தாண்டுகளாக உருவாகியிருப்பதால் அங்கே இன்னும் அதிகமான எண்ணிக்கையில் வளர்ச்சியடைந்திருக்கிறது; பல நாடுகளில் செல்வாக்குடைய, அமைப்பு ரீதியான தேசிய சக்தியாக உருவாகியிருக்கிறது. லத்தீன் அமெரிக்காவில் தொழில்துறை மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 25 மில்லியன்; ஆசியாவில் 60 மில்லியன் ஆகும். குறைவான வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழில்துறை ஊழியர்களின் எண்ணிக்கை கடந்த 25 ஆண்டுகளில் 150 சதவிகிதம் வளர்ச்சியடைந்திருக்கிறது என்று ஐ. நா. சபையின் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

தேசிய விடுதலை இயக்கங்களில் மிகப் பெரும்பான்மையினராக இருக்கின்ற விவசாயிகள் பாட்டாளி வர்க்கத்தின் முக்கியமான கூட்டாளி ஆவர். வளர்முக நாடுகளில் விவசாயிகள் மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பங்காக இருக்கின்றனர்; விவசாயி வர்க்கம் உறுதியாகப் புரட்சிகர நடவடிக்கையில் ஈடுபட முடியும் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. நிலத்தை இழந்து, புதிய காலனியாதிக்க எடுபிடிகளால் ஒடுக்கப்பட்டு அவமதிக்கப்படுகின்ற, பெரிய நிலக்கிழார்களாலும் லேவாதேவிக்காரர்களாலும் கொள்ளையடிக்கப்படுகின்ற விவசாயிகள் கிளர்ந்தெழுந்து விடுதலை இயக்கத்தில் பங்கெடுக்கிறார்கள்.

நகரங்களில் வசிக்கின்ற குட்டி முதலாளி வர்க்கமும் தேசிய விடுதலை இயக்கத்தில் சுறுசுறுப்பாகப் பங்கெடுக்கிறது. குட்டி முதலாளி வர்க்கம் தன்னுடைய இயல்பு காரணமாகத் தனியுடைமையுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டிருக்கிறது; ஆகவே அது பெரிய முதலாளி வர்க்கத்துடன் சேர்ந்து கொள்வதற்கு அடிக்கடி முயல்கிறது. மறு பக்கத்தில்

நகர்ப்புறக் குட்டி முதலாளி வர்க்கம் உழைப்பு நிகழ்வுப் போக்குடன் பின்னிப் பிணைந்திருக்கிறது; அதன் பொருளாயத நிலைமைகள் பெரிய முதலாளி வர்க்கத்துடன் ஒப்பிடுகின்ற பொழுது மிகவும் மோசமாக இருக்கின்றன. புதிய காலனியாதிக்கவாதிகளின் ஒடுக்குமுறை, அந்நியக் கம்பெனிகள் மற்றும் தரகு முதலாளிகளின் சுரண்டல், ஈவிரக்கமற்ற போட்டி ஆகியவை குட்டி முதலாளி வர்க்கத்தை தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுப்பதற்குத் தூண்டுகின்றன.

தேசிய முதலாளி வர்க்கம் மற்றும் தேசிய அறிவுப் பகுதியினர் மீதும் புதிய காலனியாதிக்கவாதிகளின் சுரண்டல் சுமையின் கணிசமான பகுதி விழுகிறது. பல நாடுகளில் தேசிய அறிவுப் பகுதியினர் இன்னும் மிகவும் குறைந்த எண்ணிக்கையில்தான் இருக்கிறார்கள் என்பது உண்மையே. எனினும் தேசிய விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த பல முக்கியமான தலைவர்கள் அறிவுப் பகுதியிலிருந்துதான் வந்திருக்கிறார்கள்.

இவை தேசிய விடுதலை இயக்கத்தின் சமூக சக்திகள். காலனிகள் மற்றும் சார்பு நாடுகளின் மக்களினங்கள் தேசிய சுதந்திரப் போராட்டத்தில் ஒரு சக்தியாக வளர்ந்த பிறகு இப்பொழுது சுரண்டல் முறையின் அடிப்படைகளை எதிர்த்துப் போராடி வருகிறார்கள்; அதன் மூலம் ''உலக அரசியலில் மற்றும் ஏகாதிபத்தியத்தைப் புரட்சிகரமான முறையில் ஒழிப்பதில் சுறுசுறுப்பான காரணியாக...'' * ஆகியிருக்கிறார்கள்.

ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க அமைப்பின் நெருக்கடி முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் உள்ளுறையான கூறு ஆகும். அதன் ஆரம்பக் கட்டத்தில்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 32, pp. 454—455.

காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் மாபெரும் புரட்சிகர நடவடிக்கைகள் ஏற்பட்டன; காலனி நாடுகளின் மக்களினங்கள் தேசிய அரசு மற்றும் சுதந்திரத்துக்காக இடைவிடாமல் நடத்திய போராட்டங்கள் இப்புரட்சிகர நடவடிக்கைகளுக்கு உத்வேகமூட்டின. நாஜி ஜெர்மனியையும் போர் வெறி ஜப்பானையும் முறியடிப்பதில் சோவியத் மக்கள் முக்கியமான பங்களித்த இரண்டாவது உலகப் போர் முடிவடைந்த பிறகு ஏகாதிபத்தியக் காலனியாதிக்க அமைப்பின் நெருக்கடி தகர்வாக மாறியது. அப்பொழுதுதான் ஜெர்மானிய, இத்தாலிய மற்றும் ஜப்பானியக் காலனியாதிக்கப் பேரரசுகள் அழிந்தன. உலகப் போரினால் பலவீனமடைந்திருந்த பிரிட்டன், பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகள் காலனிகளில் வளர்ந்தோங்கிய தேசிய விடுதலைப் போராட்டத்தைச் சமாளிக்க இயலாமல் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் பல நாடுகளுக்குச் சுதந்திரம் அளித்தன. அது ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க அமைப்பு முழுமையாகத் தகர்வதைத் தொடங்கியது.

ஏகாதிபத்தியம் பலவீனமடைந்து கொண்டிருந்தது, உலக சோஷலிசம் தன்னுடைய நிலைகளை வலுப்படுத்திக் கொண்டிருந்தது, தொழிலாளி வர்க்க மற்றும் ஜனநாயக இயக்கங்கள் அதிகமான வன்மையுடன் கிளர்ந்தெழுந்தன, ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசிய விடுதலைப் புரட்சிகள் ஓங்கின — இத்தகைய சூழ்நிலையில் காலனியாதிக்க அமைப்பு தகர்ந்து விழுந்தது. 1970க்களில் இன்னும் எஞ்சியிருந்த காலனியாதிக்கப் பேரரசுகள் மறைந்தன. தேசிய விடுதலைப் புரட்சிகளின் வெற்றியின் விளைவாக 1985க்குள் 115 புதிய அரசுகள் தோன்றின. ஆப்பிரிக்காவில் மட்டும் 50 சுதந்திர மான அரசுகள் பிறந்தன. இன்று முதலாளித்துவ உலகத்தின் மக்கள்தொகையில் சுமார் 70 சதவிகிதம் புதிதாக விடுதலையடைந்த நாடுகளில் வசிக்கிறார்கள்.

ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க அமைப்பின் தகர்வு வரலாற்றில் உலக சோஷலிச அமைப்பின் உருவாக்கத்துக்குப் பிறகு இரண்டாவது மிக முக்கியமான புரட்சிகர நிகழ்வுப் போக்கு, உலகப் புத்தாக்கத்தின் இரண்டாவது மிக முக்கியமான காரணி ஆகும்.

ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க அமைப்பு வேகமாகத் தகர்ந்ததற்குக் காரணங்கள் யாவை?

முதலாவதாக, சோஷலிசத்தின் பலமும் செல்வாக்கும், உலக சோஷலிச அமைப்பின் புரட்சிகரத் தாக்கம் பிரம்மாண்டமான அளவில் அதிகரித்திருக்கின்றன. சோஷலிசக் குடும்பத்தைச் சேர்ந்த நாடுகள் தேசிய விடுதலை இயக்கத்துக்குப் பேரளவான, நேரடி உதவியைத் தருகின்றன; அவை ஏகாதிபத்தியத்தின் பிரதான சக்திகளையும் அதன் இராணுவ இயந்திரத்தையும் தடுத்து நிறுத்துகின்றன.

இரண்டாவதாக, ஏகாதிபத்தியம் தீவிரமான பொருளாயத, சித்தாந்த மற்றும் அரசியல் பின்னடைவுக்கு ஆளாயிற்று. இரண்டாவது உலகப் போர் ஏகாதிபத்தியத்தின் மிக ஆக்கிரமிப்பான பிரிவுகளை அழித்தது, முதலாளித்துவக் காலனியாதிக்க அரசுகளில் பெரும்பான்மையானவற்றைப் பலவீனப்படுத்தியது.

மூன்றாவதாக, ஏகாதிபத்திய எதிர்ப்பு, காலனியாதிக்க எதிர்ப்பு இயக்கம் அடிமையாக்கப்பட்ட நாடுகளின் மக்களின் பரந்த பகுதியினரைத் திரட்டி மாபெரும் பரிமாணங்களை அடைந்திருந்தது. உலகப் போர் நடைபெற்ற ஆண்டுகளின் போது சில காலனி மற்றும் அரைக்காலனி நாடுகளில் தொழிலாளி வர்க்கம் கணிசமாக வளர்ச்சியடைந்தது. கம்யூனிஸ்ட் கட்சிகள், ஸ்தல தேசியப் புரட்சிகர ஸ்தாபனங்கள் தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

நான்காவதாக, முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப்படைப் பிரிவுகள்

ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வர்க்கச் சண்டைகளைத் தீவிரப்படுத்தின. இவை ஏகாதிபத்தியவாதிகளின் காலனியாதிக்கக் கொள்கையைக் கண்டனம் செய்து தேசிய விடுதலை இயக்கப் போராளிகளுடன் ஒருமைப்பாட்டு இயக்கத்தை நடத்தின.

ஐந்தாவதாக, பல்வேறு நாடுகளின் தேசிய விடுதலை இயக்கங்களுக்கும் ஏகாதிபத்தியத்தையும் காலனியாதிக்கத்தையும் எதிர்த்துப் போராடுகின்ற மக்களினங்களுக்கும் இடையில் ஒருமைப்பாடு மேன்மேலும் பலமடைந்திருக்கிறது.

புதிய காலனியாதிக்கம் என்றால் என்ன? புதிதாக விடுதலையடைந்த அரசுகள் பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன; உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தில் கீழான, சார்பு நிலையில் இருக்கின்றன. ஏகாதிபத்தியம் இவற்றைப் பயன்படுத்தி அந்த அரசுகளைச் சுரண்டுவதற்குப் பொருளாதார, அரசியல், இராணுவ மற்றும் இதர உறவுகளைக் கொண்ட மொத்த அமைப்பை உருவாக்கியிருக்கிறது. அதைப் புதிய காலனியாதிக்கம் என்று சொல்கிறோம். புதிய அரசுகள் உண்மையிலேயே சுதந்திரமான உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதை, சுதந்திரமான பொருளாதார அமைப்பை நிர்மாணிப்பதைத் தடுப்பது, இந்த அரசுகளை உலக முதலாளித்துவ அமைப்பின் சுற்றுவட்டத்திற்குள் வைத்திருப்பது, அவற்றை மூலப்பொருட்கள் அளிக்குமிடமாக, மூலதன முதலீடு மற்றும் விற்பனைக்குச் சிறந்த லாபம் தருகின்ற மண்டலங்களாக வைத்திருப்பது, அவை சோஷலிசத் திசைவழியில் செல்லாதபடி தடுப்பது ஆகியவை புதிய காலனியாதிக்கத்தின் நோக்கமாகும்.

வளர்முக நாடுகள் அரசியல் சுதந்திரம் மற்றும் விடுதலை அடைந்து விட்டன என்ற போதிலும் ஏகாதிபத்தியவாதிகள் தங்களுடைய தோல்வியை ஒத்துக் கொள்வதற்கு விரும்பவில்லை. காலனியாதிக்க அமைப்பின் தகர்வுக்குப் பிறகும் கூட ஏகாதிபத்தியவாதிகள் புதிதாக விடுதலை யடைந்த நாடுகளின் இயற்கை வளங்களைக் கொள்ளை அடிப்பதிலும் மக்களைச் சுரண்டுவதிலும் ஆசை கொண் டிருக்கிறார்கள். ஏகாதிபத்தியம் மிகவும் நவீனமான புதிய காலனியாதிக்கவாதச் சுரண்டல் பொறியமைவை உருவாக்கி யிருக்கிறது; புதிதாக விடுதலை அடைந்த பல அரசுகளைத் தன் வலையில் சிக்கவைப்பதில் வெற்றியடைந்திருக்கிறது. அதன் விளைவுகள் பேராபத்தை ஏற்படுத்தி இருக்கின்றன. இன்று 2 பில்லியனுக்கும் அதிகமான மக்கள்தொகையைக் கொண்ட வளர்முக நாடுகள் மாபெரும் வறுமைப் பிரதேச மாக இருக்கின்றன. 1980க்களின் ஆரம்பத்தில் புதிதாக விடுதலையடைந்த நாடுகளில் தனி நபர் வருமானம் வளர்ச்சி யடைந்த முதலாளித்துவ நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது 1| 11ஆக இருந்தது. கடந்த முப்பது ஆண்டுகளில் இந்த இடைவெளி குறைவதற்குப் பதிலாக அதிகரித்திருக்கிறது. இந்த நாடுகளில் ஒப்பீட்டு வறுமை தவிர, கல்லாமை, அறியாமை, ஊட்ட உணவின்மை, பட்டினி, குழந்தை மரணம், கொள்ளை நோய்கள் இருக்கின்றன. இவை கோடிக்கணக்கான மக்களைப் பாதிக்கின்றன.

புதிய காலனியாதிக்கவாதிகள் உபயோகிக்கின்ற முறை கள் யாவை?

மூலதனத்தை, குறிப்பாக அரசு மூலதனத்தை வளர்முக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அவற்றின் தேசியப் பொருளா தாரத்தில் அதை முதலீடு செய்வது இம்முறைகளில் ஒன்றாகும். இதன்மூலம் மூலதனத்தை ஏற்றுமதி செய்கின்ற நாடு அந்த வளர்முக நாட்டில் தன்னுடைய அரசியல்

ஆதிக்கத்தை ஏற்படுத்தாமல் பொருளாதார ஆதிக்கத்தை நிறுவுகிறது. அரசு மூலதன ஏற்றுமதி பெரும்பாலும் ''உதவி'', ''அன்பளிப்பு'', கடன் என்ற பெயர்களில் மறைக்கப்படுகிறது. பன்னாட்டு ஏகபோகங்கள் இந்த நாடுகளின் தொழில் துறை வளர்ச்சிக்கு உதவி செய்கின்ற பெயரில் தம்முடைய கிளைகளை அங்கே நிறுவி லாபம் தரக் கூடிய கேந்திரமான தொழில்துறை பிரிவுகளில் ஆதிக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஏராளமான எண்ணெய் மற்றும் இதர இயற்கை வளத்தைக் கொண்ட வளர்ச்சி இல்லாத நாடுகளுக்கும், முதலாளித்துவ உறவுகளைத் தூண்டுவதையும் அந்நிய மூலதனத்துடன் பங்கு ஏற்படுத்திக் கொள்வதையும் நோக்கமாகக் கொண்ட நாடுகளுக்கும் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. மேற்கத்திய முதலாளித்துவ கார்ப்பரேஷன்கள் தம்முடைய சொந்த நாடுகளில் அடைகின்ற லாபத்தைக் காட்டிலும் வளர்முக நாடுகளில் சராசரி 50 முதல் 100 சதவிகிதம் அதிகமான லாபத்தை அடைகின்றன.

மேற்கு நாடுகள் வளர்முக நாடுகளுக்குத் தருகின்ற ''உதவி'' அந்த நாடுகளின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்குச் சிறிதும் உதவவில்லை. உதவியைப் பெறுகின்ற நாடு க்டன்கள், கடன் வசதிகள் மற்றும் நிதிகளைச் சீக்கிரமாகச் செலவழித்து விட்டு மேலும் கடனுக்காகக் கையேந்தி நிற்கும் என்பதே இந்த ''உதவிக்குப்'' பின்னுள்ள சிந்தனை ஆகும். மேலும் இத்தகைய ''உதவிக்கு'' அதிகமான வட்டி விதிக்கப்படுகிறது; அதன் காரணமாகப் பல வளர்முக நாடுகள் தமக்குக் கடன் கொடுக்கின்ற நாடுகளைப் பொருளாதார ரீதியில் நம்பியிருக்கின்றன. 1984இல் வளர்முக நாடுகளின் மொத்த அந்நியக் கடன் 800 பில்லியன் டாலருக்கும் அதிகமாக இருந்தது. இக்கடன்களின் வருடாந்தர வட்டி மட்டுமே சுமார் 160—170 பில்லியன் டாலர்கள் என்னும் மாபெரும் அளவை எட்டியுள்ளது.

பல நாடுகள் தம்முடைய பொருளாதார வளர்ச்சிக்காக இல்லாமல், பழைய கடன்களுக்கு மேன்மேலும் அதிகரிக்கின்ற வட்டியைக் கட்டுவதற்காகப் புதிய கடன்களையும் கடன் வசதிகளையும் பெறுகின்ற நச்சுச் சுழலில் சிக்கியிருக்கின்றன. இதன் விளைவாக இந்த நாடுகளைப் பொருளாதார ரீதியில் பயமுறுத்துவதற்கும் அரசியல் ரீதியில் நிர்ப்பந்திப்பதற்கும் உரிய சாதனங்கள் ஏகாதிபத்திய நாடுகளுக்குக் கிடைக்கின்றன.

புதிய காலனியாதிக்கவாதிகள் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த வளர்முக நாடுகளை ஆயுதப் போட்டியில் ஈடுபடுத்துவதற்கும் பாடுபடுகின்றன. உலகத்தின் மொத்த இராணுவச் செலவில் வளர்முக நாடுகளின் பங்கு 1970இல் 7,2 சதவிகிதமாக இருந்தது; 1982இல் 16 சதவிகிதமாக அதிகரித்து விட்டது. புதிதாக விடுதலையடைந்த நாடுகளின் இராணுவங்களின் மொத்த எண்ணிக்கை 15 மில்லியனாகும்; இது உலகத்திலுள்ள எல்லா நாடுகளின் இராணுவங்களின் மொத்த எண்ணிக்கையில் 60 சதவிகிதமாகும். உலகத்தின் ஆயுத இறக்குமதியில் இந்த நாடுகளின் பங்கு 75 சதவிகிதம் ஆகும். 1978—1982ஆம் ஆண்டுகளில் மத்திய கிழக்கு நாடுகளின் இராணுவச் செலவு 18 பில்லியன் டாலர்கள் அதிகரித்தது, தென் ஆப்பிரிக்காவில் 8 பில்லியனும் லத்தீன் அமெரிக்காவில் 7.5 பில்லியனும் அதிகரித்தது.

புதிய காலனியாதிக்க அமைப்பில் சமத்துவமில்லாத அந்நிய வர்த்தகப் பரிவர்த்தனை கணிசமான பங்கைக் கொண்டிருக்கிறது.

வளர்முக நாடுகளில் கைப்பொம்மை சர்வாதிகார ஆட்சிகளை ஏற்படுத்துகின்ற மிகப் பழமையான தந்திரத்தை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கடைப்பிடிக்கிறார்கள். அவர்கள் இராணுவ மேலதிகாரிகளுக்கும் அரசியல் தலைவர்

களுக்கும் லஞ்சம் கொடுக்கிறார்கள், அரசியல் சதிகளைத் தயாரிக்கிறார்கள், திடீர்ப்புரட்சிகளைத் தூண்டி விடுகிறார்கள், முற்போக்கான தலைவர்களைக் கொலை செய்கின்ற முயற்சிகளுக்கு உடந்தையாக இருக்கிறார்கள். ஊழலான ஆட்சியாளர்களை எதிர்த்து மக்கள் போராடுகின்ற பொழுது ஏகாதிபத்தியவாதிகள் நேரடியான இராணுவத் தலையீடு உட்பட பல வழிகளையும் உபயோகித்து தேசிய விடுதலை இயக்கங்களை நசுக்குவதற்கு முயற்சி செய்கிறார்கள்; ''சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும்'' பாதுகாத்தல் என்ற திரையின் மறைவில் இவை அனைத்தையும் செய்கிறார்கள். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வியட்நாமில் நடத்திய காட்டுமிராண்டித்தனமான யுத்தம், அவர்கள் கிரெனாடாவை ஆக்கிரமித்தது, இதரவை இதற்குத் தத்ரூபமான உதாரணங்களாகும்.

ஏகாதிபத்தியவாதிகளின் புதிய காலனியாதிக்கக் கொள்கை தம்மைச் சார்ந்துள்ள நாடுகளின் சமூக-பொருளாதார வளர்ச்சியைத் தடுத்தல், ஏகபோக முதலாளித்துவத்தின் தேவைகளுக்கு ஏற்ற முறையில் அந்த நாடுகளின் பொருளாதாரங்களைத் தகவமைத்தல், ஏகபோக மூலதனத்தின் நலன்களுக்கு இந்த நாடுகளைக் கீழ்ப்படுத்துதல், அவற்றின் வளர்ச்சியை முதலாளித்துவத் திசைவழியில் செலுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

முதலாளித்துவ வளர்ச்சிப் பாதை. அரசியல் விடுதலை பெற்ற பிறகு புதிதாக விடுதலை அடைந்த நாடுகளுக்கு முன்பாக முதலாளித்துவப் பாதை, முதலாளித்துவம் அல்லாத பாதை என்னும் இரண்டு பாதைகள் இருக்கின்றன. புதிதாக விடுதலையடைந்த இளம் அரசுகள் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. இவற்றில் சில புரட்சிகர-ஜனநாயக வளர்ச்சிப்

பாதையைத் தேர்ந்தெடுத்திருக்கின்றன; வேறு சில அரசுகள் முதலாளித்துவப் பாதையைப் பின்பற்றுகின்றன.

முதலாளித்துவ உறவுகள் ஆதிக்கம் செலுத்துகின்ற வளர் முக நாடுகள் தம்முடைய பொருளாதாரப் பின்தங்கிய நிலையையும் ஏகாதிபத்திய அரசுகளைச் சார்ந்திருக்கின்ற நிலையையும் அகற்ற முடியாமல் தவிக்கின்றன. ஏனென்றால் அந்த நாடுகள் தம்முடைய சொந்த இயற்கை வளங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்குக் கூட உரிமை இல்லாதிருக் கின்றன. முதலாளித்துவ உலகத்தில் ஏற்படுகின்ற பல்வித மான பொருளாதார நெருக்கடிகளும் தீவிரமடைகின்ற சமூக-பொருளாதார முரணியல்புகளும் முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையைப் பின்பற்றுகின்ற இளம் நாடுகள் மீது பொருளாதார ரீதியில் பாதகமான தாக்கத்தைக் கொண்டிருக்கின்றன.

உதாரணமாக, லத்தீன் அமெரிக்காவை எடுத்துக் கொள் வோம். அங்கே முதலாளித்துவம் மக்களுக்குச் சராசரி வாழ்க்கைத் தரம் அல்லது சமூக நீதியைக் கொடுப்பதற்குத் தன்னால் முடியாது என்பதை நிரூபித்து விட்டது. அங்கே குறிப்பிடத்தக்க தொழில்துறைச் சாதனைகள் ஏற்பட்டிருந் தாலும் பெருந்திரளான உழைக்கும் மக்கள் மிகவும் பரிதாபகரமான நிலையில் இருக்கிறார்கள். உதாரணமாக, பிரேசில் நாட்டில் மக்கள்தொகையில் 80 சதவிகிதத்தினருக்கு நாட்டின் தேசிய வருமானத்தில் 33 சதவிகிதம் மட்டுமே கிடைக்கிறது.

மக்களின் மிகப் பெரும்பான்மையினர் வறுமையில் வாடுதல், வருமானங்கள் மிகவும் அதிக ஏற்றத்தாழ்வான முறையில் வினியோகிக்கப்படுதல், மொத்தமாக சமூக அநீதி நிலவுதல் ஆகியவை இன்று லத்தீன் அமெரிக்க முதலாளித்து வத்தின் குறியடையாளமான கூறுகள் ஆகும். அதிலும் லத்தீன் அமெரிக்கா உலகத்தின் வளர்முகப் பிரதேசத்தில்

மிகவும் வளர்ச்சியடைந்த பகுதி என்று கருதப்படுகிறது.

நைஜீரியா ஆப்பிரிக்க முதலாளித்துவத்துக்கு மிகச் சிறப்பான உதாரணம் என்று இதுவரை கருதப்பட்டது; அந்த நாட்டை ஆப்பிரிக்காவின் ''வல்லரசு'' என்று கூட வர்ணித்தார்கள். அதன் மக்கள்தொகை 75 மில்லியன்; எண்ணெய் உற்பத்தி, அந்நிய வர்த்தகம், மூலதன முதலீட்டின் அளவு ஆகியவற்றில் நைஜீரியா ஆப்பிரிக்காவில் முதலிடத்தை வகிக்கிறது. எண்ணெய் விலை ஏற்றத்தின் விளைவாக நைஜீரியாவின் பொருளாதார சாதனைகளைப் பற்றி மற்ற ஆப்பிரிக்க நாடுகள் பொறாமைப்பட்டன. ஆனால் நைஜீரியாவின் பொருளாதாரத்தின் பலவீனமான அம்சம் சீக்கிரத்திலேயே வெளியே தெரிந்தது. ''நைஜீரியாவின் தொழிற்சாலைகளில் சுமார் 80 சதவிகிதம் நுகர்வுப் பொருட்களைத்தான் உற்பத்தி செய்கின்றன. குளிர்பானங்கள் முதலிடத்தை வகிக்கின்றன, துணிகள், பெட்ரோலியப் பொருட்கள், உணவுத் தயாரிப்புகள் அடுத்து வருகின்றன. கார், சைக்கிள், மின்சாரப் பொருட்கள் தயாரிப்பில் மிகவும் அதிகமாக முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இவை இறக்குமதி செய்யப்படுகின்ற உறுப்புகளை நம்பியிருக்கின்றன. சில உதாரணங்களில் இறக்குமதி உறுப்புகள் 90 சதவிகிதத்துக்கும் அதிகமாக இருக்கின்றன'' என்று ஒரு அமெரிக்கப் பத்திரிகையாளர் எழுதுகிறார்.* 1983இல் நைஜீரியாவின் வரவுசெலவுத் திட்டத்தின் பற்றாக்குறை 8.2 பில்லியன் டாலராக இருந்தது, நைஜீரியாவின் அந்நியக் கடன் 14 பில்லியன் டாலராக இருந்தது.

நைஜீரியாவின் ''ஜனநாயக அமைப்பு'' மிகவும் சிறப்பானது என்று வானளாவப் புகழப்பட்டது; மற்ற ஆப்பிரிக்க நாடுகள் அதைப் பின்பற்ற வேண்டும் என்று சொல்லப்

---

* *The International Herald Tribune*, December 17 — 18, 1983, p. 13.

பட்டது. அதன் உண்மை என்ன? நைஜீரியாவின் மிகப் பெரும்பான்மையினர் ஒரு சிலரால் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அந்தச் சிலர் தம்முடைய அதிகாரத்தை நிரந்தரமாக்கிக் கொள்வதையும் நாட்டின் செல்வத்தைத் தமக்கிடையில் பிரித்துக் கொள்வதையுமே ஒரே நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். சாதாரண மக்கள் மேன் மேலும் அதிகமாக வறுமையில் வாடுகிறார்கள்.

சோஷலிசத் திசையமைவு நாடுகள். முன்னர் பின்தங்கியிருந்த நாடுகள் குறிப்பிட்ட வரலாற்று நிலைமைகளின் கீழ் முதலாளித்துவக் கட்டத்திற்குள் போகாமலேயே சோஷலிசத்துக்குப் போக முடியும் என்று மார்க்சிய-லெனினியத் தத்துவம் தொலைநோக்குடன் கூறியது. வி. இ. லெனின் புதிய வரலாற்றுச் சூழ்நிலையில் அத்தகைய பாதையைப் பின்பற்றுவதைச் சாத்தியமாக்குகின்ற அடிப்படையான நிலைமைகளை விரிவாக ஆராய்ந்து விளக்கினார். பொருளாதார ரீதியில் பலவீனமான நாடுகளுக்கு உதவியும் ஆதரவும் கொடுத்து அவை புதிய சமூகத்தை நிர்மாணிப்பதற்கு முன்னுதாரணமாக உள்ள சோஷலிச அரசுகள் இன்று இருக்கின்றன.

இன்று முதலாளித்துவம் அல்லாத பாதையைப் பற்றிய மார்க்சிய-லெனினியக் கருத்துகள் உலகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைப்பதற்குச் செயல்படுத்தப்படுகின்றன. கடந்த இருபது ஆண்டுகளில் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் ஏராளமான சோஷலிசத் திசையமைவு நாடுகள் தோன்றியிருக்கின்றன. இவற்றின் மொத்த மக்கள் தொகை 130 மில்லியன் ஆகும். இந்த இளம் அரசுகளில் பெரும்பான்மை ஆப்பிரிக்காவில் இருக்கின்றது. அக்கண்டத்தின் பரப்பில் 26 சதவிகிதத்தையும் மக்கள் தொகையில் சுமார்

22 சதவிகிதத்தையும் கொண்டிருக்கின்றன.

சோஷலிசத் திசையமைவின் சாராம்சம் என்ன?

சோஷலிசத் திசையமைவு என்பது சோஷலிசத்தின் அடிப்படைகளை நிர்மாணிக்கத் தொடங்குவதற்கு முன்பு புரட்சிகர ஜனநாயகக் கட்சிகளின் வழிகாட்டுதலின் கீழ் இன்றியமையாத சமூக-அரசியல், பொருளாயத-தொழில் நுட்ப மற்றும் கலாசார நிலைமைகளைப் படைக்கின்ற நீண்ட, குறிவழிப்பட்ட நிகழ்வுப் போக்கு ஆகும். தொழிலாளர்கள், விவசாயிகள், முற்போக்கான அறிவுஜீவிகள், மாணவர்கள், அலுவலக எழுத்தர்கள், ராணுவத்தில் ஒரு பகுதியினர், தேசியக் குட்டி முதலாளி வர்க்கம், நகரங்களிலுள்ள அரைப் பாட்டாளி வர்க்கம் ஆகியோரடங்கிய வர்க்கங்கள் மற்றும் சமூகப் பிரிவுகளின் பரந்த கூட்டணி இந்த நிகழ்வுப் போக்கின் இயக்கு சக்தியாக இருக்கிறது.

புரட்சிகர ஜனநாயகத்தின் சித்தாந்த மற்றும் அரசியல் செயல்திட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, பரந்த ஜனநாயகக் கோட்பாடுகள் மற்றும் விஞ்ஞான சோஷலிசத்தின் சில கூறுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஒரு மக்கள் ஜனநாயகப் புரட்சியில் இச்செயல்திட்டம் படிப்படியாக அமுலாக்கப்படுகின்ற பொழுது புரட்சிகர ஜனநாயகம் மார்க்சிய-லெனினியத் தத்துவத்தை நெருங்கி வருகிறது.

ஸ்தல அளவில் சில கூறுகள் இருந்த போதிலும் சோஷலிசத் திசையமைவுப் பாதையைப் பின்பற்றுகின்ற வளர்முக நாடுகள் எல்லாமே பின்வரும் பொதுவான கொள்கைகளைப் பின்பற்றுகின்றன: ஏகாதிபத்தியப் பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள், உள்நாட்டுப் பெருமுதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்களின் பலத்தைப் படிப்படியாக அகற்றுதல்; மக்கள் அரசு பொருளாதாரத்தில் கேந்திரமான நிலைகளை வகிப்பதை உறுதிப்படுத்திக் கொண்டு உற்பத்திச்

சக்திகளின் திட்டமிட்ட வளர்ச்சியைப் படிப்படியாக அழுலாக்குதல்; நாட்டுப் புறத்தில் கூட்டுறவு இயக்கத்தை ஊக்குவித்தல்; நாட்டின் சமூக வாழ்க்கையில் உழைக்கும் மக்களின் பாத்திரத்தை அதிகப்படுத்துதல்; மக்களுக்கு விசுவாசமான ஊழியர்களைக் கொண்டு அரசுப் பொறியமைவைப் பலப்படுத்துதல் மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றுதல்.

பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களுக்கும் ஏகாதிபத்திய அரசுகளுக்கும் சொந்தமான நிறுவனங்களை நாட்டுடைமையாக்குதல் மற்றொரு முக்கியமான கூறு எனலாம். இது மிகவும் நியாயமானதே. ஏனென்றால் இந்த நிறுவனங்களின் உடைமை உண்மையில் காலனி நாடுகளின் உழைக்கும் மக்கள் படைத்த உபரி மதிப்பின் பொருண்மையான வடிவமே. நாட்டுடைமையாக்கல் உதாரணமாக, அல்ஜீரியா, சிரியா, எத்தியோப்பியா மற்றும் பல நாடுகளில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அல்ஜீரியாவில் அரசுத் தொழில் நிறுவனங்கள் நாட்டின் தொழில் துறைப் பொருட்களில் 90 சதவிகிதத்தை உற்பத்தி செய்கின்றன. எத்தியோப்பியாவில் தனியார் தொழில்களில் பெரியவை அனைத்தும் நடுத்தரமானவற்றில் பெரும்பான்மையும் நாட்டுடைமை ஆக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விதம் நாட்டுடைமை ஆக்கப்பட்ட நிறுவனங்கள் அரசுடைமை ஆகின்றன. சுரங்கத் தொழில்கள் பதனப்படுத்தும் (processing) தொழில்கள், அரசினால் துவக்கப்பட்ட புதிய நிறுவனங்கள், வங்கிகள், அந்நிய வர்த்தக ஸ்தாபனங்கள், இதரவை அரசுத் துறையில் அடங்கும். சோஷலிசத் திசையமைவு நாடுகளில் தேசிய வருமானத்தில் அரசு நிறுவனங்களின் பங்கு 30 முதல் 50 சதவிகிதமாக இருக்கிறது; மேலும் உற்பத்தியில், மூலதன முதலீட்டில், வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதில், முற்போக்கான தொழில் துறை

களை வளர்ப்பதில் அரசுத் துறை மேன்மேலும் அதிகமான பாத்திரத்தை வகிக்கின்றது.

பெரும்பான்மையான சோஷலிசத் திசையமைவு நாடுகளில் அரசுத் துறை ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், தனியார் நிறுவனங்களின் அராஜகம் ஆகியவற்றுக்கு எதிரான சக்தியாக இருக்கிறது. அது பொருளாயத, நிதி மற்றும் மனித வளங்களை தேசிய நலன்களுக்காகத் திரட்டுவதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவதால், பொருளாதார வளர்ச்சியின் வேகத்தையும் மட்டத்தையும் உயர்த்துவதால் முற்போக்கான பாத்திரத்தை வகிக்கிறது.

இந்த நிகழ்வுப் போக்கின் முக்கியமான திசை வழிகளில் ஒன்று வளர்முக நாடுகளைத் தொழில்மயமாக்குதல் எனலாம். பொருளாதாரத்தில் தொழில்துறையின் பாத்திரத்தை அதிகப்படுத்துதல், புதிய நிறுவனங்களை அமைத்தல் மற்றும் பழைய நிறுவனங்களை நவீனப்படுத்துதல், விவசாயம் உள்பட பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் நவீனத் தொழில்நுட்பத்தை உபயோகித்தல் அதன் நோக்கமாகும். உதாரணமாக, காங்கோ மக்கள் குடியரசில் கடந்த பத்தாண்டுகளில் தொழில்துறை உற்பத்தியின் வருடாந்தர வளர்ச்சி விகிதம் 12 முதல் 17 சதவிகிதமாக இருந்தது. ஆனால் பெரியவையோ, சிறியவையோ எல்லா நாடுகளும் ஒருங்கிணைந்த தொழில்துறை இணையத்தை அமைக்க வேண்டும் என்பது இதன் அர்த்தமல்ல. ஒரு குறிப்பிட்ட நாட்டில் அதிகமான லாபம் தரக்கூடிய தொழில்துறைகளின் வளர்ச்சிக்கு முதலிடம் கொடுப்பது உசிதமாக இருக்க முடியும்.

சோஷலிசத் திசையமைவு நாடுகளில் கிராம மக்களின் அதிகப் பெரும்பான்மையினருடைய நலன்களுக்காக நிலச் சீர்திருத்தங்களை அமுலாக்குவது பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமாக இருக்கிறது. நிலவுடைமையின் பழைய

வடிவங்களையும் அவற்றுடன் பொருந்திய விவசாய முறை களையும் ஒழித்தல், நிலத்தை விவசாயிகளுக்குக் கொடுத் தல், விவசாயத்தை இயந்திரமயமாக்கல், கூட்டுறவுகள் மற்றும் அரசுக்குச் சொந்தமான பெரிய நிலப் பண்ணை களை அமைத்தல் ஆகியவை இதில் அடங்கும்.

எத்தியோப்பியாவில் சுமார் 25,000 விவசாயிகள் சங்கங் கள் அமைக்கப்பட்டிருக்கின்றன; இவற்றில் 5 மில்லியனுக் கும் அதிகமான உறுப்பினர்கள் இருக்கிறார்கள். புரட்சிக்கு முன்னர் நிலப்பிரபுக்களுக்கும் நிலக்கிழார்களுக்கும் சொந்த மாக இருந்த நிலங்கள் இப்பொழுது விவசாயிகளுக்குத் தரப்பட்டிருக்கின்றன. விவசாய உற்பத்திக் கூட்டுறவுகள் அமைக்கப்பட்டு வருகின்றன, அவற்றில் நிலமும் விவசாயக் கருவிகளும் பொதுவாக இருக்கின்றன. அங்கே விவசாயத் தில் கூலியுழைப்பு தடை செய்யப்பட்டிருக்கிறது.

எல்லா சோஷலிசத் திசையமைவு நாடுகளின் வளர்ச்சிக் கும் பொதுவான கூறுகளை மார்க்சிய-லெனினியம் விவரிக் கிறது. அவை பின்வருமாறு:

— புரட்சிகர ஜனநாயக அரசாங்கம் அதிகாரத்தைப் பெறுதல், இப்புரட்சிகர ஜனநாயகம் விஞ்ஞான சோஷலிசக் கோட்பாடுகளைப் படிப்படியாக ஏற்றுக்கொள்ளுதல்;

— புரட்சிகர ஜனநாயக அரசை நிறுவுதல், உழைக்கின்ற பெருந்திரளான மக்கள் அதில் மேன்மேலும் அதிகமான பங்கு பெறுதல்;

— உழைக்கும் மக்களைக் கொண்ட பல்வேறு ஸ்தாபனங் களை அமைத்தல், நாட்டின் சமூக-பொருளாதார வாழ்க் கையில் அவற்றின் பாத்திரம் மேன்மேலும் அதிகரித்தல்;

— விவசாயத் தொழிலாளர்களுடைய நலன்களுக்காக விரிவான நிலச் சீர்திருத்தங்கள், நிலச் சீர்திருத்தங்களில் அவர்கள் நேரடியாகப் பங்கெடுத்தல், கூட்டுறவுகளைக் கொண்ட அமைப்பை நிறுவுதல்;

— அந்நிய முதலாளிகள் மற்றும் ஸ்தல முதலாளிகளுக்குச் சொந்தமான பெரிய, நடுத்தர அளவுடைய நிறுவனங்களை நாட்டுடைமையாக்குதல், வலிமையான அரசுத் துறையை நிறுவுதல்;

— சோஷலிசத்தின் அடிப்படைகளை அமைப்பதற்கும் மக்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதற்கும் அவசிய மான பொருளாயத மற்றும் தொழில்நுட்ப அடிப்படையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு பொருளாதாரத் தை ஒழுங்குமுறையாக வளர்த்துச் செல்லல்;

— எழுத்தறிவின்மையை ஒழித்தல், புதிய அறிவுத் துறை யினரை உருவாக்குதல், சோஷலிசத் திசையமைவுக் கடமை களை நிறைவேற்றக் கூடிய முறையில் உழைக்கும் மக்களைப் பயிற்றுவித்தல், விஞ்ஞான சித்தாந்தத்தைப் பரப்புதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட கலாசாரப் புரட்சியை நிறைவேற்றுதல்;

— ஏகாதிபத்திய எதிர்ப்பு வெளிநாட்டுக் கொள்கை, சோஷலிச நாடுகளுடன் நட்புறவும் நெருக்கமான ஒத்து ழைப்பும்.

சோஷலிசத் திசையமைவு என்பது நீண்ட, சிக்கலான நிகழ்வுப் போக்கு ஆகும். அதை சோஷலிசத்தை நேரடியாக நிர்மாணித்து விட்டதுடன் சேர்த்துக் குழப்பக் கூடாது. ஏனென்றால் சோஷலிசம் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசில் மார்க்சிய-லெனினிய ரகத்தைச் சேர்ந்த கட்சியின் தலைமையின் கீழ், அவசியமான பொருளாயத மற்றும் தொழில்நுட்ப நிபந்தனைகள் இருக்கின்ற பொழுது மட்டுமே நிர்மாணிக்கப்பட முடியும்.

சோஷலிசத் திசையமைவு தன்னியல்பான இயக்கம் அல்ல; அது உணர்வு பூர்வமாக இயக்கப்படுகின்ற நிகழ்வுப் போக்கு. அது தனக்குரிய சில வளர்ச்சிக் கட்டங்களைக் கொண்டிருக்கிறது. சில நாடுகள் மிகவும் சமீப காலத்தில்

தான் சோஷலிசத் திசையமைவுப் பாதையைத் தேர்ந் தெடுத்திருக்கின்றன; வேறு சில நாடுகள் சோஷலிசத் திசை யமைவுப் பின்புலத்தில் ஏற்கெனவே பல ஆண்டுகளாக முற்போக்கான மாற்றங்களை நிறைவேற்றிக் கொண்டிருக் கின்றன; வேறு சில நாடுகள் அத்தகைய வளர்ச்சியின் இரண்டாவது பத்தாண்டுகளில் இப்பொழுது இருக்கின்றன.

சோவியத் யூனியன் மற்றும் இதர சோஷலிச அரசுகளின் வளமான அனுபவம் சோஷலிசத் திசையமைவைப் பின் பற்றுகின்ற இளம் நாடுகளின் வளர்ச்சியின் மீது பேரளவான புரட்சிகரத் தாக்கத்தைக் கொண்டிருக்கிறது. வளர்முக நாடுகள் பொருளாதார சுதந்திரத்துக்கு நடத்துகின்ற போராட்டத்தில் சோஷலிசமே ஒரே வழியாக இருக்கிறது.

புதிதாக சுதந்திரமடைந்த அரசுகளுக்கும் சோஷலிச நாடு களுக்கும் இடையில் ஒத்துழைப்பு. சோஷலிச நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் இடையிலுள்ள பொருளாதார உறவுகள் புதிய ரகமாக இருக்கின்றன. அவை சமத்து வத்தை, யுகப் பழமையான பின்தங்கிய நிலையை அகற்று வதற்கு சாதகமான உதவி மற்றும் பரஸ்பரம் அனுகூலமான ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

சோஷலிச நாடுகளுக்கும் சோஷலிசத் திசையமைவு அரசுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பில் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உதவி, நிதி உதவி, நிபுணர்களைப் பயிற்றுவித்தல், இதரவை அடங்கும். தற்பொழுது சோவியத் யூனியனும் சி.எம்.இ.ஏ. ஸ்தாபனத்தைச் சேர்ந்த சோஷலிச அரசுகளும் 90 வளர்முக நாடுகளுடன் பொருளாதார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பைக் கொண் டிருக்கின்றன. அத்தகைய உதவியைக் கொண்டு 4,500 விவசாய மற்றும் தொழில்துறை நிறுவனங்கள் நிர்

மாணிக்கப்பட்டிருக்கின்றன அல்லது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. ஒரு மில்லியனுக்கும் அதிகமான தொழில்நுட்ப நிபுணர்களுக்கு இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது.

சோஷலிச மற்றும் வளர்முக நாடுகளுக்கு இடையில் சமத்துவ ரீதியான, பரஸ்பரம் அனுகூலமான வர்த்தகம் ஒத்துழைப்பின் மற்றொரு முக்கியமான வடிவமாகும். அது அரசுகளுக்கிடையிலான நீண்டகால ஒப்பந்தங்களின் அடிப் படையில் நடைபெறுகிறது. சோவியத் யூனியன் வளர்முக நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்கள் மீது எல்லா சுங்கவரிகளையும் ரத்துச் செய்திருந்தது. அது ஏற்றுமதி செய்கின்ற இயந்திரங்கள், தளவாடங்களில் 90 சதவிகிதம் வளர்முக நாடுகளுக்குச் செல்கிறது. ஏற்றுமதி செய்யப்படுகின்ற இயந்திரங்கள் மிகவும் உயர்தரமானவை என்பதுடன் பருவநிலைமைகளுக்குத் தகுந்தபடி மாற்றி யமைத்துக் கொள்ளக் கூடியவையாகவும் இருக்கின்றன.

சோஷலிச நாடுகள் வளர்முக நாடுகளுக்கு நீண்டகால (10 முதல் 12 ஆண்டுகள்) கடன்களையும் கடன்வசதிகளை யும் கொடுக்கின்றன. இக்கடனுக்கு 2—2.5 சதவிகித வட்டி விதிக்கப்படுகிறது. சோஷலிச நாடுகளின் பொருளாதார உதவிக்கு அரசியல் அல்லது வேறு நோக்கங்கள் கிடையாது. அது முற்றிலும் பொருளாதார நோக்கம் உடையதே. இந்த உதவியில் சுமார் 2 3 பங்கு வளர்முக நாடுகளில் தேசியத் தொழில்துறையை அமைப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இவ்விதத்தில் முன்னர் காலனிகளாக இருந்த நாடுகள் சோஷலிச நாடுகளின் உதவியின் மூலம் தங்களுடைய சொந்தப் பொருளாதாரங்களை சுதந்திரமான முறையில் வளர்க்கின்றன; இந்த உதவிகள் குறித்த நிபந்தனைகள் கடன் பெற்ற நாடுகளின் தேசிய கௌரவத்தைச் சிறிதும் பாதிப்பதில்லை. சோஷலிச நாடுகள் தம்முடைய உதவியைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட நிறுவனங்களை நிர்வாகம்

செய்வதில் பங்கெடுப்பதில்லை, அவற்றின் லாபத்தில் பங்கு கேட்பதுமில்லை. ஆனால் அவை பொருளாதார நிர்மாணத்தில் தம்முடைய அனுபவத்தை இலவசமாகப் பகிர்ந்து கொள்வதற்குத் தயாராக இருக்கின்றன. சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச அரசுகளும் சுலபமான நிபந்தனைகளின் பேரில் மொத்த தொழில்துறை இணையங்களைக் கட்டித் தருகின்றன; அதன் மூலம் புதிதாக விடுதலையடைந்த நாடுகள் பொருளாதார சுதந்திரத்தை அடைவதற்கு உதவி செய்கின்றன.

''இவர்கள்'' (இந்நாடுகளின் மக்கள்) நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, உணர்வு பூர்வமாகவோ அல்லது உணர்வில்லாமலோ ''நம்மிடம் உதவி கேட்டு வருகிறார்கள்; ஆனால் அவர்கள் சர்வதேச ஏகாதிபத்தியத்துக்கு எதிராக சோவியத் ருஷ்யாவுடன் கூட்டணி அமைப்பதன் பொருளாதார அவசியத்தை மேன்மேலும் உணர்ந்து வருகிறார்கள்'' * என்பது லெனினுடைய ஆய்வுரையாகும். ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த புதிதாக விடுதலையடைந்த அரசுகளுக்குப் பொருளாதார உறவுகளை விஸ்தரிப்பதிலும் அதைத் தீவிரப்படுத்துவதிலும் சோவியத் யூனியனும் சி.எம்.இ.ஏ. ஸ்தாபனத்தைச் சேர்ந்த இதர நாடுகளும் லெனினுடைய மேற்கூறிய ஆய்வுரையை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றுகின்றன.

சோவியத் யூனியனும் இதர சோஷலிச நாடுகளும் சுதந்திரம் மற்றும் தேசிய விடுதலைக்குப் போராடுகின்ற நாடுகள் மற்றும் மக்களினங்களைப் பொறுத்தமட்டில் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கைகளை உறுதியாக எதிர்க்கின்றன. சர்வதேச அரங்கில் சக்திகளின் புதிய அணிச்சேர்க்கை ஏற்பட்டிருக்கின்ற சூழலில் ஏகாதிபத்தியம்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 31, p. 477.

சில சந்தர்ப்பங்களில் ஆசிய மற்றும் ஆப்பிரிக்க மக்களினங்களின் விவகாரங்களில் பகிரங்கமாகத் தலையிடுவதற்குத் துணியவில்லை. சோஷலிசக் குடும்பத்தின் வலிமையான நிலைகள் தேசிய விடுதலை இயக்கத்தின் எழுச்சிக்கு உதவி செய்திருப்பது மட்டுமன்றி, பல காலனி நாடுகள் வேதனை அதிகமில்லாத, சமாதான முறைகளின் மூலம் சுதந்திரம் அடைவதை சாத்தியமாக்கி இருக்கின்றன.

சர்வதேசியக் கோட்பாட்டினால் வழிகாட்டப்படுகின்ற சோவியத் யூனியனும் இதர சோஷலிச அரசுகளும் வளர்முக நாடுகளுக்குப் பொருளாதார, தொழில்நுட்ப உதவியைக் கொடுப்பது மட்டுமன்றி, சில நாடுகள் தம்முடைய தற் காப்புச் சக்தியை வலுப்படுத்திக் கொள்வதற்கும் உதவி செய்கின்றன. சோஷலிச நாடுகளுக்கும் தேசிய விடுதலை இயக்கத்துக்கும் இடையிலான கூட்டணி ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, விடுதலை, தேசிய சுதந்திரம் மற்றும் சமூக முன்னேற்றத்துக்கு ஆதரவாக நடைபெறுகின்ற போராட்டத்தின் வெற்றிக்கு இன்றியமையாத நிபந்தனை ஆகும்.

மார்க்சிய-லெனினியமும்
யுத்தம் மற்றும் சமாதானப் பிரச்சினைகளும்

சமாதான சகவாழ்க்கைச் செயல்திட்டம். மார்க்சிய-லெனினியத்தின் வலிமை அது புதிய, கம்யூனிச சமூகத்தை எப்படி நிர்மாணிப்பது என்று உழைக்கும் மக்களுக்குக் கற்றுத் தருகிறது என்பதில் மட்டும் அடங்கியிருக்கவில்லை. மனித குலத்தை அணு யுத்தப் பேரழிவிலிருந்து காப்பாற்றுவதற்குரிய போராட்டத்தில் அது சக்தி மிக்க ஆயுதமாக, எல்லா நாடுகளுக்கும் சமாதானத்தையும் சுதந்திரத்தையும்

உறுதிப்படுத்தக் கூடிய சக்திகளைத் திரட்டக் கூடிய ஆயுத மாக இருக்கிறது.

யுத்தத்தின் சமூகக் காரணங்கள் மனிதனை மனிதன் சுரண்டுகின்ற வர்க்க சமூகத்தின் முரணியல்பில் உள்ளுறை யாக இருக்கின்றன என்பதை மார்க்ஸ் முன்பே நிரூபித் திருந்தார். முதலாளித்துவ சமூக அமைப்பில் முதலாளி வர்க்கத்தின் லாப வேட்டை யுத்தத்தின் அடிப்படைக் காரணமாக இருக்கிறது. முதலாளி வர்க்கம் லாபமடை வதற்காக ''தேசியத் தப்பெண்ணங்களைத்'' தூண்டி விடு கிறது, ''மக்களுடைய இரத்தத்தையும் செல்வத்தையும் கொள்ளைக்காரத்தனமான யுத்தங்களில் விரயமாக்கு கின்றது''. *

பொருளாதார வறுமை மற்றும் அரசியல் பைத்தியக் காரத்தனத்தை சாராம்சமாகக் கொண்ட பழைய சுரண்டல் அமைப்புக்குப் பதிலாகப் புதிய சமூக அமைப்பு தவிர்க்க முடியாதபடி ஏற்படும்; அந்தப் புதிய சமூக அமைப்பில் சமாதானம் சர்வதேசக் கோட்பாடாக இருக்கும், ஏனென் றால் எல்லா நாடுகளையும் உழைப்பு ஆட்சி செய்யும் என்பதை மார்க்சிய-லெனினியம் நிரூபித்திருந்தது. எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களின் கூட்டணி ''சகல யுத்தங்களையும் ஒழிக்கும்,'' மனித ஒழுக்கம் மற்றும் நீதி சம்பந்தமான எளிமையான விதிகள் சர்வதேச உறவு களில் பின்பற்றப்படுகின்ற மிகவும் சிறந்த கோட்பாடு களாக இருக்கும். ''அத்தகைய வெளிநாட்டுக் கொள்கைக் காகப் போராடுவது தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக் கான பொதுப் போராட்டத்தின் பகுதியாக இருக்கிறது'' என்று கார்ல் மார்க்ஸ் சுட்டிக்காட்டினார். **

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 5, பக்கம் 23 பார்க்க.

** அதே நூல், பக்கம் 24 பார்க்க.

சோவியத் அரசாங்கம் தன்னுடைய முதல் சட்டமாக **சமாதானத்தைப் பற்றிய அரசாணையை** நிறைவேற்றியது மிகவும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது; அந்த அரசாணையை லெனின் எழுதினார். 1917 அக்டோபர் 26இல் (நவம்பர் 8இல்) நடைபெற்ற சோவியத்துகளின் இரண்டாவது காங்கிரசில் அது நிறைவேற்றப்பட்டது. அந்த மறக்க முடியாத தருணத்தை ஒரு பிரதிநிதி பின்வருமாறு வர்ணிக்கிறார்:

''துன்பத்தில் நலிந்து போன மக்களுடைய இதயங்கள் சமாதானத்துக்காகத் துடித்தன... 'சமாதானம் ஏற்படுமா, இல்லையா உன்னுடைய கருத்து என்ன?' என்று பிரதிநிதிகள் ஒருவரையொருவர் கேட்டுக் கொண்டார்கள்.

''கடைசியில் லெனின் எழுந்து பேசத் தொடங்கினார். அவருடைய உணர்ச்சிகரமான முதல் சொற்களே எல்லோரையும் பரவசப்படுத்தின: 'சமாதானத்தைப் பற்றிய பிரச்சினை இன்று சூடேறியிருக்கின்ற, மிகவும் வேதனையான பிரச்சினை ஆகும்... அதைப் பற்றி அதிகமாகப் பேசப்பட்டிருக்கிறது, எழுதப்பட்டிருக்கிறது, அதைப் பற்றி எல்லோரும் அதிகமாக விவாதித்திருப்பீர்கள் என்பதில் சந்தேகமில்லை...'

'' 'தோழர் லெனின்! நீங்கள் கூறியது சரி. சமாதானத்தைப் பற்றியே நாங்கள் சிந்திக்கிறோம், பேசுகிறோம்' என்று கூட்டத்திலிருந்து ஒருவர் உரத்த குரலில் கூறினார்.

''அதற்கு மறுமொழியாக லெனின் தொடர்ந்தார்: 'ஆகவே இந்தப் பிரகடனத்தைப் படிப்பதற்கு அனுமதியுங்கள்...'

''அவர் **சமாதானத்தைப் பற்றிய அரசாணையைப்** படித்த பொழுது மக்கள் மூச்சு விடுவதை நிறுத்தி விட்டதைப் போல நிசப்தம் நிலவியது. அவர் படித்து முடித்தவுடன் அந்த அரங்கம் முழுவதுமே பெரு மூச்சு விட்டது. கண

நேரத்துக்குப் பிறகு இடியோசை போன்ற கரவொலி கேட்டது, ஆனந்தமான ஆரவாரம் முழங்கியது...''

யுத்தம் ''மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களில் மிகவும் மோசமானது'' என்று அரசாணை அறிவித்தது; எல்லா நாடுகளுக்கும் நியாயமான முறையில், பிரதேசங்களைப் பிடிப்பதில்லை, நட்ட ஈடு கொடுப்பதில்லை என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் உடனடியாக சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கு முடிவு செய்திருப்பதை அறிவித்தது. ருஷ்ய மக்கள் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு முதல் நடவடிக்கையாக சமாதானப் போராட்டத்தைத் தொடங்கினார்கள்; அதன் மூலம் மனிதகுலத்துக்கு மகத்தான ஆதர்சமாக விளங்கினார்கள்.

அதே சமயத்தில் புதிய ருஷ்ய அரசு எவ்விதமான ஆக்கிரமிப்பையும் நாடுபிடிக்கின்ற யுத்தங்களையும் தீவிரமாக எதிர்க்கும், நாடுகள் மத்தியில் சமாதானத்தையும் நட்புறவையும் ஊக்குவிக்கும் என்று உலகத்தின் முதல் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் அரசாங்கம் உலக முழுவதிற்கும் அறிவித்தது.

வெவ்வேறு (சோஷலிச மற்றும் முதலாளித்துவ) சமூக அமைப்புகளைக் கொண்ட அரசுகள் சமாதான சகவாழ்க்கைக் கோட்பாடுகளின் அடிப்படையில் சமாதான ரீதியான வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படைகளை லெனின் வகுத்தளித்தார். சமாதான சகவாழ்க்கை என்பது அரசுகளுக்கு இடையில் தகராறுகளைத் தீர்த்துக் கொள்வதற்கு யுத்தங்களை ஒரு சாதனமாக உபயோகிக்காதிருத்தல், அவற்றைப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக் கொள்ளுதல்; அரசுகளுக்கு இடையில் சமத்துவம், பரஸ்பரப் புரிவு, நம்பிக்கை மற்றும் ஒவ்வொருவருடைய நலன்களைப் பற்றியும் அக்கறை கொள்ளுதல்; ஒரு நாடு மற்றொரு நாட்டின்

உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல் மற்றும் ஒரு நாடு தன்னுடைய பிரச்சினைகளை சுதந்திரமாகத் தீர்த்துக் கொள்கின்ற உரிமையை அங்கீகரித்தல்; எல்லா நாடுகளின் அரசுரிமை மற்றும் பிரதேச ஒருமைப்பாட்டைக் கண்டிப்பாக மதித்தல்; முழுமையான சமத்துவம் மற்றும் பரஸ்பர நன்மை என்ற அடிப்படையில் பொருளாதார மற்றும் கலாசார ஒத்துழைப்பை வளர்த்தல் என்று பொருளாகும்.

சமாதான சகவாழ்க்கைக்கும் சமாதான முறையான சோஷலிச நிர்மாணத்திற்கும் இடையிலுள்ள அங்கக ரீதியான தொடர்பை லெனினியம் எடுத்துக்காட்டுகிறது. சமாதான காலத்தில் பழைய ஆட்சிமுறையிலிருந்து பெறப்பட்ட பின்தங்கிய நிலைமையை ஒழிப்பதும் பொருளாதார மற்றும் கலாசார வளர்ச்சியில் உயர்ந்த மட்டத்தை அடைவதும் சோஷலிச அமைப்பின் சாதகங்களை அனுபவிப்பதும் ஆயிரம் மடங்கு சுலபமாக இருக்கும். சமாதான சகவாழ்க்கையைச் சாத்தியமாக்குகின்ற காரணிகளை லெனினியம் சுட்டிக்காட்டுகிறது. அவற்றில் முக்கியமானவை பின்வருமாறு:

— சோஷலிச அமைப்பின் இயல்பு, அங்கே யுத்தத்தின் மூலம் லாபமடைகின்ற வர்க்கங்களோ, சமூகப் பிரிவுகளோ இல்லை;

— சோஷலிசத்தின் பொருளாதார, அரசியல் மற்றும் ராணுவ பலம் மேன்மேலும் வளர்ச்சியடைதல், அது ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்துகிறது;

— சோஷலிசத்தின் சமாதானக் கொள்கைகளுக்கும் உலக நாடுகளின் நலன்களுக்கும் உள்ள முற்றொருமை;

— முதலாளித்துவ நாடுகள், காலனி நாடுகள் மற்றும் சார்புநிலை நாடுகளில் உழைக்கும் மக்களின் அரசியல் நடவடிக்கையும் உணர்வும் மேன்மேலும் அதிகரித்தல், உலக

சமாதானத்தையும் நாடுகளுக்கு மத்தியில் நட்புறவையும் ஆதரிப்பதில் அவற்றின் உறுதி அதிகரித்தல்;

— ஏகாதிபத்திய அரசுகளுக்கு இடையிலான, ஏகபோகங்களுக்கு இடையிலான முரணியல்புகள், அவை சோஷலிசத்துக்கு எதிராக யுத்தத்தை ஆரம்பிக்கின்ற முயற்சிகளைத் தடை செய்தல்;

— சோஷலிச நாடுகளுடன் பொருளாதார உறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று சில முதலாளித்துவ வட்டாரங்கள் காட்டுகின்ற அக்கறை.

சமாதான சகவாழ்க்கை என்றால் ஏகாதிபத்தியவாதிகளை ''தாஜா'' செய்வது என்றோ, அவர்களிடம் ''நல்லவை'' செய்யும்படி வேண்டுகோள் விடுப்பது என்றோ அர்த்தமல்ல. சமாதான சகவாழ்க்கைக் கொள்கைக்கும் ஏகாதிபத்தியவாதிகளைத் ''தாஜா'' செய்கின்ற கொள்கைக்கும் சம்பந்தமில்லை; அவர்களைத் ''திருப்தி'' செய்கின்ற கொள்கையுடன் சிறிது கூடச் சம்பந்தமில்லை. ஏகாதிபத்திய அரசுகளிடம் சமாதானத்துக்காகப் பிச்சை எடுப்பதல்ல, சமாதானத்துக்காகப் பாடுபடுகின்ற எல்லா சக்திகளின் தீவிரமான கூட்டு முய்ற்சிகளின் மூலம் ஏகாதிபத்தியவாதிகளின் மீது சமாதானத்தை விதிப்பது — இதுதான் லெனினுடைய சமாதான சகவாழ்க்கைக் கொள்கையின் சாராம்சம் ஆகும்.

சமாதான சகவாழ்க்கைக் கொள்கை அரசுகளுக்கு இடையிலான உறவுகள் மட்டுமே சம்பந்தப்பட்டதாகும். ஒரு பக்கத்தில் முதலாளித்துவ நாடுகளுடனான உறவுகளில் இக்கோட்பாட்டை நிறுவுவதை நோக்கமாகக் கொண்ட சோஷலிசக் குடும்பத்தின் வெளிநாட்டுக் கொள்கைக்கும் மறு பக்கத்தில் சுதந்திரத்துக்கும் முன்னேற்றத்துக்கும் நாடுகளின் போராட்டத்தில் சோஷலிசக் குடும்பத்தின் ஒருமைப்பாட்டுக்கும் இடையில் எவ்விதமான முரண்பாடும் இல்லை.

சமாதான சகவாழ்க்கை சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையிலான சித்தாந்தப் போராட்டத்தைக் கைவிடுவதைக் குறிக்கவில்லை.

வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட அரசுகளுக்கு இடையில் சமாதான சகவாழ்க்கை என்னும் லெனினியக் கோட்பாடு ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புச் சக்திகளை முடக்குகிறது, எதிர்ப்புரட்சியை ஏற்றுமதி செய்வதைத் தடுக்கிறது, விடுதலை இயக்கங்களை நசுக்குவதற்கு உலகத்தின் பிற்போக்கு சக்திகளின் முயற்சிகளைத் தடை செய்கிறது.

சமாதான சகவாழ்க்கை உலக வளர்ச்சியின் புறநிலையான அவசியம், நவீன சர்வதேச உறவுகள் என்னும் மொத்த அமைப்பின் நிலையான தன்மையின் அடிப்படை ஆகும். சமாதான சகவாழ்க்கைக்குப் பதிலாக வேறு வழியைப் பின்பற்ற முடியாது. எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வேறு தீர்வு கிடையாது. வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட அரசுகளின் சமாதான சக வாழ்க்கை யுத்தம் ஏற்படாது என்பதை மட்டும் குறிக்க வில்லை. அந்த சர்வதேச நிலைமையில் இராணுவச் சக்தி தலைமை தாங்கவில்லை, சுமுகமான அண்டை நாட்டுறவும் ஒத்துழைப்பும் தலைமை தாங்குகின்றன. சகவாழ்க்கை அமைப்பில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் சாதனைகள் விரிவாகப் பரிவர்த்தனை செய்யப்படும், எல்லா நாடுகளும் பயன்பெறுவதற்காகக் கலாசாரச் செல்வங்கள் பரிவர்த்தனை செய்யப்படும். இராணுவ நோக்கங்களுக்காக, அழிவுக் காரியங்களுக்காக வீணாக்கப்படுகின்ற செல்வ வளங்கள் படைப்பு முயற்சிகளுக்கு மட்டுமே உபயோகிக்கப் படும். சுதந்திரமான வளர்ச்சிப் பாதையைப் பின்பற்று கின்ற நாடுகள் அந்நிய அரசுகளின் தலையீட்டிலிருந்து பாதுகாக்கப்படும், அந்த நாடுகள் தேசிய, சமூக முன்

னேற்றப் பாதையில் முன்னேறிச் செல்வதற்கு உதவியளிக்கப் படும். இது எல்லா நாடுகளும் உலகப் பிரச்சினைகளைக் கூட்டு முயற்சிகளின் மூலம் தீர்ப்பதற்குச் சாதகமான வாய்ப்புகளை உருவாக்கும். சமாதான சகவாழ்க்கை எல்லா நாடுகளின், மக்கள் இனங்களின் நலன்களுக்கும் உதவுகின்ற கொள்கை ஆகும்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 27வது காங்கிரஸ் (1986) விரிவான சர்வதேசப் பாதுகாப்பு அமைப் பின் அடிப்படையான கோட்பாடுகளை வகுத்தளித்தது. அதில் பின்வரும் அம்சங்கள் அடங்கியிருக்கின்றன:

1. இராணுவத் துறையில்

— அணு ஆயுதங்களை வைத்திருக்கின்ற வல்லரசுகள் தமக்குள் அல்லது மூன்றாவது நாடுகளுக்கு எதிராக அணு யுத்தம் மற்றும் வழக்கமான யுத்தத்தைக் கைவிடுதல்;

— விண்வெளியில் ஆயுதப் போட்டியில் ஈடுபடுவதைத் தடுத்தல், எல்லா அணு ஆயுதப் பரிசோதனைகளையும் நிறுத்தல், அணு ஆயுதங்களை மொத்தமாக அழித்தல், இரசாயன ஆயுதங்களைத் தடை செய்தலும் அழித்தலும், பெருந்திரளான மக்களை அழிக்கின்ற மற்ற சாதனங் களைத் தயாரிப்பதைக் கைவிடுதல்;

— நாடுகளின் இராணுவ பலத்தை மிகவும் நியாயமாக அவசியம் என்னும் அளவுக்குக் குறைத்து அதைக் கண்டிப் பான முறையில் அமுலாக்குதல்;

— இராணுவக் கூட்டணிகளைக் கலைத்தல், அதன் முதல் கட்டமாக அவை விரிவுபடுத்தப்படுவதையும் புதிய கூட்டணி களை அமைப்பதையும் கைவிடுதல்;

— வரவு செலவுத் திட்டங்களில் இராணுவச் செலவு களுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியைக் கணிசமாகக் குறைத்தல்.

2. அரசியல் துறையில்

— ஒவ்வொரு மக்களினமும் தன்னுடைய வளர்ச்சிக்குரிய

வழிமுறைகளை சுயேச்சையாகத் தேர்ந்தெடுக்கும் உரிமையை சர்வதேச நடைமுறையில் நிபந்தனையில்லாதபடி மதித்தல்;

— சர்வதேச நெருக்கடிகளுக்கும் பிராந்திய மோதல்களுக்கும் நியாயமான அரசியல் தீர்வை வகுத்தல்;

— அரசுகளுக்கு இடையில் நம்பிக்கையை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகளின் தொகுதியைத் தயாரித்தல், வெளியிலிருந்து வருகின்ற தாக்குதல்களுக்கு எதிராக உறுதியான உத்தரவாதங்களை அளித்தல், எல்லைகளை மீறாதிருத்தல்;

— சர்வதேச நிலம், வானம் மற்றும் கடல் போக்குவரத்து சாதனங்களின் பாதுகாப்பு உள்பட சர்வதேச பயங்கரவாதத்தைத் தடுக்கின்ற உறுதியான நடவடிக்கைகளைத் தயாரித்தல்.

3. பொருளாதாரத் துறையில்

— எல்லா வகையான பாரபட்ச நடவடிக்கைகளையும் சர்வதேச நடைமுறையில் கைவிடுதல், உலக நாடுகளின் முடிவுகளில் உருவாக்கப்படாத பொருளாதார முற்றுகைகள், நிர்ப்பந்தங்களைக் கைவிடுதல்;

— கடன்பாக்கிகளைப் பற்றிய பிரச்சினைக்கு நியாயமான தீர்வுக்குரிய வழிகளைக் கூட்டாகத் தேடுதல்;

— எல்லா நாடுகளுக்கும் சமமான பொருளாதாரப் பாதுகாப்பை உத்தரவாதமளிக்கின்ற புதிய உலகப் பொருளாதார அமைப்பை அமைத்தல்;

— இராணுவச் செலவுகளைக் குறைப்பதன் மூலம் கிடைக்கக் கூடிய நிதிகளில் ஒரு பகுதியை உலக மக்களின் நன்மைக்கு, முதலில் வளர்கின்ற நாடுகளுக்கு உபயோகிப்பதற்கு அவசியமான கோட்பாடுகளை உருவாக்குதல்;

— விண்வெளியை ஆராய்வதற்கும் இதை சமமான ரீதியில் உபயோகிப்பதற்கும் நாகரிகத்தின்

எதிர் காலத்தை நிர்ணயிக்கப் போகின்ற உலகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் முயற்சிகளை ஒருங் கிணைத்தல்.

4. மக்கள் சேவைத் துறையில்

— உலக சமாதானம், படைக்கலைப்பு மற்றும் சர்வதேசப் பாதுகாப்புக் கருத்துகளைப் பரப்புவதில் ஒத்துழைப்பு; மக் களினங்கள் ஒன்றையொன்று நன்கறிந்து கொள்வதற்கும் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் உரிய பொதுவகையான, புறநிலையான தகவலை அதிக அளவில் வெளியிடுதல், மக்களினங்களுக்கு இடையிலான உறவில் பரஸ்பரப் புரிவு மற்றும் இணக்கத்தை வலுப் படுத்துதல்;

— இனப் படுகொலை, இனவேற்றுமை, பாசிசத்தை ஆதரித்தல் மற்றும் இன, தேசிய, மத வெறியின் எல்லா வடிவங்களையும் அந்த அடிப்படையில் மக்களைப் பாரபட்ச மாக நடத்துவதையும் ஒழித்தல்;

— ஒவ்வொரு நாட்டின் சட்டங்களையும் மதிக்கின்ற அதே சமயத்தில் மக்களின் அரசியல், சமூக, தனிப்பட்ட உரிமைகளை அமுலாக்குவதில் சர்வதேச ஒத்துழைப்பை விரிவுபடுத்துதல்;

— குடும்பங்களை ஒன்றுசேர்த்தல், திருமணம் ஆகிய பிரச்சினைகளை மனித நேயத்துடனும் ஆக்கபூர்வமான முறையிலும் முடிவு செய்தல், மக்களுக்கும் அமைப்புகளுக்கும் இடையில் தொடர்புகளை ஊக்குவித்தல்;

— கலாசாரம், கலை, விஞ்ஞானம், கல்வி, மருத்துவம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பின் புதிய வடிவங்களைத் தேடுதலும் வலுப்படுத்துதலும்.

இக்கோட்பாடுகள் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் செயல்திட்டத்தின் ஷரத்துக்களிலிருந்து தர்க்க ரீதியாக உருவாகின்றன. இவை சோவியத் யூனியனுடைய

வெளிநாட்டுக் கொள்கை முன்முயற்சிகளுடன் முழுமையாகப் பொருந்துகின்றன. இக்கோட்பாடுகளை வழிகாட்டியாகக் கொண்டால் சமாதான சகவாழ்க்கையை அரசுகளுக்கு இடையிலான உறவுகளின் ஆக உயர்ந்த சர்வப் பொதுக் கோட்பாடாக ஆக்க முடியும்.

இரண்டு அமைப்புகளுக்கும் இடையில் பொருளாதாரப் போட்டி. சமாதான சகவாழ்க்கை சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையில் பொருளாதாரப் போட்டிக்கு அடிப்படையாகும். இரண்டு அமைப்புகளுக்கும் இடையில் அத்தகைய பொருளாதாரப் போட்டி நம் காலத்தின் புறநிலையான முறைமையாகும்.

பொருளாதாரப் போட்டி பொருளாயத உற்பத்தி என்னும் முக்கியமான களத்தில் நடைபெறுகிறது. அது நெடுங்கால நோக்கில் சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளின் வளர்ச்சியையும் நிர்ணயிக்கிறது. அத்தகைய பொருளாதாரப் போட்டி உண்மையில் தீவிர வர்க்கப் போராட்டமே ஆகும்; ஏனென்றால் முதலாளித்துவம் போராட்டம் இல்லாமல் தன்னுடைய நிலைகளை விட்டுக் கொடுக்காது. இரண்டு எதிர் அமைப்புகளுக்கும் இடையில் நடைபெறுகின்ற சமாதானப் போட்டியில் சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பொருளாதாரப் போட்டி முக்கியமான இடத்தை வகிக்கிறது.

சோவியத் யூனியன் அமெரிக்காவுடன் பொருளாதாரப் போட்டியை ஆரம்பித்த பொழுது அதனுடைய நிலை மிகவும் பலவீனமாக இருந்தது. அக்டோபர் புரட்சிக்கு முன்னர் ருஷ்ய சாம்ராஜ்யம் பின்தங்கிய, விவசாய நாடாக இருந்தது. 1918—1922ஆம் ஆண்டுகளில் உள்நாட்டு யுத்தம் மற்றும் முதலாளித்துவ நாடுகளின் இராணுவத் தலையீடு

நடைபெற்று முடிந்த பிறகு ருஷ்யாவின் தொழில்துறை அமெரிக்காவின் உற்பத்தியுடன் ஒப்பிடுகின்ற பொழுது 2—2.2 சதவிகிதமே உற்பத்தி செய்தது. பின்னர் இரண்டாவது உலக யுத்தம் சோவியத் பொருளாதாரத்தைப் பேரளவில் நாசப்படுத்தியது. மொத்த அழிவு 260 பில்லியன் ரூபிள்கள். இது நாட்டின் தேசியச் செல்வத்தில் சுமார் 30 சதவிகிதமாக இருந்தது. அந்த யுத்தத்தில் பங்கெடுத்த எல்லா நாடுகளிலும் அழிந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 கோடி என்றால் சோவியத் யூனியனில் 2 கோடி மக்கள் அழிந்தார்கள். இந்த எண்ணிக்கையுடன் சோவியத் நாட்டில் அழிக்கப்பட்ட நகரங்கள், கிராமங்கள், தொழில் நிறுவனங்களின் மதிப்பையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

சோவியத் யூனியன் இப்படிப்பட்ட பேரழிவுக்கு உள்ளாகியிருந்த போதிலும் வரலாற்று ரீதியில் குறுகிய காலத்தில் பொருளாதார, விஞ்ஞான, கலாசார வளர்ச்சியில் மாபெரும் சாதனைகளை நிறைவேற்றியது. இரண்டு அமைப்புகளுக்கும் இடையிலான பொருளாதாரப் போட்டியில் தொழில்துறை உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் முக்கியமான சுட்டிக்காட்டியாக இருக்கிறது. இந்த அம்சத்தில் சோவியத் யூனியன் அமெரிக்காவைக் காட்டிலும் சில மடங்கு அதிகமாக இருக்கிறது. பிரிட்டன், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளின் மொத்த தொழில்துறை உற்பத்தியைக் காட்டிலும் சோவியத் யூனியன் அதிகமாக உற்பத்தி செய்கிறது.

மக்களுடைய வாழ்க்கைத் தரத்தைச் சுட்டிக்காட்டுகின்ற முக்கியமான துறைகளாகிய வேலை வாய்ப்பு நிலைமை, இலவச மருத்துவ வசதி, இலவசக் கல்வி, சமூக இன்ஷூரன்ஸ் மற்றும் சமூகப் பாதுகாப்புக்கான விரிவான அமைப்பு, ஓய்வு வசதிகள், பொழுது போக்கு மற்றும் விளையாட்டு வசதிகள் ஆகியவற்றில் சோவியத் யூனியன்

ஏற்கெனவே அமெரிக்காவை விஞ்சி விட்டது. சோஷலிச நாடுகளில் மக்கள் சுரண்டல், வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதார நெருக்கடிகள், இனம் அல்லது மற்ற காரணங்களுக்காகக் கூலிகளில் வேற்றுமை, எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படுதல் ஆகியவை இல்லாதிருக்கிறார்கள். சோவியத் யூனியனில் தனிநபருடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இருப்பதைப் போன்ற விரிவான அமைப்பு முதலாளித்துவ உலகத்தில் எந்த நாட்டிலும் கிடையாது.

விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றம் பொருளாதாரப் போட்டியில் மற்றொரு முக்கியமான சுட்டிக்காட்டியாக இருக்கிறது. முதலாளித்துவத்துடன் பொருளாதாரத் துறையில் போட்டியிடுகின்ற பொழுது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் வளர்ச்சி மட்டத்தின் தீர்மானகரமான பாத்திரத்தை முதலில் சுட்டிக்காட்டியவர் லெனின் ஆவார். ''யாரிடம் மிகவும் சிறப்பான தொழில்நுட்பக் கருவிகள், அமைப்பு, கட்டுப்பாடு மற்றும் சிறந்த இயந்திரங்கள் இருக்கின்றனவோ, அவர்களே வெற்றி அடைவார்கள்'' என்று அவர் கூறினார்.* இன்று சோஷலிசத்திடமுள்ள மொத்த பொருளாயத மற்றும் தொழில்நுட்ப அடிப்படை சோஷலிச நாடுகள் இன்னும் அதிகமான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தை அடைவதை சாத்தியமாக்குகிறது. நெடுங்கால நோக்கில் சோஷலிசம் வெற்றி அடைய முடியும், அதுவே வெற்றி அடையும்; ஏனென்றால் அது உற்பத்திச் சக்திகள், விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் மற்றும் கலாசார வளர்ச்சிக்குப் புதிய வாய்ப்புகளை, முதலாளித்துவம் எக்காலத்திலும் படைத்திராத வாய்ப்புகளைப் படைக்கிறது, உழைப்பு மிகவும் அதிகமான உற்பத்தித் திறனை அடைவதை சாத்தியமாக்குகிறது.

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 27, p. 195.

எதிர்கால வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட தருணத்தில் சம்பவங்களின் போக்கை நுணுக்கமாக முன்னறிவிக்க இயலாது என்பது இயற்கையே. ஆனால் ஒருவர் விவரங்கள் அல்லது நடைபெறக் கூடிய சந்தர்ப்பங்கள் என்ற நோக்கிலிருந்து பார்க்காமல், வி. இ. லெனின் கூறியதைப் போல ''பொருளைப் பரந்த அளவில் பார்த்தால் குறிப்பான மற்றும் அற்பமான விவரங்கள் பின்னணிக்குப் போய்விடும், உலக வரலாற்றின் முக்கியமான இயக்கு சக்திகள் வெளிப்படும்'' * என்ற முறையில் பார்க்க வேண்டும். வரலாற்றில் முக்கியமான இயக்கு சக்திகளை ஒருவர் அறிந்திருந்தால், வரலாற்று வளர்ச்சியின் முக்கியமான போக்குகளைக் கண்டுபிடித்திருந்தால் இரண்டு உலக அமைப்புகளுக்கும் இடையிலான போராட்டம் கம்யூனிசத்தின் உலகளாவிய வெற்றியில் முடிவடையும் என்பதைத் தெளிவாகப் பார்க்க முடியும்.

சமாதானம் — சோஷலிசத்தின் இலட்சியம். *1917*இல் சோஷலிசம் தோன்றியது என்றால் அரசில் அமைக்கப்பட்டிருந்த பாட்டாளி வர்க்கம் என்னும் வலிமையான சக்தி ஏகாதிபத்திய யுத்தங்களின் பாதையில் குறுக்கே நிற்கிறது என்று பொருளாகும். சோஷலிசம் சமாதானத்துக்கான போராட்டத்தில் நம்பகமான அரணாக இருக்கிறது. சோஷலிசம் சுரண்டலின் எல்லா வடிவங்களையும் ஒழித்திருப்பதுடன் யுத்தங்களை உருவாக்குகின்ற முதலாளித்துவத்தின் குணாம்சத்தைக் கண்டனம் செய்கிறது. ''யுத்தங்களுக்கு ஒரு முடிவு கட்டுதல், தேசங்களுக்கு இடையே சமாதானம், கொள்ளையும் வன்முறையும் நிறுத்தப்படுதல் — இதுவே நமது இலட்சியம்'' என்று லெனின் சுட்டிக்காட்டினார். **

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 30, p. 381.

** வி. இ. லெனின், பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம், மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், *1984*, பக்கம் *183*.

சமாதானத்துக்கான போராட்டம் முதலாளித்துவத்தின் மீது சோஷலிசத்தின் மிகவும் சிறந்த சாதகங்களில் ஒன்றாகும். சோவியத் அரசு ஏற்பட்டதிலிருந்து இன்று வரை யுத்தத்தைத் தவிர்க்கின்ற, யுத்தத்துக்கு முடிவு கட்டுகின்ற, நிரந்தர சமாதானத்துக்குப் பாடுபடுகின்ற கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது. 1917 நவம்பரில் லெனின் பின் வருமாறு கூறினார்: ''இப்பொழுது சமாதானத்துக்காகப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது கடினமான போராட்டம். சமாதானத்தை சுலபமாக அமைக்க முடியும், நாம் அதை உச்சரித்தவுடன் முதலாளி வர்க்கம் அதை ஒரு தட்டில் வைத்து நம்மிடம் நீட்டும் என்று நினைப்பது மிகவும் வெகுளித்தனம் ஆகும்''. *

இன்று உலக சமாதானத்தைப் பாதுகாப்பதும் அதை வலுப்படுத்துவதும் மொத்த மனிதகுலம் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும். ஏனென்றால் அணு யுத்தம் வெடித்தால் அது எந்தக் கண்டத்தையும் விட்டு வைக்காது. ஆனால் அமெரிக்க நிர்வாகம் சோவியத் யூனியனுக்கு எதிராக ஒரு ''புனிதப் போரை'' நடத்த முயல்கிறது, கம்யூனிசத்தை வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் தள்ளுவோம் என்று வாக்குறுதி அளிக்கிறது. அமெரிக்காவின் ஆளும் வட்டாரங்கள் உலகத்தின் முற்போக்கான மாற்றத்தைத் தடுத்தல், வரலாற்றின் போக்கை மாற்றுதல் என்ற நிறைவேற்ற முடியாத நோக்கங்களை மேற்கொண்டிருக்கின்றன.

அமெரிக்கா அணு ஆயுதங்களையும் மக்களைப் பேரளவில் அழிக்கின்ற இதர ஆயுதங்களையும் தயாரிக்கின்ற பைத்தியக்கார முயற்சியில் மற்றொரு அத்தியாயத்தை ஆரம்பித்திருக்கிறது. அது யுத்தத் தயாரிப்புகளில் அளவற்ற பணத்தைச்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 26, p. 345.

செலவிடுகிறது; முதலாவதாக அணுத் தாக்குதலைத் தொடங்குகின்ற ஆயுதங்களைத் தயாரிப்பதில், இரசாயன ஆயுதங்களைக் குவிப்பதில், விண்வெளியில் முதலில் தாக்கக் கூடிய ஆயுத இணையங்களில், இதரவற்றில் நூற்றுக்கணக் கான பில்லியன் டாலர்களைச் செலவிட்டுக் கொண்டிருக் கிறது. அமெரிக்கா ஏற்கெனவே மேற்கு ஐரோப்பாவில் ''பெர்ஷிங்-2'' அணு ஆயுத ஏவுகணைகளையும் ''குரூஸ்'' ஏவுகணைகளையும் வைத்திருக்கிறது. இவை சோவியத் யூனியன் மற்றும் அதன் நட்பு நாடுகளின் பாதுகாப்புக்குப் பேராபத்தாக இருக்கின்றன.

விண்வெளியை இராணுவ தளமாக்குகின்ற அமெரிக்கா வின் கொள்கை உலக சமாதானத்துக்குப் பேரிடர் விளைவிக் கின்ற கொள்கையாகும். விண்வெளியில் துணைக்கோள் எதிர்ப்பு அமைப்பை வளர்ப்பதற்கு அமெரிக்கா பல பத்து பில்லியன் டாலர்களைச் செலவிடுகிறது. இந்த அமைப்பு பெரும்பாலும் ராணுவ நோக்கங்களுக்குப் பயன்படுத்தப் படுகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கோடிக்கணக்கான மக் களைக் கொல்லக் கூடிய, பூமியிலிருந்து வாழ்க்கையை முற்றாக ஒழிக்கக் கூடிய அணு யுத்தத்தை ஆரம்பிப்பதற்குத் தயாரிப்புகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

''இன்று ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு சக்திகளின் விளைவு களைப் பற்றிக் கவலைப்படாத, போர்வெறி நடவடிக்கை களினால் மனிதகுலத்துக்கு எத்தகைய ஆபத்து ஏற்படும் என்பதை நாங்கள் நன்றாக அறிவோம். நாங்கள் இதைப் பட்டவர்த்தனமாகச் சொல்கிறோம், அந்த ஆபத்துக்கு எதிராக எல்லா நாடுகளையும் எச்சரிக்கிறோம். நாங்கள் இராணுவ ரீதியில் உயர்நிலையைப் பெறுவதற்கு முயல வில்லை, எங்களுடைய சித்தத்துக்கு மற்ற நாடுகளைப் பணிய வைப்பதும் எங்களுடைய நோக்கமல்ல; ஆனால்

இன்றைக்கிருக்கின்ற ராணுவச் சமநிலையை யாராவது மாற்ற முயன்றால், அதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். போர் வெறியர்களின் பைத்தியத்தைப் போக்குகின்ற போது மான சாதனங்கள் எங்களிடம் இருக்க வேண்டும்; அதற்காக எங்களுடைய தற்காப்புச் சக்தியை நாங்கள் தொடர்ச்சி யாக வலுப்படுத்துவோம். இதைப் பற்றி யாரும் சிறிதளவு கூடச் சந்தேகிக்க வேண்டாம்'' என்று சோவியத் தலைவர் கள் சொல்கிறார்கள். *

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கியிருக் கின்ற சமாதான வேலைத்திட்டத்தை உலக முழுவதுமே நன்கறியும். அவ்வேலைத்திட்டம் பின்வரும் முக்கியமான கடமைகளை விவரிக்கிறது:

— சகோதர சோஷலிச அரசுகளின் ஒற்றுமையைத் தொடர்ச்சியாக வலுப்படுத்துதல், புதிய சமூகத்தை நிர் மாணிப்பதில் அவற்றின் விரிவான ஒத்துழைப்பை வளர்த் தல், உலக சமாதானத்தை வலுப்படுத்துகின்ற இலட்சி யத்துக்கு அவற்றின் சுறுசுறுப்பான, கூட்டுப் பங்கை அதிகப் படுத்துதல்;

— உலக சமாதானத்துக்குப் பேராபத்தாக இருக்கின்ற ஆயுதப் போட்டியின் வளர்ச்சிக்கு முடிவு கட்டுதல், எதிர் காலத்தில் ஆயுத இருப்புக்களைக் குறைப்பதற்கும் இறுதியாகப் படைக்கலைப்பை ஏற்படுத்துவதற்கும் பாடுபடுதல்;

— பதட்டத் தணிவை ஆழப்படுத்தி அரசுகளுக்கு இடை யில் பரஸ்பர சாதகமான ஒத்துழைப்பில் அத்தணிவிற்கு ஸ்தூலமான வடிவம் கொடுப்பதற்கு இயன்ற அனைத்தை யும் செய்தல்; 1975இல் ஹெல்சிங்கியில் நடைபெற்ற ஐரோப்

---

* சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியின் பேரவைக் கூட்டத்தின் (13.2.1983) ஆவணங்கள், பக்கம் 19 (ருஷ்ய மொழியில்).

பியப் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு மாநாட்டின் இறுதி ஆவணத்தை முழுமையாக அமுலாக்குவதற்கும் ஐரோப் பாவில் சமாதான பூர்வமான ஒத்துழைப்பை வளர்ப் பதற்கும் தீவிரமாகப் பாடுபடுதல்;

— ஆசியாவிலுள்ள எல்லா அரசுகளின் கூட்டு முயற்சி களின் அடிப்படையில் ஆசியாவில் சமாதானத்தையும் பாது காப்பையும் ஊக்குவித்தல்;

— சர்வதேச உறவுகளில் ஆயுத பலத்தை உபயோகிப் பதில்லை என்னும் உலக ரீதியான ஒப்பந்தத்தை நிறை வேற்றுவதற்குப் பாடுபடுதல்;

— காலனியாதிக்க ஒடுக்குமுறையின் எச்சங்கள் மற்றும் நாடுகளின் சமத்துவம் மற்றும் சுதந்திரத்தில் தலையிடுதலை முழுமையாக ஒழிப்பதை முக்கியமான சர்வதேசப் பிரச்சினைகளில் ஒன்றாகக் கருதுதல்;

— சர்வதேச வர்த்தகத்தில் பாரபட்சம் காட்டுதலையும் செயற்கையான தடைகளையும் சர்வதேசப் பொருளாதார உறவுகளிலிருந்து சமமின்மை, அதிகார ஆணை மற்றும் சுரண்டலின் வடிவங்களையும் அகற்றுவதற்கு முழு முயற்சி களைச் செய்தல்.

சோவியத் யூனியன் முதலில் அணு ஆயுதங்களை உப யோகிக்கப் போவதில்லை என்று வாக்களித்திருப்பது உலகத் தின் எதிர்காலத்துக்கு மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. இந்த வாக்குறுதியை உலகிலுள்ள சமா தான சக்திகள் அனைத்தும் உற்சாகத்தோடு வரவேற்றிருக் கின்றன. இதன் தொடர்பாக சோவியத் யூனியன் பின்வரும் பிரேரணைகளை முன்வைத்திருக்கிறது: அணு ஆயுதங்களை ஒழிக்கும் திட்டத்தைத் தயாரித்தல், நிறை வேற்றுதல், ஒவ்வொரு கட்டமாக அதை அமுலாக்குதல்; போர்த்திட்ட ஆயுதங்களின் தயாரிப்பைக் கட்டுப்படுத்துதல், இருக்கின்ற ஆயுதங்களைக் குறைத்தல்; ஐரோப்பாவில்

அணு ஆயுதத் தயாரிப்பைக் கட்டுப்படுத்துதல், இருக்கின்ற ஆயுதங்களைக் குறைத்தல்; அணு ஆயுதப் பரிசோதனைகளைத் தடை செய்தல்; அணு ஆயுதப் பெருக்கத்தைத் தடை செய்தல்; இரசாயன ஆயுதங்களைத் தடை செய்தல் மற்றும் ஒழித்தல்; விண்வெளியில் எவ்விதமான ஆயுதங்களையும் உபயோகிப்பதைத் தடை செய்தல்; மரபுவழிப்பட்ட ஆயுதங்களையும் இராணுவங்களையும் அதிகப்படுத்துவதைக் கட்டுப்படுத்துதல், குறைத்தல்; இராணுவ நிதி ஒதுக்கீடுகளைக் குறைத்தல்; விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் சாதனைகளையும் கண்டுபிடிப்புகளையும் இராணுவ நோக்கங்களுக்குப் பயன்படுத்தாதிருத்தல், இதரவை. இவை அனைத்தும் முக்கியமான நடவடிக்கைகள். இவற்றை அமுலாக்கினால் மனிதகுலம் மாபெரும் பொருளாயத வளங்களைப் பாதுகாக்க முடியும், சமூக முன்னேற்றத்தை விரைவுபடுத்த முடியும், எல்லாவற்றைக் காட்டிலும் முக்கியமாக அணு யுத்தப் பேராபத்தைத் தடுக்க முடியும்.

சமாதான இயக்கம் கம்யூனிஸ்டுகளுடைய தந்திரம் என்று முதலாளித்துவ சித்தாந்திகள் பிரச்சாரம் செய்கிறார்கள். அது உண்மையல்ல; அது சோவியத் யூனியன் மற்றும் இதர சோஷலிச நாடுகள் கடைப்பிடிக்கின்ற வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படை ஆகும். சமாதானக் கொள்கை சோஷலிச நாடுகளின் முக்கியமான வெளிநாட்டுக் கொள்கை ஆகும். உலகில் எல்லாத் தகராறுகளையும் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும்; ஆனால் பேச்சுவார்த்தைகளுக்கு சமத்துவம், சமமான பாதுகாப்பு, மற்ற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமை அடிப்படையாக இருக்க வேண்டும் என்று சோவியத் யூனியன் வற்புறுத்துகிறது. உலகத்தில் சமாதானத்தை நேசிக்கின்ற மக்கள் சோவியத் வெளிநாட்டுக் கொள்கையையும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அர

சாங்கமும் முன்வைத்திருக்கின்ற எண்ணற்ற சமாதான முன்முயற்சிகளையும் வரவேற்கிறார்கள், ஆதரவளிக் கிறார்கள்.

யுத்தத்தை ஒழித்தலும் சமாதானத்தைப் பாதுகாத்தலும். உலகத்தில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்று மக்கள் பல யுகங்களாகக் கனவு கண்டு வந்திருக் கிறார்கள். கி. மு. நான்காம் நூற்றாண்டில் கிரேக்கத் தத்துவஞானி பிளாட்டோ (கி. மு. 427—347) எல்லாப் பிரச்சினைகளையும் சமாதான முறையில் தீர்க்கின்ற காலம் ஏற்படும் என்று கூறினார். அவருக்குப் பிறகு பிரெஞ்சுத் தத்துவஞானி ரூஸோ (1712—1778) யுத்தத்தைத் தவிர்த்து, நிலையான சமாதானத்தை ஏற்படுத்துகின்ற செயல்திட்டத் தைத் தயாரித்தார். ஆனால் கார்ல் மார்க்ஸ் எழுதியதைப் போல ''சமாதானத்துக்கு முன்பே யுத்தம் வளர்ச்சியடைந்து விடுகிறது (சில அம்சங்களில்)...'' *

ஆனால் சமாதானம் எப்பொழுதுமே மாற்றாந்தாய் மகனாக ஒதுக்கப்பட்ட நிலையில் இருக்க வேண்டும் என்பது இதன் அர்த்தமல்ல. சமாதானம் எப்பொழுதும் யுத்த அரக் கனுக்கு — அந்த அரக்கன் முதலில் அலங்காரமான உடை கள் அணிந்து போருக்குப் புறப்படுவதாகவும் முடிவில் மண்டை ஓடுகளை மலைகளாகக் குவித்துக் கொண்டு அதன் மீது உட்கார்ந்திருப்பதாகவும் நெடுங்காலமாகவே கற்பனை செய்யப்பட்டிருக்கிறான் — பணிவுடன் வழிவிட்டு விலக வேண்டும் என்பதும் அர்த்தமல்ல. அதற்கு மாறாக, மனிதன் உயிர் பிழைக்க வேண்டுமென்றால் நாடுகளுக்கு இடையில் நட்புறவை வளர்த்துக் கொள்வதே ஒரே வழி என்பது

---

* K. Marx, *A Contribution to the Critique of Political Economy*, Moscow, Progress Publishers, 1977, p. 214.

உலக நாகரிகம் மற்றும் அதன் வளர்ச்சியின் விதிகளிலிருந்து பெறப்படும்.

சோவியத் யூனியனும் சோஷலிச நாடுகளும் உலக சமாதானத்துக்காக நடத்துகின்ற போராட்டத்தை கூட்டுச் சேராத நாடுகளின் இயக்கம் ஆதரிக்கிறது. இந்த நாடுகள் யுத்தத்தை எதிர்க்கின்றன; இவை தம் தேசியப் புனரமைப்பு மற்றும் வளர்ச்சிப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்றால் உலகில் சமாதானம் நிலவுவது அவசியம். மேலும் ஏகாதிபத்திய நாடுகளில் பொது மக்களில் பரந்த பகுதியினர் சமாதானத்தைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்திருக்கிறார்கள். பல்வேறு முதலாளித்துவக் கட்சிகளில் உள்ள எதார்த்த உணர்வுடைய அரசியல்வாதிகளும் அதில் உள்ளனர்.

உலகத்திலிருந்து யுத்தத்தை ஒழிப்பது இன்று கூடான பிரச்சினையாகவும் எதார்த்தமான இலட்சியமாகவும் இருக்கிறது. யுத்தம் நாடுகளை மொத்தமாக அழித்து விடும் என்ற ஆபத்து இன்று போல என்றும் ஏற்பட்டதில்லை. ஆனால் சமாதானத்துக்காக இயக்கம் நடத்துகின்ற வலிமையான சக்திகள் இன்று போல முன்னெப்போதும் இருந்ததில்லை. பூமியில் சமாதானத்துக்கு உறுதியளிக்கின்ற முக்கியமான சக்தியாக உலக சோஷலிச அமைப்பு இருக்கின்றது. அந்த அமைப்பின் பலம் வளர்ச்சியடைதல், அதன் பொருளாதாரங்களின் தொடர்ச்சியான முன்னேற்றம், வளர்ச்சியடைந்த சோஷலிசத்தை முழுநிறைவாக்குவதில் புதிய சாதனைகள், தற்காப்பு சக்தியை வலுப்படுத்துதல் — சோஷலிஸ்ட் நாடுகள் சமாதான இலட்சியத்துக்குச் செய்கின்ற உண்மையான பங்களிப்பு இவை.

அணு யுத்த ஆபத்தைத் தடுப்பதிலும் உலக சமாதானத்தைப் பாதுகாப்பதிலும் சர்வதேசத் தொழிலாளி வர்க்கம் மற்றும் கம்யூனிஸ்ட் இயக்கம் முக்கியமான காரணியாக

இருக்கிறது. தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்றுக் கடமை ஒடுக்குமுறை, சுரண்டல், வறுமை, மனித உரிமைகள் இல்லாத நிலையைப் போக்குதல் ஆகியவை மட்டுமல்ல, மனித குலத்தைப் பேரழிவை ஏற்படுத்துகின்ற யுத்தங்களிலிருந்து காப்பாற்றுவதிலும் அடங்கியிருக்கிறது என்று மார்க்சிய-லெனினியம் சுட்டிக்காட்டியது. வரலாற்று ரீதியில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்ற ஏகாதிபத்தியம் தன்னுடன் கோடிக்கணக்கான உயிர்களையும் பறித்துக் கொண்டு புதைகுழிக்குப் போவதைத் தொழிலாளி வர்க்கம் அனுமதிக்க முடியாது. அதனால்தான் தொழிலாளி வர்க்கம் சமாதானத்தை நிலைநாட்டுவதில் உறுதியாக இருக்கிறது.

தொழிலாளி வர்க்கம் அரசியல் ரீதியில் மிகவும் வளர்ச்சியடைந்த வர்க்கம். யுத்தத்தின் உண்மையான காரணங்களை அது மிகவும் ஆழமாகப் புரிந்து கொண்டிருக்கிறது; ஆகவே யுத்தத்தைத் தடுப்பதற்கு மிகவும் சிறந்த முறைகளையும் அது முன்வைக்க முடிகிறது. பாட்டாளி வர்க்கம் அமைப்பு ரீதியாகச் சிறந்த முறையில் இருக்கின்ற வர்க்கம்; ஆகவே அது யுத்தத்துக்கு எதிராக மிகவும் முரணில்லாத இயக்கத்தை நடத்துகிறது. மிகவும் வளர்ச்சியடைந்த விஞ்ஞானத் தத்துவமாகிய மார்க்சிய-லெனினியத்தினால் வழிகாட்டப்படுகின்ற கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் தொழிலாளி வர்க்கத்துக்குத் தலைமை தாங்குவது மாபெரும் சாதகமாகும்.

இன்று ஒரு புதிய உலக யுத்தத்தைத் தடுப்பதைக் காட்டிலும் உடனடியான பிரச்சினை வேறு இல்லை. உலக ரீதியான யுத்த எதிர்ப்பு இயக்கம் ஆண்டுதோறும் பேரளவில் அதிகரித்து வருகிறது; 1980க்களில் முன்னெப்போதும் இருந்திராத பரிமாணங்களை அடைந்து விட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்கின்ற சமாதானப் பேரணிகள், நேட்டோ ஆயுத தளங்களை முற்றுகையிடுதல்,

மேற்கு ஐரோப்பாவில் அமெரிக்க நடுவரிசை ஏவுகணைகளை வைப்பதை எதிர்த்து வெகுஜன நடவடிக்கை — இவை அனைத்தும் யுத்தத்தை எதிர்த்து, சமாதானத்தை ஆதரித்து நடைபெறுகின்ற போராட்டத்தில் அதிகப் பெருந்திரளான மக்கள் ஈடுபட்டிருப்பதை எடுத்துக்காட்டுகின்றன. யுத்த எதிர்ப்பு இயக்கத்தில் பல நாடுகளைச் சேர்ந்த சமாதானப் போராளிகள், தொழிற்சங்கங்கள், மாதர் மற்றும் இளைஞர் அமைப்புக்களும் விஞ்ஞானிகள், மருத்துவர்கள், வழக்குரைஞர்கள், அரசியல்வாதிகள், நகராட்சித் தலைவர்கள் மற்றும் மதத்தலைவர்களும் கலந்து கொள்கிறார்கள்.

உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கு, சோஷலிசத்தின் வளர்ச்சி மற்றும் புதிதாக விடுதலை அடைந்த நாடுகளின் பொருளாதார, அரசியல் சுதந்திரத்தின் பலப்படுத்தல் ஆகியவை ஏகாதிபத்தியம் மனிதகுலத்தை ஒரு புதிய உலக யுத்தத்தின் விளிம்புக்குத் தள்ளியிருக்கின்ற பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உலகத்திலுள்ள எல்லா நாடுகளுக்கும் முன்னாலுள்ள ஜீவாதாரமான பிரச்சினைகள் அனைத்தையும் தீர்ப்பதை இந்த நிலைமை பாதிப்பது இயற்கையே. ஆகவே சமாதானத்துக்கான இயக்கம் உலக கம்யூனிச இயக்கத்தின் அடிப்படையான கடமை ஆகியிருக்கிறது. கம்யூனிஸ்டுகள் எப்பொழுதுமே ஒடுக்குமுறை மற்றும் மனிதனை மனிதன் சுரண்டலை எதிர்த்துப் போராடி வந்திருக்கிறார்கள்; இன்று அவர்கள் மனித நாகரிகம் உயிரோடிருப்பதற்கு, வாழ்வதற்கு மக்களுடைய உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

''இந்த சகாப்தத்தின் தன்மை மற்றும் பிரதான உள்ளடக்கத்தைப் பற்றிய மார்க்சிய-லெனினியப் பகுப்பாய்வை உலக வளர்ச்சியின் மொத்தப் போக்கும் நிரூபிக்கிறது. இது முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கும் கம்யூனிசத்துக்கும் மாறுகின்ற, இரண்டு உலக சமூக-அரசியல்

அமைப்புகளுக்கும் இடையில் வரலாற்று ரீதியான போட்டி நடைபெறுகின்ற சகாப்தம்; சோஷலிச மற்றும் தேசிய விடுதலைப் புரட்சிகள், காலனியாதிக்கத் தகர்வின் சகாப்தம்; சமூக வளர்ச்சியின் முக்கியமான இயக்கு சக்திகளான உலக சோஷலிசம், தொழிலாளி வர்க்க இயக்கம் மற்றும் கம்யூனிச இயக்கம், புதிதாக விடுதலையடைந்த நாடுகளின் மக்களினங்கள் மற்றும் வெகுஜன ஜனநாயக இயக்கங்கள் ஏகாதிபத்தியத்தையும் அதன் ஆக்கிரமிப்புக் கொள்கையையும் ஒடுக்குமுறையையும் எதிர்த்து, சமாதானத்துக்கும் ஜனநாயகத்துக்கும் சமூக முன்னேற்றத்துக்கும் ஆதரவாகப் போராடுகின்ற சகாப்தம்'' என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய செயல்திட்டம் எடுத்துக்காட்டுகிறது.

அடிப்படை — உற்பத்தி உறவுகளின் மொத்தம், குறிப்பிட்ட சமூக, பொருளாதார உருவாக்கத்துடன் பொருந்துகின்ற சமூகத்தின் பொருளாதார அமைப்பு.

அடிமை உடைமை அமைப்பு — மனிதகுல வரலாற்றில் முதலாவதாக ஏற்பட்ட முரணியல் சமூக-பொருளாதார உருவாக்கம். உற்பத்திச் சாதனம் மற்றும் உற்பத்தியாளரை (அடிமை) தனியுடைமையாகக் கொண்டிருப்பதையும் மனிதனை மனிதன் சுரண்டுவதையும் அடிமைகளுக்கும் அடிமை உடைமையாளர்களுக்கும் இடையிலான வர்க்க முரணியல்பையும் அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி முறை.

அரசு — வர்க்க சமூகத்தில் அரசியல் அதிகாரத்தைச் செயல்படுத்துகின்ற அடிப்படைப் பொறியமைவு.

அரசு-ஏகபோக முதலாளித்துவம் — ஏகபோக முதலாளித்துவத்தின் நவீனமான வடிவம்; முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாக்கின்ற நோக்கத்துடன் முதலாளி வர்க்க அரசும் ஏகபோகங்களும் இணைந்திருத்தல்; நிதி மூலதனம் உச்ச அளவில் லாபமடைவதை உறுதிப்படுத்துவதும், புரட்சிகர, தொழிலாளி வர்க்க மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களை நசுக்குவதும் உலக சோஷலிச அமைப்புக்கு

எதிரான போராட்டத்தை அதிகத் தீவிரமாக நடத்துவதும் அதன் நோக்கம்.

அரசுரிமை — ஒரு அரசு தன்னுடைய உள்நாட்டுக் கொள்கையிலும் வெளிநாட்டுக் கொள்கையிலும் அரசியல் சுதந்திரத்தைப் பெற்றிருத்தல், அந்நியத் தலையீட்டை அனுமதிக்காதிருத்தல்.

அறவியல் — மக்கள் தமக்கிடையிலும் சமூகத்திலும் கடைப்பிடிக்க வேண்டிய நடத்தையின் விதிகள் மற்றும் அளவுகோல்களின் மொத்தம்.

அறியொணாவாதம் — பிரபஞ்சத்தை அறியக் கூடிய சாத்தியத்தை முழுமையாக அல்லது பகுதியளவுக்கு மறுக்கின்ற கோட்பாடு.

இயக்கமறுப்பியல் — இயக்கவியலுக்கு எதிரான சிந்தனைப் போக்கு; அது வளர்ச்சியை மறுக்கிறது அல்லது அதை வெறும் அளவு ரீதியான மாற்றங்களாக வகைப்படுத்து கிறது; நிகழ்வுகளின் வளர்ச்சியின் உள்தோற்றுவாயை (அவற்றின் உள் முரண்பாடுகளை) பார்க்க மறுக்கிறது.

இயக்கவியல் — இயற்கை, சமூகம் மற்றும் சிந்தனையின் வளர்ச்சியை ஆள்கின்ற அதிகப் பொதுப்படையான விதி களைப் பற்றிய விஞ்ஞானம். அனைத்து வளர்ச்சிக்கும் உள்தோற்றுவாயை, எதிர்நிலைகளின் ஒருமை மற்றும் மோதலை வெளிப்படுத்துகிறது.

இருத்தல் (வாழ்நிலை) — மனித உணர்விலிருந்து சுயேச் சையாக இருக்கின்ற புறநிலை எதார்த்தம்.

உடைமை — உற்பத்திச் சாதனங்களையும் அவற்றைக் கொண்டு படைக்கப்பட்ட பொருளாயதச் செல்வத்தையும்

சுவீகரித்துக் கொள்வது சம்பந்தமாக மக்கள் ஒருவருக் கொருவர் கொண்டுள்ள உறவுகள்.

உடைமை பறித்தல் — ஒரு சமூக வர்க்கத்தின் உடைமை யை மற்றொரு சமூக வர்க்கம் பலாத்காரமாக (நட்ட ஈடு கொடுத்து விட்டு அல்லது நட்ட ஈடு கொடுக்காமல்) எடுத்துக்கொள்ளுதல். உதாரணமாக, வளர்முக நாடுகள் பலவற்றில் அந்நிய கார்ப்பரேஷன்களின் உடைமைகள் தேசவுடைமை ஆக்கப்படுதல்.

உபரி மதிப்பு — தொழிலாளி தன்னுடைய உழைப்புச் சக்தியின் மதிப்பாகிய கூலியைக் காட்டிலும் கூடுதலாகப் படைக்கின்ற மதிப்பு; இதை முதலாளி கூலி கொடுக்காமல் சுவீகரித்துக் கொள்கிறார்.

உலகக் கண்ணோட்டம் — உலகத்தையும் அதன் விதிகளை யும் பற்றி ஒருவருடைய கருத்துகள் மற்றும் எண்ணங்களின் மொத்தம்; ஒரு நபர் எதார்த்தத்தைப் பற்றி, இயற்கை மற்றும் சமூக நிகழ்வுகளைப் பற்றித் தன்னுடைய அணுகு முறையை வெளியிடுகின்ற கருத்துகளின் அமைப்பு.

உலக சோஷலிச அமைப்பு — பொது நலன்களாலும் இலட்சியங்களாலும் ஒன்றுசேர்ந்திருக்கின்ற, சோஷலிசப் பாதையில் முன்னேறுகின்ற சுதந்திரம், அரசுரிமை, சமத் துவம் ஆகியவற்றைக் கொண்ட அரசுகளின் சமூக-பொரு ளாதார, அரசியல் சமூகம்.

உலக முதலாளித்துவ அமைப்பு — சோஷலிசம் அல்லாத நாடுகளின் தேசியப் பொருளாதாரங்களுக்கு இடையிலுள்ள சர்வதேசப் பொருளாதார உறவுகளின் மொத்தம்; ஏகாதி பத்திய சகாப்தத்தில் உருவாயிற்று; புதிய காலனியாதிக்கம் விரிவடைதலும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ அரசுகள் பொருளாதார ரீதியில் பின்தங்கிய அரசுகளைச் சுரண்டு தலும் அதன் குறியடையாளமான கூறுகள் ஆகும்.

உழைப்பின் உற்பத்தித் திறன் — ஒரு தொழிலாளி குறிப்பிட்ட கால அளவில் (ஒரு மணி, ஒரு உழைப்பு நாள், இதரவை) குறிப்பிட்ட அளவு பொருட்களை உற்பத்தி செய்வதற்குரிய உழைப்புத் திறன்.

உழைப்பின் சமூகப் பிரிவினை — சமூகத்தில் உழைப்பின் பல்வேறு ரகங்களைத் தனியே பகுத்து பொருளாதாரத்தின் பிரத்யேகமான துறைகளில் (தொழில், விவசாயம், போக்குவரத்து, இதரவை) உற்பத்தியாளர்கள் சிறப்புத் தேர்ச்சி பெறுதல்.

உழைப்பு — மனிதனுடைய குறிவழிப்பட்ட நடவடிக்கை; அவன் உழைப்பின் மூலமாக இயற்கைப் பொருட்களைத் தன்னுடைய தேவைகளுக்குத் தகுந்தாற் போல மாற்றியமைத்துக் கொள்கிறான்.

உழைப்புச் சக்தி — பொருளாயதச் செல்வத்தின் உற்பத்தியில் உபயோகிக்கப்படுகின்ற தனிநபரின் உடல் ரீதியான மற்றும் அறிவுத் திறமைகளின் மொத்தத்துடன் ஒப்பிடுகின்ற பொழுது தனிநபருடைய உழைப்புத் திறன்.

உழைப்புச் சாதனங்கள் — மனிதன் தன்னுடைய பிழைப்புச் சாதனங்களைப் பெறுவதற்கு பூமியின் மீது செய்தல், இயற்கையின் மீது செயல்படுவதற்குப் பயன்படுகின்ற கருவிகள், இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள்.

உற்பத்தி அராஜகம் — திட்டமிடுதல், அமைப்பு இன்மை மற்றும் தனியுடைமையை அடிப்படையாகக் கொண்ட பண்ட உற்பத்தியின் பொருளாதார விதிகள் தன்னியல்பாகச் செயல்படுவதால் ஏற்படுகின்ற பொருளாதாரக் குழப்பமும் ஏற்றத்தாழ்வான தன்மையும்.

உற்பத்தி உறவுகள் — பொருளாயதச் செல்வத்தின் உற்

பத்தி, வினியோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர்வு நிகழ்வுப் போக்கின் போது மக்களுக்கு இடையிலான உறவுகள்.

உற்பத்திச் சக்திகள் — பொருளாயதச் செல்வத்தைப் படைக்க உதவுகின்ற உற்பத்திக் கருவிகள்; அறிவு, உற்பத்தி அனுபவம், உழைப்புத் திறன் ஆகியவற்றைக் கொண்டு உற்பத்திச் சாதனங்களை இயக்குபவர்கள்.

உற்பத்திச் சாதனங்கள் — உழைப்புச் சாதனங்களும் உழைப்புப் பொருட்களும்; மக்கள் பொருளாயத உற்பத்தியின் போது இவற்றை உபயோகிக்கிறார்கள் (கருவிகள், இயந்திரங்கள், விதைகள், எரிபொருள், இதரவை).

உற்பத்தி முறை — உற்பத்தி நோக்கங்களுக்கும் தனிப்பட்ட நுகர்வுக்கும் அவசியமான பொருளாயதச் செல்வத்தை உற்பத்தி செய்தல், அதாவது உற்பத்திச் சாதனங்களையும் நுகர்வுப் பொருட்களையும் உற்பத்தி செய்தல் வரலாற்று ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட முறை; உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் ஒற்றுமை.

ஏகாதிபத்தியம் — ஏகபோக முதலாளித்துவம், முதலாளித்துவத்தின் மிகவும் உச்ச வளர்ச்சிக் கட்டம், அதுவே கடைசிக் கட்டமும் சோஷலிசப் புரட்சியின் முற்பொழுதும் ஆகும்.

கட்சி — ஒரு வர்க்கம் அல்லது சமூகப் பகுதியின் பொதுவான, அடிப்படையான நலன்களை எடுத்துரைக்கின்ற அரசியல் ஸ்தாபனம்; அதன் அரசியல் நடவடிக்கைகளை இயக்குகிறது.

கம்யூனிச எதிர்ப்பு — ஏகாதிபத்திய பூர்ஷ்வாவின் சித்தாந்தம், அரசியல் (கொள்கை). கம்யூனிச தத்துவம், நடைமுறைக்கு விரோதமான இது மார்க்சிய-லெனினிய போதனையைத் திரித்துரைக்கிறது.

கம்யூனிசம் — முதலாளித்துவத்தை ஒழிக்கின்ற சமூக-பொருளாதார உருவாக்கம்; சோஷலிசம் (முதல் கட்டம்), கம்யூனிசம் (இரண்டாவது கட்டம்) என்னும் இரண்டு கட்டங்களைக் கொண்டது.

கருத்துமுதல்வாதம் — தத்துவஞானத்தின் அடிப்படையான கேள்விக்கு பதிலளிப்பதில் பொருள்முதல்வாதத்துக்கு முற்றிலும் எதிரான தத்துவஞானப் போக்கு; ஆன்மிகம் முதன்மையானது, பொருளாயதம் இரண்டாம் நிலையானது என்ற கோட்பாடு அதன் அடிப்படையாகும். அதில் அக நிலைக் கருத்துமுதல்வாதம், புறநிலைக் கருத்துமுதல்வாதம் என்று இரண்டு பிரிவுகள் உள்ளன. புறநிலைக் கருத்து முதல்வாதம் ஆன்மா, தனிமுதலான கருத்து, இறைவன் முதன்மையானது என்று கூறுகிறது; அகநிலைக் கருத்து முதல்வாதம் தனிப்பட்ட உணர்வு முதன்மையானது என்று கூறுகிறது.

கலாசாரப் புரட்சி — சோஷலிசப் புரட்சியின் ஒருங்கிணைந்த பகுதி, உழைக்கின்ற பெருந்திரளான மக்கள் சோஷலிச சித்தாந்தம் மற்றும் கலாசாரத்தை சுவீகரித்துக் கொண்டு புதிய, உயர் ரகமான கலாசாரத்தை, சோஷலிசக் கலாசாரத்தைப் படைக்கின்ற நிகழ்வுப் போக்கு.

கற்பனாவாத சோஷலிசம் — எதார்த்தத்துடனும் வர்க்கப் போராட்டத்துடனும் தொடர்பில்லாத முறையில் சமூகத்தைத் திருத்தியமைப்பதற்குச் செய்யப்பட்ட சோஷலிசப் போதனைகள்.

காலனியாதிக்கம் — பொருளாதார ரீதியில் பின்தங்கிய நாடுகளின் மக்களினங்களை நேரடியாக அடிமைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு ஏகாதிபத்திய அரசுகள் பின்பற்றுகின்ற கொள்கை.

சட்டவியல் — ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் ஆட்சியதிகாரம் ஆளும் வர்க்கத்தினருடைய நலன்களுக்குச் சாதகமான முறையில் சமூக உறவுகளை ஒழுங்குபடுத்துவதற்குத் தயாரிக்கின்ற விதிகள், நடத்தை அளவுகோல்கள்; இவை சட்டங்களாகவும் ஆணைகளாகவும் வெளியிடப்படுகின்றன.

சமூக-பொருளாதார உருவாக்கம் — சமூகத்தின் வளர்ச்சியில் ஒரு கட்டம்; வரலாற்று ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட பொருளாதார அமைப்பையும் அதற்குரிய மேற்கட்டுமானத்தையும் கொண்டது.

சர்வதேச உழைப்புப் பிரிவினை — சில குறிப்பிட்ட ரகங்களைச் சேர்ந்த பொருட்களைத் தயாரிப்பதில் சிறப்புத் தேர்ச்சியைக் கொண்டிருக்கின்ற நாடுகளுக்கு இடையில் பிரதேச வாரியாக உற்பத்தியைப் பிரித்துக் கொள்ளுதல்.

சாசனவாதிகள் — பிரிட்டனில் 1830க்களின் நடுப்பகுதியிலிருந்து 1850க்களின் தொடக்கம் வரை நடைபெற்ற பிரிட்டிஷ் தொழிலாளர்களின் வெகுஜனப் புரட்சிகர இயக்கத்தின் ஆதரவாளர்கள்.

சித்தாந்தம் — தத்துவஞான, அரசியல், மத, அறவியல் மற்றும் அழகியல் கருத்துகளைக் கொண்ட அமைப்பு; அது முடிவில் சில சமூக வர்க்கங்களின் நலன்களை வெளியிடுகிறது.

சிலராட்சி — நாட்டின் மிகப் பெரிய செல்வந்தர்கள் சிலரைக் கொண்ட குழு எல்லா அதிகாரத்தையும் வகித்தல்; சுரண்டல் அரசின் ஆட்சி வடிவங்களில் ஒன்று.

சுரண்டல் — உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்கள் உழைப்பாளிகளின் உபரி உழைப்பை — சில சமயங்களில் அவசியமான உழைப்பின் ஒரு பகுதியை — கூலி கொடுக்காமல் எடுத்துக்கொள்ளுதல்.

சோஷலிசப் பொருளாதார ஒருங்கிணைப்பு — சோஷலிச நாடுகள் தமக்குள் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் தம்முடைய பொருளாதார வளர்ச்சி நிலைகளை சமப்படுத்திக் கொள்வதற்கும் சர்வதேச உழைப்புப் பிரிவினையை முன்னேற்றுவதற்கும் தம்முடைய முயற்சிகளைத் திட்டப்படி ஒன்றுகுவித்து ஒருங்கிணைத்தல்.

சோஷலிசம் — கம்யூனிச சமூக-பொருளாதார உருவாக்கத்தின் முதல் கட்டம்; உற்பத்திச் சாதனங்களில் பொது உடைமை மற்றும் சுரண்டலிலிருந்து விடுவிக்கப்பட்டு, சம அந்தஸ்துடைய உறுப்பினர்களின் உழைப்பை அடிப்படையாகக் கொண்டது.

தத்துவஞானத்தின் அடிப்படைக் கேள்வி — உணர்விற்கும் வாழ்நிலைக்கும் இடையிலான உறவைப் பற்றிய கேள்வி. இக்கேள்விக்கு இரண்டு அம்சங்கள் உண்டு: 1) பருப் பொருளா, உணர்வா எது முதன்மையானது? 2) உலகை அறிய முடியுமா?

தனிமுதலாக சுரண்டுதல் (தொழிலாளி வர்க்கத்தின் நிலைமையில்) — முதலாளித்துவத்தின் கீழ் பாட்டாளி வர்க்கத்தின் வாழ்க்கைத் தரம் மிகவும் கீழே இறங்குதல்; தொழிலாளர்கள் தம்முடைய அதிகரிக்கின்ற பொருளாயத மற்றும் கலாசாரத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அளவு குறைதலில் வெளிப்படுகிறது.

தனிமுதலான உண்மை — ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றிய முழுமையான, பரந்த அறிவு; அறிதல் வளர்ச்சி அதை மறுக்க முடியாது.

சமூக உற்பத்தியின் மொத்தம் — குறிப்பிட்ட கால அளவில் (பெரும்பாலும் ஒரு ஆண்டுக் காலத்தில்) சமூகம் உற்பத்தி செய்கின்ற பொருளாயத செல்வத்தின் மொத்தம்.

திருத்தல்வாதம் — தொழிலாளி வர்க்க இயக்கத்தில் ஒரு சந்தர்ப்பவாதப் போக்கு; மார்க்சியத்தை ''மறு பரிசீலனை செய்தல்'', ''நவீனப்படுத்துதல்'' என்ற பெயரில் அதைத் திரிப்பதற்கு முயல்கிறது.

தேசிய வருமானம் — ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட கால அளவில் (பெரும்பாலும் ஒரு ஆண்டில்) படைக்கின்ற மதிப்பு.

நாட்டுடைமையாக்கல் — தனியார் உடைமையாக இருக்கின்ற நிலம், தொழில் நிறுவனங்கள், வங்கிகள், போக்குவரத்து சாதனங்கள், இதரவை அரசுடைமை ஆக்கப்படுதல்.

நிலப்பிரபுத்துவம் — அடிமை உடைமைச் சமூகத்துக்குப் பிறகு ஏற்படுகின்ற முரணியல் சமூக உருவாக்கம். நிலப்பிரபுத்துவ சமூகத்தில் நிலம் அரசருக்கும் நிலப்பிரபுக்களுக்கும் சொந்தமாக இருக்கிறது. அந்த நிலத்தில் சிறிய அளவில் விவசாயம் செய்கின்ற உழவர்கள் நிலப்பிரபுவைத் தனிப்பட்ட முறையில் சார்ந்திருப்பது இதன் அடிப்படை ஆகும்.

பண்டம் — உழைப்பினால் உற்பத்தி செய்யப்படுவது, உற்பத்தியாளருடைய நுகர்வுக்காக அல்லாமல் விற்பனைக்காக உற்பத்தி செய்யப்படுவது.

பருப்பொருள் — உணர்விலிருந்து சுயேச்சையாக இருக்கின்ற, அதனால் பிரதிபலிக்கப்படுகின்ற புறநிலை எதார்த்தத்தைக் குறிக்கின்ற தத்துவஞானக் கருத்தினம்.

பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம் — எல்லா மக்களும் சமமானவர்கள், சம உரிமைகளைக் கொண்டவர்கள் என்று அங்கீகரிக்கின்ற உலகக் கண்ணோட்டம். சுரண்டல், ஒடுக்குமுறை, பொருளாதார, சமூக அநீதிகள் ஆகியவற்றுக்கு

எதிரான போராட்டத்தில் எல்லா நாடுகளின் செயலில் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை வலியுறுத்துகிறது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் — சோஷலிசப் புரட்சி நிகழ்வுப் போக்கில் அமைக்கப்படுகின்ற தொழிலாளி வர்க்கத்தின் அரசு அதிகாரம்; புரட்சியின் இலட்சியங்கள் வெற்றியடைவதற்கு, தூக்கியெறியப்பட்ட சுரண்டும் வர்க்கத்தினருடைய எதிர்ப்பை நசுக்குவதற்கு, சோஷலிச சமூகத்தை நிர்மாணிப்பதற்கு உபயோகிக்கப்படுகிறது.

பாட்டாளி வர்க்கத்தின் நிலை ஒப்புநோக்கில் கூ்ணமடைதல் — முதலாளி வர்க்கம் வேகமாகச் செல்வத்தைத் திரட்டுவதுடன் ஒப்புநோக்கில் தொழிலாளி வர்க்கம் நலிவடைகின்ற நிலை, அதாவது தொழிலாளர்கள் தம்முடைய உழைப்பினால் படைக்கின்ற மொத்த செல்வத்தில் அவர்களுடைய பங்கு குறைவடைதல்.

பாட்டாளி வர்க்கம் — உற்பத்திச் சாதனங்களை இழந்து உற்பத்திச் சாதனங்களுக்கு உடைமையாளர்களாக இருக்கின்ற முதலாளிகளிடம் தம்முடைய உழைப்புச் சக்தியை விற்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்ற கூலியுழைப்பாளிகளைக் கொண்ட வர்க்கம்.

புதிய காலனியாதிக்கம் — ஏகாதிபத்திய அரசுகள் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவில் இருக்கின்ற வளர்முக நாடுகளின் மீது தம்முடைய பொருளாதார, அரசியல், சித்தாந்த ஆதிக்கத்தைப் பாதுகாப்பதற்கு அல்லது மறுபடியும் ஏற்படுத்துவதற்கு உபயோகிக்கின்ற கொள்கை.

புரட்சி — வரலாற்று ரீதியில் காலாவதியாகி விட்ட ஒரு சமூக-பொருளாதார உருவாக்கத்திலிருந்து அதிக முற்போக்கான சமூக-பொருளாதார உருவாக்கத்தை நோக்கி மாறுகின்ற முறை; தீவிரமான மாற்றத்தைக் குறிப்பது.

புனருற்பத்தி — சமூக உற்பத்தி நிகழ்வுப் போக்கு தொடர்ச்சியாகத் திரும்பத் திரும்ப நடைபெறுதல்.

பொருளாதார விதிகள் — மனித சமூகத்தின் வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களில் பொருட்களின் உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர்வை ஆள்கின்ற புறநிலையான விதிகள்.

பொருள்முதல்வாதம் — கருத்துமுதல்வாதத்துக்கு எதிரான தத்துவஞானப் போக்கு; தத்துவஞானத்தின் அடிப்படையான கேள்விக்கு சரியான பதில் அளிக்கிறது. பருப்பொருள் முதன்மையானது, ஆன்மிகம் இரண்டாம் நிலையானது என்ற கோட்பாடு அதன் அடிப்படையாகும்.

இயக்கவியல் பொருள்முதல்வாதம் — மார்க்சிய-லெனினியத்தின் தத்துவஞானம்; விஞ்ஞான ரீதியான உலகக் கண்ணோட்டம்; உலகத்தை அறிகின்ற சர்வப்பொதுவான முறை; இயற்கை, சமூகம் மற்றும் சிந்தனையின் வளர்ச்சியை ஆள்கின்ற ஆகப்பொதுவான விதிகளைப் பற்றிய விஞ்ஞானம்.

வரலாற்றுப் பொருள்முதல்வாதம் — மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தின் ஒருங்கிணைந்த பகுதி; சர்வப்பொதுவான சமூகவியல் தத்துவம்; சமூக வளர்ச்சியின் அதிகப் பொது விதிகளையும் இயக்குச் சக்திகளையும் பற்றிய விஞ்ஞானம்.

மார்க்சிய-லெனினியம் — தொழிலாளி வர்க்கத்தின் உலகக் கண்ணோட்டத்தைக் குறிக்கின்ற தத்துவஞான, பொருளாதார, சமூக-அரசியல் கருத்துகளின் ஒருங்கிணைந்த விஞ்ஞான அமைப்பு; இயற்கை மற்றும் சமூகத்தின் வளர்ச்சியைப் பற்றிய, சோஷலிசப் புரட்சி மற்றும் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தைப் பற்றிய, சோஷலிசத்தின்

வெற்றி மற்றும் கம்யூனிச சமூகத்தின் நிர்மாணத்தை ஆள்கின்ற விதிகளைப் பற்றிய விஞ்ஞானம்.

மிகை உற்பத்தி நெருக்கடி — குறிப்பிட்ட கால அளவில் திரும்பத்திரும்ப நடைபெறும் அதிக உற்பத்தி நெருக்கடி; பொருட்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன; ஆனால் மக்களுடைய வருமானங்கள் சார்புநிலையில் குறைவாக இருப்பதால் அவை விற்பனை ஆவதில்லை. உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் பொருளாயதச் செல்வத்தின் தனியார் சுவீகரிப்புக்கும் இடையிலுள்ள முதலாளித்துவத்தின் அடிப்படையான முரண்பாடு அதன் முக்கிய காரணம் ஆகும்.

முதலாளித்துவப் பொது நெருக்கடி — உலக முதலாளித்துவ அமைப்பின் பொருளாதாரம், அரசியல், சித்தாந்தம் ஆகிய அனைத்திலும் ஏற்படுகின்ற நெருக்கடி; முதலாளித்துவ உற்பத்தி முறையின் தகர்வு மற்றும் புதிய சோஷலிச அமைப்பு நிறுவப்படுதலை குணாம்சமாகக் கொண்ட உலக முதலாளித்துவ அமைப்பின் நிலைமை.

முதலாளித்துவம் — உற்பத்திச் சாதனங்களில் தனியுடைமை, கூலியுழைப்பைச் சுரண்டுதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பொருளாயதச் செல்வத்தைப் படைக்கின்ற உற்பத்தி முறை.

முதலாளி வர்க்கம் — முதலாளித்துவ சமூகத்தில் ஆதிக்கம் செலுத்துகின்ற வர்க்கம், முக்கியமான உற்பத்திச் சாதனங்களை உடைமையாகக் கொண்டிருக்கிறது, கூலியுழைப்பைச் சுரண்டுவதன் மூலம் வாழ்கிறது.

முரணியல்பு — மிகவும் கூர்மையடைந்து விட்ட முரண்பாடு; மோதிக் கொண்டிருக்கின்ற எதிர்நிலைகளில் ஏதாவ

தொன்று அழிந்து விடுவதில் அது வழக்கமாகத் தீர்க்கப்படுகிறது.

முரண்பாடு (இயக்கவியல்) — எல்லாப் பொருட்கள் மற்றும் நிகழ்வுகளில் எதிர்நிலையான, முரணியல்பான அம்சங்கள் மற்றும் போக்குகளின் ஒருமை மற்றும் இடைச் செயல், அவற்றின் வளர்ச்சியின் தோற்றுவாய்.

மூலதனம் — கூலியுழைப்பைச் சுரண்டுவதன் விளைவாக உபரி மதிப்பைப் படைக்கின்ற மதிப்பு.

மேற்கட்டுமானம் — அரசியல், சட்டவியல், அறவியல் மற்றும் மத உறவுகளின் மொத்தம். இவை பிரத்யேக நிறுவனங்களுடன் (அரசு, கட்சிகள், பொது ஸ்தாபனங்கள், இதரவை) மற்றும் சமூக உணர்வின் வடிவங்களுடன் (அரசியல், சட்டவியல், விஞ்ஞானம், தத்துவஞானம், அறவியல், கலை, இதரவை) பொருந்துகின்றன. அடிப்படை மேற்கட்டுமானத்தை நிர்ணயிக்கிறது, மேற்கட்டுமானம் அடிப்படைமீது திட்டவட்டமான தாக்கம் செலுத்துகிறது.

ராணுவ-தொழில்துறை இணையம் — முதலாளித்துவ நாடுகளில் ஆயுதங்களைத் தயாரிக்கின்ற ஏகபோகக் கம்பெனிகள், பிற்போக்கான ராணுவ வட்டாரங்கள், உயர்நிலை அரசு அதிகாரிகள் ஆகியோருக்கு இடையிலுள்ள கூட்டணி; ஏகபோக மூலதனத்தின் வர்க்க ஆதிக்கத்தை வலுப்படுத்துகின்ற நோக்கத்துடன் ஆயுதப் பெருக்கத்தை ஆதரிக்கிறது.

லெனினியம் — வி. இ. லெனினால் நிறுவப்பட்டு ஆதர வாளர்களால் வளர்க்கப்பட்டுள்ள தத்துவம்; மார்க்சியத்தின் வளர்ச்சியில் ஒரு புதிய கட்டம். ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் சகாப்தத்தின், காலனியாதிக்கத்தின் தகர்வு மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களின் வெற்றிச் சகாப்தத்தின், மனிதகுலம் முதலாளித்

துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறுகின்ற சகாப்தத்தின் மார்க்சியம்.

வர்க்கங்கள் (சமூகத்தில்) — வரலாற்று ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட சமூக உற்பத்தி அமைப்பில் தாங்கள் வகிக்கின்ற இடத்தினால், எல்லாவற்றுக்கும் மேலாக உற்பத்திச் சாதனங்களுடன் தம்முடைய உறவினால் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்ற மக்களின் மாபெரும் தொகுதிகள்.

வர்க்கப் போராட்டம் — சுரண்டுபவர்கள், சுரண்டப்படுபவர்கள் என்னும் இரண்டு பகை வர்க்கங்களுக்கும் இடையில் நடைபெறுகின்ற போராட்டம்; எல்லா பகையியல் சமூக-பொருளாதார உருவாக்கங்களிலும் முக்கியமான இயக்கு சக்தியாகும்.

வளர்ச்சியடைந்த சோஷலிசம் — கம்யூனிச சமூக-பொருளாதார உருவாக்கத்தின் முதல் கட்டத்தின் வரையரைகளுக்குள் ஒரு நீண்ட, புறநிலையில் அவசியமான கட்டம்; அதில் உற்பத்திச் சக்திகளும் உற்பத்தி உறவுகளும் மிகவும் அதிகமாக வளர்ச்சியடைந்திருக்கின்றன; சோஷலிசத்தின் உள்ளுறையான கூட்டுவாதக் கோட்பாடுகள் முழுமையாக நிறுவப்பட்டிருக்கின்றன. இக்கட்டத்தில் சோஷலிசத்தின் சாதகங்களை முழுமையாகப் பயன்படுத்துவதனால் மக்களுடைய தேவைகளை மேன்மேலும் அதிகமாகப் பூர்த்தி செய்தல் சாத்தியமாகிறது, தனிநபருடைய ஒத்திசைவான வளர்ச்சிக்குச் சாதகமான நிலைமைகளை உருவாக்குகிறது.

விஞ்ஞான கம்யூனிசம் (சோஷலிசம்) — மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தின் பகுதிகளில் ஒன்று; பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டம் மற்றும் சோஷலிசப் புரட்சியைப் பற்றி, சோஷலிசம் மற்றும் கம்யூனிசத்தின் நிர்மாணத்தின் சமூக-பொருளாதார விதிகளைப் பற்றி,

மொத்தமாக உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கைப் பற்றிய விஞ்ஞானம்.

விதி (சட்டம்) — நிகழ்வுகளின் உள்ளுறையான, அவசிய மான, நிலையான, திரும்பத் திரும்ப நிகழ்கின்ற மற்றும் இன்றியமையாத இடைத் தொடர்பு. இப்புறநிலையான விதிகளை அறிந்து கொள்வது எல்லா விஞ்ஞானத்தின் முக்கிய நோக்கமாகும்.

வேலையில்லாத் திண்டாட்டம் — முதலாளித்துவ அமைப்பில் உள்ளுறையான நிகழ்வு; வேலை செய்யக் கூடிய தகுதியுடை யவர்களில் ஒரு பகுதியினர் வேலை வாய்ப்பு இல்லாமல் துன்பமடைந்து தொழிலாளர் சேமப் படை ஆகுதல்.

வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனை களை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப் பகம் மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முக வரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை – 600098

ஷோ-ரூம்

136, அண்ணா சாலை, சென்னை – 600002

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை – 625001
3-4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர் – 641018
42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி – 620008
செர்ரி ரோடு, சேலம் – 636001

விற்பனை நிலையங்கள்

3-22-75-D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன் – 627001
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்
சேரிங் கிராஸ், உதகமண்டலம் – 643001
நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல் – 642001

முன்னேற்றப் பதிப்பகத்தில்
விரைவில் வெளிவரும்

டி. கிளிமேன்தியெவ், தி. வசீலியெவா

சோஷலிசம் என்றால் என்ன?

(சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை)

இன்று சோஷலிசம் என்பது வெறும் தத்துவம் மட்டுமல்ல, இது யதார்த்த சமுதாயம் ஆகும். சோஷலிச நாடுகளில் ஆட்சியதிகாரம் உழைப்பாளிகளின் கரங்களில் உள்ளது, பொருளாதாரம் பொதுச் சொத்துடைமையின் அடிப்படையிலானது, மக்களின் பொருளாயத வாழ்க்கையையும் கலாசாரத்தையும் உயர்த்துவதே பொருளாதாரத்தின் நோக்கமாகும். சுரண்டல், பட்டினி, வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றை சோஷலிசம் ஒழித்துக் கட்டியது.

விஞ்ஞான சோஷலிசத் தத்துவம், யதார்த்த சோஷலிசம், சோஷலிச நிர்மாணத்தின் முக்கியக் கட்டங்கள், சோஷலிச நாடுகளின் சமாதான சர்வதேசக் கொள்கை ஆகியவற்றைப் பற்றி இந்நூல் விளக்குகிறது.

இந்நூல் பரவலான வாசகர்களுக்கானது.

முன்னேற்றப் பதிப்பகத்தில்
விரைவில் வெளிவரும்

ஏ. எர்மக்கோவா, வி. ராட்னிக்கவ்

வர்க்கங்கள், வர்க்கப் போராட்டம்
என்றால் என்ன?

(சமூக அரசியல் ஆர்ம்ப நூல் வரிசை)

வர்க்கங்களின் தோற்றம், வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள், வளர்முக நாடுகள் மற்றும் சோஷலிச நாடுகளில் நவீன சமுதாயங்களின் வர்க்கக் கட்டமைவு ஆகியவற்றைப் பற்றி எளிமையாக இந்நூல் எடுத்துரைக்கிறது.

வர்க்க நலன்கள், வர்க்கப் போராட்டம் என்றால் என்ன? வர்க்கப் போராட்டத்தின் லட்சியங்கள் யாவை? சமூகப் புரட்சி என்றால் என்ன? இக்கேள்விகளுக்கான பதில்களை இந்நூலில் காணலாம்.

நூலின் தனி அத்தியாயம் வளர்முக நாடுகளில் நடைபெறும் வர்க்கப் போராட்டத்திற்கு, தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

இந்நூல் பரவலான வாசகர்களுக்கானது.

முன்னேற்றப் பதிப்பகத்தில்
விரைவில் வெளிவரும்

எல். செலிஸ்னியோவ், வி. ஃபிதீசவ்

விஞ்ஞான கம்யூனிசம்
என்றால் என்ன?

(சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை)

நூலாசிரியர்கள் விஞ்ஞான [illegible]ரிசப் பிரச்சினை களை எளிமையாக விளக்குகிறார்கள், இவற்றின் முக்கியத்துவத்தையும் சிக்கலான தன்மையையும் சுட்டிக் காட்டுகின்றனர், இந்த விஞ்ஞானம், இதைக் கிரகிக்கும் வழிகளைப் பற்றிய பொதுக் கருத்துகளைக் குறிப்பிடு கின்றனர்.

சர்வதேச வாழ்க்கையின் சம்பவங்களைப் புரிந்து கொள்ளும் நோக்கத்தோடு விஞ்ஞான கம்யூனிசத்தைப் பயிலுவது எவ்வளவு முக்கியமென்று இந்நூலில் விளக்கப் படுகிறது; இரண்டு உலக அமைப்புகளுக்கு இடையிலான போராட்டத்தின் இன்றைய நிலை, எதிர்கால வாய்ப்பு களுடன் தொடர்புடைய நவீன சமுதாய வளர்ச்சியின் பிரச்சினைகள் ஆராயப்படுகின்றன.

இந்நூல் பரவலான வாசகர்களுக்கானது.